"இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய வாதிகளுள் இணையற்றவர் கவியரசர் முடியரசனார்".

– முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

"சாதி ஒழிய வேண்டும் எனக் கவிதையிலும், மேடையிலும் முழங்கிய கவிஞர்களுள் அவற்றை தன் வாழ்வில் கடைப்பிடித்தவர். கவிஞர் முடியரசனார் தவிர வேறு யாராவது இருக் கிறார்களா? எனத் தெரியவில்லை."

-தவத்திரு குன்றக்குடி அடிகளார்.


தமிழ்மண் பதிப்பகம்
2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

முடியரசன் படைப்புகள் – 11

கவியரசர்

# முடியரசன் படைப்புகள் – 11

## அன்புள்ள பாண்டியனுக்கு
## அன்புள்ள இளவரசனுக்கு



தமிழ்மண்

கவியரசர்

# முடியரசன் படைப்புகள்

**11**

**அன்புள்ள இளவரசனுக்கு**
**அன்புள்ள பாண்டியனுக்கு**

*ஆசிரியர்*

கவியரசர் **முடியரசன்**

**தமிழ்மண் பதிப்பகம்**

*சென்னை - 600 017*

*நூற் குறிப்பு*

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **கவியரசர் முடியரசன் படைப்புகள் – 11** |
| ஆசிரியர் | : | முடியரசன் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 2008 |
| தாள் | : | 16 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 16+ 160 = 176 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **165/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |
| வெளியீடு | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர்நகர், சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 9030<br>மின்னஞ்சல் : tm_pathippagam@yahoo.co.in<br>இணையதளம் : www.tamilmann.in |

# தொகுப்புரை

*"கவியரசர் **முடியரசன்** கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுக்கு ஆக்கம் செய்யும் செம்மொழிச் செல்வமாகும்" என்பார் **பேராசிரியர் அன்பழகன்**. அச்செல்வங்களை நாட்டுடைமை ஆக்கினார் தலைவர் **கலைஞர்**. அவற்றில் மூன்றில் ஒரு பங்கே எம் தந்தையார் காலத்தில் நூல்வடிவம் பெற்றன. எஞ்சிய பெரும் பகுதி பெட்டகத்துள் கட்டுண்டு கிடந்தன. அவற்றின் சிறப்புகள் அப்போது எமக்குத் தெரியவில்லை. எந்தையும் ஏதும் கூறவில்லை. அவரின் இறுதிக் காலத்தில் தான் அதை உணர்ந்த நான், அச்செல்வங்களைத் தொகுத்து வெளியிட முயற்சி மேற்கொண்டேன். எனினும் அவரின் மறைவுக்கப் பின்னரே அவற்றிற்கு நூல்வடிவம் தர எம்மால் இயன்றது. அச்செல்வங் களைத் தமிழுலகிற்கு வழங்கியதன் மூலம், மகன் தந்தைக்காற்றும் கடமையை, கவின் கலைச்செல்வியாம் தமிழ் அன்னைக்கு ஆற்றும் தொண்டினை நிறைவேற்றிய மனநிறைவும் கொண்டேன். தொடர்ந்து அப்பணியை எம் வாழ்வின் இலக்காகக் கொண்டு, ஒல்லும் வகை யெல்லாம் செயலாற்றி வருகின்றேன்.*

*இவ்வகையில், தந்தையின் அனைத்துப் படைப்பு களையும் ஒரே நேரத்தில் முழுத் தொகுப்பாகப் பதிப்பிக்க எண்ணியிருந்தேன். இந்நிலையில், 1999-இல் முனைவர் இளவரசு வழி, மொழிக்காவலர் கோ.இளவழகன்*

நட்பினைப் பெற்றேன். **தமிழ்மண்** பதிப்பகத்தின் முதல் வெளியீடு முடியரசன் நூல்களே. முழுத் தொகைப்பையும் தமிழ்மண் வெளியிடும் என அப்போது அவர் கூறினார். இப்போது அது கனிந்தது. முடியரசனார் படைப்பு களை முழுமையாகத் தொகுத்துத் தருமாறு அவர் கூறியதற்கிணங்க தொகுத்துத் தந்துள்ளேன்.

முந்தையரின் அரிய தமிழ்ச்சீர்களைத் தமிழர்க் களித்து வரும் அன்னார்க்கு என் பாராட்டு; அவ்வழி எந்தையாரின் செம்மொழிச் செல்வங்களையும் வழங்கும் அவர்க்கு என் நன்றி; தமிழ் மண்ணுக்கு என் வணக்கம்.

**முடியரசன்**

**‘ காணாது ஈத்த இப்பரிசிலுக்கு யான்ஓர்**
**வாணிகப் பரிசிலன் அல்லேன்........**
**.................**
**முற்றிய திருவின் மூவரே ஆயினும்**
**பெட்பின்றி ஈதல் யாம் வேண்டலமே’**

என்னும் சங்கப் புலவர்களின் வைர வரிகளுக்குச் சான்றாகப் பெருமித வாழ்வு வாழந்தவர். சலுகை போனால் போகட்டும்; என்றன் தமிழ் வெல்லட்டும், ஆண்ட தமிழர் உயரட்டும் எனப் போராடியவர் வளையா முடியரசர்; வணங்கா முடியரசர்; தெய்வத் தமிழை வணங்கியவர். எந்தச் சபலத்துக்கும் முடிசாய்க் காத ஆண்மையாளர். இலக்கிய உலகில் சிங்கமென உலவியவர். இருபதாம் நூற்றாண்டின் கவிதையுலகில் புதுமை பூத்த மரபுக் கவிஞர்

அழகும், இனிமையும், புதுமையும் கொஞ்சிக் குலவும் கவிதைகள் படைத்துத் தமிழுக்குப் புதிய அணிகலன்களைச் சூட்டியவர். தமது கவிதைகள் மூலம் சமூக அநீதிகளை - மனிதரிடையே பேதங்களைக் கற்பிக்கும் ஏற்பாடுகளை - குருட்டுப் பழக்க

வழக்கங்களைச் சாடியவர். மனிதநேயத்துக்கும் சமத்துவத்துக்கும் எதிரான கருத்துகளை எதிர்த்து அறிவுப்போர் நடத்தியவர். ஒப்புரவும் மனிதநேயமுமே தமிழரின் பண்பாடு என முரசறைந்தவர்.

தமிழை இகழ்வார் தன்னுயிர்ப் பகையாய், அல்மொழி திணிப்பார் வல்வரவெதிர்த்துத் தொடு மொழிப் போரில் தும்பை சூடிய, குடியரசோச்சும் கொள்கை கொண்ட மொழியரசோச்சிய முதல் முடியரசன். தமிழ்த் தேசீயக்கவி; தமிழுலகின் அபூர்வப் படைப்பாளி; செந்தமிழ் ஊற்று; பைந்தமிழ்ப் பொழில்; திராவிட நாட்டின் வானம்பாடி; தமிழ்நாட்டின் பாடுங்குயில்; **அப்பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம்** முழுதும் தமிழே உயிர்; கவிதையே மூச்சு.

ஆதித்தமிழரில் சாதிகள் இல்லை; பாதியில் புகுத்திய சாதியை ஒழிக்க ஓதினார் கவிதைகள்; ஓதியவாறே ஒழித்தார் வாழ்க்கையில். வள்ளுவ நெறியை வாழ்வில் நாட்டி, பெரியார் வழியை ஒளியாய்க் காட்டி, புத்தன் புகட்டிய பகுத்தறிவூட்டி, சாதி, சமய, சாத்திரம் அறுத்து, வாக்கின்படியே வாழ்ந்து காட்டி வரலாறானவர்.

**முடியரசன் நூல்கள்:-**

***முடியரசன் கவிதைகள்*** - ஆட்சிக்கும் அஞ்சாமல், யாவரேனும் ஆள்க எனத் துஞ்சாமல், தாய்மொழியின் ஆட்சிக்கும் தமிழகத்தின் மீட்சிக்கும் பாடிய போர்ப் பரணிகள். மேலோங்கு கொடுமைகளைக் காணும்போது, காட்சிக்குப் புலியாகிக் கொடுமை மாளப் பாய்ச்சிய கூர்வேல்கள். கயமைகள் வீழ வீசிச் சுழற்றிய கைவாள்கள். காசுக்கும் கைம்மாறு பெறுதற்கும் மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை மறைத்துவிட்டும் கெஞ்சாத தன்மான

வரிகள். தமிழ் மானம் மீட்டெடுக்கப் பாடிய படைக் கலன்கள். வீழ்ந்த தமிழர் வாழ்ந்த வரலாறு மீள விழித்தெழப் பாடிய வீரக்கனல்கள்.

திராவிட எழுச்சிக் காலத்தில் **கவியரங்கில் முடியரசன்** முழங்கிய கவிமுழக்கம், முத்தமிழ்த் தோழர்க்கு முரசொலி முழக்கம்; அயலார்க்கோ இடிமுழக்கம். **தாய்மொழி காப்போம்** எனுமவர் **தமிழ்முழக்கம்**. வீரத் தமிழரை வீறு கொண்டெழைத்த வேங்கை முழக்கம். திராவிடத் திருவிடத்திற்கு ஒளிதந்த **ஞாயிறும் திங்களும்**. அரங்கு களில் ஆர்ப்பரித்த அயன்மொழிப் பாடல்களை அடக்கவந்த **காவியப்பாவை**. தமிழிலே இசையில்லை என்ற கூகைகளின் கூக்குரரை நெறிக்கக் கூவிய **பாடுங்குயில்**. சிந்தை உருக்கும் தெய்வத் தமிழ்ப் பாசுரங்கள். குறள்நெறி கூறிய, தமிழ் மறை போற்றிய **வள்ளுவர் கோட்டம், மனிதரைக் கண்டுகொண்டேன்** என நற்சான்றோர் போற்றிய சொற்பூ மாலை. புரட்சி வெடிக்க, புதுமை பூக்க, பொதுமை மலர, சாதி ஒழிய, சமயம் அழிய, சாத்திரம் மறைய, சமத்துவம் தழைய, உழைப்போர் உயர, ஒடுக்கப்பட்டோர் விடுதலை பெற **புதியதொரு விதி செய்வோம்** எனப் புகன்ற சிவப்புப் பிழம்புகள், குமுகாயத்தில் பண்பாடு புண்பட்டு, ஒப்புரவு கரவு பட்டு, கொடுமைகள் மலிந்து, குறைகள் நிறைந்ததை கண்டு, உள்ளம் கொதித்து **நெஞ்சு பொறுக்க வில்லையே** எனக் குமுறியும், மாந்தரிடையே கயமை, இழிமை, நேர்மையின்மை, ஒழுங்குமீறல் பரவியதையறிந்து, மனம் நொந்து, **மனிதனைத் தேடுகிறேன்** எனத் தேடி, பண்பாடு காக்க, கொடுமைகள் மாய, குறைகள் களைய, தீயவை தீய வெடித்துக் கிளம்பிய எரிமலைக் கவிதைகள்.

உலக மொழிகளில் தேசீயக் காப்பியங்கள் எனக் கூறத்தக்க மூன்றனுள் ஒன்று **பூங்கொடி** - மொழிக் கொரு காப்பியம், கண்ணனைய மொழிகாக்கக் கடி மணத்தைத் துறந்த ஒரு பெண்ணணங்கின் போராட்டம், மொழிப்புரட்சி வரலாறு.

காதல், வீரம், கையாற்றவலம், முப்பெருஞ்சுவை களும் முகிழ்த்தெழும்; காதலும், வீரமும் கரையென நிற்க, வீரப்பேராறு வீறிட்டுப் பாயும் **வீரகாவியம்**.

பண்டைத் தமிழே, தமிழர்க்கு **ஊன்றுகோல்** எனப் பண்டிதம் பாடிய பைந்தமிழ்க் காப்பியம்.

'உண்டாலம்ம இவ்வுலகம்' எனப் பாடிய, பழந் தமிழ்ப் பாண்டியன்,போர்வாள் எறிந்த **இளம்பெருவழுதி** கடலுள் மாய்ந்த நாடகக் காப்பியம்.

**எப்படி வளரும் தமிழ்?** எனச் சிந்திக்க வைக்கும் கட்டுரைகள். மாணாக்கர்களை நல்வழிப்படுத்த **அன்புள்ள பாண்டியனுக்கும், இளவரசனுக்கும்** எழுதிய கடித இலக்கியங்கள்.

**எக்கோவின் காதல்** கொண்டு, இச் **சீர்த்திருத்தச் செம்மல்**, பார் திருத்தப் படைத்த சீர்த்திருத்தச் சிறுகதைகள்.

முடியரசன் படைப்புகள், படிப்போர் தம் தசைநார்களைப் புடைக்க வைக்கும்; தோள்களை நிமிர வைக்கும்; வீறு கொண்டு எழ வைக்கும்; உள்ளம் உருகி அழ வைக்கும்; பண்பாடு காக்க வைக்கும்; தமிழுணர்ச்சி ஊட்டவைக்கும்; சங்க நூல்களைச் சுவைத்தது போன்று சிந்தை இனிக்கும்.

தாம் எழுதுகின்ற கருத்தை உணர்ச்சியோடு உரைத்துப் பிறர் உள்ளத்திற் குடிகொள்கின்ற பெற்றியாளரே கவிஞர்

*என்ற இலக்கணத்திற்கேற்ப, தம்* **நெஞ்சிற்பூத்தவை** *எனும் கவித்துவம் திகழும் செம்மொழிச் செல்வங்களைத் துய்ப்போர் உண்மையில் பெறும்பேறு பெற்றவரே.*

***தமிழ் வெல்லட்டும்! தமிழர் உயரட்டும்!***

***தமிழ்மண் சிறக்கட்டும்!***

**முடியரசர் கவிபரப்பி முத்தமிழுலகுக்கு முடிசூட்டுவோம்!**

***- பாரி முடியரசன்.***

*முடியரசன் குடில்*
*569, சூடாமணி நகர்,*
*காரைக்குடி - 630 003.*

# பதிப்புரை

*கவியரசர் முடியரசன் 1920இல் பிறந்தவர். 1998இல் மறைந்தவர். வாழ்ந்த ஆண்டுகள் 78. எழுதிய நூல்கள் 25. இந்நூல்கள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்து பொருள் வழிப் பிரித்து 13 தொகுதிகளாக* ***கவியரசர் முடியரசன் படைப்புகள்*** *எனும் தலைப்பில் ஒரே வீச்சில் வெளியிடுகிறோம். கவியரசர் முடியரசன் பாவேந்தர் பாரதிதாசன் வழிநிலை அறிஞர். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற பெருமக்களின் கொள்கையை தம் நெஞ்சில் தாங்கியவர்.*

*தன்னலம் கருதாது தமிழ்நலம் கருதியவர். தன்னை முன்னிறுத்தாது தமிழையும் தமிழரையும் முன்னிறுத்தியவர். இவர் எழுதிய நூல்கள் அனைத்தும் தமிழுக்கு வளமும் வலிவும் பொலிவும் சேர்ப்பன. தமிழர்களுக்குப் படைக்கருவிகளாக அரண் சேர்ப்பன.*

*நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும் உயர்ந்த அறிவுச் செருக்கும் கொண்ட பாரதியின் பாடலுக்கு சான்றாக வாழ்ந்து காட்டியவர்.*

**புதுநூற்கள் புதுக்கருத்தால்,**
**பொதுவகையால் தரவேண்டும்**
**புலவ ரெல்லாம்**

*எனும் பாவேந்தர் பாரதிதாசன் வரிகளுக்கு இலக்கியமாகவும் இலக்கணமாகவும் வாழ்ந்து மறைந்தவர். இருபதாம் நூற்றாண்டில்* ***'பா'*** *உலகில் புதுமைப் பூத்த மரபுக் கவிஞர். இவர்தம் நூல்களை ஒருசேர வெளியிடுவதில் பெருமை அடைகிறோம்.*

*நன்றி*

**கோ. இளவழகன்**

# நூலாக்கத்திற்குத் துணை நின்றோர்

*நூல் கொடுத்து உதவியோர்*

மு.பாரி

*நூல் உருவாக்கம்*

*நூல் வடிவமைப்பு*
செல்வி ச. அனுராதா

*மேலட்டை வடிவமைப்பு*
செல்வி வ.மலர்

*கணினிக்கோப்பு*
மு.ந.இராமசுப்ரமணிய ராசா,
சு. நித்தியானந், செல்வி சு. ரேகா

*மெய்ப்பு*
மு. பாரி, சுப. இராமநாதன், புலவர். இராசவேலு,
கி.குணத்தொகையன், அரு.அபிராமி,

---

*உதவி*
அரங்க. குமரேசன், வே. தனசேகரன்,
இல.தர்மராசு, ரெ. விஜயகுமார்,

---

*எதிர்மம் (Negative)*
பிராசசு இந்தியா (Process India)

*அச்சு மற்றும் கட்டமைப்பு*
ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்

---

**இவர்களுக்கு எம் நன்றியும் பாராட்டும் . . .**

# வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | துரைராசு |
| பெற்றோர் | : | சுப்புராயலு - சீதாலெட்சுமி |
| பிறந்த ஊர் | : | பெரியகுளம். |
| வாழ்ந்த ஊர் | : | காரைக்குடி |
| தோற்றம் | : | 7.10.1920 - இயற்கையடைவு : 3.12.1998 |
| கல்வி | : | பிரவேசபண்டிதம்,<br>மதுரைத் தமிழ்ச் சங்கம் (1934 - 39)<br>வித்துவான், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி (1939-43) |
| பணி | : | தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை, (1947 - 49).<br>மீ.சு.உயர்நிலைப்பள்ளி, காரைக்குடி (1949 - 78) |
| திருமணம் | : | 2.2.1949<br>(கொள்கை வழிக் கலப்புத் திருமணம்) |
| துணைவியார் | : | கலைச்செல்வி |

| மக்கள்: | | மருமக்கள்: | | பேரப்பிள்ளைகள்: |
|---|---|---|---|---|
| குமுதம் | + | பாண்டியன் | = | அருள்செல்வம், திருப்பாவை |
| பாரி | + | பூங்கோதை | = | ஓவியம் |
| அன்னம் | + | சற்குணம் | = | செழியன், இனியன் |
| குமணன் | + | தேன்மொழி | = | அமுதன், யாழிசை |
| செல்வம் | + | சுசீலா | = | கலைக்கோ |
| அல்லி | + | பாண்டியன் | = | முகிலன் |

# இயற்றிய நூல்கள்

**கவிதைத் தொகுதி**

| | | |
|---|---|---|
| 1. | முடியரசன் கவிதைகள் | 1954 |
| 2. | காவியப் பாவை | 1955 |
| 3. | கவியரங்கில் முடியரசன் | 1960 |
| 4. | பாடுங்குயில் | 1983 |
| 5. | நெஞ்சு பொறுக்கவில்லையே | 1985 |
| 6. | மனிதனைத் தேடுகின்றேன் | 1986 |
| 7. | தமிழ் முழக்கம் | 1999 |
| 8. | நெஞ்சிற் பூத்தவை | 1999 |
| 9. | ஞாயிறும் திங்களும் | 1999 |
| 10. | வள்ளுவர் கோட்டம் | 1999 |
| 11. | புதியதொரு விதி செய்வோம் | 1999 |
| 12. | தாய்மொழி காப்போம் | 2000 |
| 13. | மனிதரைக் கண்டு கொண்டேன் | 2005 |

**காப்பியம்**

| | | |
|---|---|---|
| 14. | பூங்கொடி | 1964 |
| 15. | வீரகாவியம் | 1970 |
| 16. | ஊன்றுகோல் | 1983 |
| 17. | இளம்பெருவழுதி (நாடகம்) | 2008 |

**சிறுகதைத் தொகுப்பு**

| | | |
|---|---|---|
| 18. | எக்கோவின் காதல் | 1999 |

**கடித இலக்கியம்**

| | | |
|---|---|---|
| 19. | அன்புள்ள பாண்டியனுக்கு | 1999 |
| 20. | அன்புள்ள இளவரசனுக்கு | 1999 |

## கட்டுரைத் தொகுப்பு

*21.* தமிழ் இலக்கணம் *1967*

*22* பாடுங் குயில்கள் *1975*

*23.* சீர்த்திருத்தச் செம்மல் வை.சு.சண்முகனார் *1990*

*24.* எப்படி வளரும் தமிழ்? *2001*

*25.* பாட்டுப் பறவையின் வாழ்க்கைப் பயணம் (தன்வரலாறு) *2008*

# பொருளடக்கம்


தொகுப்புரை ........................................................ iii

பதிப்புரை ............................................................ ix

வாழ்க்கைக்குறிப்பு ................................................ xi

இயற்றிய நூல்கள்.................................................. xii


## அன்புள்ள இளவரசனுக்கு


*1* எனது கடமை ......................................................... *3*

*2* ஒற்றுமை வேண்டும் ................................................ *7*

*3* ஒழுக்கம் ஓம்பு ...................................................... *11*

*4* திருக்குற்றாலம் சென்று வந்தேன் ............................ *15*

*5* கண்குளிரும் குற்றாலம் ........................................... *21*

*6* குற்றாலத்து அருவிகள் ............................................ *25*

*7* குற்றாலத்திற் பெற்ற இன்பம் .................................... *29*

*8* பொறுத்தது போதும்! ............................................. *33*

*9* பொருள் மாறிவரும் சொற்கள் ................................. *37*

*10* சொற்றமிழ்பாடு ..................................................... *43*

*11* பைந்தமிழ்ப் பின் சென்றவன் ................................... *48*

*12* எது குறுகிய மனப்பான்மை? ................................... *56*

*13* பிறமொழிப் பயிற்சி எப்பொழுது? ........................... *64*

*14* மனம் வைத்தால் வழியா இல்லை? .......................... *68*

*15* கவிஞனாக விரும்புகிறாயா? ................................... *74*

*16* கவிதை படைப்பதெப்படி? ..................................... *79*

*17* எது சரி ................................................................. *85*

## அன்புள்ள பாண்டியனுக்கு


1 அறஞ்செய விரும்பு ........ 93
2 அன்பாய் இரு ........ 97
3 இணக்கம் அறிந்து இணங்கு ........ 101
4 உண்மை விளம்பு ........ 105
5 ஒப்புரவொழுகு ........ 109
6 ஒழுக்கம் கைக்கொள் ........ 114
7 ஓதுவதொழியேல் ........ 118
8 கேள்வி முயல் ........ 123
9 சோம்பித் திரியேல் ........ 127
10 தாய்மொழி பேண் ........ 131
11 தாயகம் காத்துநில் ........ 136
12 நன்றி மறவேல் ........ 141
13 நா நலம் நாடு ........ 146
14 பணிவுடன் பழகு ........ 151
15 மானம் போற்று ........ 155

# அன்புள்ள இளவரசனுக்கு...

# 1

# எனது கடமை

அன்புள்ள அரசு,

உன் கடிதம் பெற்றேன். மகிழ்ச்சி. அரையாண்டுத் தேர்விற் பெற்ற மதிப்பெண்களைக் குறித்துள்ளாய். காலாண்டுத் தேர்வை விடக் குறைந்துளவே! காரணம் என்ன? படிப்பில் முயற்சிக் குறைவாக இருந்திருக்கிறாய் என்பதைக் காட்டுகிறது அது. தேர்வில் வெற்றி பெற்றாற் போதும் என்ற எண்ணம் மட்டும் போதாது. வகுப்பில், கல்லூரியில் முதல்வனாக விளங்க வேண்டும். அதற்கேற்ற முறையில் நன்கு படித்து, ஆண்டுத் தேர்வில் முதல் வனாக வெற்றி பெற முயன்று படி.

உன் கடிதத்தில் இன்னும் எழுத்துப் பிழைகள் உள்ளன. இன்னும் சிறிது அக்கறை கொண்டால் பிழையின்றியே எழுதி விடலாம். எவ்வளவு படித்துப் பட்டம் பெற்றிருப்பினும் பிழைபட எழுதுவோர் நன்கு மதிக்கப்படார். அதனாற் பிழையின்றி எழுதப் பழகு. பழகி வெற்றி பெறு. பிழைபட எழுதுவது ஒரு மொழிக்குச் செய்யும் பெரிய தீங்காகும். உன் தாய்மொழிக்குத் தீங்கு செய்யாதே.

இரண்டு திங்களாக உனக்கு அறிவுரைகள் எழுதாமலேயே கடிதங்கள் எழுதி விட்டேன். அலுவல் மிகுதியால், இன்று ஓய்வு கிடைத்தமையால் மீண்டும் சில அறிவுரைகள் எழுதுகின்றேன். நான் எழுதுவது வெறும் "உபதேசமாக"ப் போய்விடக் கூடாது. உன் வாழ்வில் அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகல் வேண்டும். ஏனெனில் நீ எப்பொழுதும் மாணவன் அல்லன். வருங்காலத்தில் இந்நாட்டுக் குடிமக்களில் ஒருவன். நீ ஒழுக்க முடையவனாக இருந்தால் உன் நாடும் நல்ல நாடாகும். 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்ற ஔவைப் பாட்டியின் பாட்டின் கருத்தை உனக்கு முன்னரே விளக்கிக் கூறியிருக்கிறேன் அல்லவா?

நீ நினைக்கலாம் 'நான் மட்டும்' நல்லவன் ஆனால் போதுமா? மாணவர் அனைவரும் அல்லவா ஒழுக்க முடையவராதல் வேண்டும் என்று; ஆம் அனைவரும் நல்லவராதல் வேண்டும் என்பதே என் அவா. அனைவரும் நல்லவராதல் வேண்டும் என்பதற்கு ஆசிரியர் களை மட்டும் நம்பிக் கொண்டு, பெற்றோர் வாளாவிருத்தல் கூடாது. அத்தனை மாணவர்களையும் ஒருவரே திருத்தல் இயலாது. அதனால் ஒவ்வொரு பெற்றோரும் தத்தம் பிள்ளைகளைத் திருத்த முற்பட வேண்டும். பெற்றோர் ஒவ்வொருவரும் வீட்டில் ஆசிரிய ராதல் வேண்டும். அப்பொழுதுதான் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க முடியும். ஆதலின் ஆசிரியருக்கு மட்டும் அத்துணைப் பொறுப்புகளையும் விட்டுவிடாமல் நான் உனக்கு அடிக்கடி இவ்வாறு எழுதுகிறேன்.

*'ஈன்று புறந்தரல் என்றலைக் கடனே'* என்ற பழம் பாடல் ஒன்று நினைவிற்கு வருகிறது. இப்பாடலில் பலருடைய கடமைகளை உணர்த்துகிறார் அதனைப் பாடிய பொன் முடியார் என்ற பெண்பாற் புலவர். பிள்ளையைப் பெற்றெடுத்துப் பேணி வளர்த்து ஆளாக்குவது தாயாகிய என்னுடைய கடமை யாகும். அவனைச் சான்றோனாக்குவது தந்தைக்குக் கடமையாகும். அவனுக்கு வேல் வடித்துக் கொடுப்பது கொல்லனுக்குக் கடமையாகும். அவனுக்குப் பயிற்சியளித்து நன்னெறிப் படுத்துவது வேந்தனுக்குரிய கடமையாகும். போர்க் களம் புகுந்து களிறுகளையடக்கி வெற்றி வீரனாகத் திரும்புவது அவ்விளைஞனுக்குக் கடமையாகும். அஃதாவது அவன் நாட்டிற்குப் பயன்படுபவனாக இருத்தல் வேண்டும் என்பது அப்புறநானூற்றுப் பாடலின் கருத்தாகும்.

ஒருவன் நாட்டிற்குப் பயன்படுபவனாக - நல்லவனாக வெற்றி வீரனாக விளங்க வேண்டுமென்றால் வீட்டிலுள்ள பெற்றோருக்கும் நாட்டிலுள்ள மற்றோருக்கும் சில கடமைகள் உள. அக்கடமை களை உணர்ந்து அவரவர் நடந்தால் நல்ல மக்களை உருவாக்கலாம். அஃதாவது பிள்ளைகள் நல்லவர் களாக வளர வேண்டுமானால் அகச் சூழலும் புறச் சூழலும் அத்துறையில் அக்கறை காட்டுதல் வேண்டும் என்பது கருத்து. அதனாற்றான் உன்னை நல்லவனாக உருவாக்க ஆசிரியரிடம் மட்டும் பொறுப்பை ஒப்படைத்து விடாமல் நானும் எனது கடமையைச் செய்கிறேன்.

நீ எந்த மாணவரொடும் பகையுணர்ச்சி கொண்டு பழகாதே. இன்றைய நிலையில் பகையுணர்ச்சி வளரத்தக்க சூழ்நிலை இருந்து வருகிறது. சாதி, சமயம், அரசியல் எத்துறையிலும் பகையுணர்வே தலை தூக்கி நிற்கிறது. அப்பகையுணர்வு அறவே கூடாது. கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் மாறுபாடு இருத்தல் ஆகாது. நாங்கள் படிக்கும் பொழுது சாதி, மதம், அரசியல், கொள்கை இவற்றால் வேறுபட்ட எத்தனையோ பேர் கலந்து படித்தோம். ஆயினும் எம்மிடையே பகையுணர்ச்சி இருந்ததே கிடையாது. நட்பு, பழகும் முறை அந்நிலையில் இருந்தன எங்கள்பால்.

நம் நாட்டுத் தலைவர்கள் சொற்களை, வரலாற்றைக் கேட்கும் பொழுதும் படிக்கும் பொழுதும் நாமும் அவ்வாறிருத்தல் வேண்டும் என்று ஆர்வங் கொள்ள வேண்டும். *திரு.வி.க.* அவர்களைப் பற்றி உனக்குச் சொல்லியிருக்கிறே னல்லவா? அப்பெருந்தகை, *பெரியார் இராமசாமி* அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, ‘அவரையும் (ஈ.வெ.ரா) என்னையும் நண்ப ராக்கியது அரசியல் உலகம். அவரும் யானும் ஒரு போது ஒன்றிய கருத்துடன் அரசியற் றொண்டு செய்து வந்தோம். மற்றொரு போது இருவரிடையும் அத்துறையிற் கருத்து வேற்றுமை மலையென எழுந்து நிற்கலாயிற்று. அந்நிலையில் இருவரும் சந்திக்க நேர்ந்த போதெல்லாம் ‘மலை’ மறைந்து போகும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதுதான் பெருந் தன்மை, தமிழ்ப் பண்பாடு, மனிதப் பண்பாடு. இவ்வாறு மனிதப் பண்புக்கு ஊறு நேராவண்ணம் நீயும் பழகு, பகையுணர்வை விடு. ‘பற்றா மாக்கள் தம்முடனாயினும் செற்ற முங்கலாமும் செய்யா’திரு.

கட்டுப்பாடும் அடக்கமும் உடையவனாக இரு என்று மிக மிக வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன். கட்டுப்பாடில்லாத நூறு மனிதர்கள், கட்டுப்பாடுள்ள ஒரு மனிதனுக்கு ஈடாக மாட்டார்கள் என்று நம் தலைவர்கள் அடிக்கடி சொல்லி வந்துள்ளனர். கட்டுப் பாடிருந்தால் எச்செயலையும் வெற்றியுடன் முடிக்கலாம். எடுத்துக் காட்டாக உன்னையே எடுத்துக் கொள். நீ கட்டுப் பாட்டுடன் இருந்தால் - தேர்வு முடியும் வரை திரைப்படங் களுக்குச் செல்ல மாட்டேன் என்று, உறுதிபூண்டு படித்து வந்தால் கட்டாயம் இறுதித் தேர்வில் முதல்வனாக வெற்றி பெறுவாய். இப்பொழுதே கட்டுப் பாடுடையவனாக இருந்தால், பிற்காலத்தில் நீ வாழ்வுப் பாதையில் நுழையும் போதோ அரசியற்றுறை போன்ற வேறு துறைகளில் இறங்கும் போதோ கட்டாயம் உயர்வு பெறுவாய். வெற்றி

பெறுவாய் கட்டுப்பாட்டால் நன்மையுண்டு என்பதற்கு எடுத்துக் காட்டு காந்தியடிகள் ஒருவர் போதாதா?

அடக்கமும் அவ்வாறுதான். அடக்கமுள்ளவன் உயர்வான், அடக்கமில்லாதவன் தாழ்வான் என்ற கருத்தை, 'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்' என்று மிக அழகாகக் கூறியிருக்கிறார் வள்ளுவர். இக்குறள் எப்பொழுதும் உன் உள்ளத்தே ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆசிரியர் சொற் களுக்கு அடங்கி நட. ஆசிரியரிடம் பணிந்து பேசு. என்னை எவ்வாறு எண்ணுகிறாயோ அவ்வாறே உன் ஆசிரியரையும் எண்ணு. ஆசிரியருக்குப் பணிந்து நடக்கப் பழகாவிட்டால் நீ நாளை யாருக்குப் பணிந்து நடக்கப் போகிறாய்? பணிவு தாழ்வு தரும் என்று எண்ணி விடாதே என்றும் உயர்வே தரும்.

பணிந்து நடக்க வேண்டுமென்று எண்ணித் தாழ்வு மனப் பான்மையுடையவனாக - அடிமையுள்ளமுடைய வனாகப் பழகி விடாதே. பணிவு வேறு, தாழ்வு மனம் வேறு, பெருமிதவுணர் வுடைய வனாக இரு. பெருமிதமாக இருக்க வேண்டுமென்று செருக்குடைய வனாக மாறி விடாதே. பெருமிதம் வேறு. செருக்கு வேறு, இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு உணர்ந்து நட. இவ்வாறு ஒவ்வொன்றுக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு உணர்ந்து நட. ஒவ்வொன்றுக்கும் உள்ள வேறுபாடுகளை உணராமல் நிரம்பப் பேர் கெட்டு விட்டார்கள். அந்தக் கேட்டுக்கு நீயுங் இடங் கொடுத்து விடாதே.

சரி, கடிதம் நீண்டு விட்டதென்று எண்ணுகிறேன். ஒவ்வொன் றாகச் சொன்னால்தானே நீயும் கடைப்பிடித்து ஒழுக முடியும். ஆகவே நிறுத்துகிறேன்.

உன் தந்தை

*11.7.1956* **முடியரசன்**

❖ ❖ ❖

**2**

# ஒற்றுமை வேண்டும்

அன்புள்ள அரசு,

உன் கடிதம் கிடைக்கப் பெற்றேன். அங்கு நிகழ்ந்த திருக்குறள் விழா நிகழ்ச்சிகள் பற்றி யெழுதியிருந்தாய். நானும் செய்தித்தாளில் கண்ணுற்றேன்; களிப்புற்றேன். அறிஞர் அண்ணா, தவத்திரு. குன்றக்குடி அடிகளார், தமிழ்வேள் பி.டி.இராசன், மொழித்துறை வல்லுநர் தேவநேயப் பாவாணர், இன்னோரன்ன பெரியோர்கள் ஒரே மேடையில் கூடி நின்று உரையாற்றினர் என்றும், கருத்து வேறுபாடுகளைக் காட்டிக் கொள்ளாமல், ஒருவர் கருத்தை ஒருவர் தழுவியே பேசினர் என்றும் அக்காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்த தென்றும் மகிழ்ச்சி பொங்க எழுதியிருந்தாய்.

அந்நிகழ்ச்சி உனக்கும் எனக்கும் மகிழ்ச்சி தருவதோடன்றி நாட்டு மக்களில் நன்மனம் படைத்தோர் அனைவர்க்குமே மகிழ்ச்சி தரக்கூடியதுதான். தமிழகத்துக்கும் நல்ல காலம் தோன்றிவிட்டது என்று எண்ணத்தோன்றுகிறது. ஒவ்வொரு வரும் தத்தம் திறமை களைக் காட்ட வேண்டு மென்றோ கட்சிக் கொள்கைகளை நிலை நாட்டிவிட வேண்டுமென்றோ அவையில் கைதட்டல் வாங்க வேண்டுமென்றோ கருதாராய், மொழி முன்னேற்றம், நாட்டு நலம், இன ஒற்றுமை இவற்றை அடிப்படையாக வைத்துக் குறள் நெறி பரவவேண்டும் என்ற ஒரே குறிக்கோளை மனத்தில் உண்மையாக நிலை நிறுத்திப் பாடுபட வருவோர் எவருமே ஒன்றுபடத்தான் செய்வர். அவ்வாறு ஒன்றுபட்டுத் தொண்டு செய்வதுதான் அறிவுடை மையுமாகும்.

தன்னலம் தலை தூக்கிவிடின் பொதுநலங் கெட்டொழியும். நம் தலைவர்களிடையே தொண்டர் களிடையே அரும்பி வரும் இப்பொதுநல மனப்பான்மை - பொது நன்மைக்காகச் சிறுசிறு கருத்து வேறுபாடுகளை விட்டொழித்து ஒன்றுபட்டு வரும் உளப்பாங்கு வளர்ந்து, விரிந்து, பரந்து பயன் தருவதாக.

அரசு! நம்மவர், தம்மிடையே இருந்து வரும் கருத்து வேறு பாடுகளைப் பெரியனவாக்கி, ஒருவரையொருவர் நேரிற் காண விழையாமல், தனி மனிதனைக் கண்டபடி ஏசிப் பிளவுபட்டு வருவதையே காண்கின்றோம். இதனால் அந்தப் பிளவுகளில் பகைமைகள் எளிதாக நுழைந்து வேர்விட்டுச் செழித்து வளர்கின்றன. நம் மொழிக்கும் நாட்டுக்குமே தீங்கு நேரிடுகிறது. இதை உணராமல் நாட்டையும் மொழியையும் முன் வைத்து எண்ணாமல், அவர் சொன்னார் அதனால் அது தவறு, இவர் சொன்னார் இதனால் இது சரியன்று என்று மறுத்துப் பேசி மாற்றார்க்கே இடமளித்து விடுகி றோம் எடுத்துக் காட்டாக ஒன்று சொல்லுகிறேன்.

கோவிலில் தமிழ் முழங்க வேண்டுமென்று காவிச் சட்டைக் காரர் சொன்னாலென்ன? கருப்புச் சட்டைக்காரர் சொன்னா லென்ன? எவர் சொன்னாலும் தமிழுக்குத்தானே சொல்கின்றனர் என்று கருதுதல் வேண்டும். இவ்வாறு எண்ணுவதை விடுத்துக் காவிச் சட்டை நமக்குப் பிடிக்க வில்லையென்றால் அவரைக் கண்டபடி பேசுகிறோம். நாத்திகர் என்று கூட நவிலுகின்றோம். அடடா! கோவிலுக்குள் தமிழா? முன்னோர் முறையைப் புறக் கணித்து நடப்பதா? தேவபாடையை விடுத்துத் தமிழைப் புகுத்தினால் பேரிழிவல்லவா விளையும்! என்றெல்லாம் பிதற்றுகிறோம்.

கருப்புச் சட்டை பிடிக்கவில்லையென்றால், ஆ, இவனா கோவிலைப் பற்றிப் பேசுவது? கடவுளையே ஒழிக்க வேண்டு மென்று பேசுபவனாயிற்றே இவன் தமிழின் பெயரைச் சொல்லிக் கோவிலுக்கு வெடிவைக்கப் பார்க்கிறான் என்று கதறுகிறோம்.

உண்மையில் சட்டையையும் ஆளையும் முன் வைத்துப் பேசுகிறோமே தவிர, மொழியை முன் வைத்துப் பேசுவதில்லை. மொழியை முன் வைக்காமல் ஆளை முன் வைத்துப் பேசுவதால் விளையும் பயன் என்ன? தமிழ் மொழி, தமிழ் நாட்டுக் கோவிலுக்குள் நுழைய முடியாத தாழ்த்தப்பட்ட மொழியாகி விடுகிறது. பிற மொழியின் ஆட்சியே நிலை நிற்கிறது. நம்மிடையே உள்ள பகையுணர்வால் நமக்கு நாமே நலிவுகளை உண்டாக்கிக் கொள்கி றோம். இத்தகைய பிளவு மனப்பான் மையை ஒழித்து விட்டு, மொழியும் நாடும் முன்னேற வேண்டுமென்ற ஒரே குறிக் கோளில் நாம் முயலல் வேண்டும். வளர்ந்து வரும் பரம்பரை இவ்வெண்ணத் துடன் வளர்வதாகுக.

அரசு! பொதுவான செய்திகளையே எழுதி விட்டேன். நிற்க! நீ உயர்நிலைப் பள்ளிப் பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றிருந்தும் கல்லூரியில் இடம் பெறுவதற்குப் பட்ட பாட்டை நீ நன்கறிவாய். தகுதியில்லாரிடங் கூடக் கெஞ்சி நிற்க வேண்டிய நிலையாகி விட்டது. எல்லாம் உன் நன்மைக்குத்தான். நன்றாக நீ படித்து முன்னுக்கு வர வேண்டுமே என்ற எண்ணத்தினாற்றான் தமிழை வெறுத்துப் பேசும் அந்தப் புல்லனிடமும் போக வேண்டியதாயிற்று, தந்தை மகனுக்கு ஆற்ற வேண்டிய பணியை என்னால் இயன்றவரை ஆற்றுகிறேன். மகன், தந்தைக்கு ஆற்றும் உதவியை நீ மறந்து விடாதே. கல்வி பயிலுவதில் கண்ணும் கருத்துமாக இரு.

உடனுறை நண்பர்களிடம் பகைத்துக் கொள்ளாதே. நெருங்கியும் பழகி விடாதே. நெருங்காமலும் விட்டு விலகாமலும் பழகு. நல்ல நண்பர் கிடைப்பதரிது. ஆராய்ந்து பார்த்துப் பழகு. நல்ல நண்பர் ஓரிருவரே வாய்ப்பர். நல்ல நண்பர் கிடைத்து விட்டால் விட்டு விடாதே; ஒட்டிக்கொள். ஆசான் உரைத்ததை அப்படியே ஏற்றுக் கொண்டாலும் புலமை, காற்பங்குதான் உண்டாகும்; மற்றைய மாணவருடன் பழகுவதால் மற்றொரு காற்பங்கு புலமை பெறுகிறோம். நம் முன்னோர் நன்குணர்ந்தே இம்முறையைக் கூறியுள்ளனர்.

ஆதலின் உன் கல்விக்கு உறுதுணையாக வாய்க்கும் நண்பரைப் பற்றிக் கொண்டு பழகு. வெறும் பேச்சுக்குப் பழகுவோரிடமிருந்து மெல்ல மெல்ல விலகி விடு. பயனில் சொற் பாராட்டுவோர் தொடர்பு வேண்டா. விரும்பிப் போற்றும் கொள்கை உனக்கென்று ஒன்றிருக்கு மானால் அதை எல்லாரிடமும் வெளிக்காட்டுதல் கூடாது. படிப்பு முடியும் வரை மனத்துள் மறைத்து வைப்பதுதான் நல்லது.

மற்றொன்று, மிக மிக இன்றியமையாதது. ஆசிரியர் களிடம் பழகும் போதும் முன்னெச்சரிக்கை யாகப் பழகு. எல்லா ஆசிரியரி டமும் விரும்பிப் பழகு. அனைவரையும் மதித்துப் போற்று, இருப்பினும் ஆசிரியருள் ஓரிருவரைத்தான் உள்ளன்புடன் விரும்ப முடியும். அதுதான் இயல்பும் கூட. அவ்வாறு உன் உள்ளம் விழையுமானால், அவ்விழைவு ஏனைய ஆசிரியர்களுக்குத் தெரிதல் கூடாது. ஏனெனில் நான் கேள்விப் பட்ட அளவில் ஆசிரியர்களிடையே ஒற்றுமை இல்லையாம். ஒவ்வொருவரும் தாம்தாம் பேராசிரியர் என எண்ணித் திரிகின்றனராம்.

அவ்வாறு எண்ணிக் கொள்வதில் குற்றமொன்றில்லை. மற்றவரைத் தாழ்த்தியும் புறங்கூறியும் வருகின்றனராம். கேடு பயக்கும் வழிகள் என்னென்ன உள்ளனவோ அவற்றை யெல்லாம் கையாள்கின்றனராம். தமக்கு வேண்டிய மாணவர், அவர்க்கு வேண்டிய மாணவர் என்றெல்லாம் பிரித்துணர் கின்றனராம். அதனோடு நின்றாரல்லர். அதனடியாக நன்மை தீமைகளும் இயற்று கின்றனராம். இத்தகு கீழ்மைக்குணம் ஆசிரிய உலகில் புகுவது, வருந்தத் தக்கதோடன்றி வெறுக்கத் தக்கதும் ஆகும். என் செய்வது? எவ்வளவு கற்பினும் பண் பாடில்லையே! பண்பட்ட கல்வி என்று வருமோ? ஆசிரியர் இவ்வாறிருந்தால் இவர்பாற் பயிலும் மாணவரி டையே நற்பண்புகள் எங்கே வளரமுடியும்? ஆசிரியத் தொழில் 'புனித' மானது என்று நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். அது நிற்க; நீ எந்த ஆசிரியரை விரும்புகிறாயோ அது மற்ற ஆசிரியருக்குத் தெரிதல் வேண்டா.

உண்ணும் நேரத்தில் உண். உறங்கும் நேரத்தில் உறங்கு. விளையாடும் நேரத்தில் விளையாடு. மாறி எதையும் செய்யாதே. உடல் நலத்தை நன்கு பேணிக் கொள். நாட்டுள் ஒருவர் நாம்; நம்மால் தான் நாடு என்ற எண்ணம் எப்பொழுதும் நெஞ்சில் இருக்கட்டும். ஒவ்வொருவருடைய கல்வியும் பண்புந்தாம் நாட்டை உயர்த்து கின்றன.

உன் தந்தை

*1.8.1956* **முடியரசன்**

❖ ❖ ❖

# 3

# ஒழுக்கம் ஓம்பு

அன்புள்ள அரசு,

உன் கடிதம் கிடைத்தது. பாடங்களை ஒழுங்காகப் படித்து வருவதாக எழுதியிருப்பது கண்டு மகிழ்வெய்துகிறேன். உடல் நலனை நன்கு பேணி வைத்துக் கொள். உடம்பை எப்பொழுதும் தூய்மையாக வைத்துக்கொள். உடம்பு தூய்மையாக இருப்பின் உள்ளமும் தூய்மைப்படும். பாடங்கள் மனத்தில் நன்கு பதிய - பதிந்தவை மறவாதிருக்க உடற்றூய்மை உறுதுணை செய்யும்; நினைவாற்றலுக்கு அது நன்மருந்து. வைகறைத் துயில் எழுதலும் இளங்காலையில் நீராடலும் அதனைத் தரவல்லன. இவ்வொழுக்கங் களில் மிகவும் உன்னிப்பாக இருத்தல் வேண்டும்.

எல்லாராலும் எளிதாகக் கடைப்பிடிக்க முடியாதது ஒழுக்கம் என்று சிலர் எண்ணுவர். இன்னும் சிலர், இல்வாழ்வானுக்குத்தான் ஒழுக்கம் வேண்டப்படுவது என்றுங் கூறுவர். ஒழுக்கத்திற்கு அவ்வாறு வரையறை கூறுவது தவறு. அவ்வாறாயின் மற்றையோர்க்கு எவ்வாறு ஒழுக்கம் வாய்க்கும்? துயில் எழுதல் முதல் துயிலச் செல்லும் வரை நிகழும் ஒவ்வொரு செயலிலும் ஒழுக்கம் விரவி நிற்கின்றது. இன்ன இன்ன செயலை இன்னின்னவாறு ஆற்றுவதென வரையறுத்துக் கொண்டு நாடொறும் வழுவாது ஒழுகி வருவதுதான் ஒழுக்கம். அவ்வொழுக்கம் வழுக்கினால் இழுக்கம் ஏற்படும். இழுக்கத்திற்கு இடங்கொடாதே. எழுதல், நீராடல், உண்ணல், உறங்கல், உடுத்தல், படித்தல், பேசல், பழகல் இவ்வனைத்திலும் ஒழுக்கம் உடையவனாக இரு. இருப்பின் நல்வாழ்வு உன்னைத் தேடிவந்தடையும். விழுப்பமும் நல்கும். ஆதலால் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதிக் காத்துக் கொள்.

ஆசிரியர்கள் பாடம் நடத்தும் முறை பற்றி எழுதியிருந்தாய். ஆசிரியர் பலரைப் பாராட்டி எழுதியிருந்தாய். ஓரிருவர் கற்பிக்கத்

தெரியாமல் தடுமாறுகின்றனர் என்றும் எழுதியிருந்தாய். அதனோடமையாது, அவர் பாடம் நடத்துவது ஒரே 'போர்' மயமாக இருக்கிறதென்று எழுதியிருந்தாய். இந்தப் 'போர்' என்ற சொல்லைக் கண்டதும் மிகமிக வருந்தினேன். உன்னைக்கூட மனத்திற் கடிந்து கொண்டேன். இனிமேல் அவ்வாறு எழுதாதே; எண்ணவுஞ் செய்யாதே. கல்லூரி மாணவர் சிலர், இச்சொல்லை அடிக்கடி பயன் படுத்துவதைக் கேட்டிருக்கிறேன். கேட்கும் பொழுதெல்லாம் ஆறாத் துயரங் கொள்வேன். ஆசிரியர் நிலையும் மாணவர் நிலையும் இவ்வாறு போய்க்கொண்டிருக்கிறதே, கல்வி நிலை என்னாவது? நாட்டின் எதிர்காலம் என்னாவது? என நினைந்து நினைத்துக் கவல்வேன்.

நாட்டுப் பற்று என் குருதியோடு கலந்துவிட்ட ஒரு பண்பு என்பதை நீ நன்கறிவாய். அதனால்தான் எக்காட்சியைக் காணினும் நாட்டோடு ஒட்டிப் பார்க்க என் மனம் தூண்டுகிறது. உன்னைக் கூட என் மகன் என்ற உறவு முறையிற் கருதாமல், இந்நாட்டு மக்களுள் ஒருவன் என்பது மட்டுமன்று அரசனும் நீ என்ற கருத்திலே தான் இத்தகு அறிவுரைகளை உனக்கு எழுதி வருகின்றேன். எல்லாரும் அறிவுடை மக்களாக ஆகிவிட்டால் தென்னாடாகிய என்னாடு பொன்னாடாகுமே என்று ஏங்கிக் கொண்டேயிருக் கிறேன். அதனால் ஆசிரியர் பாடம் நடத்துவதைப் 'போர்' என்று இனி சொல்லாதே.

நீ படிக்கச் சென்றிருக்கிறாய். அதனால் எத்தகு ஆசிரியரா யினும் அவர் சொல்வதைக் கூர்ந்து கேள். கேட்டு நல்லன கொண்டு அல்லன தள்ள வேண்டும். நீரையும் பாலையும் வேறு பிரித்துண்ணும் அன்னத்தை மாணவர்க்கு உவமையாக நம் முன்னோர் ஏன் சொல்லி வைத்தனர். அல்லன தள்ளி நல்லன கொள்ள வேண்டும் என்பதற்காகத்தானே. நல்லனவும் அல்லனவும் உரைக்கும் ஆசிரியர் பெருமக்கள், அன்றே இருந்திருக்கின்றனர். இருந்த காரணத்தாலே தான் பாலையும் நீரையும் வேறாக்கி உண்ணும் ஆர்வத்தை உவமை கூறியுள்ளனர். நல்லனவே எடுத்துரைக்கும் நன் மக்கள் மட்டும் இருந்திருப்பின் அன்னம் மாணவர் உலகிற் புகுந்திருக்காது.

ஏன் இதனை எடுத்துரைத்தேன் என்றால் என்றுமே ஆசிரியர் உலகில், தகுதி பெற்றாரும் பெறாரும் இருந்து வருவது இயல்பாகி

விட்டது என்பதற்குத்தான். ஆனால் ஒரு வேற்றுமை, தக்கார் பலராகவும் தகார் ஓரிருவராக அருகியும் காணப் பட்டனர் அன்று. இன்றோ தகார் பலராகப் பெருகியும் தக்கார் சிலராக அருகியும் காணக்கிடக்கின்றனர். எப்படியோ தகுதியும் திறமையும் அற்றவர் கல்வியுலகில் புகுந்து விடுகின்றனர். தாங்குரை (சிபாரிசு) ஒன்று தான் அவர் பெற்ற தகுதி.

வேறு அலுவல் கிடைக்கப் பெறாதோர், இங்காவது செல் வோமே என்று ஆசிரியர் உலகில் வேண்டா வெறுப்பாக நுழை கின்றனர். அந்தோ! அவர் என் செய்வர்? வாங்கும் ஊதியத்திற் காக ஏதேனும் உளறவேண்டுமே என்று திருவாய் மலர்ந்தருளு கின்றனர். விருப்பின்றி இப்பணியை ஏற்பதால் வேலையில் பழுதுகள் விளை கின்றன. அதனால் ஆள்வோர் முதல் ஆண்டி வரை ஆசிரியர் களை ஏசுகின்றனர். ஏன்? மாணவர்களே கண்டபடி பேசுகின்றனரே! என் செய்வது? இவற்றையெல்லாம் ஆளும் நல்லவர்களல்லவா உணர வேண்டும். அவர்களுக்கல்லவா இந்த அக்கறை வேண்டும்?

அக்கறை அவர்களுக்கு வரும்வரை மாணவர்தாம் படிப்பில் அக்கறை காட்ட வேண்டும். எந்த ஆசிரியர் எப்படி நடத்தினாலும் அவற்றைக் கூர்ந்து கேட்க வேண்டும். எவரிடத்தும் ஒன்றிரண்டு நல்லன இருந்தே தீரும். அந்நல்லன வற்றை நாம் ஏற்க வேண்டும். அப் பொழுதுதான் நாம் சிறக்க முடியும். இன்றேல் பயனில்லை. எவரிடத்தும் கீழ்ப்படிந்து படிப்பதுதான் படிப்போர் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்கம்.

வள்ளுவர் கல்வி பயில்வோர்க்கு அரியதொரு கருத்தை அறிவுறுத்துகிறார். அதனை இப்பொழுது உனக்குச் சொல்வது நல்லது.

> ‘‘உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்;
> கடையரே கல்லா தவர்’’.

என்பது அவர் வாய்மொழி.

அதன் பொருளையும் எழுதி விடுகிறேன். சிறிது பொறுமை யுடன் படி. இதையும் ‘‘போர்’’ என்று சொல்லி விடாதே. முன் - முதனில்; இல்லார் போல் - வறியவரைப் போல; ஏக்கற்றும் கற்றார் - தாழ்ந்து நின்றும் கல்வி கற்றவர்கள்; உடையார் - பின்பு எல்லாம் உடையவராகக் கருதப்படுவர்; கல்லாதவர் - அவ்வாறு கல்லாதவர்;

கடையரே - ஒரு பொருட்டாகக் கருதப்படாமல் கீழாகக் கருதப் படுவர்.

அஃதாவது முதலில் வறியவர்போல ஆசிரியரிடம் தாழ்ந்தும் கீழ்ப்படிந்தும் பாடம் கேட்பவர், பின்னர் எல்லாம் உடைய பெரியோராகக் கருதப்படுவர். கிழ்ப் படியக் கூசுவோர் கடைய ராவர் என்பதாகும். இது பரிமேலழகர் பொருளன்று. நான் சிறிது மாற்றிப் பொருள் கொண்டேன். இதனை உனக்கு வழங்குகிறேன். இதன்படி நடந்து நன்மை பெறு. இரண்டொரு நாளில் குற்றாலஞ் செல்லுவேன். சென்று வந்து விளக்கமாக இன்னும் எழுதுவேன்.

உன் தந்தை

*15.8.1956* முடியரசன்.

❖ ❖ ❖

# 4

# திருக்குற்றாலம் சென்று வந்தேன்

அன்புள்ள அரசு,

இயற்கைக் காட்சிகள் நிறைந்து விளங்கும் இடங்களை யெல்லாம் கண்டு களிக்க வேண்டும் என்ற ஆவல், என் நெஞ்சத்தில் வேரூன்றி நிற்கும் ஒரு நினைவு கலந்த கனவாகும். அக் கனவு சிறிது சிறிதாகச் செயலாகி வருகிறது.

நெடுநாளாகவே குற்றாலம் சென்று மலைவளங் காணல் வேண்டும், அம் மலைவளந்தரும் நலங்களையெல்லாம் நுகர்தல் வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தேன். நான் பள்ளியிற் பயிலும் பொழுதே இவ்வெண்ணங் கருக்கொண்டது. இலக்கியங்கள் அம் மலைநலம் பாடிப்பாடி அக்கருவை வளர்த்தன. தமிழ்தந்த பொதியம், தென்றல் தரும் குன்றம் என்ற புகழுரைகளையெல்லாம் கேட்குந்தோறும் உள்ளங் குளிரும்.

தேவாரப் பெருமக்கள் குற்றாலத்து இறைவனை நினைந்து, தம்மை மறந்து, உள்ளுருகிப் பாடுங்கால், அங்கு ஆர்த்து வீழும் அருவியை, அசைந்தாடும் நறுமலரை, குளிர்புனற் சாரலை, கொழுமலர்ச் சோலையை, வானுயர் மரங்களை, வளந்தரும் இடங்களையெல்லாம் மறந்தாரல்லர். அக்காட்சிகள் அனைத்தும் அவர்தம் அகக் கண்ணை விட்டகன்றில. அதனால் அக்காட்சிகளை அப்படி அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன அவர்தம் பாடல்கள்.

அவர்தம் பாடல்களில் அவ்வோவியங்களைக் காணும் பொழுதெல்லாம் நானும் குற்றாலத்தில் இருப்பதாகவே எண்ணி என்னையும் மறந்து விடுவேன். அருவி ஓசை செவியில் ஆர்க்கும்; மெல்லிய தென்றல் என் நல்லுடல் வருடும். மழலை வண்டினம் நல்லியாழ் செயும். விரிமலர் பலப்பல நறுமணம் வீசும். இத்தனையும்

என் கற்பனையில். கற்பனை கலைந்ததும் தன்னினைவு தலை தூக்கும், கவல்வேன்; அயர்வேன், அக்காட்சிகளை என்று காண்பேன் என்று.

ஆண்டுச் சென்று திங்கட் கணக்கில் தங்கித் தூய நல்லுடலோடு மீளும் பெருமக்கள் அக் குற்றால வளத்தையும் நலத்தையும் வியந்து வியந்து பாராட்டுவதையும் கேட்டிருக் கின்றேன். இக்கேள்வியும் என் ஆவலைக் கிளர்ந்தெழச் செய்யும். கிளர்ந்தெழுந்த எண்ணம் வளர்ந்து வளர்ந்து பயன் தந்து விட்டது தம்பி. அண்மையில் குற்றாலம் சென்று வரும் வாய்ப்புப் பெற்றேன். வற்றாத இன்பங் கண்டு வாரி வாரி உண்டு மகிழ்ந்தேன் களித்தேன்.

இப் பருவத்துக்கு ஆங்கே வந்தார் அனைவருள்ளும் நானே பெரும்பயன் பெற்றேன் என்று பெருமிதத்தோடு வரைகின்றேன். வானமுகட்டை முத்தமிடும் மலை முகடுகள், அம் முகட்டில் தவழ்ந்து செல்லும் முகிற் கூட்டங்கள், அம் முகில்கள் அகங் குளிர்ந்து பொழியும் மழைத் துளிகள், துளிகள் ஒன்று திரண்டு விழும் தூய வெள்ளருவி, அருவியால் வளம் பெறுங் காடுகள், சோலைகள், வயல்கள், இவை தந்த பசுமை இவ்வனைத்தையும் என் கண்ணாரக் கண்டேன், கண்டேன் என்று சொல்வதினும் கண் களால் உண்டேன் என்று சொல்வது மிகப் பொருந்தும்.

மலை உச்சியிற் பெய்த நீர் ஒன்றாகிப் பச்சிலைகளில் உராய்ந்து, ஓடி வந்து, மலைச்சரிவுகளில் முழங்கி, இறங்கும் அவ்வருவிகளில் ஓயாது குளித்தேன். தண்டுளிச் சாரலோடு வீசுந் தென்றற் காற்றத் தனையும் என் உடற்குள்ளேயே புகவிட்டேன். சட்டையிட்டு உடலை மூடினேனல்லேன். நீ மழலை மொழிக் குழவியாக இருந்த பொழுது என் மார்பிலும் தோளிலும் எவ்வாறு தவழ்ந்தோடி விளையாடினையோ அதைப் போலவே தென்றலையும் என் மீது தவழ்ந்தாடவிட்டேன். சுருங்கக் கூறின் தென்றற் காற்றில் முங்கிக் குளித்தேன் என்றுதான் கூறுதல் வேண்டும்.

இயற்கையின் எழில் கண்டு, குளிரருவிப் புனல் படிந்து மலர் மணத்தை அள்ளிவரும் தென்றல் நுகர்ந்து என் கவலையெல்லாம் களைந்து பேரின்பத்தில் திளைத்திருந்தேன். அதனால் ஓராண்டுக்கு மேலாக என் நெஞ்சின் வலப் பக்கத்தில் நிலைத்து நின்று என் உயிரை வதைத்து வந்த அந்த வலியும் பெரும்பகுதி நீங்கப் பெற்றேன். இன்னும் சின்னாள் தங்கியிருப்பின் அவ்வலி அறவே நீங்கப்

பெற்றிருப்பேன். ஆனால் நான் ஏற்று நிற்கும் பொறுப்பு, கடமை அங்கே தங்கவிடவில்லை. ஊருக்குத் திரும்பினேன்.

பொறுப்புள்ள - நாட்டுக்கு நன்மை தரத் தக்க, நாட்டின் உயர்வுக்கே உயிர் நாடியான அலுவல்களில் ஈடுபட்டிருப்போர் நோய்வாய்ப்படின் அந்நோய் நீக்கத்துக்காக ஓரிரு திங்கள் விடுப் பளித்து, அவர்களைக் குற்றாலம் போன்ற உடல்நல நிலையங் களுக்கு உய்த்து வேண்டிய உதவிகளும் செய்து தர நம் அரசியலார் முயல்வாராயின் நாட்டுக்குப் பெரும் நன்மையாகும். இவ்வாறு செய்யின் அம் மக்கள், இழந்த வலிவை மீட்டும் பெற்று, அப்பணியில் நன்கு உழைப்பதற்கு வாயிலாக இருக்கும். அந்நாள் எந்நாளோ?

என்னைத் தொல்லைப்படுத்தி வந்த நோய் நீங்கி, இன்பம் பெற்றமையாற்றான் பெரும்பயன் பெற்றேன் என்று எழுதினேன். மேலும் எத்தனைப் பேர் நான் கூறிய இயற்கைக் காட்சிகளைக் கண்டு, எழில் நலம் நுகர்ந்திருப்பர்? பெரும் பகுதியும் இரார் என்றே எண்ணுகின்றேன். பெருஞ்செல்வரே மிகுதியும் செல்கின்றனர். ஏதோ நீராடி விட்டு, நல்லுணவு உண்டு, களியாட்டம் ஆடிக் காலத்தைக் கழித்து மீள்கின்றனர். அவர்தம் செல்வச் செழிப்பைக் காட்டிக் கொள்ள வருகின்றனரே அன்றி, இயற்கை இன்பத்தில் திளைக்க வருவதாகத் தோன்றவில்லை.

இன்னுஞ் சிலரோ ‘புண்ணியத் தலம் போய் வந்தோம்; நம் பாவங்களைக் கழுவி விட்டு வந்தோம்’ என்று புண்ணிய பாவக் கணக்குப் போடுவர். இன்னுஞ் சிலர் நிலைதான் இரங்கத் தக்கது. அருவியில் நீராடுவதைப் புண்ணியத் தீர்த்தத்தில் நீராடுவதாக எண்ணிக் கொண்டு தலையை மட்டும் அருவியிற் காட்டி உடனே இழுத்துக் கொண்டு ஓடி வந்துவிடுகின்றனர். நல்ல வேளை! கையில் சிறிது எடுத்துத் தலையில் தெளித்துக் கொள்ளாமல் தலையையாவது நனைக்கின்றார்களே! சிலர் ஒருநாள் மட்டும் நீராடி மீள்கின்றனர். இவரெல்லாம் புண்ணிய நோக்கத்திற்காகச் செல்வோர். நோக்கம் தவறென்று சொல்ல வரவில்லை. இவர்தம் அறியாமையைக் கண்டே இரங்குகின்றேன்.

ஒருநாளில் என்ன பயன் காணல் கூடும்? இவர்களைப் பெரும் பயன் பெற்றார் என்று எவ்வாறு கூறுதல் இயலும்? ஆகவேதான் நானே பெரும்பயன் பெற்றேன் என்று எழுதினேன். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புல இன்பங்களையும் நான்

பெற்றேன். தம்பி! நான் பெற்ற இன்பத்தையே எழுதிக் கொண்டிருக் கிறேன். அந்த இன்பம் அப்படி என்னை எழுதத் தூண்டுகிறது. இருப்பினும் குற்றாலக் காட்சி, அமைப்பு இவற்றையும் எழுதுவேன். எழுதும் பொழுதே இடையிடையே உனக்கு வேண்டிய அறிவுரை களையும் எழுதுவேன்.

மதுரையிலிருந்து இரவு இரண்டே முக்கால் மணியளவில் புறப்படும் தொடர் வண்டிக்குச் சென்றோம். வண்டி புறப்படும் நேரத்திற்குத்தான் செல்ல வேண்டியதாயிற்று. அதனால் படிகளில் ஏறி இறங்கும் போது தட்டுத் தடுமாறி, கீழே விழுந்து விடாமல், தொடர் வண்டி நிற்கும் இடத்தையடைந்தோம். வண்டியில் நுழைய இடமில்லை. எப்பொழுதுமே வண்டி புறப்படுவதற்கு முன் குறைந்தது அரைமணி நேரத்திற்கு முன்பே சென்று நிலையத்தில் இருக்க வேண்டும் என்று உன்னிடம் பலமுறை சொல்லியிருக் கின்றேன் அல்லவா? ஆனால் அறிவுரை சொல்லும் நான் இப்பொழுது தவறிவிட்டேன். சொல்வது எளிது; செய்வது அரிது. சொன்னபடி செய்திருந்தால் எளிதாக இடங் கிடைத்திருக்கும்.

நம் மக்களுக்கு வண்டியில் ஏறவும் தெரிவதில்லை; இறங்கவுந் தெரிவதில்லை. வரிசையாக ஏறவேண்டுமென்றோ உள்ளிருப்போர் இறங்கிய பின் ஏறவேண்டுமென்றோ இவர்கள் உணர்வதுமில்லை. ஒழுங்கு முறையைப் பின்பற்றி நடந்தால் பொருள் இழப்போ உடல் வலியோ வேறு பிற தொல்லைகளோ ஏற்படா. அடிதடிகளும், சண்டை சச்சரவுகளும், வசவுகளும் விளையா. மூன்றாம் வகுப்பில் ஏறும் மக்கள் அன்று மக்களாக நடந்து கொள்ளவில்லை. விலங்குத் தன்மைதான் நிலவக் கண்டேன். மூப்படைந்தோர் ஏற வழியின்றித் தடுமாறினர்; மாதர் தவித்தனர். இரண்டொருவர் கீழே விழவும் செய்தனர். குழந்தைகள் நெருக்கடி தாங்க மாட்டாமல் வீரிட்டழுதன. பொருள்கள் பறிபோயின.

ஒழுங்குமுறையே நமக்கு இன்னும் விளங்கவில்லை. உரிமை பெற்ற நாட்டில் வாழ்கிறோம்! இவ்வளவு கூட்டத்திற்கும் காரணம் வில்லிப்புத்தூருக்கு அருகில் ஒரு திருவிழா நடை பெறுவதுதான். இதையறிந்தாவது நிலையத் தலைவர் இரண்டொரு வண்டிகளைத் தொடுத்திருக்கலாம். அதுதானுஞ் செய்தாரல்லவர்.

மூன்றாம் வகுப்பில் இடங் காணாக் காரணத்தால் நானும் நான் குற்றாலஞ் செல்ல உதவியாக இருந்த நண்பர் மகாலிங்கமும் இன்னுஞ் சிலரும் இரண்டாம் வகுப்புக் கட்டணம் செலுத்துவதாக

வண்டிக் காப்பாளரிடம் (GUARD) சொல்லிவிட்டு இரண்டாம் வகுப்பில் ஏறினோம். அங்காவது இருக்க இடங்கிடைத்ததா? நின்ற திருக்கோலந்தான். ஏனெனில், கிடந்த திருக்கோலம் காட்டும் பெருமாள்கள் எழமன மின்றி அறிதுயில் கொண்டமையேயாகும். எவ்வளவு நேரந்தான் நின்று தொலைப்பது? கால் வலி தாங்க முடியவில்லை. படுத்திருப்பவரை எழுப்பிச் சிறிது இடங் கேட்டேன். அவருக்கு வெகுளி வந்துவிட்டது. 'என்னய்யா? மனிதன் உறங்குவது தெரியவில்லை?' என்று கடிந்துரைத்து மீண்டும் சாய்ந்தார். என் நண்பர் மகாலிங்கத்திற்குச் சினம் வந்து விட்டது. 'அடடே! நீர் மனிதரா? தெரியவில்லையே! மகா மனிதர் ஐயா, மனிதன் நின்று கொண்டே வருவது உமக்குத் தெரியவில்லையே! எழுந்திரும் ஐயா' என்று அதட்டினார். அந்தப் புண்ணியவான் வாய் பேசாமல் எழுந்து இடங் கொடுத்தார். உலகம் எப்படியிருக்கிறது. பார்த்தாயா? பொறுமையும் வேண்டும். எல்லை மீறினால் பொறுமையைச் சிறிது கைவிடவும் வேண்டும் போலும்.

காலை ஒன்பது மணியளவில் தென்காசியை அடைந்தோம். அங்கிருந்து மூன்று கல் தொலைவிலுள்ள குற்றாலத்தை நோக்கி, மாட்டு வண்டியில் புறப்பட்டோம். வண்டியின் கூடு மிகத் தணிந்திருந்தமையால் நாங்கள் தலை வணங்கித்தான் இருக்க நேர்ந்தது. எங்கள் மூட்டை முடிச்சு களுக்கிடையில் அமர்ந்திருந் தோம். வண்டி போய்க் கொண்டிருக்கும்போது எங்கள் தலையும் தோளும் வண்டியின் வலிமையைச் சரிபார்த்தன. சில வேளைகளில் எங்கள் தலைகளுக்கிடையேயும் வலிமைப் போட்டி நடந்தது.

பாதி வழியைக் கடந்ததும் மெல்லிய குளிர்காற்று வீசத் தொடங்கியது. வழி நெடுகலும் பச்சைப் பசேரென்ற காட்சிகள். சிறிது சிறிதாகத் தலையை மட்டும் வெளியில் நீட்டி அக்காட்சி களைப் பார்த்தோம். வயல் நிரம்ப இருந்த முற்றா இளநாற்றுகள் மஞ்சள் கலந்த பசுமை நிறத்தை எங்கள் கண்களுக்கு விருந்தாக்கின. மென் காற்று அவற்றின் மீது உராய்ந்து செல்லுங்கால் அவை வளைந்து அசையுங் காட்சி, மெல்லிய பசிய ஆடை காற்றில் துவள்வது போன்றிருந்தது. சிறிது தொலைவு சென்றதும் அம் மென்காற்று, சிறுசிறு நீர்த்துளிகளைத் தூவியது. அது எங்களைப் பனிநீர் தெளித்து வரவேற்பது போல இருந்தது. அவ்வரவேற் பினால், தொடர் வண்டியிற் பட்ட தொல்லையும் வண்டியிலுற்ற வலியும் மறந்து குற்றாலத்தை அடைந்தோம்.

அரசு! கடிதம் நீள்கிறது. அதனால் குற்றாலக் காட்சி பற்றியே அடுத்த கடிதத்திலும் எழுதுவேன். எனக்கும் நேரம் ஆகிறது. என் அலுவலுக்குச் செல்ல வேண்டுமல்லவா? காலம் பொன்னினும் சிறந்தது. கடமையில் தவறுவதும் கூடாதல்லவா? ஆதலின் அடுத்து, மலைக் காட்சியையும் வளத்தையும் பிறவற்றையும் விளக்கி எழுதுவேன்.

உன் தந்தை

*22.8.1956* முடியரசன்

❖ ❖ ❖

# 5

# கண்குளிரும் குற்றாலம்

அன்புள்ள அரசு,

உன் கடிதம் கிடைத்தது. 'குற்றாலம் சென்று வந்தமை குறித்து எழுதிய தங்கள் கடிதம், குற்றாலம் சென்று வர வேண்டுமென்ற ஆவலைத் தூண்டுகிறது. எங்கள் கல்லூரி மாணவர்கள் விடுமுறையில் சுற்றுலா செல்ல முடிவு செய்துள்ளனர். சுற்றுலாவிற்கு ஏற்ற இடமாகக் குற்றாலத் தையே தேர்ந்தெடுத்துள்ளனர். நானும் உடன்சென்று வரக் கருதுகின்றேன். நீங்கள் உடன்பாடு தெரிவிப்பின் நானும் பெயர் கொடுத்து விடுவேன்' என்று எழுதியிருக்கின்றாய்.

மகிழ்ச்சி, நான் குற்றாலத்தின்பம் நுகருங்காலை, ஒருமுறை நம் குடும்பத்துடன் வந்து தங்கி அளவளாவி யான் பெற்ற இன்பத் தைப் பகிர்ந்து நுகர்தல் வேண்டுமென்று முடிவு செய்தேன். அதனால் நீ சென்று வருவதில் எவ்விதத் தடையும் இல்லை. சென்று வரலாம் . நான் எழுதும் அறிவுரைகளை மனத்தில் நிலை நிறுத்திக் கொண்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். நீ நடப்ப தோடன்றி நின் மாணவத் தோழர்களையும் அவ்வாறே நடக்குமாறு சொல்லுதல் வேண்டும். யான் எழுதும் வண்ணம் நடந்து கொண்டால் எவ்வகை ஊறுமின்றி நலமே திரும்பலாம். ஆதலின் முன்னறிவிப் புடன் நடந்து கொள்க. மேலும் அம்மலை பற்றிச் சிறிது விளக்கம் தருகிறேன். அவ்விளக்கம் வழிகாட்டி போல உதவும்.

குற்றால மலை மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதி யாகும். இப்பகுதியைத் திரிகூட மலை, பொதிய மலை என்றெல்லாம் வேறு பெயராலும் அழைப்பர். இரண்டு மூன்று மலைத் தொடர்கள் ஒன்றன் பின் ஒன்றாக அமைந்து கிடக்கும். ஓங்கி உயர்ந்த மலைத் தொடர்கள், முகில் மூடிய மலையுச்சி, அருவியின் ஆரவாரம், சோலைகளிற் புகுந்து சலசலப்பை உண்டாக்கிவரும் பூங்காற்றின் இறைச்சல், புள்ளினங்கள் எழுப்பும் பல்வகை ஒலி, அருவியில்

நீராடுவார்தம் ஆர்ப்பரிப்பு இவை எல்லாம் இன்பமயம். அம்மலைக் காட்சி, காண்பாரை அப்படியே மலைத்து நிற்கச் செய்யும் இயல்பினது.

நாங்கள் தங்கியிருந்த இடம் கண்ணாடி மனை (Glass Bungalow) எனப்படும். இப்பொழுது கண்ணாடி காணமுடியாது. அது, முன்பு கண்ணாடிகள் அமைத்துச் செய்யப்பட்டிருந்ததாம். இப்பொழுது அது கற்சுவர் வீடாகத்தான் காட்சியளிக்கிறது. இருப்பினும் பழைய பெயர்தான். முன்றிலில் ஒரு சிறிய பூங்கா, சண்பகம், சந்தனம், தென்னை, கமுகு முதலிய பல்வகை மரங்களில் வகைக்கொன்று அங்கே உண்டு. பல்வகை மலர்ச் செடிகளும் உண்டு. பின் பக்கம் பெரிய தென்னந்தோப்பு, அத்தோப்பில் பாக்கு மரங்களும் தென்னையோடு போட்டியிட்டு வளர்ந்திருக்கும். அக் கமுக மரங்கள் அணி வகுத்தாற் போலத் தோப்பின் இடையில் இருமருங்கும் ஒரே வரிசையாக நெடுந்தூரம் காணப்பெறும்.

அவ் வணிவகுப்பின் இடையே நானும் என் நண்பர்களும் நடந்து செல்லுங்கால், என் இரு மருங்கும் படை அணி வகுத்து நிற்பதாகவும் உடன்வருவோர் ஐம்பெருங் குழுவினராகவும், நான் மூவேந்தருள் ஒருவராக - முடியரசராக - அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்ளுவதாகவும் கற்பனை செய்து கொண்டு பெருமிதத் துடன் நடந்து செல்லுவேன். அக் குற்றாலம் என்னை அவ்வா றெல்லாம் எண்ணச் செய்தது.

தென்காசியிலிருந்து குற்றாலம் செல்லும் போது குற்றாலத்தை நெருங்கியதும் நமக்கு இடப்பக்கமாக ஒரு வழி பிரியும். அவ்வழி யேகின் சிறிது தொலைவில் உள்ள புலி யருவியை அடையலாம். இஃது இப் பெயர் பெறக் காரணம் தெரியவில்லை. அவ்வருவி, பெண்களும், ஆண்களும் தனித்தனி நீராடுவதற்காக நன்முறையில் செப்பஞ் செய்யப்பட்டிருக்கும். ஆதலின் அருவியின் செயற்கை யமைப்பையே காண்பாய். அருவி, மூன்று கிளையாகப் பிரிந்து வீழுமாறு அமைக்கப் பெற்றிருக்கும். அருவி வீழும் இடத்திற்கு அருகில் கேணி போன்றதொரு தொட்டியிருக்கும். அத் தொட்டி நிரம்பித் தண்ணீர் வழிந்தோடும்.

அடுத்தபடி, கீழே பெண்கள் நீராடுவதற்காகக் கட்டப் பட்டிருக்கும் இடம் உண்டு. அதனருகில் கூழாங்கற்கள் பெரியனவும் சிறியனவுங் கொண்டு, மாடங்களமைந்த சுவரொன்று எழுப்பப்

பெற்றிருக்கும். அச்சுவர் கண்ணுக்கினிய காட்சியாகும். சிறிது தள்ளி நின்று பார்ப்பார்க்குப் பெரிய பெரிய முத்துகள் பதித்துச் செய்யப்பட்ட சுவரெனத் தோன்றும். இவ் வருவியில் நீராடி வழிபாடு செய்ய விழைவார்க்கு ஆங்குச் சிறிய அழகிய கோவில் ஒன்றும் கட்டப்பட்டிருக்கும். சுருங்கக் கூறின் இப் புலியருவி செயற்கை அழகாற் பொலியும்.

இனி, குற்றாலத்துள் நுழையின் நம் எதிரில் தோன்றுவது பேரருவியே. இஃது ஆங்குள்ள அருவிகளிற் பெரிதாயிருப்பது பற்றி இப்பெயர் பெற்றது. இவ்வருவி நம்மை எதிர்கொண்டு வரவேற்பது போல, உயரிய இடத்தினின்றும் அகன்று விரிந்து பரவிச் 'சோ' என்ற பேரொலியோடு வீழும். மலையுச்சியிலிருந்து ஓடிவந்து உயர்ந்த ஒரு சரிவில் கீழே இறங்குகிறது. அஃது ஒரு பனை உயரத்திலிருந்து, கீழே உள்ள பெரிய ஆழமான சுனையொன்றில் தடதட வென வீழ்கிறது. அது வீழும் இடத்தைப் 'பொங்குமாங்கடல்' எனப் புகல்கின்றனர். அங்கிருந்து வழிந்து அகலமான பாறையிற் பரவி வீழ்கிறது. வீழும் இவ்விடந்தான் நீராடற்கேற்ற வகையில் காப்பமைவு களுடன் நன்கு கட்டப்பட்டிருக்கிறது. அருவியில் நின்று நீராடு வோர்க்குப் பற்றுக் கோடாக வலிய நீண்ட இரும்புக் கம்பிகள் அமைத்து மூன்று வரிசைகள் கட்டப்பட்டிருக் கின்றன.

நீயும் நின்னுடன் வருவோரும் இக் கம்பிகளைப் பற்றி நின்றே நீராடல் வேண்டும். இது நல்ல பாதுகாப்பான இடந்தான். இருப்பினும் தவறி விழுந்து விடின் ஏதம் விளையாதிருத்தற் பொருட்டு, நீண்ட வளைவுச் சுவரொன்று எழுப்பப் பெற்றிருக்கிறது. இச் சுவருக்கும் மலைக்கும் இடையேதான் அருவி வீழும். அதனால் ஏதம் ஒன்றும் நிகழ்ந்து விடாது. இருப்பினும் மக்கள் ஒழுங்கு முறை தவறுவதால் அஃதாவது வரையறை மீறுவதால் ஏதத்துக்கு ஆளாகின்றனர். கம்பி மீது ஏறி நின்றும் வளைவுச் சுவர்மீது ஏறிநின்றும் நீராடும் குறும்பர் சிலர், அருவியின் வேகத்தால் அல்லலுக்கு ஆளாகின்றனர். வரை யறையை மீறுவதால் நேரும் விளைவு. நாம் எச்சரிக்கையாக இருந்தால் துன்பமே இல்லை.

நான் குற்றாலத்தில் முதன் முதற்கண்டது இப்பேரருவியே யாகும். முதலில் அங்கு நீராட அஞ்சினேன். பார்க்கும்போதே அச்சம். அருகில் சென்றதும் அதன் பேரோசை அச்சத்தை இன்னும் பெருக்கியது. உடன் வந்தோர் என் அச்சங்கண்டு, எள்ளி நகைத்தனர்.

எனினும் நீராட மறுத்து விட்டேன். என்னிடம் பரிவு கொண்ட அவர்கள் மற்றோரருவிக்கு அழைத்துச் சென்றனர்.

பேரருவியிலிருந்து சிறிது தொலைவு மேற்கே சென்று, இடப்பக்கம் திரும்பி, மேலேறிச் சென்றால் அங்கே ஓரருவி காணப்படும். அதனைச் 'சிற்றருவி'யென்பர். பெயர்தான் சிறிது. வீழும் வேகமோ பெரிது. அங்கும் அச்சந்தான். இருப்பினும் துணிந்து நீராட முற்பட்டேன். இவ்வருவியில் மட்டும் நீராடுவதற்கு இரண்டணா கொடுக்க வேண்டும். காவலர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். இவ் வருவாயைக் கொண்டு அருவியை இன்னும் செவ்வைப்படுத்த எண்ணியுள்ளனர்.

இக்கட்டுப்பாட்டை மீறிச் சிலர் மலையின் மேற்புறம் ஏறிவந்து, காவலர் அறியாமல் குளிக்கின்றனர். வெற்றிக் களிப்பும் அடைகின்றனர். இவரையெல்லாம் கொண்ட நாடு, உரிமை பெற்றுத் தன்னாட்சி செலுத்தும் நாடென்ற பெயர் பெறுமா? "சட்டத்திற்குக் கட்டுப்பட்டு வாழும் மக்களைக் கொண்ட வரை யறுக்கப்பட்ட நிலமே நாடு எனப்படும்" என்று அரசியற் கலை வல்லுநரான வில்சன் என்ற பெருமகனார் கூறியுள்ளார்.

நம் நாட்டுப் பெருமக்கள் மட்டுங்கூறாது விடுத்தனரா? கூறினர்; அழகிய பாவடிவிலே, நாம்தான் அவற்றையெல்லாம் உன்னுவதில்லை. முன் ஒருமுறை உனக்கு எழுதியுள்ளேன், 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்ற ஒளவையின் பொன்மொழியை. சட்டத்திற்குட்பட்டு வாழும் நல்லவர்களைக் கொண்ட நாடுதான் நாடெனப்படும். அதனால் சட்டத்தை மீறாமல் நீங்களும் அங்கு நடந்து கொள்ள வேண்டும். நேரம் ஆகிறது. அடுத்த மடலில் இது பற்றித் தொடர்ந்து எழுதுவேன்.

உன் தந்தை

*29.8.1956* *முடியரசன்*

❖ ❖ ❖

**6**

# குற்றாலத்து அருவிகள்

*அன்புள்ள அரசு,*

*சென்ற மடலின் தொடர்ச்சியாகக் குற்றாலம் பற்றியே இம்மடலிலும் எழுதுகிறேன்.*

*குற்றாலத்தில் மேற்கே ஏறக்குறைய இரண்டரைக்கல் தொலைவில் ஐந்தருவி என்றோர் அருவியும் உண்டு. அங்குச் செல்லும் வழியில் காலஞ்சென்ற டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்களுடைய இல்லமும் காணப்படும். 'பொதியமலைப் பதிப்பகம்' என்றெழுதிய பலகையொன்று அவ்வில்லின் முன்புறந் தொங்கும். ஐந்தருவிக்குச் செல்வோர் செல்வராக இருந்தால் மகிழுந்திற் செல்வர். நடுத்தர வகுப்பினர் மாட்டு வண்டியில் ஊர்வர்.*

*நாங்களோ நடந்தே சென்றோம். ஊர்திகளிற் செல்வோர் இயற்கை வளங்களை முழுமையாகக் கண்டு களிக்க இயலா தல்லவா? அதனால் நாங்கள் நடந்தே சென்றோம். நீங்களும் பலராகச் செல்வதால் நடந்து செல்வது மகிழ்ச்சியாக இருக்கு மென்று கருதுகின்றேன். ஆயினும் அனைவரும் எம் முடிவுக்கு வருகின்றனரோ அதன்படி நடந்து கொள். இவ்வருவி ஐந்து பிரிவாகப் பிரிந்து வீழ்வதால் இப்பெயர் பெறுகிறது. இங்கும் நீராடற் கேற்ற காப்பமைவுகள் உண்டு.*

*பேரருவியின் மேற்பகுதியில், சண்பகாதேவி என்றோர் அருவியுண்டு, சிற்றருவியிலிருந்து மேலே ஏறிச் செல்ல வேண்டும். வளைந்து வளைந்து செல்கின்ற மலை வழியில் மூச்சுத் திணற ஏறிச்சென்றேன். வழி முழுதும் வானுயர் மரங்கள், தேக்கு, சந்தனம், சாதிக்காய் முதலான பல்வகை மரங்கள் அடர்ந்த காடுகள், கற்பாறைகள், ஒற்றையடிப்பாதை இவற்றை யெல்லாங் கடந்து, மலைமேல் ஏறிச் சென்றால் சண்பகா தேவியை அடையலாம்.*

இதுவும் பெரிய அருவியே. ஆனால் நீராடற் கேற்ற அமைப்புகள் இல்லை. முன்பு அமைத்திருக்கிறார்கள். அருவியின் விசையால் அவ்வமைப்புகள் சிதறுண்டு காணப்படுகின்றன. ஆதலின் நீராட இயலாது. அருகில் சிறு கோவிலும் அம்மன் சிலையும் காணப்படு கின்றன. சண்பகா தேவி என்ற அம்மன் அருகில் இருப்பதால் இவ்வருவி சண்பகாதேவி அருவி எனப் பெயர் பெற்றதோ என்று ஐயுற்றேன். ஆனால் சிறிது நேரத்தில் ஐயம் நீங்கப் பெற்றேன். அவ்விடம் சண்பக மரங்கள் நிறைந்த காடாக முன்பு இருந்திருக் கிறது. அதனால் அவ்விடத்தைச் சண்பக அடவியென்றழைத்தனர். அடவி என்னுஞ் சொல்லுக்குக் காடு என்னும் பொருளுண்டு. சண்பக அடவி நாளாக நாளாகச் சண்பகாடவி என்றாகிப் பின்னர்ச் சண்பகாதேவியாக மருவிவிட்டது. கடவுளைப் படைப்பதில் நம் மக்கள் வல்லவரகளல்லவா? தேவியும் தோன்றிவிட்டாள். உண்மைப் பெயர் சண்பக அடவி என்பதுதான். இங்கே வீழும் அருவி சண்பக அடவி அருவி என்று பெயர் பெற்று மக்கள் பக்திப் பெருக்கால் சண்பகா தேவி அருவியாக மாறிவிட்டது.

இந்த அருவியிலிருந்து இன்னும் மேலேறிச் செல்வோர் தேனருவியை அடைவர். இங்குச் செல்வதுதான் அரிதாகும். எல்லாரும் எளிதிற் செல்ல இயலாது. வெயில் நுழைபறியாக் காட்டுவழி. அவ்வழியும் ஒருவர்பின் ஒருவராகச் செல்லுமாறு அமைந்தது. சிறிது தவறினால் சரிவுகளில் எங்காவது முட்புதர் களிலே சென்றுதான் தங்க முடியும். தங்கினால் நாம் மீண்டும் இவ்வுலகைக் காண இயலாது.

பெரும் பெரும் பாறைகளையெல்லாம் கடந்து செல்ல வேண்டும். தாண்டித் தாண்டிச் செல்ல வேண்டும். தாண்டும் பொழுது சிறிது வழுக்கினால் அருவியில் வீழ்ந்து, எலும்புகள் ஒடிந்து சிதறி விடுவோம். மிகவும் உன்னிப்பாகச் செல்லுதல் வேண்டும். நாங்கள் ஒருவர்பின் ஒருவராகத் தாண்டிச் சென்றோம். நடந்து செல்ல இயலாது. தாண்டித் தாண்டித்தான் செல்ல இயலும். ஒவ்வொரு பாறையிலும் தாவிக் கொண்டிருக்கும் பொழுது, சரிவுகளின் மரக்கிளைகளில் குரங்கினங்களும் தாவித் தாவிச் செல்லும் காட்சியையும் கண்டோம். இரு திறத்தாருக்குத் தாவுதல் போட்டி நடப்பது போல் இருந்தது. வெற்றி நம் முன்னோருக்குத் தான்.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் நான் தாண்டிக் கொண்டிருந்தேன். இடையில் தங்கி விடலாமென்றால் ஒரே காடு. கொடிய விலங்குகள் வருமோ என்றஞ்சினேன். மேலும், வழிகாட்ட வந்தவர் என்னைப் பார்த்து 'இவரெங்கே ஏறப்போகிறார்' என்று ஏளனம் செய்தார். எனக்கு மானவுணர்ச்சி தலை தூக்கி நின்றது. இம்மான வுணர்ச்சியும் மேலே கூறிய அச்சவுணர்ச்சியும் சேர்ந்து என்னைப் பிடித்துத் தள்ளிக் கொண்டே சென்று தேனருவிக்கருகில் சேர்த்தன. கண்டேன் தேனருவியை. களைப்பெல்லாம் எங்கோ பறந்தது. சாரல் எங்களைக் குளிர்வித்தது. அங்கே பெற்ற இன்பம் என்னால் எழுத முடியாத இன்பம் அப்பா, எலும்பெல்லாம் நரம்பெல்லாம் அவ்வின்பம் ஓடி ஓடிப்பாய்வது போன்ற உணர்ச்சி.

இத் தேனருவி மிகவுயர்ந்த இரண்டு மலைகளுக்கிடையே நூல் பிடித்தாற் போல ஒரே அளவினதாக வீழ்கிறது. இரண்டு மலைகளும் நெருங்கி நிற்கின்றன. உச்சியில் ஒரு பெரும்பாறை, இரண்டற்கும் நடுவே மூடிக் கிடக்கின்றது. அப்பாறைக்குக் கீழிருந்து வீழும் அருவி, ஒரு குகைக்குள்ளிருந்து வெளி வருவது போலிருக்கும். அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தேன். பிடர் வலித்தமையால் நீண்டநேரம் பார்க்க முடியவில்லை. அவ்வளவு உயரத்திலிருந்து வீழ்கிறது அவ்வருவி, அருவியின் இடப்பக்கத்துப் பாறையில், செய்து வைத்தாற் போன்ற அழகிய பெரிய தேனடைகள் தொங்கிக் கொண்டிருக்கும். அதனாற்றான் இவ்வருவி தேனருவி யெனப் பெயர் பெற்றது. இது கீழே வீழ்ந்து மலைப்பாறைகளின் வழியாக வளைந்து வளைந்து ஓடி வந்து கீழிறங்குகிறது. இதுதான் சண்பக அடவி அருவியாகிறது. இன்னும் ஓடி ஓடி மூன்று பிரிவாகப் பிரிந்துசென்று, ஒரு பக்கம் சிற்றருவி யென்றும் மற்றொரு பக்கம் புலியருவியென்றும் இடையே பேரருவியென்றும் கீழே இறங்கு கிறது போலும்.

தேனருவியிலிருந்து இறங்கும் பொழுதும் எச்சரிக்கையாக இறங்க வேண்டும். இறங்கி வரும்பொழுது மலை மேலிருந்து நிலத்தைப் பார்த்தேன். கண்ணுக்கெட்டிய மட்டும் ஒரே பசுமையான காட்சி! தரையே தெரியவில்லை. எங்கும் பசுமையான வயல்கள். உயரத்திலிருந்து பார்ப்பதால் வரப்புகள் புலனாகவில்லை. ஒரே வயல்போலத் தோன்றியது. அதைச் சுற்றிலும் உயர்ந்த தென்னந் தோப்புகள். இக்காட்சி ஒரு பெரிய ஏரிபோற் காணப்பட்டது. உயர்ந்த தோப்புகள் பெரிய கரை போலவும் நடுவே அமைந்த வயற்பரப்பு நீர் நிலை போலவும் காற்றில் துவளும் நாற்றுகள்

நீர்ப்பரப்பிற் படிந்து படிந்து செல்லும் அலைகள் போலவும் காட்சியளித்தன.

சிறிது நேரம் நின்றபடியே அவ்வெழிலை கை புனைந்தி யற்றாக் கவின்பெறு வனப்பைக் கட்புலனாற் சுவைத்துக் கொண் டிருந்தேன். இறங்குகையில் அங்குக் கிடக்கும் பலவகைப் பாறைகள், செய்து வைத்தன போல விந்தை காட்டின. அனைத்தும் கை புனைந்தியற்றாதனவே. சில கற்கள் வடித்தெடுத்த ‘இலிங்கங்கள்’ போற் காணப்பட்டன. அவற்றைக் கண்டதும் இலக்கியச் செல்வர் இராய. சொக்கலிங்கனார் எழுதிய ‘குற்றால வளம்’ என்ற கட்டுரை நினைவுக்கு வந்தது. அவர் அக்கட்டுரையில், ‘நமது புராண உலகத்தார் சில தல இலிங்கங்கள் உளியினாற் செய்யப்படாதன என்று பெருமை கூறுகின்றனர் அல்லவா? அவை இன்ன மலைகளில் இயல்பாகக் கிடந்து கொணரப்பட்டனவாகவே இருத்தல் வேண்டும்’ என்று கூறுகின்றார். ஆம்; இக் கூற்று உண்மையே. இம் மலைப் பாங்கரில் அத்தகு கற்கள் அமைந்து கிடக்கின்றன.

உண்மை இவ்வாறிருக்க இத்தகு கற்களைச் ‘சுயம்புலிங்கம்’ என்றும் ‘விடங்கன்’ என்றும் விளம்பி, தானே தோன்றிய லிங்கம் என்றும் உளியினாற் செய்யப்படாதன என்றும் அச் சொற்களுக்குப் பொருளும் கூறுவர். இயல்பாகவே இலிங்கம் போல அமைந்து கிடந்த இத்தகு கற்களைக் கொணர்ந்து கோவிலில் அமைத்து அவற்றிற்கு மேற்கூறிய பெயர்களையும் சூட்டிவிட்டார்கள். இவ்வுண்மை புலனாகாவாறு, ‘சுயம்பு லிங்கம்’ எனவும் ‘விடங்கன்’ எனவும் பெயர் கூறி அதனால் ஒரு தனி ‘மகத்துவம்’ கற்பித்துக் கயிறு திரித்து விட்டனர். உண்மைக்குத் திரை போட்டுவிட்டனர். உண்மையை மறைப்பதாற்றானா கடவுளுண்மை பரவும்? இப் பொய்க் கதைகளால், - போலிக் கூற்றுகளாற்றான், அது பழிக்கப்படு கிறது என்று நான் கருதுகின்றேன். முகில் எப்பொழுதுமே கதிரவனை மறைத்துக் கொண்டிருக்க முடியுமா? ஒருநாள் உண்மை வெளிப் பட்டே தீரும். சரி; கடிதம் நீண்டு கொண்டே செல்கிறது. குற்றாலம் பற்றி இன்னும் எவ்வளவோ சொல்ல வேண்டியுளது. அடுத்த மடலில் அதனை எழுதுகிறேன்.

உன் தந்தை

05.09.1956 முடியரசன்.

❖ ❖ ❖

# 7

# குற்றாலத்திற் பெற்ற இன்பம்

*அன்புள்ள அரசு,*

*குற்றாலக் காட்சிகளும் அதன் வளங்களும் நலங்களும் அவற்றால் நான் பெற்ற இன்பங்களும் அளவிடற்கரியன. ஆதலின் இரண்டு மூன்று மடல்களில் அவற்றைப் பற்றி எழுதவேண்டிய நிலை ஏற்பட்டது.*

*நான் முதலிற் பேரருவியில் நீராட அஞ்சினேன் என்று எழுதியிருந்தேனல்லவா? பிறகு துணிந்து, சிறிது சிறிதாகத் தலையை நீட்டிக் கடைசியில் அருவிக்குள் நிற்கும் ஆற்றலைப் பெற்று விட்டேன். அருவியில் நின்ற பிறகுதான் அந்த இன்பம் எத்தகையது என்று கண்டுகொண்டேன். நெடுநேரம் நிற்பேன். நண்பர்கள் கட்டாயத்தால் அருவியினின்று மீள்வேன். அச்சம் அகலாதிருப்பின் அந்த இன்பத்தை அடைந்திருக்க முடியாது. அஞ்சும் நெஞ்சில் இன்பம் அரும்பாது; அச்சம் தொலைந்தால் இன்பம் மலரும் எனும் உண்மையையும் உணர்ந்தேன்.*

*நாளொன்றுக்கு ஐந்து முறையேனும் நீராடுவேன். ஒவ்வொரு முறையும் நிறைய எண்ணெய் தேய்த்துக் கொள்வேன். வீட்டில் எண்ணெய் முழுக்குக்குத் தேய்த்துக் கொள்வதைவிட அதிகமாகவே தேய்த்துக் கொள்வேன். அருவியில் நின்று மீண்டால் தலைமுடி பஞ்சு போலாகி விடும்; உடல் அப்பழுக்கின்றி மிளிரும்; எண்ணெய்ப் பசை சிறிது கூடக் காணல் முடியாது. இவ்வருவியில் நீராடுவோர் சிலர், சோப்புத் தேய்த்துங் குளிக்கின்றனர். நாகரிகம் என்று கருதுகின்றனர் போலும். அருவியில் நீராடுவோர் தேய்த்துக் கொள்ள எதையுமே பயன்படுத்த வேண்டியதில்லை. உடல் அவ்வளவு தூய்மையாகிவிடும்.*

*நான் பன்முறை நீராடிப் பயன் பெற்றது போல நீயும் உன் தோழர்களும் பன்முறை நீராடிப் பயன்பெறுங்கள். பேருக்குத்*

தலைகாட்டி மீளாதீர்; நான் அருவிகளிற் பலகால் நீராடித் தென்றலிலும் மூழ்கினேன். அதனால் மெய்யின்பம் பெற்றேன். அருவிநீர் பருகி, ஆண்டுக் கிடைக்கும் கனியருந்தி வாய் இன்பம் பெற்றேன். அருவியும், மலையும், மலைதவழ் முகிலும் பிறவுங்கண்டு கண் இன்பங் கொண்டேன். வண்ண மலர்களை வருடிவரும் காற்றை முகர்ந்து மூக்கின்பம் பெற்றேன். அருவியோசை, வண்டொலி, சோலை விளைக்கும் இன்னிசை இவற்றைக் கேட்டுச் செவியின்பம் பெற்றேன்.

இவ்வாறு ஐம்புல இன்பம் பெற்றுத் தொடர்மலைக் கெதிரில் இருக்கும் சிறிய குன்றின் மீதமர்வேன். கண்ணுக் கெதிரில் பெரு மலையும் மலை வீழருவியும் தோன்றும். மெல்லிய பூங்காற்று உடலில் தோயும். அவ்வின்பம் மாந்தி அப்படியே கண்மூடி மவுனியாவேன். அடடா! ஒரே இன்பமயம்! பேரின்பமயம்! அவ்வின்பத்தில் திளைத்துத் திளைத்து எழுவேன். நீயும் நுகர்ந் தாற்றான் அவ்வின்பத்தின் அருமையையும் பெருமையையும் காணலாகும் - இல்லையில்லை - உணரமுடியும்.

மலைக்கெதிரில் குன்றொன்று உண்டென்று உரைத்தே னல்லவா? அதனருகில் சிறிய பூங்காவொன்றும் உண்டு. அப் பூங்காவிற் சிறார் விளையாடி மகிழ ஊசல் உண்டு; சருக்குப் பாறையுண்டு. குற்றால இன்பத்தில் மூழ்கிய பெரியவர் சிலர், அவ்வின்பப் பெருக்கால் தம்மை மறந்து ஊசலாடினர்; சருக்கி விளையாடினர். எனக்கென்னவோ அக்காட்சி அருவருப் பாகவே பட்டது. இளஞ்சிறார் ஊசலாடியும் சருக்கி விளையாடியும் மகிழ்ந்து சிரித்து ஆடுவது காணின் நமக்கும் மகிழ்வு தோன்றும். மயிலாட்டம் கண்ணுக்கினிமை பயக்கும்; வான்கோழி ஆடினால் நின்று காண்பவருண்டோ? குழந்தைகள் மூன்றுருளிவண்டி ஓட்டினால் நன்றாக இருக்கும். நீயும் நானும் அவ்வண்டியில் ஏறியமர்ந்தால் ஏளனந்தானே செய்வர்! ஏன் இதையெழுதுகிறேன் என்றால் நீயும் தோழர்களும் அப்படி முறைதவறி நடத்தல் கூடாது என்பதற் காகவே.

இங்கே கண்ட மற்றொரு காட்சியையும் கட்டாயம் உனக்கு எழுத வேண்டும். கல்லூரி மாணவர் சிலர் உங்களைப் போலவே இன்பப் பயணமாக அங்கு வந்திருந்தனர். அவர்கள் நடந்து கொண்ட முறை பலருக்கும் வெறுப்பைத் தந்தது. அப் பூங்காவின் அருகில் இருந்த குன்றில் ஆண்களும் பெண்களும் பலராய்க்

குழுமியிருந்தனர். அங்கே மாணவர்கள் கூடிநின்று கீழ்த்தரமான பாடல்களைப் பாடிக் கும்மியடிப்பது போல வட்டமிட்டு நின்று கொட்டமடித்தனர். பெண்களும் அமர்ந்துள்ளனரே, இத்தகு பாடல்களைப் பாடலாமா என்று எண்ணாராய் நாணமின்றிக் கூத்தாடினர்.

நீயும் கல்லூரியில் பயில்வதால் உனக்கு வருத்தமாக இருக் கலாம் இவ்வாறு எழுதுவதால். ஆனால் அவர்கள் அவ்வாறு கண்ணியக் குறைவாக நடப்பதால் யாருக்குக் கேவலம்? அவர்கள் பயிலும் கல்லூரிக்கே கெட்ட பெயர் தானே? பண்பாடில்லாத இவர்கள் படித்து, வெற்றி பெற்று, நாட்டுக்கு என்ன செய்து விடப் போகிறார்கள்? இவர்களால் நாட்டுக்கு நல்லபெயர் கிட்டுமா? என்றுதானே பார்ப்பவர் கருதுவர். கருதுவதென்ன - சொல்லவே செய்தார்கள். என் காதாரக் கேட்டேன். மாணவப் பருவம் பலவகையான கேளிக்கைகளுக்குரிய பருவந்தான். எனினும் அதற்கும் ஓரளவு வேண்டுமல்லவா? அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சுதானே! மாணாக்கர் என்ற சொல்லுக்கே மாண்பை ஆக்குபவர்கள் என்று பொருள். அதனால் மாண்பை ஆக்க வேண்டுமே தவிர மாண்பைப் போக்கிவிடக் கூடாது.

அதனால் நீங்கள் செல்லும் பொழுது பெருந்தன்மை யுடன் நடந்து, உங்கள் கல்லூரிக்கும் நாட்டுக்கும் நற்பெயர் உண்டாக்குங்கள். சில கல்லூரி மாணவர்கள் எவ்வளவு பெருந்தன்மையாகவும் தொண்டு மனப்பான்மையுடனும் நடந்து கொள்கிறார்கள் தெரியுமா? அத்தகையோரைக் காணும் பொழுதெல்லாம் என் அகங் குளிரும், முகம் மலரும், அவ்வாறு நீங்களும் நடந்து கொள்ளுங்கள்.

தம்பி, குற்றாலத்துக்கு அருகில் ‘பம்புளி’ என்ற பெயர் தாங்கிய ஓர் ஊருண்டு. அதைப் பற்றி மட்டும் எழுதிக் கடிதத்தை முடிக் கின்றேன். சொற்களை வழுவின்றி எழுத வேண்டும் - சொல்ல வேண்டுமென்று அடிக்கடி உன்னிடம் நான் கூறியிருக்கின்றேன். வழுவுடன் பேசுவதால் எழுதுவதால் எவ்வளவு பெரிய கேடுகள் விளைந்துவிடும் என்று கூறியிருக்கிறேன்.

நான் ‘பம்புளி’ என்ற இதன் பெயரைக் கேட்டவுடன் இது நம் பகுதியன்று போலும் எனக் கருதிவிட்டேன். பெயர் எனக்குப் பெருவிந்தையாகவும் இருந்தது. பதற்றம் என்ற சொல்லைப் ‘பதஷ்டம்’ என்றும் வேட்டி என்னும் சொல்லை ‘வேஷ்டி’ என்றும் சொல்வதால் இச்சொற்கள் நம்முடையன வல்ல என்று நம் அறி யாமையாற் கருதி வந்தது போலவே இந்தப் பம்புளியும் நம்முடைய

தன்று என்று கருதிவிட்டேன். நம் ஊருக்கு வந்த பிறகுதான் அது நமக்குரியது என்றும், அழகிய தமிழ்ப் பெயர்தான் அவ்வாறு மருவி மயக்கத்தைச் செய்து விட்டது என்றும் அறிந்தேன்.

அவ்விளக்கம், சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை யவர்களாற் பெற்றேன். பசிய சோலைகள் நிரம்பிய இடமாதலின் பைம்பொழில் என்று நல்ல பெயரிட்டுள்ளனர் நற்றமிழர். வழித் தோன்றல்களாகிய நாம் அதனைச் சிதைத்துச் சீரழித்து பம்புளி யாக்கி விட்டோம். நல்ல வேளை! பம்புளி என்பது தமிழ்ப் பெயராக இல்லை; அதனால் இது தமிழர் களுக்கு உரியதன்று என்று சட்டமாக்கிப் பிறருக்குத் தாரை வார்க்காமல் போனோமே!

இதனாற்றான் தமிழ்ப் பெயர்களை மாற்றிப் பிற பெயர்களால் அழைப்பதும் சிதைத்து வழங்குவதும் கூடா தென்று பன்முறை கூறி வந்துள்ளேன். சொற்களைச் சிதைத்து வழங்குவதால் பெருந்தீங்குகள் நேர்ந்து விடும் தம்பி. நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

சரி; நான் எழுதியவற்றையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு, நன்முறையில் நடந்து, நான் குறிப்பிட்டுள்ள இடங்களை யெல்லாம் கண்டுகளித்து இன்பத்துடன் திரும்புக. நீ அங்குச் செல்லும் பொழுது, புலியருவிப் பெயர்க் காரணத்தை அங்கு எவரேனும் கூறக் கேட்டால் ஊர் திரும்பியதும் எனக்கெழுது.

இக் குற்றாலத்தைக் கண்டு வந்ததிலிருந்து எனக்கு ஒரு பெருமகிழ்ச்சியும் உண்டு. என்றுமுள தென்றமிழுக்கும் அத் தமிழ் போலவே இன்பஞ் செய்யும் தென்றலுக்கும் தாயகம் என்று புகழப்படும் பெருமையும், பிற மலையிடங்களிற் காணப்பெறா அருவிப் பெருமையும், ஏனை வளமும் நலமுங் கொண்ட இக் குற்றாலமும் நல்ல வேளையாக, நம்மைப் புறக்கணித்து விட்டு, வேறு பிறரைச் சென்று சரண்புகாது நம்மிடமே இருந்து வருகிற தென்ற பெரு மகிழ்ச்சிதான் அது. அந்தப் பெருமிதத்துடன் ஊருக்கு வந்து சேர்ந்தேன்.

நீ குற்றாலம் சென்று மீண்டதும் விவரமாக எழுது. உன் கடிதம் கண்டு வேறு செய்திகள் எழுதுவேன்.

*12.09.1956* உன் தந்தை

முடியரசன்

❖ ❖ ❖

**8**

# பொறுத்தது போதும்!

*அன்புள்ள அரசு,*

*உன் மடல் பெற்றேன். யாரோ ஒருவர் தமிழைப் பற்றி இழிவாக ஓரிதழில் எழுதியிருப்பதைப் படித்துவிட்டு வருந்தி எழுதியிருந்தாய். வருந்தி யாது பலன்? பெரும்பான்மையான இதழ்கள் அவ்வாறுதானே எழுதுகின்றன. எழுத்தாளர்களும் மொழியைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. அவற்றைத் தமிழ் மக்கள் வாங்கிப் படித்து மகிழ்கின்ற நிலையையும் காண்கின்றோமே! என் செய்வது? அந்த அளவிற்குத் தமிழ்மாந்தர் உணர்வற்றுக் கிடக்கின்றனரே!*

*தமிழ்நாட்டில் தமிழ்மக்களே தமிழ்த் தாளிகைகளில் தமிழ் மொழியை இழித்தும் பழித்தும் தமிழால் எழுதுகின்றனர். அவற்றுட் சிலவற்றை இங்கே சுட்டிக் காட்டுகின்றேன். உன் நண்பர்களிடம் அவற்றை எடுத்துக் கூறி, அவர்களுக்கும் உணர்ச்சி யூட்டு. தமிழகம் விழிக்குமா என்று பார்ப்போம்.*

*நாளிதழ், கிழமையிதழ், திங்களிதழ் என்று எத்தனையோ இதழ்கள் தமிழ்மொழியில் நடைபெற்று வருகின்றன. தமிழர்களால் வெளியிடப்படுபவை அவை. தமிழ்மக்கள் அவற்றிற்கெல்லாம் ஆர்வத்துடன் வரவேற்பும் நல்குகின்றனர். தமிழர்க்காகத் தமிழ் மொழியிலே வெளிவரும் அவ்விதழ்கள் தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழினம் இவற்றிற்கு ஆக்கந் தேடும் முறையிற்றானே வெளிவர வேண்டும். அவ்வாறு வெளியிடுவது தானே முறைமையும் பண்பும் ஆகும். ஆனால் அனைத்திதழ் களும் அவ்வாறு உயரிய நோக்குடன் வெளிப்படுகின்றனவா என்றால் அதுதான் இல்லை.*

*சிற்சில இதழ்கள் தவிரப் பெரும்பாலான இதழ்கள் மொழி, இனம் இவற்றைப் பழித்தும் இழித்தும் கூறி உலாப்போதலைக்*

காண்கிறோம். நடுநிற்பார்தம் நெஞ்சம் வருந்தும் வகையிலே எழுத்தோவியங்களைத் தாங்கி வருகின்ற அவல நிலையையும் காண்கின்றோம். பொருள் வருவாய் ஒன்றே குறிக்கோள் அவ்விதழ் களுக்கு. பெயர் விளம்பரம் ஒன்றே குறிக்கோள் எழுதுவோர்க்கு. விளைவைப் பற்றி எள்ளளவும் கவலைப்படுவதில்லை. இனத்தையும் மொழியையும் இழித்தும் பழித்தும் எழுதினால், பெருவாரியாக விற்பனையாகும் இதழ்களிலே இடங்கிடைத்து விடுகிறது தந்நலம் விழையும் எழுத்தாளர்க்கு. எங்குங் காணமுடியாத புதுமை இங்கு நிகழ்ந்து வருகிறது தம்பி.

குதிரை அவதாரமெடுத்து, வெளிவரும் புகழ்பெற்ற வார இதழ் ஒன்று தீபாவளி மலர் வெளியிட்டிருந்தது. அம் மலரில் வெளிவந்த கட்டுரையொன்றில் "பாண்டியன் இமயமலையில் மீன் பொறித்தான்" என்று ஒரு பகுதி வருகிறது. இச் சொற்றொடர்ப் பொருளைச் சிற்றறிவினரும் புரிந்து கொள்வர். எனினும் இத் தொடருக்கு அடிக்குறிப்பு எழுதப்பட்டிருந்தது. "மீன் பொறித்தான் என்பது மீன் பொரியலைக் குறிக்கவில்லை" என்னும் முறையில் ஏனைப் பொருளில் இருந்தது அக்குறிப்பு.

இமயத்தில் பாண்டியன் மீன் பொறித்தான் என்றால் தமிழ் மகனுக்கு வீரச் சுவையல்லவா தோன்ற வேண்டும்? வீரம் இன்று குறைவுபட்டிருந்தாலும் நம் முன்னோர் வீரராக வாழ்ந்தனரே என்று பெருமிதமல்லவா கொள்ள வேண்டும்? வீரச் சுவைக்கு மாறாகக் கட்டுரையாளர்க்கு உணவுச் சுவை தோன்றிவிட்டது. புலவுக் கடையிலே ஒரு முறை ஏறி இறங்குகிறார். மீன் வறுவல் நினைவிற்கு வந்து விடுகிறது. அந்நினைவு மிகுதியால் மீன் பொரியலை அடிக் குறிப்பாகக் கொடுத்து விடுகிறார். கட்டுரையாளர் நன்கு கற்றறிந்தவர்; நீதிபதியாக இருப்பவர்; 'இலக்கியப் பரம்பரைக்கே நாங்கள் தாம் வாரிசு' என்று சொல்லிக் கொள்ளும் கூட்டத்தைச் சேர்ந்தவருங் கூட. இப்படிப் பட்ட பெருமகனார் இவ்வாறு எழுதுகிறார் ஏளனமாக.

பத்திரிகை உலகில் கதிர்வீசி வெளிவந்து கொண்டிருக் கிறது மற்றோர் இதழ். அவ்விதழில் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை (நகைக் சுவைக்காக) வெளிவந்தது. ஆராய்ச்சியென்றால் சாதாரண ஆராய்ச்சி யென்று எண்ணி விடாதே. அறிவைப் பழுக்கக் காய்ச்சித் தட்டி, உருட்டிக் கூராக்கி, அதைக் கொண்டு எழுதப்பட்டது. தமிழகம், வான்புகழ் கொள்ள உலகுக்கு ஈந்தது யாரை? வாழ்வு நூல் தந்தவர்

யார்? தமிழருக்கும் ஓர் உயரிய மறையுண்டு என்று தலை நிமிர்ந்து பேசும்படியான நூலைத் தந்தவர் யார்? அப் பெரியார் திருவள்ளுவர் என்பதை யாவரும் அறிவர்.

இப் பெருமகனாரின் பெயர்க் காரணம் பற்றிப் பலரும் பலவகையாகக் கூறுவர். ஆனால் இந்த ஆராய்ச்சியாளர் கூறுங் காரணம் தனியானது. ஆராய்ச்சியறிவின் ஆழத்தைப் புலப்படுத்துவது. அக்காரணத்தை நீயும் தெரிந்து கொண்டால், இவ்வரிய ஆராய்ச் சிக்குக் கைம்மாறாக எதை வேண்டு மானாலும் கொடுக்கலாம் என்ற எண்ணமே தோன்றும். ஆராய்ச்சியைப் பார்.

'வள்ளுவர், அடிக்கடி வள்வள் என்று கத்திக் கொண்டிருந்த தால் இவருக்கு இப்பெயர் வந்தது' என்னுங் கருத்துப்பட எழுதி யிருக்கிறார் ஆராய்ச்சியாளர். உள்ளங் கொதிக்கிறதா உனக்கு? உன் இனத்தவன்தானே இன்னும் பணங்கொடுத்து வாங்கி வளர்த்துக் கொண்டிருக்கிறான் இத்தகைய புல்லிதழ்களை, அவனுக்கு மனங் கொதிக்க வில்லையே!

வேடிக்கையாக எழுத விரும்பினால் தந்தையையும் பாட்டனை யுமா ஏளனப் பொருளாக வைத்துக் கொண்டு எழுதுவது? முறை வேண்டாவா? எழுதுவோர் எண்ணிப் பார்க்க வேண்டாவா? வாங்குவோர்தாம் சிந்திக்க வேண்டாவா? பொறுமை பொறுமை என்று பேசி வருந் தமிழகம் இன்னும் எத்துணை நாள் பொறுத்துக் கொண்டிருக்கப் போகிறதோ?

மற்றொரு கொடுமையைப் பார். தமிழ் தனித்தியங்குந் தன்மையது. பிறமொழிச் சொற்களைக் கலந்தெழுதினால் தமிழ் கெட்டுவிடும் என்றெல்லாம் அறிவுடைய பெருமக்கள் கருது கின்றனர். இத்துறையில் ஓரளவு விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் கவிஞர் என உலாவரும் ஒருவர், நூலொன்று வெளியிட்டார். அந்நூலுக்குப் பெயர் 'புஷ்பமாலிகா' என வட மொழியில் வைக்கப்பட்டுள்ளது. அந்நூலுக்கு முன்னுரை எழுதிய பெருமகனார், பெயர் சூட்டிய பெருமையைப் பெரிதும் பாராட்டி எழுதியுள்ளார்.

அப்பாராட்டு நமக்கு வருத்தத்தைக் கொடுக்க வில்லை. எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்ட அவருக்கு உரிமை யிருக்கிறது. அதில் தனித்தமிழ் இயக்கத்தைக் கிண்டல் செய்யும்

முறைதான் நமக்கு ஆறாத்துயரைத் தருகிறது. இதோ அவர் எழுதியிருப்பதைப் பார். "தனித்தமிழ் என்கிற மொழிச்சிக்கலாகிய மலச்சிக்கல்" என்னும் வகையிலே எழுதியிருக்கிறது அந்த ஆசிரியர் கை. அந்தக் கை எத்தகையது? தமிழை எழுதுங் கை; தமிழை எழுதிப் பணம் வாங்குங் கை. அப் பணத்தாற் சோறுண்ணுங் கை. அந்தக் கையிலிருந்துதான் வருகிறது அந்த 'மலச்சிக்கல்'. நன்றி கெட்ட பிறவிகள்.

தம் புகழுக்காக, உயர்வுக்காக, நன்றி கெட்ட பிறவிகள் தமிழ்மொழியையும் தமிழினத்தையும் ஏளனம் செய்யும் இவர்களும் தமிழர்களாம்; இப்படி ஏளனம் செய்வதைப் பார்த்து பின்னரும் தமிழ் மகனுக்குச் சூடு, சொரணை தோன்ற வில்லையென்றால் அவனை என்னென்று சொல்வது? என்றுதான் உணர்ச்சி பெறு வானோ தெரியவில்லை.

உன் தந்தை

**முடியரசன்**

❖ ❖ ❖

**9**

# பொருள் மாறிவரும் சொற்கள்

*அன்புள்ள அரசு,*

*உன் மடல் பெற்றேன். அம்மடலில் 'தேர்வு, நன்கு எழுதி யுள்ளேன்'. எனினும் இரண்டு மூன்று கேள்விகள் புரியவில்லை' என எழுதியிருக்கின்றாய். அதைப் படித்தவுடன் சில சொற்களைப் பற்றி எழுத முனைந்தேன். கேள்வி, புரிதல் என்ற சொற்கள் பற்றியே எழுதுகிறேன். பண்டை இலக்கியங் களில் அச்சொற்கள் எவ்வெப் பொருள்களில் வந்துள்ளன; இன்று அவை எப்பொருளில் வழங்கப் படுகின்றன? என்பதை நீ அறிந்து கொள்வது நலம்.*

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன்" - (புறம் - 72)

*எனப் புறநானூற்றில் வரும் வரிகளுக்கு, மிகுந்த சிறப்பினையும் உயர்ந்த கல்வியறிவினையும் உடைய மாங்குடி மருதன் என்று பொருள். இங்கே 'கேள்வி' எனும் சொல் கல்வியறிவு அல்லது நூலறிவு எனப் பொருள்படுகிறது.*

'ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியன் மருங்கில் நவிலப் பாடி" - (திருமுரு - 186)

*என்று திருமுருகாற்றுப் படையில் வரும் வரிகளுக்கு, 'ஆறெழுத்தி னைத் தன்னிடத்தே அடக்கியிருக்கிற, மறைய உச்சரிக்கப்படும் (நமோ குமாராய) என்னும் மந்திரத்தை' எனப் பொருள் எழுதுவர் உரையாசிரியர். இங்கே 'கேள்வி' எனுஞ் சொல் மந்திரம் எனப் பொருள்படுகிறது.*

"வேய்வை போகிய விரல்உளர் நரம்பிற்
கேள்வி போகிய" - (பொருநர் - 17)

*என்று பொருநராற்றுப் படையில் வரும் வரிகளுக்கு 'குற்றமற்ற விரலால் அசைக்கும் நரம்பினையுடைய இசை முற்றுப் பெற்ற"*

என்று உரையாசிரியர் பொருள் கூறுவர். ஆதலின் இவ்விடத்தே 'கேள்வி' என்னும் சொல் இசையென்று பொருள்படுகிறது.

பெரும்பாணாற்றுப்படையில் வரும் *'தொடையமை கேள்வி இடவியற் றழுவி'' (பெரும் -16)* என்னும் வரியில் 'கேள்வி' என்னும் சொல்லுக்கு யாழ் என்று பொருள் கூறுவர்.

பதிற்றுப் பத்து என்னும் நூலில் *'சொற்பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சம் (பதிற்-21)* என்னும் வரியில் வரும் 'கேள்வி' க்கு வேதம் என்று பொருள் கூறுவர்.

திருக்குறளில் கேள்வியென்ற அதிகாரத்தில்,

''செவியுணவிற் கேள்வி யுடையாற் அவியுணவி
ஆன்றாரோ டொப்பர் நிலத்து'' - (413)

என்னும் குறட்பாவில் வரும் 'கேள்வி' செவியுணவாகிய கேள்வியறிவு எனப் பொருள்படுகிறது. அஃதாவது நல்லோர் கூறும் அறவுரைகளை, அறிவுரைகளைச் செவியாற் கேட்பது என்பது பொருள்.

''கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி'' - (418)

என மற்றொரு குறளும் உண்டு. இதற்குக் கேள்வியறிவால் துளைக்கப்படாத செவிகள், (இயற்கையான துளை கொண்டு ஓசையைக்) கேட்டறிந்தாலும் கேளாத செவிட்டுத் தன்மை உடையனவே என்று பொருள்.

இவ்விரு குறட்பாவாலும் 'கேள்வி' என்னுஞ் சொல்லுக்குச் செவிப் பொறியின் தொழிலாகிய கேட்டல் என்பதுதான் பொருள் எனவுணர்கிறோம். இதுவரை எடுத்துக் காட்டப்பட்ட மேற்கோள்களால் 'கேள்வி' என்னுஞ் சொல்லுக்குக் கல்வியறிவு, மந்திரம், இசை, யாழ், வேதம், செவியாற் பெறப்படும் கேள்வியறிவு - என்னும் பொருள்கள் உண்டு எனத் தெரிந்து கொண்டோம்.

ஆனால் இப்பொழுது, கேள்வி என்னுஞ் சொல் வினா என்னும் பொருளில் வருவதைக் காண்கிறோம். இது பெரும் பான்மை வழக்காகிவிட்டது. நீயும் உன் மடலில் அப்பொருளில் தான் வழங்கியிருக்கிறாய். பள்ளிகளில் கல்லூரிகளில் வினாத்தாள் என்று கூறுதற்கு மாறாகக் கேள்வித்தாள் என்றுதான் பெரும்பாலாக வழங்கி வருகிறோம். 'வாய்விட்டுக் கேட்டான்; நான் கொடுத்து விட்டேன்'

என்று மக்கள் பேச்சு வழக்கிலும், வினவுதல், வேண்டுதல் என்னும் பொருளிற்றான் கேள்வி யென்னுஞ் சொல் வருகிறது.

**“தட்டுங்கள் திறக்கப்படும்**
**கேளுங்கள் கொடுக்கப்படும்”**

என்ற சொற்றொடரை அடிக்கடி கேட்டிருப்பாய். இங்கே ‘கேளுங்கள்’ என்ற சொல் எப்பொருளில் வருகிறது? வாயினாற் கேளுங்கள் என்றுதானே பொருள்? ஆகவே, முதலிற் செவியின் தொழிலாக இருந்த ‘கேட்டல்’, பிற்காலத்தே வாயின் தொழிலாகிய வினவுதல் வேண்டல் என்னும் பொருளுக்கு மாறிவந்துவிட்டது. காலப்போக்கு இவ்வாறு மாற்றத்தைத் தந்துவிட்டது. இவ்வாறு வழங்குவது தவறு எனச் சிலர் கூறுவர். செவியின் தொழிலை வாயின் தொழிலாகக் கூறுவது சரியா தவறா எனத் தெரிந்து கொள்வது நல்லது.

சரி என்பதுதான் என் கருத்து. நாம் இப்படி வழங்குவதற்கு முன்னரே, மணிமேகலை ஆசிரியர் சாத்தனார், வாயின் தொழி லாகவே, கேட்டல் என்னுஞ் சொல்லைப் பயன் படுத்தியுள்ளார். உதயகுமரன் அம்பலம் புக்க காதையில் அவ்வாறு பயன்படுத்தி யுள்ளார். மணிமேகலையிடம் உதய குமரன் சென்று உரையாடும் பகுதி அது.

**“யானே கேட்டல் இயல்பெனச் சென்று**
**நல்லாய் என்கொல் நற்றவம் புரிந்தது**
**சொல்லாய் என்று துணிந்துடன் கேட்ப”**

என அவன் கூற்றாக வரும் பகுதியில், ‘கேட்டல்’, ‘கேட்ப’ என்று இரண்டிடத்தில் வருகிறது. “நானே கேட்பதுதான் இயல் பென்று அவளிடம் சென்று, ஏன் தவக்கோலம் பூண்டனை? கூறுவாயாக என்று துணிந்து கேட்க” என்பது பொருள். அவ்விரண் டிடத்தும் வாயின் தொழிலாகவே அஃதாவது வினவுதற் பொருளாகவே வருகிறது.

மேலும் மணிமேகலை கூற்றாகக் **‘கேட்டது மொழிவேன்’** என்றும் வருகிறது. ‘உதயகுமரனே நீ வினவியதற்கு விடை கூறுவேன்’ என்பது பொருள். கேட்டது என்னுஞ்சொல் வினவியது என்று பொருள்படுகிறது

ஆக, மணிமேகலைக் காப்பிய காலத்திலேயே கேள்வி எனுஞ் சொல் வாயின் தொழிலாக வினா என்னும் பொருளில் மாறி வழங்கிவிட்டது என்பது தெளிவாகிறது. அதனால் நாமும் வினவுதற் பொருளில் கேள்வி யென்னுஞ் சொல்லை வழங்குவது குற்றமாகாது எனக் கருதுகிறேன்.

அடுத்துப் 'புரிதல்' என்னுஞ் சொல்லைப்பற்றி ஆய்வோம். முன்னைப் பொருள் என்ன? இற்றைப் பொருளென்ன? எனக் காண்போம்.

**"இடிபுரிந்து எள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து**
**மாண்ட உஞற்றி லவர்" - (குறள் 607)**

என்ற குறட்பாவில், 'மடிபுரிந்து' என்னுந் தொடர்க்குச் சோம்பலை விரும்பி என்று பொருள். இங்கே 'புரிந்து' என்னுஞ் சொல் விரும்பியெனப் பொருள்படுகிறது.

**"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்துசெய் வஃதே முறை" - (குறள் 541)**

இக் குறட்பாவில் 'இறைபுரிந்து' என்பதற்கு 'நடுவுநிலைமை பொருந்தி' என்பது பொருள். இங்கே 'பொருந்தி' என்று பொருள் படுகிறது.

**'புரிஞெகிழ் முல்லை'** இத்தொடர்க்கு முறுக்க விழ்ந்த முல்லை என்று பொருள். இங்கே புரி என்ற சொல் முறுக்கு என்ற பொருள் படுகிறது.

**'அறம் புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து' - (புறம் 35)** என்ற புறநானூற்று வரிக்கு அறக்கடவுள் மேவி ஆராய்ந்தாற் போன்ற என்று பொருள். இங்கே 'புரிந்த' என்பது 'ஆராய்ந்த' என்று பொருள் தருகிறது.

**'அழல் புரிந்து அடர் தாமரை'** - (புறம் 29) என்ற புறப் பாட்டு வரிக்கு, எரியால் ஆக்கப்பட்ட தாமரை என்பது பொருள். ஈண்டுப் புரிந்த என்ற சொல் ஆக்கப்பட்ட எனப் பொருள்படுகிறது.

ஆக, இதுகாறும் கூறியவற்றால் 'புரிதல்' என்னுஞ் சொல் விரும்புதல், பொருந்துதல், முறுக்குதல், ஆராய்தல், ஆக்கப்படுதல் என்னும் பொருள்களைத் தரும் என அறிகிறோம்.

இனி, இன்று எப்பொருளில் அச்சொல் வழங்குகிறது எனக் காண்போம். ஆசிரியர் மாணாக்கர்க்குப் புரியும்படி பாடம் சொல்கிறார். இங்கே புரியும்படி என்றால் விளங்கும்படி என்று பொருள். புரியாதவன் என்றால் விளங்காதவன் என்று பொருள். இவன், இதைப் புரியாமல் செய்து விட்டான் என்ற விடத்து, விளங்காமற் செய்து விட்டான் என்பது பொருள். எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் இவனுக்குப் புரியவில்லை என்ற விடத்தும், விளங்கவில்லை என்று பொருள். அதனால் நம் காலத்தே புரிதல் என்ற சொல், நன்கு விளங்கிக் கொள்ளுதல் அஃதாவது விளக்கமாகத் தெரிந்து கொள்ளுதல் என்னும் பொருளில் வழங்குவதை நாம் புரிந்து கொள்ளுகிறோம்.

இவற்றோடு 'தூங்குதல்' என்ற சொல்லைப் பற்றியும் இப்பொழுது விளக்குவது நல்லது என்று கருதுகிறேன்.

**'ஓங்கு சினைத் தூங்கு துயில்பொழுதின்' - (நற்-87)** என்ற நற்றிணைப் பாடல் வரிக்கு, வௌவால் உயர்ந்த மரக்கிளையில் தொங்கிக் கொண்டே துயிலும் வேளையில் என்பது பொருள். இங்கே தூங்கு என்ற சொல், தொங்கிக் கொண்டு என்று பொருள் படுகிறது.

**'தூங்கு கையான் ஓங்கு நடைய - (புறம் 22)** என்றவிடத்துத் தொங்குகிற துதிக்கையுடன் ஓங்கிய நடையை உடைய (யானை) என்று பொருள். இவ்விடத்தும் தொங்குதல் என்ற பொருளில் வருகிறது அச்சொல்.

**'பெயல் ஆன்று அவிந்த தூங்கிருள் நடுநாள்' - (அகம் 158)** என்ற அகநானூற்று வரி, 'மழை பெய்தல் நீங்கி, ஒலியடங்கிய செறிந்த இருளையுடைய நள்ளிரவு' எனப் பொருள் தருகிறது. இங்கே 'தூங்கிருள் என்பதற்குச் 'செறிந்த இருள்' என்பது பொருள்.

**தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலனாள் பவர்க்கு' - (குறள் 383)**

என்னுங் குறளில் 'தூங்காமை' என்னுஞ் சொல் 'சோம்பலின்றி விரைந்து செயலாற்றுந் தன்மை' எனப் பொருள் தருகிறது.

**'' தூங்குக தூங்கிச் செயற்பால' - (குறள் 672)** என்ற குறளில் வரும் 'தூங்குதல்' என்னுஞ் சொல் காலந்தாழ்த்துச் செய்யும் சோம்பல் எனப் பொருள்படுகிறது.

இம் மேற்கோள்களால் தூங்குதல் என்ற சொல் செறிதல், தொங்குதல், சோம்புதல் என்னும் பொருள்களில் பண்டு வழங்கப் பட்டு வந்தமை தெரியவருகிறது.

அச்சொல், இன்று எப்படிப் பொருள்மாறி வருகிறது என்பதைக் காண்போம். 'தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதெக்காலம்?' என்ற பாடலை நீ கேட்டிருப்பாய். மோனநிலை பற்றிக் கூறும் இவ்வரியில் 'தூங்குதல்' எனுஞ் சொல் உறங்குதல் என்ற பொருளில் வருகிறது.

'தூங்காதே தம்பி தூங்காதே' இது நாடறிந்த திரைப்படப் பாடல். ஈண்டும் உறக்கம் என்ற பொருளிற்றான் வருகிறது. அச்சொல், தூக்கம் சொக்குகிறது, தூங்குமூஞ்சி என்று பேச்சு வழக்கில் உறக்கம் என்ற பொருளிலேதான் வருகிறது. சொற்கள் காலப்போக்கில் எப்படியெப்படியெல்லாம் பொருள் மாறி வரு கின்றன என்பதை நீ தூங்காமலிருந்து ஆய்ந்து தெரிந்து கொள்.

இவற்றைத் தெரிந்து கொண்டது போலவே நாற்றம், குப்பை, கண்ணோட்டம், இறும்பூது போன்ற சொற்கள் முன்பு எப்பொருளிற் கையாளப்பட்டன; இப்பொழுது எப்பொருளிற் கையாளப்படு கின்றன என்பதை நீயே சிந்தித்துப் புரிந்து கொண்டு எனக்கு எழுது.

உன் தந்தை
**முடியரசன்**

❖ ❖ ❖

# 10
# சொற்றமிழ்பாடு

அன்புள்ள அரசு,

உன் மடல் பெற்றேன். அங்கேவுள்ள மெய்ஞ்ஞான சபையில் இறையடியார் ஒருவர் பேசியது பற்றி எழுதியிருந்தாய். 'தமிழில் வழிபாடு செய்தல் கூடாது; செய்தால் இறைவன் செத்து விடுவான்' என்று அவர் திருவாய் மலர்ந்தருளினார் என எழுதியிருந்தாய். எனக்கு நகைப்பும் எரிச்சலும் மாறி மாறித் தோன்றின.

அவ்வாறு பேசியவர் தமிழர்தானா என்ற அய்யம் ஏற்பட்டது. அவரைத் தமிழச்சிதான் பெற்றனளா என்று வியப்புற்றேன். அடுத்து, அவர் இறைவனை நம்புகிறவர்தானா என்றும் ஐயுற்றேன். ஏனெனில் இறைவன் செத்துவிடுவான் என்று சொல்கிறாரே, இறைவனுக்கு இறப்புண்டா? இறப்பு அவனுக்கு உண்டென்றால் அவன் இறைவனாக முடியுமா? பேசியவர்தம் பேதைமை புலப்படுகிறதே தவிர அப்பேச்சில் உண்மையோ, பக்தியோ இருப்பதாகத் தெரியவில்லை.

நாம் தமிழ் வழிபாடு வேண்டுமென்று எந்த நாட்டிற் கூறுகின்றோம்? தமிழ் மக்களால் வழிபடப்படுகின்ற தமிழ் நாட்டுக் கடவுளர்க்குத் தமிழ் நாட்டிலே தமிழ் வழிபாடு வேண்டுமென்று விளம்புகின்றோம். இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களிலோ, இங்கிலாந்திலோ, அமெரிக்காவிலோ, சப்பானிலோ தமிழ் வழிபாடு வேண்டுமென்று கூறவில்லை. நம் வேண்டுகோளைப் பிற மாநிலத்தாரோ பிறநாட்டினரோ எதிர்க்கவில்லை. நம் நாட்டினரே எதிர்க்கின்றனர். இந்நிலை கண்டு இரங்குவது தவிர வேறென்ன செய்ய இயலும்?

சைவப் பெருமக்கள் உச்சிமேல் வைத்துப் போற்றுகின்ற பெரிய புராணத்தில்,

**'அர்ச்சனை பாட்டே யாகும்**
**ஆதலால் மண்மேல் நம்மைச்**
**சொற்றமிழ் பாடு கென்றார்**
**தூமறை பாடும் வாயான்'**

*என்று ஒரு பாடற் பகுதி வருகிறது. அதில் தமிழ்ப் பாட்டால் என்னை அருச்சித்து வழிபடு என்று சிவபெருமானே கூறியதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறிருந்தும் நம் பச்சைத் தமிழர், தமிழைக் கேட்டால் இறைவன் செத்து விடுவான் என்று கூறுகிறாரே! அவருடைய பக்தியை, அறிவை ஐயுற வேண்டியுளது.*

*1958-ஆம் ஆண்டு,* ***'எழில்'*** *என்ற இதழில்* ***'பாண்டிநாடன்'*** *என்ற புனைபெயரில் இரண்டு கட்டுரைகள் கதைபோல எழுதி யிருந்தேன். அவற்றை இப்பொழுது உனக்கு அப்படியே எழுதுகிறேன். அவற்றைப் படித்து, நன்கு சிந்தித்து, நீயே ஒரு முடிவுக்கு வா. இதோ அக் கட்டுரை*

*திருக்கயிலையில் ஒருநாள் சிவபெருமான் அந்தப்புரத்தில், மிக விரைவாக நுழைந்து கொண்டிருந்தார். நுழையும் பொழுதே, 'கயல்விழி! கயல்விழி! என்று தன் துணைவியாரை அழைத்துக் கொண்டே நுழைந்தார்.*

*'ஏது, அழைப்பு தடபுடலாக இருக்கிறதே இன்று! காரணம் என்ன? எப்போதும் பர்வதராஜகுமாரி என்று வாயாரக் கூப்பிடு வீர்களே! இன்றைக்கு திடீரென்று புதுப்பெயரால், கயல்விழி என்றழைக்கின்றீர்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! சரி, களைத்து வந்திருக்கிறீர்கள்; அப்படி புஷ்பாசனத்தில் அமருங்கள்' என்று பணிவன்புடன் கூறினர் பார்வதி அம்மையார்.*

*'அமர்கிறேன்; புஷ்பாசனம் என்று இனிப்புகலாதே, மலரணை என்றே அதைச் சொல்' என்று பரமன் கூறிக்கொண்டே அங்கிருந்த மலர்ப் பஞ்சணையில் சென்றமர்ந்தார்.*

*'சுவாமி! என்ன! உங்கள் பேச்சில் புது மாதிரியான வாடை தென்படுகிறதே?' என்ற ஓர் ஐய வினாவை விடுத்தனர், ஐயை.*

*'வாடை என்று சொல்லாதே வாள்விழி! தென்றல் என்று சொல், தெற்கே சென்று வந்தேன். தேன்தமிழ் மாந்தி வந்தேன். அந்தத் தேறல் என்னைத் தெளிதமிழில் பேசு பேசு என்று தூண்டுகிறது. வேறொன்று மில்லை வேல்விழி! நீயும் அந்தத் தேறல் மாந்தினால் சுவாமி என்று*

என்னை அழைக்கமாட்டாய். தித்திக்கும் செந்தமிழால் வாயினிக்க, செவியினிக்கத் தேன்மொழி பேசி என்னை அழைப்பாய்' என்று களி கொண்டு பேசினர் கண்ணுதற் பெருமான்.

'என்னையும் அழைத்துக் கொண்டு செல்லாமல், தனியாகச் சென்று விட்டு இப்போது வந்து ஏதேதோ பேசுகிறீர்கள்' என்று ஊடல் கொண்டவர் போல உள்ளே சென்று பின் ஒரு குவளையுடன் திரும்பினர் உமையம்மை.

'இதோ! பானம்; தாக சாந்தி செய்து கொள்ளுங்கள்' என்று நிலம் நோக்கி நின்றனர் நீலமேனி வாலிழையார்.

பரமன் கேலிச் சிரிப்பை வாயோரத்திலே சிந்தவிட்டு, அக்குவளையை வாங்கிய வண்ணம், உயிரோவியமே! பானம் தாகம்-சாந்தி - இன்னும் இப்படிப் பேசுகிறாயே என்னிடம்? எனக்கு ஒரே ஒரு வேட்கைதான் இப்போது. அது தமிழ் வேட்கை. அந்த வேட்கை தீர மீண்டும் தெற்கே செல்லப் போகிறேன். சென்று வேட்கை தீரத் தமிழமுதை உண்ணப் போகிறேன்...'

'அதை என்னிடம் சொல்லி விட்டுப் போக வந்தீர்கள்? அவ்வளவுதானே? என்று இடை மறித்து ஊடி நின்றனர் உமையம்மை.

'மலைச்செல்வி! அந்த இன்பத்தை நீயின்றித் தனித்து உண்ணவா நான் எண்ணுவேன்? உன் எண்ணம் தவறு. உன்னையும் உடன ழைத்துச் செல்லவே ஓடோடி வந்தேன். வா, புறப்படு, காலந் தாழ்த்தாதே, ஒப்பனையெல்லாம் பின்னர்ப் பார்த்துக் கொள்வோம்' என்று விரைவுபடுத்தினார் பரமசிவன்.

'இதோ வந்துவிட்டேன் தனி முதல் தலைவா!' என்று உள்ளே ஓடினார் உமையம்மை. விளையாடச் சென்றிருந்த குமரன் ஓடி வந்தான். வந்தவன் தன் தாயும் தந்தையும் எங்கோ புறப்படுகிறார்கள் என்பதை அறிந்து கொண்டு, அப்பாவைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு உள்ளே ஓடினான். அம்மாவிடம் 'அம்மா! நானும் வருகிறேன்' என்று கெஞ்சினான். 'சரி, வாடா' என்று அவனையும் அழைத்துக் கொண்டு வந்தனர் அன்னையார்.

'உன் இளைய மகனையும் இழுத்துக் கொண்டு வருகிறா யாக்கும்' என்று கேட்டார் பிறைசூடி.

'நானா இழுத்துக் கொண்டு வருகிறேன். அவன் எப்படியோ தெரிந்து கொண்டு என்னிடம் வந்து கண்ணைக் கசக்கினான்...'

*'உன் பிள்ளை எப்படியிருப்பான்? கண்ணைக் கசக்கினால் வெற்றி என்ற இரகசியம் அவனுக்குத் தெரியாமலா போகும்.'*

*'சரி, சரி, போதும், உங்கள் பிள்ளை உங்களைப் போலத் தானே இருப்பான். அவனுக்கு மட்டும் பிடிவாதம் இல்லாமலா போகும்? அதற்கு நானென்ன செய்வேன்?'*

*'சரி, எனக்கு விடை சொன்ன திருக்கட்டும், விரைவாகப் புறப்படு, உன் மூத்த பிள்ளையும் வந்துவிடப் போகிறான்.'*

*'ஏன், அவன் வந்தாலென்ன? குடி மூழ்கிப் போகுமோ? அவனுந்தான் வரட்டுமே'*

*'அடடா, கட்டாயம் வரவேண்டியதுதான். சின்னவனுக் காவது கொஞ்சம் நஞ்சம் தமிழ் வரும். கணேசன் வாயைத் திறந்தால் தமிழாக இருந்தாலும் வடமொழியாக இருந்தாலும் ஒரே பிளிறல் தானே! நீ வேண்டுமானால் இருந்து அந்தப் பிள்ளையை அழைத்துக் கொண்டு வா. நான்...'*

*'இல்லை; இல்லை; இதோ வந்துவிட்டேன் வந்து விட்டேன்' என்று சொல்லிக்கொண்டே குமரனையும் கையில் பிடித்துக் கொண்டு பரமனைப் பின் தொடர்ந்து சென்றனர் பார்வதி தேவியார். தமிழ்ச் சுவையைக் குடும்பத்துடன் கூட்டாகச் சேர்ந்துண்ணும் வேட்கையால் தெற்கே பாண்டிய நாடு வந்து மதுரையில் இறங்கினர். இறங்கி அங்கேயே தங்கித் தமிழ்ச்சுவை மாந்தினர்.*

**"தமரநீர்ப் புவனம் முழுதொருங் கீன்றாள்**
**தடாதகா தேவிஎன் றொருபேர்**
**தரிக்க வந்ததுவும், தனிமுதல் ஒருநீ**
**சவுந்தர மாறன் ஆனதுவும்**
**குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்**
**கொண்டதும் தண்டமிழ் மதுரம்**
**கூட்டுண எழுந்த வேட்கையால் எனில்இக்**
**கொழிதமிழ்ப் பெருமை யார் அறிவார்?**

*(மதுரைக் கலம்பகம் 92)*

*எனக் குமரகுருபரர் கூறுவதிலிருந்து சிவபெருமான் குடும்பமே தமிழை விரும்பும் குடும்பம் எனத் தெரிந்து கொள்கிறோம். சிவன்,*

சவுந்தரமாறனாகவும், உமை தடாதகா தேவியாகவும், முருகன், உக்கிரகுமார பாண்டியனாகவும் மதுரையில் தோன்றிய காரணம் தமிழ்ச் சுவையைக் குடும்பத்துடன் கூடியுண்ண வேண்டும் என்ற வேட்கைதான் என்பது அப்பாடலின் பொருள்.

மேலும், முருகப் பெருமானைப் பற்றி, முத்தமிழால் வைதோரையும் வாழ வைப்பவன் என்று குறிப்பிடுவர் ஆன்றோர். தமிழால் வைதோரையே வாழ வைப்பவன் என்றால் தமிழால் வாழ்த்துவோரை வாழவைக்காமல் விடுவானோ?

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் மீனாட்சியைக் குறிப்பிடும் பொழுது,

**"தொடுக்கும் கடவுட் பழம்பாடல்**
**தொடையின் பயனே! நறைபழுத்த**
**துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே"**

என்று குமரகுருபரர் குறிப்பிடுகின்றார்.

இந்நூலைத் திருமலை நாயக்கர் முன் அரங்கேற்றும் பொழுது, மீனாட்சியம்மை குழந்தை வடிவில் வந்து, மன்னன் மடியில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்ததாக உரைப்பர்.

தேவாரம் பாடிய மூவரும் அந் நூல்களை எம்மொழியிற் பாடினர்? மாணிக்க வாசகர் மொழிய, இறைவனே நேரில் வந்திருந்து எழுதியதாகச் சொல்லப்படும் திருவாசகம் எம் மொழியில் எழுதப் பட்டது? கோபுரத்திலிருந்து வீழ்ந்த அருணகிரியை ஓடிவந்து காப்பாற்றிய முருகன் புகழ்பாடும் திருப்புகழ் எந்த மொழியில் எழுதப்பட்டது? இவற்றை யெல்லாம் கடவுளர் விரும்பவில்லையா? ஏற்றுக்கொள்ள வில்லையா?

ஏற்றுக்கொண்டனர் என்று அந்த அடியவர் கூட்டந்தானே நமக்குச் சொன்னது. இவ்வாறு கூறிவிட்டு, இப்பொழுது, தமிழைக் கேட்டால் கடவுளர் செத்து விடுவர் என்றால், இது கடவுளர் மீது கொண்ட பற்றா? தமிழ் மீது கொண்ட வெறுப்பா? அன்றி ஏமாற்று வித்தையா? நன்கு ஆய்ந்து ஒரு முடிவு செய்.

உன் தந்தை
**முடியரசன்.**

❖ ❖ ❖

# 11

# பைந்தமிழ்ப் பின் சென்றவன்

அன்புள்ள அரசு,

நான், சென்ற மடலில் சிவபெருமானும் அவன் குடும்பத்தினரும் தமிழை விரும்பும் இயல்பினர் என்றும் தமிழால் வைதாலும் அவர்களை வாழ வைப்பவன் முருகன் என்றும் எழுதியிருந்தேன். இனி திருமால் எப்படியென்று காட்ட விரும்புகிறேன். இது பற்றி முன்னர் **'எழிலி'ல்** நான் எழுதியதையே எழுதுகிறேன். அதனையும் படித்து, ஆய்ந்து பார்! இதோ அது:

மணமுள்ள மலர்கள் அத்தனையும் தன்னகத்தே கொண்ட பூங்கா அது. தவழ்ந்து வரும் தென்றலுக்கு மணமூட்டிக் கொண்டே யிருக்கும். கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமை தரும் அந்தப் பூங்கா திருவெஃகா என்ற ஊருக்குத் தனி அழகைக் கொடுத்து வந்தது. வைகறைப் பொழுதிலே மூதாட்டி யொருத்தி அம்மலர் வனத்தி லிருந்து பூக் குடலையுடன் வெளி வருவாள். நாள் தவறாமல், தன் தள்ளாடும் பருவத்திலும் நடுங்கிக்கொண்டே தளர் நடையோடு பூக்குடலையுடன் செல்வதைப் பலமுறை அன்பரொருவர் பார்த்துக் கொண்டே வந்தார். பார்க்கும் போதெல்லாம் 'ஐயோ பாவம்! வயிற்றுப் பாட்டுக்காக இந்தப் பருவத்திலும் இப்படிப் பாடுபடு கின்றாளே? இவளுக்கு உற்ற துணை ஒருவரும் இலர் போலும்!' என்று தமக்குள்ளே எண்ணி வருந்துவார் அந்த அன்பர்.

வழக்கம் போல், மூதாட்டி ஒருநாள் குடலையுடன் பூங்காவி லிருந்து வெளிப்பட்டு வந்தாள்; கோலூன்றிய வண்ணம் தட்டுத் தடுமாறி, தளர் நடையினளாய் வந்து கொண்டிருந்த அவள் எதிரில் அந்த அன்பரும் தற்செயலாக வந்துகொண்டிருந்தார். சோர்ந்து ஒரு பக்கத்தில் அமர்ந்தாள் அந்த முதியவள். வந்த அன்பர் மனம் உருகி, 'மூதாட்டி! உனக்கு உறுதுணை ஒருவரும் இலரோ? இம் மூப்பிலும்

ஏன் இப்படியெல்லாம் அலைகின்றாய்? இந்த மலர்களையெல்லாம் எங்கெடுத்துச் செல்கின்றாய்?' என்று பரிவுடன் வினவினார்.

'ஐயா! எனக்குத் துணை யார் இருக்கிறார்கள்? அந்தத் தலைவன் தான் எனக்குத் துணை. இவ்வளவு காலத்தையும் ஒரு வகையாகக் கடத்திவிட்டேன். இன்னும் கொஞ்சநாள், பிறகு கண்ணை மூடிவிடுவேன். அதுவரை அவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்றிருக்கின்றேன். என்னால் முடிந்த தொண்டு இது தான், அதனால் அவனுக்கு இதை எடுத்துச் செல்கின்றேன்.' என்று மூச்சை நிறுத்தி நிறுத்திப் பேசினாள் அந்த முதியவள்.

'தொண்டா? யாருக்குத் தொண்டு? யாருக்காக மலர்? இந்த முதுமையிலும் உனக்குள்ள கடமையுணர்ச்சியைக் கண்டு பெரிதும் மகிழ்கிறேன். தாயே, உன் தலைவனுக்கு உன் மீது இரக்கம் வரவில்லையா? மூப்படைந்த உன்னை மலர் கொண்டு வரச் சொல்கிறானே?'

'இரக்கம் இல்லாமலா இருக்கிறான்? அவன் கருணைக் கடலாயிற்றே! அவனா மலர் கேட்கிறான்! நான் விரும்பிக் கொண்டு செல்கிறேன். இந்தக் காலை மலரைத் தொடுத்து அந்தக் கண்ணணுக்குச் சூட்டி என் கண் குளிரக் காண் கின்றேன். மனம் குளிர்கின்றேன். அந்தக் குளிர்ச்சி என் தளர்ச்சியையெல்லாம் போக்கி விடுகிறது தம்பி! இந்தத் தொண்டு என் மனமுவந்த தொண்டு. அவனுக்கன்றி வேறு யாருக்குத் தொண்டு செய்யப் போகின்றேன்?' என்று அந்த முதியவள் பேசிக்கொண்டிருக்கும் போதே குறுக்கிட்டு,

'பாட்டி! எம்பெருமானுக்கா இம் மலர்மாலை? ஆ! ஆ! உன் உள்ளமும் அன்பும் என்னே! என்னே! எவருக்கு இத்தூய தொண் டுள்ளம் வாய்க்கும்? நின் பெருமையே பெருமை! என வியந்து கூறி, இப் பேருள்ளம் உடையவளுக்கோ இம் முதுமை? என எண்ணியவ ராய் இனிய பாடல் ஒன்று பாடிக் கைகுவித்து நின்றார்.

நரை மறைந்தது; கூன் நிமிர்ந்தது; நடுக்கம் நின்றது. முதுமை ஒழிந்தது. இளமை உருவெடுத்தது. முதியவள் இளம் பெண்ணாக அங்கு நின்றாள். அவளுக்கே தன்னை நம்ப முடியவில்லை. மீண்டும் தன்னை ஒரு முறை பார்த்துக் கொண்டாள். விந்தையினும் விந்தையாக இருந்தது அவளுக்கு.

'அய்யா! நீங்கள் யார்? சித்து விளையாடல் செய்பவரா? என் முதுமையை ஏன் மாற்றினீர்? பிறவியைக் கடக்கும் எல்லையில்

இருந்த என்னை மீண்டும் தொடக்க நிலைக்குக் கொண்டு வந்து வீட்டீர்களே! அருள்கூர்ந்து விவரமாக அனைத்தும் கூறியருளுங்கள்' என்று வணங்கி வேண்டி நின்றாள்.

'அம்மையே' அறிதுயிலமரும் ஆண்டவன் பால் அன்பு கொளும் ஆழ்வாருள் ஒருவன் யான், திருமழிசை ஆழ்வார் என்று என்னை அழைப்பர். ஆண்டவனுக்குப் பணி பூண்டொழுகும் நினக்கு முதுமை கூடாது என்பதால் இளமையருள இறைவனை வேண்டினேன்; அவனும் அருளினன்' என்று கூறிக்கொண்டே நடந்துவிட்டனர் ஆழ்வார்.

*******

'அமைச்சரே! தொண்டை நாட்டில் இதுவரை கேள்விப் படாத விந்தையாக இருக்கிறதே! மூதாட்டி குமரியாவதா? இது பொய்யா? புனைந்துரையா? முன் பெல்லாம் காயகற்பம் உண்டால் இளமை திரும்பும் என்று சொல்வார்கள். இவள் அப்படியொன்றும் மருந்து சாப்பிட வில்லையாம். ஒரே ஒரு பாட்டால் அதுவும் தமிழ்ப்பாட்டால் முதுமை மாறி இளமை பெற்றாளாமே!' இது பல்லவன் வினா.

'பல்லவ மன்னரே! ஆம்; உண்மைதான், ஆழ்வார் பாடல் அருள்வலியுடையது; ஆக்கவும் அழிக்கவும் வல்லது. அப்பெண்மணியை நானே நேரில் பார்த்தேன். கட்டுக்கதை யன்று; கடவுள் திருவருள்' என அமைச்சர் விடை தந்தார்.

'அப்படியா! பெருமகிழ்ச்சி அமைச்சரே! நாம் முதுமை யால் தளர்ந்து கொண்டு வருகிறோம். அதை நினைந்து நினைந்து கவலைக்கு இலக்காகிறோம். நாட்டையும் நாட்டு மக்களையும் நினைத்து நாம் மீண்டும் இளமை பெற விழைகிறோம். எம் முதுமை, நாட்டின் ஆட்சிக்குச் சிறிது இடையூறாக உள்ளது. அதனால் ஆழ்வாரை எம்மீதும் ஒரு பாடல் பாடும்படி ஆவன செய்வீராக' என்றான் அரசன்.

'தொண்டை மண்டல வேந்தே! ஆழ்வார் விரும்பினால் தான் பாடுவார். நம்முடைய வேண்டுகோளுக்கோ, ஆணைக்கோ அவர் பாடுவதென்பது அரிது என்று கேள்விப்பட்டிருக் கின்றேன். இருப்பினும் தங்கள் விருப்பத்தை அவர்பால் விண்ணப்பிக்கின்றேன்." என மறுமொழி தந்தார் அமைச்சர்.

'சரி; எப்படியும் வெற்றியுடன் மீள்க. நமக்கு வேண்டியது இளமை ஒன்றே. சென்று வருக' என்றான் மன்னன்.

*******

'காஞ்சிக் காவலரே! வணக்கம்'. வருத்தம் தோய்ந்த முகத்துடன் வந்து நின்றார் அமைச்சர்.

'வருக! வருக! அமைச்சர் வெற்றியுடன் மீண்டமைக்கு எம் மகிழ்ச்சி நும் முயற்சிக்கு எம் பாராட்டு' அரசன் மகிழ்ச்சி பொங்க வரவேற்றான்.

'அரசே! மிகவும் வருந்துகிறேன். ஆழ்வார் பாட மறுத்து விட்டார்'. என அமைச்சர் மறுமொழி பகர்ந்தார்.

'ஏன் மறுத்து விட்டார்?' வெகுளியுடன் மன்னன் வாயிலிருந்து வெளிவந்தது இவ்வினா.

'ஆண்டவனுக்குத்தான் அவருடைய பாமாலை உரியதாம். மனிதரைப் புகழ்ந்து பாட அவர் தம் நா இசையாதாம்! - அமைச்சர்.

'ஓ! ஆண்டவனுக்குத்தான் இசையுமோ அந்த நா? மகளிருக் கென்றால் மட்டும் சிறிது மாறிவிடும் போலும்!" - அரசன்

'வேந்தே! நும் பேச்சு நெறி தடுமாறுகிறது!' என்று அமைச்சருக் கருகிலிருந்து மற்றொரு குரல் வந்தது.

'யாரது? தடுமாறுவது என் பேச்சா? ஆழ்வாரின் போக்கா? மகளிரைப் பாடுகிறார்; மன்னனைப் பாட மறுக்கிறார்' பெருமிதத் துடன் பேசினான் அரசன்.

'அஃது அவர் விருப்பம்; அவர் உரிமையில் தலையிட எவருக்கும் உரிமையில்லை' என்று மறுமொழி தந்தது அந்தக் குரல்.

'விருப்பம்! உரிமை! ஓ! ஓ! குமரியின் மீது விருப்பம்! நாடாளும் கொற்றவன் மீது வெறுப்போ? கிழவியைக் குமரியாக்கிக் கொண்டது உரிமை! நாட்டு மன்னனின் வேட்கையைப் புறக் கணிப்பதும் உரிமை?' அரசன் சினந்து பேசினான்.

'அரசே! தங்களைப் போன்றார் இவ்வாறு பேசுவது முறை யன்று. பெரியாரைப் பிழையேல் என்பது முதுமொழி! ஆண்டவன் புகழ்பாடி, தாமுண்டு தம் செயலுண்டு என்று திரிவோரை ஏன் இப்படியெல்லாம் பழித்துரைக்கின்றீர்! 'இஃது அக்குரலின் பணிந்துரை.

*'அமைச்சரே! யார் இவர்? என் பேச்சுக்கெல்லாம் மறுப்பு ரைத்த வண்ணம் இருக்கின்றார்!*

*'அரசே! இவர் ஆழ்வாரின் உண்மை மாணவர்? ஆழ்வார் பாட மறுத்ததும் இவரை அழைத்து வந்தேன்.'*

*'ஆழ்வாரின் மாணவரா? அதுதான் இவருக்குக் கோபம் வருகிறது. அவருடைய உண்மை மாணவரென்றால் இவரே நம் மீது பாடலாமே. நான் ஏன் இளமையை விரும்புகின்றேன். உலக இன்பங்கள் இன்னும் நுகரவா? நுகர்ந்தது போதும். நாட்டுக்கு இன்னும் சில காலம் நன்மை செய்யலாம் என்ற ஆர்வந்தான். அதனால் இந்த மாணவரே பாடட்டும். அமைச்சரே! இவருடைய பெயர்?*

***'கணிகண்ணன்'*** *என்று இவரை அழைப்பார்கள் அமைச்சர் மறுமொழி.*

*'நன்று; கணிகண்ணரே! எம் முதுமை நீங்கப் பாடல் ஒன்று நீரே பாடுக!' என மன்னன் உரைத்தான்.*

*'மன்னர் மன்னா! பொறுத்தருள்க! எம் ஆசிரியர் விருப்பிற்கு மாறாக நாமும் நடவோம்' என அவர் மறுமொழி தந்தார்.*

*'பார்த்தீரா அமைச்சரே! நான் முன்பே சொன்னேனே இது கட்டுக் கதை என்று. கிழவி குமரியாவதாம். இதில் ஏதோ சூது இருக்கிறது. உண்மை என்றால் இருவரும் ஏன் என் மீது பாட மறுக்க வேண்டும்? பொய்யென்று தெரிந்து விட்டால் அரச தண்டனை கிடைக்கும்! என்ற அச்சம்' இது மன்னன் கூற்று.*

*'வேந்தே! யாருக்கு அச்சம்? யாம் எவருக்கும் அஞ்சோம்; அஞ்சுவதுமில்லை; அஞ்ச வருவதுமில்லை. ஆண்டவன் ஒருவனே தலைவன். அவனுக்கே அஞ்சி நடப்போம்' கணி கண்ணன் புலவனல்லவா? அவன் பேச்சில் வீரம் கலந்திருந்தது.*

*பல்லவன் சீற்றம் மிகுதியாகிவிட்டது. 'கணிகண்ணரே! ஒன்று, பாடியாக வேண்டும்; இன்றேல் எம் நாட்டைவிட்டு ஓடியாக வேண்டும்; இஃது எம் ஆணை'.*

*'அரசர் பெரும! இரண்டாவது ஆணையை மகிழ்ச்சியுடன் ஏற்கிறேன்' என்று சொல்லிவிட்டு கணிகண்ணன் விரைந்து நடந்தான்.*

கணிகண்ணன் நிகழ்ந்ததையெல்லாம் ஆழ்வாரிடம் உரைத்து விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

உண்மையுள்ள அந்த மாணவனைப் பிரிந்திருக்க ஆழ்வாருக்கு முடியவில்லை. மனம் குழம்பிக் கொண்டே காஞ்சிப் பெருமாளிடம் சென்று,

**கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி**
**மணிவண்ணா நீகிடக்க வேண்டா - துணிவுடைய**
**செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்**

என்று பாடி முடிக்குமுன் திருமால் எழுந்தார்; பாம்புப் படுக்கையைச் சுருட்டித் தோளில் போட்டுக் கொண்டார். நடையைக் கட்டினார். அவர் வாழ்க்கைத் துணைவி இலக்குமி குறுக்கிட்டு, 'என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் படுக்கையும் கையுமாகப் புறப்பட்டு விட்டீர்களே! எவ்வளவு தூரமோ? அந்தப் பழக்கம் இன்னும் உங்களை விட்டுப் போக வில்லையோ?' என்று கேலி யாகப் பேசிச் சிரித்தார்.

"திருமகளே! நகைமொழி பேசும் நேரம் இதுவன்று. என் அன்பன் திருமழிசைக்காகச் செல்கின்றேன். அவன் மனம் நொந்து தொண்டை மண்டலத்தை விட்டு வெளியேறுகிறான். அவன் பின்னே நானும் செல்லத் துணிந்துவிட்டேன். நீ வேறொன்றும் தவறாகக் கருதாதே'!

'உயிர்த் துணைவரே! யாரோ ஒருவன் போகின்றான் என்பதற் காக உங்கள் குடும்பத்தை - குடியிருந்த ஊரை விட்டு வெளியேறு வதா? ஏன் இப்படியெல்லாம் பித்துப் பிடித்தாற் போல நடந்து கொள்கிறீர்கள்?' என்று மனம் வருந்திக் கேட்டார் இலக்குமி.

'மலர்மங்கை! யாரோ ஒருவன் என்று அவ்வளவு எளிமை யாகச் சொல்லிவிடாதே. அவன் என் உயிரனையான். உண்மைத் தொண்டன். தொண்டனுக்கு நான் தொண்டன் என்பதை நீ உணராயா? மேலும் அவன் வாயிலிருந்து வெளிவரும் தமிழ் மொழிக்காக - தமிழ்ப் பாடலுக்காக அவன் பின்னே ஓடுகிறேன். பித்துப் பிடித்தாற்போல நடந்து கொள்கிறேன் என்று என்னைப் பற்றி நீ கூறியது முற்றிலும் உண்மை. என் அன்பனுடைய திருவாய் மொழியிலே, தமிழ் மொழியிலே எனக்கு அளவு கடந்த பித்துத் தான்.

அந்தப் பித்துப் பிடித்த காரணத்தால் தான் நான் இப்படி நடந்து கொள்கிறேன். சரி, நேரம் ஆகிறது. நான் வருகிறேன் நீ இங்கேயே இரு' என்று சொல்லிக் கொண்டே நடந்தார்.

'உயிரன்றி உடலை மட்டும் தனித்திரு என்று கூறுவது போல் இருக்கின்றது தங்கள் கூற்று. உங்கள் மனத்தையே பித்துப் பிடிக்கச் செய்கின்ற அந்தத் தமிழ் மொழிக்காக நானும் சிறிது துன்பப் பட்டால் தான் என்ன?' எனத் திருமகள் கெஞ்சினார்.

'தேன்மொழி' உன்னோடு உரையாடி நான் வெல்லவா? சரி, வா' என்று இலக்குமி கையைத் தம் கையில் கோத்துக் கொண்டு வயல் வரப்பெல்லாம் கடந்து திருமழிசையார் சென்ற வழியே சென்றுவிட்டார்.

*******

"அமைச்சரே! நம் நாட்டில் என்றுமில்லா வறுமை இன்று வரக்காரணம் என்ன? நம் ஆட்சியில் குறையை முன்னரே கண்டு, குறை நீக்கி முறை செய்யாமல் ஏன் இருந்தீர்?"

'பல்லவ வேந்தே! நம் நாட்டை விட்டுத் திரு நீங்கி விட்டது'-

'ஏன்? நீங்கும் வரை ஏன் பேசாதிருந்தீர்?'

'மன்னர் பெரும! கணிகண்ணனை நாடு கடத்தினோம். அதனை அறிந்த திருமழிசையாழ்வாரும் கணிகண்ணன் பின் சென்றனர்; ஆழ்வார் பின்னே ஆராவமுதன் சென்றான்; அவன் பின்னே அலர்மேலு மங்கையும் ஏகினாள். இதற்கு யார் என்ன செய்ய இயலும்?"

"அந்தோ! இப்படியாகும் என்று தெரியாது பிழைபுரிந்து விட்டோமே! வருக அமைச்சரே! நாமும் பின்னே சென்று மன்னிப்பு வேண்டித் திரும்ப அழைத்து வருவோம்"

மன்னன், அமைச்சரும், வீரரும் புடைசூழ விரைந்து சென்றான்.

ஆழ்வாரைக் கண்டு வணங்கி, "ஐயன்மீர்! பிழை பொறுத்து, நாட்டுக்கு எழுந்தருள வேண்டுகிறேன்" என மன்றாடி நின்றனன்.

'அன்பனே! என்னை வேண்டுவதிற் பலனில்லை. என் மாணவ மணி கணிகண்ணனை வேண்டிக் கொள். அவன் விருப்பத்தைப் பொறுத்தது இது' என விடையிறுத்தனர் ஆழ்வார்.

காவலன் கணிகண்ணனிடம் ஓடினான். பெரியீர்! அறியாது பிழைபுரிந்தேன். சிறியேன் செய்த பிழையைப் பொறுத்தருள

வேண்டும். நாட்டுக்காக நாட்டு மக்களுக்காகத் தாம் திரும்பியருள வேண்டுகிறேன்' எனக் கண்ணீர் மல்கக் கெஞ்சி நின்றனன்.

"மன்னவ! தமிழைப் பிழைத்த நாடு - தமிழைப் புறக்கணித்த நாடு எவ்வளவு தொல்லைகளுக்கு ஆளாகி விட்டது பார்த்தாயா? இனியேனும் தமிழைப் பழிக்காதே! தமிழ்ப்புலவனை இகழாதே! இப்பொழுது நீயே குற்றம் உணர்ந்தனை. நான் நாடு திரும்புகின்றேன். "இணர் எரி தோய்வன்ன இன்னா செயினும், புணரின் வெகுளாமை நன்று' என்பதை உணர்ந்ததால் உன்னை நான் வெறுக்கவில்லை. வா, காஞ்சிக்குச் செல்வோம்' என்று கூறினன் கணிகண்ணன்.

மன்னன் மனம் மகிழ்வால் குதித்தது. மகிழ்ச்சிக் கண்ணீர் துளித்தது. மீண்டும் வணங்கிப் பணிவன்போடு அழைத்துச் சென்றனன்.

ஆழ்வாரும் அகமுருகி, அருகில் நின்ற மாயோனைப் பார்த்தார். மாயன் புன்முறுவல் பூத்தனன்.

**"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்க வேண்டும் - துணிவுடைய**
**செந்நாப் புலவன்யான். செல்லொழிந்தேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய்விரித்துக் கொள்."**

என்று பழைய பாட்டைச் சிறிது மாற்றிப் பாடினர் ஆழ்வார்.

மாயவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. காஞ்சிக்குத் திரும்பினார். அப்பாடா என்று பெருமூச்சு விட்ட வண்ணம் படுக்கையில் சாய்ந்தவர்தான். இன்னும் அவர் எழுந்திருக்கவில்லை.

இந்நிகழ்ச்சியை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் என்ற நூலில் 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப்பசுங் கொண்டலே' என்று நம் குமரகுருபரர் அழகாக எடுத்தோதுகின்றார். அதனால் எல்லாக் கடவுளரும் தமிழை விரும்புகின்றனர் என்பது புலனாகிறது. கடவுளர் தமிழை வெறுக்கவில்லை. போலி பக்தர்கள் தாம் புலம்புகின்றனர்.

உன் தந்தை
**முடியரசன்.**

❖ ❖ ❖

**12**

# எது குறுகிய மனப்பான்மை?

அன்புள்ள அரசு,

உன் மடல் பெற்றேன். இம் மடலிலும் ஓர் ஐயம் எழுப்பி யுள்ளாய். மிக்க மகிழ்ச்சி. இப்படித்தான் ஒவ்வொன் றையும் கேட்டுக் கேட்டுப் புரிந்து கொள்ளவேண்டும். ஏன்? எதற்கு? எப்படி? என்று வினவத் தொடங்குகிறாய் என்றால் உண்மையை அறியும் ஆவல் முளைவிடுகிறது என்று பொருள். ஆக உன் உள்ளத்தில் உண்மையுணரும் நோக்கம் வேர்விடு கிறது. சிந்திக்கத் தொடங்கி விட்டாய் என்பது தெரிகிறது. எத்தனை ஐயம் எழுப்பினும் விளக்குவது என் கடமை. விளக்குகிறேன் கேள்.

'தமிழ், தமிழ் என்று சொல்லித் திரிவது குறுகிய மனப் பான்மையல்லவா? நாம் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற விரிந்த மனப்பான்மையுடைய வரவாயிற்றே! அவ்வாறிருக்க நாம் துவேச மனப்பான்மை கொள்வது சரியா?' என்றெல்லாம் எழுதி யிருக்கிறாா்.

முதலில் இது துவேச மனப்பான்மையன்று; அஃதாவது வெறுப்புணர்ச்சியன்று என்பதை நன்கு தெரிந்து கொள். குறுகிய மனப்பான்மையும் அன்று என்பதைப் பின்னர் எழுதுவேன். நீ தேர்வில் முதல்வனாக வெற்றி பெற வேண்டும்; முதற் பரிசிலும் பெறவேண்டும் என்று எண்ணுகிறாய்; அதன் பொருட்டுப் பகலிரவு பாராது படிக்கின்றாய்; இது மற்ற மாணவர் மீது கொண்ட வெறுப்புணர்வா? உன் வீட்டுக் கூரை மழையால் நீரொழுக்குக் காண்கிறது. பழுது பார்த்துக் கூரை வேய எண்ணுகிறாய். திருடர் புகாவண்ணம் கதவிட்டுக் காப்புச் செய்கிறாய். இஃது அயல் வீட்டுக்காரர் மீது கொண்ட வெறுப்புணர்வா? இது திருடன் மீது கொண்ட வெறுப்பா? உன்னைப் பெற்றாளைப் பேணிக்காக்க முயல்கின்றாய் என்றால் மற்ற தாய்மாரை வெறுக்கின்றாய் என்றா பொருள்?

நீ தேர்வில் முதல்வனாக வர விரும்புவது, உன் வீட்டைக்

கதவிட்டுக் காப்பது, உன் அன்னையைப் பேணுவது எப்படி வெறுப்புணர்வு ஆகாவோ அப்படியேதான் உன் தாய்மொழி மீது பற்றுக் கொண்டு, அதனைப் பேணுவதும் தீங்கு நேரா வண்ணம் காப்பதும் வெறுப்புணர்வன்று. மேலும் இஃது இயல்பும் கடமையும் அறிவுடைமையும் ஆகும்.

வஞ்ச மனத்தர் இவ்வாறுதான் அந்த மனப்பான்மை, இந்த மனப்பான்மை, வெறுப்புணர்ச்சி என்றெல்லாம் கதை கட்டுவர், திசை திருப்புவர். அதனைக் கேட்டு அஞ்சிவிடாதே! நம்பியும் விடாதே! எண்ணியெண்ணிப் பார்! மற்றவரிடம் உசாவி உண்மை யைத் தெரிந்து கொள். பின்னர் ஒரு முடிவுக்கு வா. 'எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என வள்ளுவர் பெருந்தகை உலகுக்குக் கூறிய அறிவுரையை மறந்துவிடாதே.

நான் பயிலுங்காலத்தே, 'துவேச மனப்பான்மை' நிகழ்ச்சி யொன்று நடந்தது. அதனை இங்கே எழுதுகிறேன். கூத்தப்பன், சிகாகிரீசுவரன் என்னும் பெயர்களுடைய நண்பர் இருவர் அக்கல்லூரியிலே பயின்று வந்தனர். ஒரு நாள் சிகாகிரீசுவரன் கூத்தப்பனை நோக்கி, ஏங்காணும் உமக்கு இந்த பாஷைத் துவேஷம்?' என்றார். 'எனக்கொன்றும் 'துவேஷம்' இல்லையே! ஏன் அப்படிச் சொல்கிறீர்?' என்று கேட்டார் கூத்தப்பன்.

"நடன சபாபதி" என்ற நல்ல பெயரை மாற்றிக் கூத்தப்பன் என்று பெயர் வைத்துக் கொண்டது துவேஷமில்லையோ?" என்று மேலும் ஒரு வினாத் தொடுத்தார் சிகாகிரீசுவரன்.

"என்ன ஐயா இதுவா துவேஷம்? என் மொழியில் என் பெயரை வைத்துக் கொண்டது 'துவேஷம்' என்றால் இந்தக் கொடுமையை எங்கே போய்ச் சொல்வது? அவனவன் அவனுடைய தாய்மொழியில் பெயர் வைத்துக் கொள்ளத் தானே விரும்புவான்? இதுவரை நாம் எப்படியோ வாழ்ந்து விட்டோம். இனியாவது நாம் தமிழராக வாழ விரும்புதல் குற்றமா?" மனம் வருந்தி மறுமொழி தந்தார் கூத்தப்பன்.

அப்பொழுதும் சிகாகிரீசுவரன் விடுவதாக இல்லை. மேலும் மேலும் எள்ளலாகவும் உரத்தும் பேசிக் கொண்டிருந் தார். அதற்குமேல் என்னால் உணர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. கிளர்ந்து எழுந்தேன். சிகாகிரீசுவரனை நோக்கி, 'அய்யா! எது பாஷைத் துவேஷம் என அறியாமல் பேசுகிறீரே! குடுமியான்

மலையப்பன் என்ற தமிழ்ப்பெயரை, நீர் சிகாகிரீசுவரன் என வடமொழியில் மாற்றிப் பெயர் வைத்துக் கொண்டு அவரைப் போய்த் துவேஷி என்கிறீரே! (குடுமி - சிகா; மலை-கிரி; அப்பன்-ஈசுவரன்) யார் துவேஷி? இந்த நாட்டிலே பிறந்து, இங்கேயே வளர்ந்து, இந்த மண்ணிலேயே மடியப் போகும் நீர், தமிழ்ப் பெயரை மாற்றி வடமொழிப் பெயராக வைத்துக் கொண்டது துவேஷமா? தமிழ்மகன் தன் தாய் மொழியில் பெயர் வைத்துக் கொண்டது துவேஷமா? எது துவேஷம்? இத்தகைய துவேஷிகளை, தமிழ் மொழியின் பகைவர்களை இந்த நாட்டைவிட்டே விரட்ட வேண்டும், விரட்டாமல் விட்டால் இப்படித்தான் குறும்புத்தனம் செய்வீர் என்று சற்றுக் கடுமையாகவே பேசி விட்டேன். அதன் பின்னரே அவர் வாயடைத்துப் பேசாதிருந்தார்.

இதை ஏன் இங்கே கூறினேன் என்றால், நம் நாட்டில் நம் மொழிக்கு உரிமை வேண்டுமென்றால் இப்படித்தான் துவேசம் என்று கூறித் திசை திருப்பிவிடுவார்கள். அதை நீ நம்பி விடாதே! என்னைப் பிறவியால் தாழ்ந்தவன் என்று சொல்லாதே. நீயும் நானும் சமம் என்று சொன்னால் உடனே சாதித் துவேசம் செய்கிறான் என்று கிளப்பி விடுவர். ஏமாற்று வித்தையில் கை தேர்ந்தவர்கள் அவர்கள். நீ ஏமாளியாகி விடாதே!

அண்மையிற் சிலர் மாநாடொன்று கூட்டினர். சில முடிவு களும் செய்தனர். "ஊர்தோறும் வடமொழிப் பள்ளிக் கூடம் வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் திருமணம் நிகழும் பொழுது, வடமொழி வளர்ச்சிக்கென நன்கொடை நல்கல் வேண்டும்" என்ற கருத்தமையப் பேசினர். இம்மாநாடும் பேச்சும் எங்கே நிகழ்ந்தன? வடநாட்டில் நிகழ்ந்தன என்று கருதுகிறாயா? அவ்வாறாயின் நாம் கவலைப்படுதற்கில்லை. நமது தமிழ்நாட்டிலே - நூற்றுக்கு எண்பத் தேழு பேர் படிக்க எழுதத் தெரியாத நாட்டிலே தமிழ்மொழி சிதைந்து உருக்குலைந்து வருகிற நாட்டிலே அம்மாநாடு கூடுகிறது, அவ்வாறு பேசுகிறது. இதனைக் காணுங்கால் வியப்புத் தோன்று கிறதா? வெகுளி தோன்றுகிறதா? இப்பொழுது எண்ணிப்பார் எது துவேசம் என்று. தமிழ் வளர்ந்தால் தம் வாழ்வு பாதிக்கப்படுமோ என்று அஞ்சும் நெஞ்சினர்தாம் துவேசம் என்று வஞ்சனையாகச் சொல்வர். அக்கூற்றுக்குச் செவி சாய்க்காதே!

இனி அடுத்த கட்டத்திற்கு வருவோம். நம் மொழிப் பற்றைக் குறுகிய நோக்கமென்றும் குறைகூறுவர். அஃது உண்மையா என்று பார்ப்போம். குறுகிய நோக்கம் விரிந்த நோக்கம் என்பதெல்லாம் தனிமனிதனுடைய வாழ்வைப் பொறுத்தது. ஒரு சமுதாயத்துக்கோ சமுதாயத்தைச் சார்ந்த மொழிக்கோ நாட்டுக்கோ அவை பொருந்தா. தனி மனிதன் வேண்டுமானால் தான் மட்டும் வாழக் கருதாது பிறரும் வாழ விரும்பித் தன்னலந் துறந்து விரிந்த நோக்குடன் இருக்கலாம். நாடு, மொழி, சமுதாயம் என்பவற்றில் அவ்வாறு இருத்தல் கூடாது; இருக்கவும் முடியாது. வெள்ளையனே வெளியேறு என்று கூறினோமே ஏன்? குறுகிய நோக்கத்தாலா? துவேசமனத் தாலா? தன்னை மற்றவன் தாழ்த்தவோ அழிக்கவோ கருதினால், தனிமனிதன் கூட விரிந்த மனப் பான்மையை விடுத்துப் பிரிந்த மனப் பான்மையுடையவனாகி விடுகிறானே!

தனி மனித வாழ்க்கையே இவ்வாறிருக்கும் பொழுது, ஒரு சமுதாயம்தான் கெட்டழிந்து மற்ற சமுதாயம் வாழ வேண்டு மென்ற விரிந்த மனப்பான்மையுடனா இயங்க முடியும்? தாய்மொழி கெட்டழியினும் பிறமொழி வாழட்டும் என்று எவரேனும் எண்ணு வாரா? இத்தகைய விரிந்த மனப்பான்மையை எந்த நாட்டு வரலாறும் எடுத்துக் கூறவில்லையே. அறநூல்களும் அவ்வாறு மொழிய வில்லையே. அப்படியே இது குறுகிய மனப்பான்மையாகத்தான் இருக்கட்டுமே இருந்தால் குடியா முழுகிப் போகும்?

தம் தாய்மொழி எவ்வாறாயினும் ஆகுக; நாம் பரந்த மனம் படைத்தவராக இருந்து தேசியம் பேசுவோம் எனத் திரியும் விரிந்த மனப்பான்மையினருக்குப் **'பிரசன்ட விகடன்'** என்னும் தேசிய இதழ் கூறும் அறிவுரையைக் கூறுகிறேன் கேள். 15.12.53 ஆம் நாள் வெளிவந்த இதழ் நடுவுநிலைமையுடன் எழுதியுள்ளது. அதனை அப்படியே தருகிறேன்.

"தேசிய வெறி சில சமயங்களில், பகுத்தறிவை இழக்கும் படி செய்து விடுகிறது. பல சமயங்களில் சுய சிந்தனையை மழுங்கடித்தும் விடுகிறது. இதற்கு நல்லதோர் எடுத்துக் காட்டாய் விளங்குபவர்கள் இந்திமொழி ஏகாதிபத்தியவாதி களாவர். ஒரேமொழி, ஒரே தலைவன், ஒரே கட்சி என்ற பாசிச மனப்போக்கு இவர்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டது என்று தெரிகிறது. இல்லா விட்டால், இந்நாட்டின் சூழ்நிலை களையும், பழக்க வழக்கங் களையும், இன,

மொழி வேறுபாடு களையும் கருத்தில் கொண்டு, தேசிய ஒற்றுமைக்கு வழிகாண வேண்டிய திருக்க, தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று அசட்டுப் பிடிவாதம் பிடித்து நிற்க மாட்டார்கள். இந்தியாவுக்குச் சுதந்திரம் வந்ததும் இந்தி ஏகாதிபத்திய வாதிகள் வெறி கொண்டு ஆடத் தலைப் பட்டிருக்கின்றனர் என்பது தெளிவாம். முதலில் இந்துஸ்தான் மொழியென்று பேசி வந்தவர்கள் பிறகு இந்தியென்று பேசத் தலைப்பட்டனர். இப்பொழுது இவர் களில் முக்கியமானவர்கள் வடமொழியைத் தான் ஆட்சிமொழி யாக்க வேண்டும் என்று சொல்லி வருகின்றனர். இவர்களது கைப் பொம்மை களாய் மத்திய ஆட்சியாளரும் மாகாண ஆட்சியினரும் இருந்து வருவது இவர்களது வெறியை மேலும் மேலும் தீவிரப் படுத்தி வருகிறது."

"இந்திதான் தேசியமொழி என்று அரசியல் சட்டத்தில் எழுதி வைத்துக் கொண்டதும் தவிர, அதனை அமலாக்குவதில் இவர்கள் ஹிட்லரை விட வேகமாகச் செல்வதைப் பார்த்தால், இவ்வுப கண்டத்திலுள்ள மற்ற தேசிய இனங்களின் மொழி, பண்பாடு, நாகரிகம் முதலானவற்றை அழித்துவிட எண்ணி விட்டனரோ என்று நினைக்கத் தோன்றுகிறது" இவ்வாறு பிரசண்ட விகடனே பேசுகிறதென்றால் இதனைக் குறுகிய மனப்பான்மை என்று கூறினால், கூறுவோர்தம் அறிவை நாம் ஐயுறுவது தவிர வேறென் செய்வது?

மொழித்துறையில் விரிந்த மனப்பான்மை பேசுவது தவறான வழியென்று தெரிகிறது. பேச்சு வழக்கற்ற வடமொழி பொது மொழியாக வேண்டுமென்று சொல்லும் ஆணவத்தைப் பார்த்த பின்னரும், பலப்பல படையெடுப்பாலும் அழிக்கப் படாத சமயத்தின் பேரால் நீரிலும் நெருப்பிலும் இட்டும் சாவாத - உயர் தனிச் செம்மொழியென்று வேற்று நாட்டினராற் புகழப்பட்ட தமிழ் மொழியைப் பொது மொழியாக்க வேண்டு மென்று நாம் கூறா விட்டாலும், தமிழகத்திலேனும் உலவ விடுங்கள் என வேண்டினால் இது குறுகிய மனப்பான்மையா? நெஞ்சம் என்று ஒன்று அவர் களுக்கு இருக்குமானால், சிந்திக்கும் ஆற்றல் சிறிதேனும் இருப்பது உண்மையானால், நேர்மை, உண்மை, நடுவுநிலைமை என்பன வற்றை ஓரளவேனும் உணரும் நிலைமையைப் பெற்றிருப்பார்

களானால் நம் உரிமை யுணர்வைக் குறுகிய மனப்பான்மையெனக் கூறார்.

அந்தோ! நம் தாய்மொழிக்கு இப்படி ஓர் இடையூறா வரவேண்டும்? ஆட்சியில், நம் இல்லத்துச் சடங்குகளில், வழிபாடு களில், கல்வியில் இப்படி எல்லாத் துறைகளிலுமா பிறமொழியாட்சி செலுத்த வேண்டும்? அத்துறை களிலெல்லாம் அயன்மொழியாட்சி களையப்பட்டுத் தமிழ் ஆளவேண்டும் என்றால் இத்தகைய எதிர்ப்பா? துறைதோறும் துறைதோறும் தமிழ் படும் பாட்டை நினைத்தால் நெஞ்சங் குமுறுகிறதே! பொறுமையை மீறத் தோன்று கிறதே! தமிழன் என்ற பெயரளவிற்றானே திரிகிறோம் நாம்! உணர்ச்சியற்ற, நடைப் பிணங்களாகி விட்டோமே!

தாய்மொழி வாழவேண்டுமென்று சொல்வதைக் குறுகிய நோக்கமென்று சொன்னால் காந்தியடிகளும் அத்தகைய நோக்க முடையவர்தாம். அடிகளுக்கு ஆங்கிலம் தெரியும். இந்தியாவின் பொதுமொழி இந்தியென்று கூறுபவருங் கூட. ஆனால் அவர் தமது வரலாற்றை ஆங்கிலத்திலோ இந்தியிலோ எழுதினாரல்லர். தம் தாய்மொழியாகிய கூர்ச்சர மொழியிற்றான் எழுதினார். இது குறுகிய நோக்கமா? அன்றிப்பிற மொழியின் பாற் கொண்ட வெறுப்பா? அன்று. தாய்மொழிப்பற்று.

மயிலாடுதுறைக்கு நம் காந்தியடிகள் ஒருமுறை வந்திருந்தார்.

அவ்வூர் மக்கள் அப்பெருந்தகைக்கு வரவேற்பிதழ் ஒன்று நல்கினர். அதற்குக் காந்தியடிகள் மறுமொழி பகரும்பொழுது, "வரவேற்பு ஆங்கில மொழியில் பொறிக்கப்பட்டிருத்தல் காண்கிறேன்... நீங்கள் உங்கள் நாட்டு மொழிகளைக் கொன்று, அவற்றின் சமாதியின் மீது ஆங்கிலத்தை நிலவச் செய்வீர் களாயின், நீங்கள் நன்னெறியில் சுதேசியத்தை வளர்ப்பவர் களாக மாட்டீர்கள் என்று சொல்லுவேன். எனக்குத் தமிழ்மொழி தெரியாதென்று நீங்கள் உணர்ந்தால் அம் மொழியை எனக்குக் கற்பிக்கவும், அதைப் பயிலுமாறு என்னைக் கேட்கவும் வேண்டும். அவ்வினிய மொழியில் அறிக்கை அளித்து, அதை மொழி பெயர்த்து உணர்த்தி யிருப்பீர்களாயின் உங்கள் கடனை ஒருவாறு ஆற்றினவர்களாவீர்கள்" என்று கூறியிருக்கிறார்.

மற்றோரிடத்தில் "தாய்மொழியின் வழிப் பிள்ளைகட்குக் கல்வி பயிற்றல் மிக முக்கியமானது. தாய்மொழியை அவமதிப்பது தேசியத் தற்கொலையாகும்" என்று கூறியருளி யிருக்கிறார்.

**தாகூர்,** பிரமசமாசத்திற் சேர்ந்து மத வேற்றுமைகளினால் ஏற்படும் தீங்குகளை ஒழிக்கத் தாய்மொழியில் கணக்கில்லாச் சொற்பொழிவுகள் செய்துள்ளார். மாநிலக் கூட்டங் களிலெல்லாம் தாய்மொழியிலேயே எல்லாச் சொற்பொழிவு களும் செயல் நிருவாக முறைகளும் நடைபெற வேண்டும் என்று வற்புறுத்தினார். இது குறுகிய நோக்கமா? மேலும், தாகூர், உலகப் புகழ் பெற்ற 'கீதாஞ்சலி' என்ற நூலைத் தம் தாய்மொழியாகிய வங்க மொழி யிற்றான் முதன் முதலில் எழுதினார். திலகர் 'கீதா ரகசியம்' என்ற நூலைத் தம் தாய்மொழியாகிய மராட்டிய மொழியிலேயே ஆக்கினார். இவர்களையெல்லாம் குறுகிய நோக்கமுடையவரெ என்று கூறிவிடமுடியுமா? பாரதி, 'சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' என்றானே அவனுமா குறுகிய நோக்கமுடையவன்?

நாம் பிறமொழிகளைப் பயில வேண்டா என்றா கூறுகிறோம்? எந்த மொழி கற்றாலும் எத்தனை மொழி பயின்றாலும் தாய் மொழியை, தமிழ்மொழியை மறந்து விடாதீர்கள் என்று தானே எடுத்துச் சொல்கிறோம்.

'தமிழ்மொழி வரலாறு' என்ற நூலைப் படித்துப்பார். எழுதியவர் சூரியநாராயண சாத்திரியார். நடுவுநிலை பிறழாமல் எழுதுகிறார். மேலும் தம் பெயரைப் 'பரிதிமாற் கலைஞன்' என மாற்றி வைத்துக் கொண்டார். அவர் எழுதுவதையும் பெயர் மாற்றத்தையும் கண்டு அவரைக் குறுகிய மனப்பான்மையினர் என்று கூறுவதா? கூறுவார். மதி பழுதுபட்டுவிட்டது என்றுதான் கருதவேண்டுமே தவிரப் பிறிதொன்றும் எண்ணுதற்கில்லை.

இந்த நாட்டிலே வேறுமொழி ஆதிக்கம் செலுத்த வேண்டு மென்பது தான் குறுகிய நோக்கமும் கெட்ட நோக்கமும் ஆகும். நாம் வேறொரு நாட்டிலே சென்று தமிழ்மொழிதான் ஆட்சி செலுத்த வேண்டுமென்று கூறினால் அது தவறு; குறுகிய நோக்கமும் ஆகும். நாம் நம்முடைய நாட்டிலே நம் மொழி வாழ, வளர, வளம்பெற, ஆள விரும்புகிறோம். இது தவறென்றோ குறுகிய நோக்கமென்றோ அறிவுடைய எவருமே சொல்லார்.

ஆங்கிலம், வடமொழி, இந்தி முதலிய எத்தனை மொழிகளின் படையெடுப்பு இங்கு? நம் செல்வம், உழைப்பு, நேரம் அத்தனையும் பிற மொழிகளுக்கே செலவிட்டால் நம் தாய்மொழியை வளர்ப்பவர் யார்? தாய்ப்பால் நிறைய இருக்கும் பொழுது அதை விடுத்துக் குழந்தைக்குப் புட்டிப்பாலை ஏன் புகட்ட வேண்டும்? நாகரீகமற்ற இனத்தவர் என்று சொல்லப்படும் நாகர்களிடம் காணப்படும் மொழிப்பற்றில் ஓரளவாவது நம்மிடம் இருக்கவேண்டாவா?

உன் தந்தை
**முடியரசன்**

❖ ❖ ❖

**13**

# பிறமொழிப் பயிற்சி எப்பொழுது?

*அன்புள்ள அரசு,*

*உன் மடல் பெற்றேன். சென்ற மடலில்* **நாகர்** *தம் மொழிப் பற்றைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அந்நாகரின் மொழிப் பற்றைப் பற்றி விளக்கமாக எழுதும் படி வினவியிருந்தனை, எழுதுகிறேன். முழுவிளக்கம் தருகிறேன். கேள்; தமிழைப் பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் எழுதுவேன். உன் போன்ற இளைஞரிடம் உண்மையான தமிழார்வம் தோன்றிவிடின் எதிர்காலத்திலாவது தமிழ் உயர்நிலையடையும், தமிழகம் தமிழகமாக விளங்கும் என்ற எண்ணமுடையவன் யான். "இருந்தமிழே உன்னால் இருந்தேன்" என்ற உணர்வுடையவன் யான். தமிழுக்காக என்னைப் பயன் படுத்தும் இயல்புடையவன் யான். ஆதலின் தமிழைப் பற்றி மகிழ்வுடன் எழுதுவேன்.*

*அய்ம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான* **மணிமேகலை,** *நாகர்கள் பற்றிய குறிப்புகளை, செய்திகளை நமக்குக் கூறுகிறது. அதனையே உனக்கு எழுதுகிறேன். சாதுவன் என்பான் ஒரு வணிகன். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வெளிநாட்டிற்குச் சென்று பொருள் தேடக் கடல் கடந்து செல்லும் இயல்பு உடையவன். வழக்கப்படி ஒருநாள் கடல் கடந்து சென்றான். சென்று நிறைந்த பொருள் ஈட்டி மீண்டான். மீளுங்கால் பெரும்புயலால் அவன் வந்த மரக்கலம் சிதறுண்டு கடலுள் மூழ்கியது. அவன் மூழ்கித் தவிக்கையில் உடைந்த மரத்துண்டொன்று அவன் கைக்குக் கிட்டியது. அதனைப் பற்றிக் கொண்டே மிதந்து சென்று, அலை ஒதுக்கிய பக்கம் ஒரு கரையை அடைந்தான். கரையேறியதும் களைப்பு மிகுதியால் ஒரு மரத்தடியில் படுத்து விட்டான்.*

*சாதுவன் கரையேறிய பகுதி நாகர்கள் வாழும் மலைப்பகுதி, அவர்கள் ஆடையின்றி வாழ்பவர்கள், கல்வியறிவற்றவர்கள்; நாகரிகம் அற்றவர்கள்; முரடர்கள்; தன்மனை, பிறர்மனை என்று*

வேறுபாடறியாதவர்கள்; மனிதனைக் கொன்று தின்னும் மாண்புடையவர்கள்; தமிழல்லாத பிறமொழி பேசுபவர்கள். சாதுவன் கிடந்த மரத்தருகே நாகர் சிலர் வந்தனர். படுத்திருக்கும் சாதுவனைக் கண்டதும் நாகர்கள், தமக்குப் பேருணவு கிடைத்ததென்று பெரு மகிழ்வு கொண்டனர். அவனை எழுப்பினர். எழுந்ததும், அவர்கள் குறிப்பை அவர்கள் பேச்சிலிருந்து தெரிந்துகொண்ட சாதுவன், தனக்கேற்பட்ட இன்னல்களையெல்லாம் அவர்கள் பேசும் மொழியிலேயே எடுத்துச் சொன்னான். தங்கள் மொழியில் பேசிய சாதுவனிடம் நாகர்கள் இரக்கங் கொண்டு சாதுவனைக் கொல்லாது தம் தலைவனிடம் அழைத்துச் சென்றனர்.

செய்தி முழுதும் அறிந்த நாகர் தலைவன், மகிழ்ந்து, சிலநாள் தங்குமாறு சாதுவனை வேண்ட, அவனும் தங்கினான். அப்பொழுது சாதுவன் நாகர் தலைவனுக்குச் சில அறிவுரைகளை எடுத்தோதினான். அவற்றைக் கேட்டு மகிழ்ந்த அத்தலைவன், முன்னர்க் கொள்ளையடித்து வைத்திருந்த செல்வங்களில் மிகுதியும் தந்து, அவனைக் காவிரிப்பூம் பட்டினத்திற்குச் செலவிடுத்தனன். இதுதான் மணிமேகலை தருஞ் செய்தியாகும்.

இதிலிருந்து நீ என்ன தெரிந்து கொள்கிறாய்? நாகரிகமற்ற நாகர்கள் சாதுவனைக் கொல்லாது விடுத்ததும், இரக்கம் காட்டியதும் அத்தலைவன் சாதுவனுக்கு வேண்டிய பொருள் கொடுத்துப் பாராட்டியதும் ஏன்? நாகர்கள் பேசும் மொழியில், சாதுவன் பேசினான் என்ற ஒரே காரணத்தினாலேதான். இம் மொழிப் பற்று அவர்களுக்கு இயல்பாக வாய்த்த ஒன்று. காட்டு மிராண்டிகளாக வாழ்ந்த அவர்களுக்கிருந்த மொழிப்பற்று நமக்கில்லையே! நாமென்ன அவரினும் இழிந்தவர்களா? இத்தகைய காட்டு மிராண்டித்தனம் நம்மிடம் இருந்தால் எவ்வளவோ மேல். ஆனால் நாம் காட்டு மிராண்டிகள் அல்லோம். காட்டுமிராண்டிகளுக்கு நாகரிகம் இதுவென்று கற்றுக் கொடுத்த பேரினத்தைச் சேர்ந்தவர்கள். அந்தப் பேரினத்தின் வழித் தோன்றல்கள் நாம் என்று வாயாரப் பேசுவோம். ஆனால் அப்பேரினத்தின் பெயருக்கு மாசு உண்டாகும் வகையில் நடந்து கொள்கிறோமே! தாய்மொழியை மறந்து, தமிழ்நாட்டிற் கண்டகண்ட மொழிகளுக்குக் கதவு திறந்து விடுகிறோம்; வரவேற்பும் கூறுகிறோம். இவ்வழக்கம் தகாதது என்போரை வசைமாரி பொழிகின்றோம். இத்தகைய அறியாமையை என்னென்பது?

தம்பி, நீ இதைப் படித்தவுடன், 'சாதுவன்' தமிழன் தானே அவன் நாகர் மொழியைத் தெரிந்திருக்கிறானே! அதுபோல நாமும் பிறமொழிகளைப் பயின்று கொள்வது நன்மைதானே? பிறமொழி களைப் பயிலக் கூடாது என்று ஏன் மறுக்க வேண்டும்? என்றெல்லாம் ஐயுறலாம். அதுவும் சரியான ஐயமே.

அவன் தமிழன்தான். ஆனால் அவன்தன் தாய்மொழியைப் புறக்கணித்துவிட்டுப் பிறமொழியைப் பயின்றான் என்று சொல்லப் படவில்லையே! மேலும் காவிரிப் பூம்பட்டினத்தி லிருந்த அத்தனைப் பேரும் நாகர் மொழியைப் பயின்றார் என்றும் கூறப்படவில்லையே! சாதுவனைப் போல வெளிநாடு செல்லும் நிலையில் இருந்தவர்கள், வாணிகத்தின் பொருட்டும் பிறபொருட்டும் ஏனைய மொழிகளைத் தாமே விரும்பிக் கற்றுக் கொண்டனரேயன்றி வேறொன்றில்லை.

நாகர்கள் சாதுவன் மீதோ சாதுவன் வாழ்ந்த நாட்டின் மீதோ கட்டாயமாகத் திணிக்கவில்லையே அம்மொழியை. தனி மனிதன் தன் தேவைக்கு எத்தனை மொழி வேண்டு மானாலும் பயிலலாம். எனினும் தன் தாய்மொழியை மறந்துவிடுதல் கூடாது.

**"ஆங்கிலத்தைக் கற்கையிலும் அயன்மொழியைக்**
**கற்கையிலும் எந்த நாளும்**
**தீங்கனியைச் செந்தமிழைத் தென்னாட்டின்**
**பொன்னேட்டை உயிராக் கொள்வீர்"**

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடலால் தமிழகத்தின் மொழிக் கொள்கையைத் தெளிவுபடத் தெரிந்து கொள் கிறோம். தாய்மொழியைப் புறக்கணித்து விட்டுப் பிறவற்றிற்கு ஆக்கந் தேடுதல் தகாது என்றுதான் சொல்கிறேன்.

தமிழ் ஆட்சிமொழியாதல் வேண்டும்; தமிழர் நூற்றுக்கு எண்பது பேராவது தமிழ் கற்றவராதல் வேண்டும். அதன் பின்னர் அவரவர் தகுதிக்கேற்ப, தேவைக்கேற்ப, விருப்பிற் கேற்ப எத்தனை அயன் மொழிகள் வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம். அதற்கு வேண்டிய சூழ்நிலையை அரசியலார் ஆக்கித் தருதல் வேண்டும். அதை விடுத்து நூற்றுக்கு எண்பத்தேழு பேர் கல்வியறி வில்லாத நாட்டில், இந்த மொழியைத்தான் படிக்க வேண்டும் என்று ஒரு சமுதாயத்தின் தலையில் சுமத்துவதை எப்படி ஒப்புக் கொள்ளமுடியும்? நீயே சொல்! இந்த நிலைதான் கூடாதென்று சொல்கிறேன். பிறமொழிகளே கூடாதென்று கூறவில்லை, தமிழறி யாத, தமிழுணர்வே இல்லாத இந்த நிலையிற் பிறமொழிக் கற்பது

கூடாதென்று சொல்கிறேன். அவ்வளவுதான்.

சாதுவன் இருக்கட்டும். அவனைப் பற்றிக் காப்பியந் தானே கூறுகிறது. குமரகுருபரர் என்ற துறவியைப் பற்றிக் கூறுகிறேன் கேள். ‘நீதி நெறி விளக்கம்’ முதலான பல நூல்களை ஆக்கியவர் குமர குருபரர். அவர் ஒருகால் வடநாட்டிற்குச் சென்றிருந்தார். அங்கே அவர் ஒரு செயலை முடித்துக் கொள்வதற்காக அரசன் உதவியை நாடவேண்டிய நிலை இருந்தது. அரசனுக்குத் தமிழ் தெரியாது; குமரகுருபரருக்கோ ‘இந்துஸ்தானி’ தெரியாது. அரசனோடு அவன் மொழியிலேயே உரையாடினால், தம் செயலை எளிதில் முடித்துக் கொள்ளலாம் என எண்ணிய அடிகள், விரைவில் அம்மொழியைக் கற்றுக் கொண்டு அரசனோடு, உரையாடி வெற்றி கண்டார் என அறிகிறோம். இதை நாம் வெறுக்கவில்லையே! பாராட்ட வன்றோ செய்கிறோம். தமிழன் எதையும் விரைவிற் கற்றுவிடு வான் என்று. ஆனால் தமிழை மறந்து செல்லும் போதுதான் தவிக்கிறது நெஞ்சம்!

குமரகுருபரர் தமிழை மறந்து பிற மொழியைப் பயில வில்லையே. நூல்கள் இயற்றும் அளவு தமிழ் கற்றார். அதன்பின், தமது தேவைக்காக அவன் மொழியைக் கற்றார். நம் செட்டி நாட்டு மக்கள்பலர், மலேயா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு வணிகத்தின் பொருட்டுச் செல்வர். அங்கங்கே பேசப்படும் மொழியைத் தெரிந்து கொள்வர். அவர்களுக்கு அவர்கள் தொழி லுக்குத் தேவைப்பட்டது. கற்றுக் கொண்டனர். யாரும் திணிக்க வில்லையே செட்டி நாட்டார் அனைவரும் அம்மொழிகளைக் கற்கவில்லையே. தமிழுணர்ந்த பின்னரே பிறமொழிகள் பயிலலாம். அதுவும் நாம் விரும்பும் மொழிகளேயன்றிப் பிறர் ஆணைக்கோ, அச்சுறுத்தலுக்கோ கட்டுப்பட்டுப் பிறமொழிகளை ஏற்றுக் கொள்ளுதல் கூடாது. மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர், கா.அப்பாத்துரையார், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் இவர் களெல்லாம் பன்மொழிப் புலவர்கள். ஆனால் அவர்கள் தமிழை வெறுத்து விடவில்லையே! தமிழ் வளர்ச்சிதானே அவர்தம் குறிக் கோளாக இருந்தது. பிறமொழிப் பயிற்சியும் தமிழுக்கு ஆக்கந்தரு மேல் வேண்டற் பாலது; வரவேற்கத்தக்கது. தமிழுக்கு ஊறு நேருமேல் அப்பயிற்சி அறவே கூடாது.

உன் தந்தை

**முடியரசன்.**

❖ ❖ ❖

**14**

# மனம் வைத்தால் வழியா இல்லை?

*அன்புள்ள அரசு,*

*தமிழ் வளர நாம் என்னென்ன செய்ய வேண்டும்? என வேண்டி எழுதிய மடல் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. ஒவ்வொரு வரும் உன்னைப் போல் ஆர்வங்காட்ட வேண்டும். ஆர்வம் காட்டினாற் போதாது, முயற்சியும் வேண்டும். அவ்வாறு முயன்றாற் றான் நாம் உருப்பட முடியும். ஒவ்வொரு துறையிலும் தமிழ் மணங்கமழச் செய்ய வேண்டும். அரசியலார் தமிழை ஆட்சி மொழியாக்கு முன், நாம் நம்மை அதற்குத் தகுதியாக்கிக் கொள்ள வேண்டாவா? ஒவ்வொரு துறையிலும் தமிழ் படும் பாட்டை உன்னிப்பாகப் பார்த்துத் தடைகளையகற்றித் தூய்மை பெறச் செய்ய வேண்டும்.*

*முதலில் நாம் எழுதும்பொழுதும் பேசும்பொழுதும் தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தப் பழகுதல் வேண்டும். அழகான, இனிமையான தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது, அவற்றை விடுத்துப் பிற சொற்களை ஏன் பயன்படுத்துதல் வேண்டும்? மகிழ்ச்சி இருக்கும் போது, 'சந்தோஷம்' ஏன்? 'ஜாக்கிரதை' என்று சொல்லாது விழிப்புணர்வோடு இரு. 'சாதம்' என்று சொன்னாற் றான் சோறு கிடைக்குமா? 'ஜலம்' என்று சொல்லாவிடின் தண்ணீர் உள்ளிறங்காதா? தண்ணீர் ஊற்று நம்மிடம் இருக்கும்போது, 'வாட்டர்'க்கும் 'பானி'க்கும் மாற்றானிடம் சென்று ஏன் மண்டியிட வேண்டும்? தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த வேண்டுமே தவிரப் பிறசொற்களை ஏன் கலக்கவேண்டும்? கலந்தால் எப்படித் தமிழ் வளரும்?*

*இன்னுஞ் சிலர், தமிழ்ச் சொற்களையே பிறமொழிச் சொற்கள் போல வழங்கலும் உண்டு. அக்கொடுமையும் ஒழிய வேண்டும். வேஷ்டி, பதஷ்டம் என்ற சொற்கள் வடமொழியில் இல்லா திருந்தும்*

வேட்டி, பதட்டம் என்ற நல்ல சொற்களைத் திரித்து வடமொழிபோல ஒலித்து மகிழ்கின்றோம். சூடு என்ற தமிழ்ச் சொல்லை 'ஜுடு' என்று பலர் பேசுவதைக் கேட்டிருப் பாய். காட்சி (காண்+சி) என்ற சொல்லைக் 'காக்ஷி' யாக்கிக் கண்டுகளிப்போரும் உளர். இதனை அறியாமையென்று சொல்வதா? அடிமை மனப் பான்மையென்று சொல்வதா? இத்தகைய குறைபாடுகளையெல்லாம் அகற்றிப் பேசவும் எழுதவும் வேண்டும்.

நீர் என்ற தமிழ்ச் சொல்லைக் கன்னடியர் 'நீரு' எனச் சொல் கின்றனர். தெலுங்கர் 'நீளு' எனச் சிறிது திரித்து வழங்குகின்றனர். மலையாளிகள் 'வெள்ளம்' என்ற தமிழ்ச் சொல்லால் நீரைக் குறிப்பிடுகின்றனர். விரிந்த மனப்பான்மை படைத்த நாமோ 'ஜலம், வாட்டர், பானி' என்று கூறி வேட்கை மீதுர அலைகிறோம். இவ்வாறு அலைவது கிடக்கட்டும். மொழி என்று கூடச் சொல்லக் கூசுகிறோமே, 'பாஷை' என்று பகர்ந்து பாழாகிறோம். பின்னர்ப் 'பாஷை' யைத் தமிழாக்கிப் 'பாடை' சுமக்கிறோம். இந்தச் சுமை ஏன்? இப்படியெல்லாம் எழுதினால், பேசினாற்றான் விரிந்த மனப் பான்மையராக முடியுமா? கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கும் செயலன்றோ இது?

பிறமொழிச் சொற்களைக் கையாள்வது அறவே கூடாது என்று நான் கூறுவதாகக் கருதிவிடாதே. அப்படி அடியோடு வேண்டாமென்று சொல்லவில்லை. இன்றியமையாத இடங் களிலே எந்த அளவு கையாளலாமோ அந்த அளவு கையாள வேண்டும். எப்படிக் கையாள வேண்டுமோ அப்படிக் கையாள வேண்டும். அளவும் முறையும் மீறுதல் கூடாது. பாலில் நீரையோ மோரையோ எதற்காகக் கலக்கிறோம். ஏதோ ஒரு தேவையை முன்னிட்டுத்தானே? அது போலத் தேவையை முன்னிட்டுப் பிற சொற்களைக் கையாள்வது வரவேற்கத் தக்கதே. நீரோ, மோரோ அளவுக்கு மீறினால் பாலின் தன்மை கெட்டுவிடுமன்றோ?

அதுபோலப் பிற மொழிக் கலப்பால் தமிழின் தன்மை கெட்டுவிடாமற் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

இருக்கும் சொற்களை விடுத்து வேறு மொழிகளைக் கடன் வாங்குதல் கூடாது என்று தான் சொல்கிறேன். நம் முன்னோர் பிற மொழிகளைக் கையாளலாம் என இடந்தந்துள்ளனர். தமிழ் மொழியிற் சொற்களை நான்கு வகையாக வகுத்துள்ளனர். இயற்

சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பன அவை. எளிதில் எல்லாராலும் பொருளறியக் கூடிய சொல் இயற்சொல் எனப்படும். கற்றவரால் மட்டும் பொருளறியக் கூடிய சொல் திரிசொல்லாகும். தமிழகத்தின் பிற திசைகளிலிருந்து வந்து இங்கே வழங்குஞ்சொல் திசைச்சொல் எனப்படும். வடசொல் எனப்படுவது வடமொழியில் உள்ள சொல் தமிழில் தமிழ் ஒலிமரபிற்கேற்ப வந்து வழங்குஞ் சொல். இவ்வாறு வகுத்துக் கொண்டமையால் வடசொல்லும் அஃதொழிந்த பிற திசைச் சொல்லும் தமிழில் வந்து வழங்கலாம் என்பது நன்கு புலனாகிறது. இவ்வாறு இடந்தந்து விட்டமையால் வடசொற்களையும் திசைச் சொற்களையுமே முழுதுங் கலந்து பேசவோ எழுதவோ செய்தல் கூடாது. அளவு வேண்டும். அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சன்றோ?

இவ்வாறு பிற சொற்களைக் கையாளும் பொழுதும் தமிழ் ஒலி மரபிற்கேற்பவே கையாளுதல் வேண்டும். பிற ஒலிகளை அப்படியே கையாள்வது தவறு. இத்துறையில் கம்பர் நமக்கு நல்ல வழிகாட்டியாக அமைந்துள்ளார். 'லஷ்மணன்' என்ற சொல்லை இலக்குவன் என்றும், ராமன் என்பதை இராமன் என்றும், விபீஷனன் என்பதை வீடணன் என்றும் தமிழ் மரபிற்கேற்பக் கையாண்டுள்ளார். அது பாராட்டுதற்குரியது. அது மட்டுமன்று 'யக்ஞசத்ரு' என்னும் வடமொழிச் சொல்லை அப்படியே மொழிபெயர்த்து வேள்விப் பகைஞன் (யக்ஞம் - வேள்வி; சத்ரு - பகைவன்) என அழகான தமிழ்ப் பெயராக்கி விட்டார். நாமும் அவ்வாறே தமிழ் மரபு கெடாமற் பிற சொற்களைக் கையாள வேண்டும்.

இங்கிலீஷ் என்ற சொல்லை எப்படி வழங்குகிறோம்? அப்படியே வழங்குவதில்லையே. ஆங்கிலம் என அழகியதோர் சொல்லாக்கினர் நம் முன்னோர். அவர் வழி வந்த நாமும் தமிழ்மரபு கெடாமல் நடந்து கொள்ள வேண்டாவா? ஆங்கிலேயர், நம் ஊர்ப்பெயர்களை அவர்தம் ஒலிமரபிற்கேற்ப மாற்றிக்கொள்ளவில்லையா? திருநெல் வேலியை 'டின்னவேலி' எனச் சொல்லினர். தரங்கம்பாடி 'ட்ராங்யூ பார்' ஆகவில்லையா? மதுரையை 'மெஜீரா' என்றனர். அவர்களைப் பின்பற்றி நாமும் நம் மொழி மரபிற்கேற்பச் சொல்லவும் எழுதவும் செய்தோமா? ஆனால் நம்மொழிப் பண்பை மறந்துவிடுகிறோம். இஃது அடிமை மனப்பான்மையைக் காட்டுகிறதே ஒழிய வேறென்ன? விடுதலை பெற்றும் நமக்கு அடிமை மனப்பான்மை நீங்க வில்லையே!

நீ எழுதும் பொழுது அயன் மொழிச் சொற்களைக் கையாள நேர்ந்தால் நம் ஒலி மரபு கெடாமல் எழுது. எடுத்துக்காட்டாகச் சில தருகிறேன். 'ஜனவரி' என்று எழுதாதே; சனவரி என்று எழுது. 'ஜூன்' என்று எழுதாதே. 'சூன்' என்று எழுது. 'ஆகஸ்ட்' என்பதை ஆகத்து என எழுது, 'செப்டம் பரையும், டிசம்பரை'யும் செப்தம்பர், திசம்பர் என எழுது.

மேலும் அயன் மொழிச் சொற்களைக் கையாளும் பொழுது அவற்றிற்கேற்ப ஆக்கச் சொற்களைக் கண்டுபிடித்தெழுது. 'சைக்கிள்' என்பதை ஈருருளி அல்லது மிதிவண்டி எனும் சொற்களாற் குறிப்பிடு. இவ்வாறு புதுப்புது ஆக்கச் சொற்களை ஆக்கிக்கொள்வதற்கேற்ற உயர் தனிச் செம்மொழி தான் நம்மொழி. இதனை மொழியறிஞர் பலரும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆக்கச் சொல்லுக்கு அடங்கா தாயின் நம் ஒலிமரபிற் கேற்ப மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

தனித்தமிழில் எழுதினால் பேசினால் ஒன்றும் புரிய வில்லையே என்று சிலர் கருதுகின்றனர். **பேரறிஞர் அண்ணா** அவர்கள், மதுரை எழுத்தாளர் மன்றத்தில் பேசிய கருத்தினை ஈண்டுக் குறிப்பிடுவது நலம் பயக்கும் என்று கருதுகிறேன். "புரிந்த மொழி புரியாத மொழி என்றெல்லாம் கூறுவது தவறு. நேற்று புரியாதது இன்று புரியும்; இன்று புரியாதது நாளை புரியும்; எனக்குப் புரியாதது என் மகனுக்குப் புரிகிறது. எனக்கு 'லைட் ஹவுஸ்' புரியும்; என் மகனுக்குக் கலங்கரைவிளக்கம் புரிகிறது. ஆகவே புரிந்த மொழி புரியாத மொழி என்பது மொழியின் குற்றமன்று; அதைப் புரிந்து கொள்ள முயலாமைதான் நம் குற்றம்' என்று குறிப்பிட்டார். அதனால் நாம் முயன்று பல தடவை சொல்லியும் எழுதியும் வந்தால் எல்லாம் எளிதாகி விடும். தமிழில் எழுதுவது தமிழனுக்குப் புரிய வில்லையென்றால் கண்ணீர் சிந்துவதைத் தவிர வேறென்ன செய்ய இயலும்? தமிழ் இந்த நாட்டிலே இப்படியாயிற்றே என ஏங்கு கின்றேன். நான் சொல்வதெல்லாம் நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் முதலானோர் கையாண்ட மொழி நடை யையா சொல்கிறேன்? அல்லது சங்கத்து வழங்கிய நடையிலா எழுதச் சொல்லுகிறேன். எல்லார்க்கும் விளங்கக் கூடிய எளிய தமிழ் நடையைத்தானே குறிப்பிடுகிறேன்.

இவ்வாறு எளிய நடையில் தனித்தமிழில் பேச எழுதப் பயிற்சி பெற்று விட்டால் பின்னர் தானாகவே சங்கத்து நடையில் உரை யாசிரியர்கள் எழுதிய நடையில் இன்பங் காண்பாய்; அதில்

திளைத்து விடுவாய். எளிய நடைதான் வேண்டுமென்று முன்னோர் நடையைத் தள்ளிவிடாதே. அவ்வின்பம் தனியின்பம். தமிழறிவு பெற்றுவிடின் அது வளர வளர அனைத்து நடையும் இனிமையாகி விடும். உன் அறிவை அளவுகோலாக வைத்துக் கொண்டு சங்கத்து நடையை மதிப்பிடாதே; எள்ளி நகையாடாதே. சங்க நடையை விளங்கிக் கொள்ளச் சற்றே அறிவு வளர்ச்சியும் மொழிப் பயிற்சியும் வேண்டும். அவை பெற்றவர்க்கே அந் நடை இனிமை பயக்கும். பெறார்க்கு சிறிது கடுமையாகத் தான் தோன்றும். விளையாட்டிற் கூடப் பயிற்சி பெற்றவன் தானே வீரனாகத் திகழமுடியும்?

பயிற்சியே இல்லான் அந் நடையைக் கடுமையென்பதும் அதற்காக அவற்றை வெறுத்தொதுக்குவதும் தவறு. இக்காலத்திற்கு எளிய நடைவேண்டுமென்று கூறலாமே தவிர பண்டைய நடையை வெறுப்பதும் எள்ளுவதும் ஒதுக்குவதும் அறிவுக்குப் பொருத்த மில்லாத் தவறுடைய செயலேயாகும்.

தமிழைத்தான் புரியவில்லை யென்று கூறுகிறான். தர்ணா, ஹர்த்தால், கெரோ, ஸ்ட்ரைக், பந்த் இவற்றைப் புரிந்து கொள்ளு கின்றான். வரவேற்கிறான். எப்படிப் புரிந்து கொண்டான், பிற மொழி என்றால் இனிக்கிறது தமிழென்றால் கசக்கிறது. தமிழ் நாட்டில் தான் இந்தக் கொடுமை.

இனி நம் ஊர்ப் பெயர்கள் தெருப் பெயர்கள் மக்கள் பெயர்கள் அனைத்தும் தமிழாக்கப்படல் வேண்டும். எங்கோ சிலவிடத்துத் தமிழ்ப் பெயர்கள் காணப்படுகின்றன. அயலவர் ஆட்சி அயன் மொழிப் பற்று இவற்றின் காரணமாகத் தமிழ்ப் பெயர்கள் மாறி விட்டன. மதங்களுக்கு ஆட்பட்டோரும் அவ்வம்மதங்களுக்குரிய மொழிகளால் தம் பெயரை வைத்துக் கொண்டனர். எம்மதத்தின ராகினும் தமிழ்நாட்டிற் பிறந்து வளர்ந்து மடியப் போகிறவர்கள் தமிழிற்றான் பெயர் வைத்துக் கொள்ள வேண்டும்.

சிற்றூர்களில் வாழ்ந்தோர் நல்ல தமிழ்ப் பெயர்களாக வைத்து வந்தனர். அவர்களையும் புது நாகரிகம் பற்றிக் கொண்டமையால் அவர்களும் பிற மொழிப் பெயருக்கு அடிமையாகினர். பெண் மக்களுக்கு பிரேமலதா, லில்லி, சரோஜா, வைஜயந்தி என்றெல்லாம் பெயர் சூட்டுகின்றனர். செல்வி, குமுதம், அன்னம், அல்லி, பூங்கோதை, தேன்மொழி, பாவை, ஓவியம், யாழிசை, பொன்னி, பூங்கொடி, தென்றல், காவிரி யென்ற பெய்ாகளைச் சூட்டினால்

அவ்வொலி அழைப் போர் வாயில் நுழையாதா? அன்றி அழைக்கப் படுமாயின் செவியிற் புகாதா? ஆண் மக்களுக்குப் பிரவின், சுரேஷ், நரேஷ், ஜமால், உசேன், ஜார்ஜ், டேவிட் என்றெல்லாம் பெயர் சூட்டி மகிழ்கின்றோம். பழனி முருகன், ஆறுமுகம், தமிழண்ணல், கதிரவன், அருளாளன், பாரி, குமணன், செல்வம், அமுதன், கலைக்கோ, செழியன், முகிலன், இனியன் என்றெல்லாம் இனிக்குந் தமிழிற் பெயர்வைத்தால் அழிந்தா விடுவோம்?

தமிழிற் பெயர்வைத்துக் கொள்வதால் நாம் தமிழர்கள் என்பதைக் காட்டிக் கொள்வதுடன் மற்றொரு நன்மையும் உண்டு. சாதிவேறுபாடுகள் அகற்றப்படவேண்டும் என்று நாட்டு நலங் கருதும் பெரியார் அறிஞர் அனைவரும் கூறுகின்றனர். அதற்குப் பல வழிகளும் கூறி வருகின்றனர். சாதி நீக்கத்திற்குத் தமிழ்ப் பெயர்கள் வைப்பதும் ஒரு வழியாகும். தமிழண்ணல், கதிரவன், அருளாளன், அன்பழகன், பாரி முதலிய பெயர்களுடன் சாதிப்பெயர்களை ஒட்டிப் பார். ஒட்டவே ஒட்டாது. இவ்வாறெல்லாம் தமிழை வளர்ப்பது நம் கடமை தம்பி.

உன் தந்தை
**முடியரசன்.**

❖ ❖ ❖

# 15

# கவிஞனாக விரும்புகிறாயா?

*அன்புள்ள அரசு,*

உன் மடல் பெற்றேன். நீ கவிதையொன்று எழுதி எனக்கு விடுத்திருந்தாய். அதைப் பற்றி என் கருத்தையும் எழுதுமாறு வேண்டியிருந்தாய். மிக்க மகிழ்ச்சி. நீ எழுதியிருந்த வரிகளில் நல்ல பொருட்சிறப்பு மிளிரக் கண்டேன். ஆனால் அது கவிதையாக எனக்குப் புலப்பட வில்லை. நீ மடலில் எழுதியிருந்த பிற பகுதி களுக்கும் கவிதையென்று நீ எழுதியுள்ள பகுதிக்கும் என்ன வேறுபாடு காண்கின்றாய்? பிற வரிகள் நீளமாக உள்ளன. கவிதையென்று நீ எழுதியுள்ள வரிகளோ இரண்டிரண்டு சொற்களாக மூன்று மூன்று சொற்களாகப் பிரித்துப் பிரித்து எழுதப்பட்டுள்ளன. அவ்வளவு தான். வேறு கவிதை வடிவமோ ஓசையோ எதுகை மோனைகளோ ஒன்றுமே காணவில்லையே. உன் ஆர்வத்தைப் பாராட்டுகின்றேன். ஆனால் அதற்குரிய அடிப்படைப் பயிற்சிகள் இல்லாமல் கவிதை எழுதத் தொடங்கி விட்டாயே.

முதலில் உரைநடைக்கும் கவிதைக்கும் உள்ள வேறு பாட்டைத் தெரிந்து கொள்ள வேண்டும். இரண்டையும் ஒன்றாகக் கருதி மயங்காதே. அழகான - பளபளப்பான தூண்களையும் உறுப்புகள் அமைந்த சிலைகளையும் பார்த்துவிட்டு இரண்டும் கற்களால் அமைந்தவைதாமே என்று கருதி அவற்றை ஒன்று என்று அஃதாவது சிலையென்று முடிவு கட்டிவிடாதே. சிலை வேறு; தூண் வேறு. உரைநடையும் கவிதையும் சொற்களால் அமைந்தவை தாமே என நினைத்து அவை இரண்டும் ஒன்று எனக் கருதிவிடாதே. இரண்டு வெவ்வேறு தன்மையன.

**“கூட்டுக் களியினிலே - கவிதை**
**கொண்டு தரவேண்டும் - அந்தப்**

**பாட்டுத் திறத்தாலே - வையத்தைப்**
**பாலித்திட வேண்டும்.**

என்று பராசக்தியிடம் பாரதியார் வேண்டுவதாக ஒரு பாடல் உண்டு. அப்பாடலில் "கவிதை கொண்டு தர வேண்டும்" என்று வேண்டுகிறார். அஃதாவது கவிதை தானாக உள்ளுணர்ச்சியி லிருந்து புறப்பட்டு வெளிவர வேண்டும் என்பது கருத்து. ஆனால் உன்னிடமிருந்து கவிதை தானாக வெளிவரவில்லையே.

வலிந்து இழுத்து வந்தது போலக் காணப்படுகிறது. அவ்வாறி ழுப்பது கவிதை யாகாது. உணர்ச்சி உள்ளிருந்து உந்தத் தானே பொங்கி வெளிவர வேண்டும் கவிதை. அதுதான் உயிர்க்கவிதை யாக இருக்க முடியும்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் கவிதை எப்படி யிருக்க வேண்டும் என விளக்கம் தருகின்றார். அவர்க்கே அமைந்த இயல்பான முறையில் எளிமையாகத் தந்துள்ளார்.

**"உள்ளத் துள்ளது கவிதை - இன்ப**
**உருவெடுப்பது கவிதை**
**தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை**
**தெரிந்துரைப்பது கவிதை"**

இது தான் கவிமணி தரும் விளக்கம். உள்ளத்திலிருந்து கவிதை வரவேண்டும். அஃதும் இன்ப உருவாக வர வேண்டும். அது தெள்ளத் தெளிந்த தமிழில் அமைந்திருக்க வேண்டும் என்று ஆணையிடுகிறார். ஆனால் இன்று கவிதை உள்ளத்திலிருந்தா வருகிறது. இன்ப வுருவெடுத்தா வருகிறது. தெள்ளத் தெளிந்த தமிழிலா வருகிறது. அனைத்துமே தடுமாறிப் போயல்லவா கிடக்கிறது!

சிலர் எழுதுவதிலே நல்ல கருத்துகள் நிறைந்து காணப்படும். ஆனால் இலக்கண அமைப்பே புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கும். கருத்து மட்டும் கவிதையாகி விடாது. சிலர் புனைவதிலே இலக்கண முறை போற்றப்பட்டிருக்கும். ஆனால் கருத்துகள் காணாமற் போய்விடும். இலக்கண அமைப்பு மட்டும் கவிதையாகி விடாது. கருத்தும் இலக்கண அமைப்பும் இணைவதே கவிதை.

உயிரும், வளர்ச்சியும், பொருளும், இலக்கண அமைப்பும்

கலந்தது தான் கவிதை. வீடு என்றால் அடிப்படை நாற்புறமும் சுவர்கள், மேற்கூரை, வாயில், சாளரம் முதலியன வேண்டும். இவற்றுள் எது குறையினும் வீடென்று பெயர் பெறாது. அது போலக் கவிதைக்கு வேண்டிய கூறுகளில் எது குறையினும் கவிதையாகாது. வீடு அல்லது இல் என்ற பொதுப்பெயர் அமைப்பு முறைகளால் குடில், வளமனை, அரண்மனை, கோவில் என்றெல்லாம் சிறப்புப்பெயர்கள் பெறுகின்றன. அதுபோலவே கவிதை அல்லது பாட்டு என்ற பொதுப்பெயர் அமைப்பு முறைகளால் வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா முதலிய சிறப்புப் பெயர்கள் பெறுகின்றன.

இலக்கணத்திற்குக் கட்டுப்பட்டு, அதற்கு அடிமையாகி எழுதப்படுவது உயிர்க்கவிதையாகி விடாது; இலக்கணத்தைத் தனக்குக் கட்டுப்படுத்தி, அதனை அடிமையாக்கி எழுதப் படுவது தான் உயிர்க்கவிதையென்றும் உணர்ச்சிக் கவிதையென் றும் சொல்லப்படும். அஃதாவது கவிஞன் இலக்கணத்திற்குப் பின்னே செல்லுதல் கூடாது. இலக்கணம் கவிஞனுக்குப் பின்னே வருதல் வேண்டும். இலக்கணம் அவன் புலமையொடு இரண்டறக் கலந்து விடின் உணர்ச்சி உந்த அவனிடமிருந்து வெளிப்படும் பாடல் களிலே இலக்கணம் தானாக அமைந்து கிடக்கும்.

இவ்வாறு வெளிவரும் உயிர்க்கவிதைகள் இன்று சிலநேரங் களில் மட்டும் தென்படுகின்றன. ஏனைய நேரங்களில் உயிரற்ற - உணர்ச்சியற்ற - பொருளற்ற வரிகள் தாம் முடிசூடி வெளிவருகின்றன. இவ்வாறு சீர் கெட்டுப் போய்க் கிடக்கும் கவிதையுலகில் நீ கவிஞனாக உலாவர எண்ணுகிறாய். தமிழ் மொழிக்குத் தீங்கு செய்துவிடாதே. விழிப்பாக இரு. அடிப்படையின்றி அம் முயற்சியில் ஈடுபடாதே.

அடிப்படை இலக்கணத்தில் நன்கு பயிற்சி பெறு. இலக்கியங் களை ஊன்றிப்படி. பாரதியார், பாரதிதாசன் பாடல்களைத் திரும்பத் திரும்பப்படி. அடிக்கடி எழுதி எழுதிப் பயிற்சி பெறு. எழுதியதை, வல்லார் ஒருவரிடம் காட்டித் திருத்திக் கொள். இவ்வாறு பயிற்சி பெறாமல் மேடை ஏறாதே; இதழ்களுக்கு எழுதாதே; நூல் வெளியிட ஆர்வமுங் கொள்ளாதே. விளையாடக் கூடப் பயிற்சி தேவைப்படுகிறதே. பயிற்சியின்றி விளையாட்டுப் போட்டிகளிற் கலந்து கொள்ள முடியுமா? வீரனாகத் தான் திகழ முடியுமா?

தோண்டத் தோண்டத் தானே நீர் ஊற்றெடுக்கிறது? ஓரடி இரண்டடி தோண்டினால் மட்டும் போதுமா? ஆழமாகத் தோண்ட வேண்டுமல்லவா? அது போல ஆழமான பயிற்சியிருந் தாலன்றோ கவிதையும் ஊறும்?

புதுமை யென்ற பெயராலே கவிதைக்குத் தீங்கு செய்து விடாதே. புதுமையென்றால் பாடும் பொருள் புதுமையாக இருக் கலாம்; உவமை புதுமையாக இருக்கலாம்; சொல்லும் பாங்கு புதுமையாக இருக்கலாம். சொற்கள் புதுமையாக இருக்கலாம். அஃதாவது ஆக்கச் சொல்லாக இருக்கலாம்; வடிவங்கள் புதுமை யாக இருக்கலாம். இவற்றை விடுத்து, வடிவமே இல்லாமல், இலக்கணமும் இல்லாமல் எதுகை மோனை கூட இல்லாமல் அடிப்படையைத் தகர்த்தெறிவது புதுமையாகாது.

ஓவியங்கூட இன்று புதுமையென்ற பெயரால் உருக்குலைந்து கிடக்கிறது. முன்பெல்லாம் உயிரோவியம் என்று கூறுவர். அன்று வரைந்தவை அவ்வாறிருந்தன. இன்று புதுமையின் பெயரால் எழுதப்படுபவை உயிரற்றுக், கைகால்கள் சிதறுண்டு, வெற்றுக் கோடுகளாக் காணக் கிடக்கின்றன. இத்தகு புதுமை நோக்கிச் செல்லும் ஓவியவுலகமும் காவியவுலகமும் எங்கே சென்று முடிவுறு மோ தெரியவில்லை.

கவிதையில் நல்ல சொற்களைப் பயன்படுத்து. சிதைந்த சொற்களைப் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தாதே. ஓரிரு இடங்களில் அரிதாக வரலாம். கவிதையில் ‘நன்மொழி புணர்த்தல்’ மிகமிகத் தேவை. அச்சொற்கள் பொருளாழம் உடையனவாக இருத்தல் வேண்டும். பாடலில் இனிய ஓசை அமைதல் வேண்டும். பயில்வார்க்கு இன்பம் தரவேண்டும். சுருக்கமாகச் சொல்லுதல் வேண்டும். சுருங்கக் கூறினும் விளங்கிக் கொள்ளுமாறு சொல்லும் முறை அமைதல் வேண்டும்.

எதுகை, மோனை முதலிய தொடைகள் அமையப் பாடுதற்குத் தயங்காதே. நம் நாட்டுப் பழமொழிகள் கூட எதுகை, மோனை அமைந்து காணப்படுகின்றன. தாய்மார் பாடும் தாலாட்டுக்கூட எதுகை, மோனை அமைந்து காணப்படுகிறது. நம் தமிழுக்கு இயல்பாக அமைந்த சிறப்பு அது. அச் சிறப்பை நீ கெடுத்து விடாதே. அதில் ஓர் இனிமையும் அழகும் உண்டு. பிற மொழி களைப் படித்து விட்டு, அம்மொழிகளின் மரபைப் பின்பற்றாதே. உன் மொழிமரபை

அறிந்து அதன்படி நட. அதற்காகத்தான் பயிற்சி வேண்டும் என்று நான் கூறுகிறேன். இலக்கியப் பயிற்சியும் மொழிப் பயிற்சியும் நன்குடையார்க்கே அது நன்கு வாய்க்கப் பெறும். இல்லார்க்கு அஃது எளிதின் அமையாது. அவர்கட்கு எளிதின் கைவரப் பெறாமையால் எதுகை மோனை வேண்டா வெனக் கதைப்பர்; எள்ளி நகையாடவும் செய்வர். அவர்தாம் அரங்கின்றி வட்டாடுவர். நீ அக் கூட்டத்துட் சேர்ந்து விடாதே.

மரபுக் கவிதையென்று உன் மடலில் ஓரிடத்துக் குறித்திருந் தாய். அஃது எனக்குப் புதுமையாகவும் வியப்பாகவும் இருந்தது. அவ்வாறானால் மரபு கெட்ட கவிதையென்று ஒன்றுளதா? மரபு அமைந்திருந்தாற்றானே கவிதையெனப்படும். அதுகெடின் கவிதை யெனப்படாதே! பிள்ளை பெற்ற தாய் என எவரும் கூறார். பிள்ளை பெறாத தாயரும் உளரோ? தாய் என்னும் பெயர் பிள்ளை பெற்ற வளுக்குத் தானே உரியது. ஆதலின் இனி, மரபுக் கவிதை யென்று எழுதாதே. கவிதை யென்று மட்டும் எழுது.

கவிஞன் என்பவன் சமுதாயத்தின் வழிகாட்டி, குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டி இடித்துரைத்துத் திருத்தும் ஆசான். அந்நிலைக்கேற்ப உன் பாடல்கள் அமைய வேண்டும். வெறும் புகழுக்காக -பணத்திற்காக- கவிஞன் எனப் பெயர் பெற வேண்டும் என்னும் ஆவலுக்காகக் கண்டபடி எழுதாதே. ஓர் குறிக்கோள் வேண்டும். கவிஞன் அச்சத்தையும் அடிமை மனப்பான்மையையும் அடியோடு விட்டுவிட வேண்டும். துணிவும் பெருமிதமும் தேவை. பெருமிதம் எவ்வளவு தேவையோ அவ்வளவு அடக்கவுணர்வும் வேண்டும். ஒரு கவிஞன் தனக்கு முன்னர் வாழ்ந்த கவிஞர்களைப் போற்றுதல் ஓர் உயரிய பண்பாகும். இதனைப் 'பரம்பரையுணர்வு' என்பர். தன் காலத்தில் வாழும் சான்றோரையும் போற்றும் விரிமனம் வேண்டும். நான் கூறியவற்றை மனத்திற்கொண்டு அவ்வா றொழுகினால் நீயும் உயர் கவிஞனாகலாம். நிலை பேறுடைய படைப்புகளையும் படைக்கலாம்.

உன் தந்தை

**முடியரசன்**

❖ ❖ ❖

# 16

# கவிதை படைப்பதெப்படி?

அன்புள்ள அரசு,

உன் மடல் பெற்றேன். கவிதை எழுத இலக்கணம் வேண்டுமா? என்ற ஐய வினாவொன்றை யெழுப்பி, அதற்கு அமெரிக்க நாட்டறிஞர் கூறியதை மேற்கோள் காட்டியிருந் தாய். நன்று; நன்று! அவர் கூறியதை நன்கு ஊன்றிப் பார்த்தாயா? “இலக்கணத்திற்குக் கட்டுப் பட்டுப் பாடுபவன் கவிஞன் அல்லன்” என்பது அவர் கூற்று. நானும் அதனை ஒப்புக் கொள்ளுகிறேன். இலக்கணத்திற்குக் கவிஞன் கட்டுப்படக் கூடாது. கவிஞனுக்குத்தான் இலக்கணம் கட்டுப்பட வேண்டும் என்பது அதன் கருத்து. இதனை நான் முன்னர் எழுதிய மடலிற் கூறியிருக்கிறேன். அதன் நோக்கத்தை விளங்கிக் கொள்ளாது இலக்கணமே வேண்டுவதில்லையென முடிவு கட்டி விட்டாயே!

கவிஞன் எப்படி இலக்கணத்தைத் தனக்குக் கட்டுப்பட்டு நடக்கச் செய்கிறான் என்பதை விளக்கிக் காட்டுகிறேன்.

**“நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்**
**பிறர்க்குரியாள் தோள்தோயா தார்”** **(குறள் - 149)**

இக்குறட்பாவில் முதற்சீரில் முதற்சொல் ‘நலக்கு’ என்பதாகும். இஃது இலக்கண நெறிப்படி வர வேண்டுமானால் ‘நலத்துக்கு’ என வருதல் வேண்டும். நலம் என்ற மகரவீற்றுச் சொல் நான்காம் வேற்றுமை உருபாகிய ‘கு’ என்பதோடு சேருங்கால், அத்துச் சாரியை பெற்று ‘நலத்துக்கு’ என வருதல் வேண்டும். மனம் + கு மனத்துக்கு என்பதுபோல, இஃது இலக்கண விதி. இவ்விதிப்படி ‘நலத்துக் குரியார்’ என வந்தால், நான்கசைச்சீர் வெண்பாவுள் வந்து விடும். வெண்பாவுக்குரிய செப்பலோசை கெடும். வள்ளுவர் விதியை முறியடித்தார். இலக்கணத்துக்குக் கட்டுப்படாமல் அதனைத் தாம் கட்டுப் படுத்தி, ‘நலக்குரியார்’ என அமைத்து விட்டார். யாப்பிலக் கணத்தைக் காப்பாற்றப் புணர்ச்சியிலக் கணத்தைப் புறங் கண்டார்.

கம்பன் பலவிடங்களில் இலக்கணத்தைத் தன் கட்டுப் பாட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறான். இராவணனை விடுத்து, இராமனோடு சேர்ந்து கொண்ட வீடணன், கும்பகருணனையும் இராமனுடன் சேர்ந்து கொள்ளுமாறு அழைக்கிறான். அதற்கு உடன்படாது மறுத்துரைக்கும் கும்பகருணன்,

**"கருத்திலா இறைவன் தீமை கருதினால் அதனைக் காத்துத்**
**திருத்தலாம் ஆகின் அன்றோ திருத்தலாம் தீரா தாயின்**
**பொருத்துறு பொருளுண் டாமோ பொருதொழிற் குரியராகி**
**ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவர்க்குரிய தம்மா"**
**(கும்பகருணன் வதைப்படலம் 157)**

என மறுமொழி விடுக்கின்றான், அஃதாவது "இறை வனாகிய அரசன் (இராவணன்) தீது நினைத்தால் அதனைத் தடுத்துத்திருத்த வேண்டும். இயலாவிடின் போர்க்கோலம் பூண்டு அவனுக்காகப் போர்புரிந்து ஒருத்தனாகிய அண்ணன் இராவணனுக்கு முன்னர்ப் போர்க்களத்தில் மடியவேண்டும். அவனிட்ட சோற்றையுண்டு வளர்ந்த நமக்கு இதுதான் கடமை யாகும்" என்பது கருத்து. இங்கே ஒருத்தன் என்ற சொல்லைக் கம்பன் பயன்படுத்தியுள்ளான். எண்ணுப் பெயரில் வரும் பொழுது, ஆண்பால் ஒருமை ஒருவன் என்றும், பெண்பால் ஒருமை ஒருத்தி என்றும் வருதல் வேண்டும். இஃது இலக்கண விதி. ஒருத்தன் என்றோ ஒருவள் என்றோ வருவது வழு. ஆனால் கம்பன் எதுகை நயத்துக்காக ஒருத்தன் என்றே பயன் படுத்துகிறான். ஒரு காரணம் பற்றி இலக்கண விதியை மீறிச் செல்கிறான். சான்றோர்கள், கவிஞர்கள் இவ்வாறு இலக்கணத் தைத் தம் வழிக்குக் கொண்டுவருவதுண்டு.

இத்தகைய உரிமைகள் கவிஞர்களுக்குண்டு. உரிமை யுண்டு என்பதற்காக எல்லாவிடங்களிலும் இலக்கணத்தைத் தூக்கி எறிந்து விடுதல் கூடாது. வழு, வழாநிலை, வழுவமைதி என மூன்று நிலையுண்டு. அஃதாவது குற்றமுடையது, குற்றமில்லாதது, குற்ற மாயினும் சான்றோர் வழக்கில் வருவதால் அமைத்துக் கொள்வது. இம்மூன்றாம் நிலைக்குத்தான் வழுவமைதியென்பர். இவ்வாறு கூறுவதால் வழுவமைதி களையே அமைத்துப் பாடல் எழுதி விடலாமா? காரணங் கருதியோ, தேவைகருதியோ இலக்கண விதிகளை மீறலாமே தவிர, மீறுவதையே கொள்கையாகக் கொண்டு விடுதல் கூடாது. புலமையொடு ஒன்றாகக் கலந்து விட்ட இலக்கணம்

அவன் பாடல்களிலே தானாக அமைந்து விடும். அவன்தானே கவிஞன்?

> **"காரிகை கற்றுக் கவிபாடுவதினும்
> பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று"**

என்ற பழமொழியைக் காட்டிப் பாடல் யாக்க யாப்பிலக்கணம் தேவையில்லையென வாதிடுவரும் உளர். மேலோட்டமாக இதனைப் படிப்பவர் அவ்வாறுதான் கூறுவர். அதனுட் பொதிந்து கிடக்கும் கருத்தை அவர்கள் உணராதவரே. கவிதைபாடக் காரிகை கற்க வேண்டுவதில்லை என அவ்வரிகள் கூறவில்லை. வறுமையில் வாடிய புலவன் ஒருவன் கூற்று இது. கவிபாடிப் பிழைப்பதை விடப் பேரிகை கொட்டிப் பிழைப்பது எவ்வளவோ மேல் என்னுங் கருத்தைத்தான் அவன் அவ்வாறு கூறுகின்றான்.

> **"அடகெடுவாய் பலதொழிலும் இருக்கக் கல்வி
> அதிகமென்றே கற்று விட்டோம்"**

என்று தொடங்கும் பாடலில்,

'மோகனமாடக் கழைக் கூத்தாடச் செப்பிடு வித்தை களாடத் தெரிந்தோமில்லையே. வேசையராகப் பிறந்தோ மில்லையே சனியான தமிழை விட்டுத் தையலாரிடமிருந்து தூதுபோய்ப் பிழைத்தோமில்லையே என்ன சென்மம் எடுத்துலகில் உழல் கின்றோமே' என்று வறுமையில் வாடிய புலவன் ஒருவன் பாடு கின்றான். கல்வி மேலானது என்று கற்றுவிட்டோமே என்று கவலைப்படுகிறான். சனியான தமிழ் என்று சாடுகிறான். இதை வைத்துக் கல்வி மேன்மை யுடையதன்று என்றோ, தமிழ் சனியான தென்றோ முடிவுகட்டுதல் கூடாது. தையலார் பால் தூது சென்று பிழைப்பதை ஆதரிக்கின்றான் என்றும் கொள்ளுதல் கூடாது. வறுமையின் கொடுமை மிகுதியால் வேதனைப்பட்டுப் புலம்புவ தாகக் கொள்ளவேண்டும். இவ்வாறு வறுமையில் உழன்றவன் தான் கவிபாடுவதிலும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று என்று கூறினானே தவிர காரிகை கற்பது கூடாது எனக் கூறவில்லை.

இலக்கண அடிப்படை அறிவு கூட இல்லான் கவிபுனைந் தால், கவிஞனாக மேடையேறி விட்டால், அவன் இலக்கணத்தை வெறுக்கத்தானே செய்வான். இவ்வாறு செய்யுள் இலக்கணத் தையும் ஏனை இலக்கணத்தையும் ஐயம் அறப்பயிலாமல், புறக் கணித்து ஒதுக்கி விட்டுக் கவிதை பாட வருவோனுக்கு இரவீந்திர நாத தாகூர்

ஓர் அருமையான உவமை கூறுகிறார். “வயது முதிர்ந்த கிழவன் இரண்டாந்தாரத்திடம் அன்பைப் பெற முயல்வது போன்றது சீர், தளை அறியாதவன் கவிபாட முனைவது” என்பது அவர் கூற்று.

ஒருமுறை தாகூர், மதுரைக்கு வருகை புரிந்தார். அவரைக் காணும் பொருட்டு நம் தமிழ் நாட்டுக் கவிஞரொருவர் சென்று தாகூரைப் புகழ்ந்து கவிதை எழுதி அவரிடம் தந்தார். தாகூர், மகிழ்ச்சியும் நன்றியும் மீக்கூர அதை வாங்கிப் படித்தார். கவிதை, ஆங்கில மொழியில் வரையப்பட்டிருந்தது. சிரித்துக் கொண்டே, “குயில் தன்குரலில் பாடினால்தான் நன்றாக இருக்கும்” என்று தாகூர் கூற நம் கவிஞர் நாணிவிட்டார். தாய்மொழி வாயிலாகத் தான் கவிதையை வளர்க்கவேண்டும் என்பது தாகூரின் கருத்து. “வேற்று மொழியினால் கவிதையை வளர்ப்பது காதலியை மணக்க மற்றொருவரை அனுப்புவது போலத்தான்” எனப் பிறிதோரிடத்து தெளிவாகக் கூறியிருக் கிறார் தாகூர்.

ஒரு கவிதை எந்த மொழியில் எழுதப்பட்டதோ அந்த மொழியின் வாயிலாகவே படிப்பதுதான் சிறந்தது. அப்பொழுது தான் கவிஞனுடைய உள்ளக் கருத்தைத் தெள்ளிதின் உணர்ந்து சுவைக்க முடியும். அதைவிடுத்து மொழி பெயர்த்து அதனைப் படித்தாற் பயனில்லை என்றும் தாகூர் கூறுகிறார்.

“தாய்மொழி வாயிலாகவே கவியின் உள்ளத்தைக் காண முடியும். மற்றமொழியின் வாயிலாகக் கவியின் உள்ளத்தைக் காண முயல்வது, வக்கீலுக்கு வக்காலத்துக் கொடுத்துக் காதலியின் அன்பைப் பெற முயல்வது போன்றது” என்று எள்ளி நகைக்கிறார் தாகூர்.

கவிஞனுக்குக் கவிதையின்பால் ஒருவிதக் காதல் வெறியிருக்க வேண்டும். அதனுடன் ஒன்றி விட வேண்டும். அப்பொழுதுதான் உணர்ச்சிக் கவிதைகள் தோன்றும். இவ்வுண்மையை உணர்ந்த பாரதியார், கவிதையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, “கவிதை யாம் மணிப்பெயர்க்காதலி” எனவும், “மனைவியாம் கவிதைத் தலைவி”யெனவும் பாடுகிறார். மற்றோரிடத்து இன்னும் அழகாகக் கவிதையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

**“முன்னிக் கவிதை வெறி மூண்டே நனவழியப்**
**பட்டப்பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்**
**நெட்டைக் கனவின் நிகழ்ச்சி”**

என்று கவிதை வெறி மூள வேண்டும்; அதனால் நனவழிய வேண்டும்; அஃதாவது தன்னை மறந்த நிலை வரவேண்டும். அப்பொழுதுதான் விழிப்பிலே தோன்றும் கனவு போலக் கவிதை வெளிப்படும் என்கிறார்.

வெறியுணர்வு தோன்ற வேண்டும்; நனவு அழிய வேண்டும் அக்கூட்டுக்களியில் உள்ளம் கனிய வேண்டும்; அக்கனிவிலே கவிதை தானாகவே தோன்றும். இவ்வுண்மையைத் திருநாவுக்கரசர், "உள்ளங் கனிந்த போதெல்லாம் உவந்து உவந்து பாடுதுமே" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இவ்வாறு கவிதை வெறிமூண்டு, நனவழிந்து உளங்கனிந்து பாடும் போதுதான், "மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்" என்று பாரதி பாடினானே அந்தச் சொல்லின்பம் வாய்க்கும். அந்தச் சொல்லின்பம் கொண்ட பாட்டுத் திறத்தாலே தான் வையத்தைப் பாலித்திட முடியும்.

**"மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்**
**பண்கண் டளவிற் பணியச் செய்வாய்"**

என்று குமரகுருபரர் கூறியது போல மன்னரையும் பணியச் செய்யும் பண் எப்படியிருத்தல் வேண்டும்? அப்பாடல் மந்திரம் போற் சொல்லின்பம் அமைந்ததாக இருத்தல் வேண்டும். அதனால் நீ பாடும் பொழுது அத்தகு ஆற்றல் மிகு சொல்லின்பம் அமையப் பாடிப்பழகு.

உள்ளத்தில் உணர்ச்சி - கவிதை வெறி பொங்கிக் கொண்டே யிருக்க வேண்டும். அவ்வுணர்ச்சிதான், அவ் வெறிதான் கவிதை களை உந்தி வெளிக் கொணரும். "உணர்ச்சி பொங்கி அடங்கிய பின் ஏற்படும் அமைதியில் திரும்ப அனுபவிக்கப்படும் ஓர் இன்பப் பெருக்கே கவிதை" என 'வேட்சுவர்த்து' என்னும் கவிஞர் பெருமான் குறிப்பிடுகிறார். "மனிதனுடைய உள்ளத்தில் அடிக்கடி தோன்றும் உயரிய ஆவேசத்தை வாக்கில் நிரந்தரமாக்குவது கவிதை" என்று 'செல்லி' என்பாரும் குறிப்பிடுவதும் அக்கருத்தையே. 'வாக்கில் நிரந்தரமாக்குவது' என்று அவர் குறிப்பிடுவதை நன்கு நினைவில் வைத்துக் கொள். நிரந்தரமாக்குவதென்றால் என்றும் நிலை பேறுடைய - காலத்தை வெல்லும் கவிதையாக்குவது என்பது கருத்து. அத்தகு கவிதை படைப்பது, உணர்ச்சியால் அல்லது

வெறியால்- அல்லது ஆவேசத்தால் மட்டுமே இயல்வதாகும்.

கவிதை விண்ணுலகுக்கு வழிகாட்டுவதுமுண்டு. மண்ணுலக வாழ்க்கைக்கு வழிகாட்டுவதும் உண்டு. நான் முன்பு கூறியதுபோல் கவிஞன் வழிகாட்டியாக இருத்தல் வேண்டும். விண்ணுலக வழிகாட்டிகள் பலர் உள்ளனர். நீ மண்ணுலக வழிகாட்டியாக வேண்டும். மண்ணுலக வழிகாட்டிகள் பலராகப் பெருகல் வேண்டும். ‘மாத்யூ ஆர்னால்டு என்பார் ‘வாழ்க்கையின் ஆராய்ச்சியே கவிதை’ என மொழிந்த அருமைப் பாட்டை மனத்தில் நிலைநிறுத்து.

எதை நோக்கினும் ஊடுருவிச் சென்று உண்மை காணும் பார்வை கவிஞனுக்கு வேண்டும். மற்றவர் பார்வைக்கும் கவிஞன் பார்வைக்கும் வேறுபாடு உண்டு. மற்றவர் நோக்கிற்குப் புலனாகாத உண்மை கவிஞன் நோக்கிற்குப் புலனாகும். அதனாலேதான் கவிஞன் ஏனையோரினும் மேம்பட்டவனாக மதிக்கப்படுகிறான். மேற்கூறியவற்றை ஊன்றிப் படித்து அவற்றை மனத்திற் கொண்டு, முறைப்படி கவிதை யெழுதிப் பழகு.

உன் தந்தை
**முடியரசன்.**

❖ ❖ ❖

# 17

# எது சரி

*அன்புள்ள அரசு,*

*உன் மடல் பெற்றேன். நல்ல நடையில் எழுதவேண்டுமென்ற ஆர்வத்தைக் கண்டு மகிழ்வுற்றேன். "தந்தையே, தங்கள் மைந்தன் மாத்தமிழுக்குத் தீங்கு செய்யேன்; நீங்கள் கூறுமாப்போலே, நூற்கள் பல பயின்று பாடல்கள் எழுத முனைவேன்; இத்துடன் பா ஒன்று விடுத்துளேன்; அருள்கூர்ந்து அதனைச் செப்பஞ் செய்து உதவுங்கள்; சில நாட்களில் எந்தன் திறமையை வளர்த்துச் சிறந்த பாவலனாக, உங்கள் மனதை மகிழ்விப்பேன்" எனக் குறித்திருந்தாய். ஆர்வம் பாராட்டுக் குரியது. ஆர்வத்துக்கேற்றவாறு பிழைநீக்கி எழுத முயலுதல் வேண்டும்.*

**மாதமிழா? மாத்தமிழா?**

*உன் மடலில் மாத்தமிழ் என எழுதியிருந்தாய். மா தமிழ் என்றுதான் எழுதவேண்டும். விளக்கம் தருகிறேன். மனத்தில் நன்கு பதிய வைத்துக் கொள். மா என்னும் ஓரெழுத்துத்தொரு மொழிக்குப் பல பொருள்கள் உண்டு. பெருமை, கருமை, விலங்கு, மாமரம், மாமைநிறம், அரிசி முதலியவற்றின் மாவு எனப் பல பொருள்கள் உண்டு. மா கடல் என்றால் பெருங்கடல் என்று பொருள். மாக்கடல் என்றால் கருங்கடல் என்று பொருள். இங்கே மா தமிழ் என்றவிடத்து மா என்பது தமிழின் பெருமை குறிக்க வந்தது. செந்தமிழ் என்றும் பைந்தமிழ் என்றும் கூறுவரேயன்றிக் கருந்தமிழ் என்று கூறுவாரிலரே.*

*இதற்குப் பாரதத்திலிருந்து எடுத்துக்காட்டு ஒன்று தருகிறேன். தூது வந்த கண்ணன், துரியன் அரண்மனைக்குச் செல்லாமல், விதுரன் இல்லத்திற்குச் செல்கிறான். அவனைக் கண்ட விதுரன் பெருமகிழ்வு கொண்டு " என்ன மாதவம் செய்தது இச்சிறுகுடில்" என்று கூறுகிறான். இங்கே மா தவம் என்று கூறுகின்றானே தவிர மாத்தவம் என்று கூறவில்லை. மா என்னும் சொல் பெருமை*

குறிப்பதாக இருந்தால் மாதவம் என ஒற்று மிகாமற்றான் வரும். அதுபோல மாதமிழும் ஒற்று மிகாமல் வரவேண்டும். அடுத்து, "கூறுமாப்போலே" என்னும் இடத்திலும் கூறுமா போலே என ஒற்று மிகாமல் எழுதுதல் வேண்டும். கூறுமாறு போலே என்பதுதான் கூறுமாபோலே எனத்தொக்கு வந்தது.

## நூல்களா? நூற்களா?

இனி உன் மடலில் நூற்கள் எனக் குறிப்பிட்டிருந்தாய். நூல்+கள் = நூல்கள் என வரவேண்டுமே தவிர நூற்கள் என வருதல் தவறாகும். வேல்கள், கால்கள், எனக் குறிப்பிடுவரே தவிர, வேற்கள், காற்கள் என எவரும் குறிப்பிடுவதில்லை.

## நாள்களா? நாட்களா?

நாட்கள் என்று குறிப்பிடுவது தவறு. நாள்கள் என்றே குறிப் பிடுதல் வேண்டும். தோள்கள் என்பதை தோட்கள் என்றோ, வாள்கள் என்பதை வாட்கள் என்றோ நாம் குறிப்பிடுவதில்லை. நாள்கள் என்றால் பல நாள் என்று பொருள். நாட்கள் என்றால் புதிய கள் என்று பொருள்படும்; நாண்மலர் என்பது போல. ஆகவே நாளின் பன்மை குறிப்பதானால் நாள்கள் என்றே வருதல் வேண்டும். தனிக்குறிலை அடுத்து வரும் லகர, ளகரங்கள் தாம் றகர, டகரங் களாகத் திரியும்; கற்கள், முட்கள் புட்கள் என்பன போல.

நூல், நாள் என்பன பால் பகா அஃறிணைப் பெயர்கள் எனப்படும். அஃதாவது ஒன்றன்பாலா பலவின் பாலா என்று பகுக்க இயலாது. அவை ஒன்றையும் குறிக்கும்; பலவற்றையும் குறிக்கும். ஒரு நூல் பல நூல் என்றும் ஒருநாள் பல நாள் என்றும் கூறுவர். "ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம் பலநாள் பயின்று பலரொடு செல்லினும்" என்ற அவ்வையார் பாடலில் ஒருநாள் என்றும் பலநாள் என்றும் ஒருமையிலும் பன்மை யிலும் வந்துளது. சிலப்பதிகாரம் என்னும் நூல் முத்தமிழ்க் காப்பியம் எனப்படும் என்றவிடத்து, நூல் என்னுஞ்சொல் ஒருமையில் வந்தது. நூல் நிலையம் திறக்கப்பட்டன என்ற விடத்து நூல் என்பது பன்மை பொருளில் வந்தது. பன்மையைக் குறிக்கப் பிற்காலத்தே 'கள்' என்பதைச் சேர்த்தனர். கள் புகுந்தபின்புதான் இந்தக் குழப்பம்.

## இத்துடன் என்பது சரியா?

இத்துடன் என எழுதுவது தவறு. இஃதுடன் என எழுத வேண்டும் அல்லது இதனுடன் என்று அன்சாரியை சேர்த்து

எழுதலாம். இது + உடன் சேரும்பொழுது, இது என்பது இடையில் ஆய்தம் பெற்று 'இஃது' எனவரும். அது, இது, உது என்னும் சுட்டு மொழிகள், வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் அவை ஆய்தம் பெறும் என்பது விதி. அவ்விதிப்படி, "இஃதுடன்" என வந்தது. அச்சொல்லை நாளடைவில் இத்துடன் எனத் தவறாக ஒலித்துப் பழகிவிட்டோம்.

இன்றுங்கூடச் சிலர் அஃது, இஃது என்னுஞ் சொற்களை, அக்து, இக்து என அழுத்தமாகச் சொல்வதைக் கேட்கிறோம். இவ்வாறுதான் பல சொற்களைப் பிழைபட ஒலித்துத் தடுமாறு கிறோம்.

**மனமா? மனதா?**

மனம் என்ற மகரவீற்றுச் சொல்லை மனது என்று பிழையாக எழுதி வருகிறோம். மனம் என்பது நல்ல தமிழ்ச் சொல். நாம் மனது என்று எழுதுவதால் சிலர், அச்சொல் வடமொழியிலிருந்து வந்தது என்றும் மனசு என்பது மனது ஆயிற்று என்றும் துணிந்து கூறு கின்றனர். மனம் என்னும் மகரவீற்றுச் சொல் வேற்றுமை உருபு களுடன் சேரும் பொழுது மனத்தை, மனத்தால், மனத்துக்கு என அத்துச்சாரியை பெற்றுவரும். இதை நன்கு நினைவில் நிறுத்து. இனி மனதை என்று எழுதாதே மனத்தை என்றெழுது.

**என்றனா? எந்தனா?**

அடுத்து எந்தன் என்று எழுதியிருந்தனை அதுவும் தவறு என்றன் என்றுதான் எழுதவேண்டும். இச்சொல் என் + தன் எனப் பிரிக்கப்படும். தன் என்பது சாரியை. இஃது ஒருமைக்குரியது. பன்மையாயின் எந்தம் என்றுவரும். அது, எம் + தம் எனப் பிரிக்கப்படும். பன்மைக்குத் 'தம்' என்னும் சாரியை கொடுத்து எழுத வேண்டும். நீயோ ஒருமையையும் பன்மையையும் சேர்த்துக் குழப்புகிறாய். நீயும் குழம்பாதே; பிறரையும் குழப்பாதே.

**திருநிறை செல்வனா? திருநிறைச்செல்வனா?**

நம் இல்லத்திற்கு வரும் திருமண அழைப்பிதழ்களைப் பார்த்திருக்கிறாய். அவற்றில் எண்பது விழுக்காடு திருநிறைச் செல்வன், திருநிறைச் செல்வி என்றுதான் காணல் கூடும். அவ்வா றெழுதுவது பிழையாகும். திருநிறை செல்வன் என்று ஒற்று மிகாமல் எழுதுதல் வேண்டும். அச்சடிக்கக் கொடுப் போர், சரியாக

எழுதியிருப்பினும் அச்சகத்தார், திருத்தி நிறைச்செல்வன் என்றே அச்சடித்துக் கொடுப்பர். நிறைச்செல்வன் என்றால் எடைமிகுந்தவன் என்று பொருள். அஃதாவது பருமனானவன் என்று பொருள். மணமகனோ, மணமகளோ பருமனாக இருந்தால் அழகாகவா இருப்பர். திருநிறை செல்வன் என்றிருந்தால், அழகு மிகுந்தவன், செல்வமிகுந்தவன் என்று பொருள். நிறைசெல்வன் என்பது வினைத் தொகை என்று இலக்கணம் கூறும்; வினைத்தொகையில் ஒற்று மிகுதல் கூடாது. உன் நண்பர்களுக்கு இதனை எடுத்துச் சொல்லி, அவர்கள் இல்லத்து அழைப்பிதழ்களைச் செவ்வனே அச்சிட வேண்டிக்கொள்.

### பெறுநரா? பெறுனரா?

என் முகவரி எழுதுமிடத்தில் 'பெறுனர்' என்று குறிப்பிட்டிருந்தாய். இனிமேல் பெறுனர் என்று குறிப்பிடாமல் 'பெறுநர்' என்று குறிப்பிடு. பெறுநர் என்பது பெயர்ச்சொல். பெறு+ந்+அர். இதில் நகர ஒற்றுக்குப் பெயரிடைநிலை யென்று பெயர். ஓட்டுநர், நடத்துநர், இயக்குநர் என்பனவும் அவ்வாறே பெயரிடை நிலை பெற்றே வரும். நன்கு படித்தவர்களுங் கூடப் பெறுனர் என்று எழுதி விடுகின்றனர். பிறரைத் திருத்தி வழிகாட்ட வேண்டியவர்களே வழி தவறினால் என் செய்வது? அரசு அலுவலகங்களிலிருந்து வரும் மடல்களிற் கூடப் பெறுனர் என்று குறிப்பிடப் பெறுவதைக் கண்டு மனம் நோவதுண்டு. தமிழ் தமிழ் என்று கூச்சலிடுவது பெரிதன்று. அதன் வளர்ச்சியில் மனம் செலுத்த வேண்டும். அதுதான் பயன் தரும்.

### ஆணையரா? ஆனையரா?

ஒரு நகராட்சியில் ஓர் அறிவிப்பு எழுதி வைத்திருந்தனர். நானும் என் நண்பரும் படித்தோம். அந்த அறிவிப்பின் கீழ் 'ஆனையர்' என்று எழுதப்பட்டிருந்தது. நான் வருந்தினேன். என் நண்பர் சொன்னார் 'அது சரிதானே, நீங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள்? என்று. என்ன நண்பரே 'ஆணையர்' என்றுதானே இருத்தல் வேண்டும். 'ஆனையர்' என்றல்லவா தவறாக இருக்கிறது என்று வருந்திக் கூறினேன். 'ஆணையர் யானை போலப் பேருருவம் உடையவர். அதனால் 'ஆனையர்' என்றிருப்பதே பொருந்தும் என்று அவ்வாறு எழுதியுள்ளனர்' என்றார். உடனே நான் வருத்தத்தை விடுத்துச் சிரித்து விட்டேன். அவரும் சிரித்தார். நம்மைத் தமிழர் என்று நாணமின்றிக் கூறிக்கொள்கிறோம். நாம் வாழும் நாட்டைத்

தமிழ் நாடென்றும் சொல்கிறோம். அங்கேதான் நம் தாய்மொழி இந்தப் பாடுபடுகிறது.

**கழி பேருவகையா? களி பேருவகையா?**

முனைவர் பட்டம் பெற்ற ஒருவர் எனக்கு மடல் எழுதியிருந் தார். என்னைப் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித் திருந்தார். அதில் 'களி பேருவகை எய்துகிறேன்' என்று எழுதியிருந்தார். என்னைப் பாராட்டி யிருப்பினும் அவர் பிழைபட எழுதியிருந்தமை வருத்தத்தையே தந்தது. பேருவகை என்றால் பெருமகிழ்ச்சியென்ற பொருள். கழிபேருவகை என்றால் மிகுதியான பெருமகிழ்ச்சி என்று பொருள். அஃதாவது அளவு கடந்த மகிழ்ச்சி யென்பது பொருள். "சால, உறு, தவ, நனி, கூர், கழி, மிகல்" என்று இலக்கணம் கூறும். நான்கு சீர்கள் கொண்ட அடி அளவடியெனப்படும். அய்ந்து சீர்கள் கொண்ட அடி நெடிலடியெனப்படும். ஆறும் ஆறுக்கும் மேற்பட்ட சீர்கள் கொண்ட அடி கழிநெடிலடி யெனப்படும். இதனை அவருக்கு எழுதியிருந்தேன். ஆனால் அவர் அதனை ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. மீண்டும், மீண்டும் அப்படியே எழுதுகிறார். நீ கழிபேருவகையென்றே எழுது.

நான் எழுதுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், உன் தமிழ்ப் பேராசிரியரிடம் உசாவித் தெளிவுபெற முயல்வது நன்று. அவர் உரைப்பதை எனக்கும் எழுது. முக்குண வயத்தால் முறை பிறழ்ந்துரைப்பது மாந்தரியல்பு. ஆதலின் நானும் தவறாக உரைத்து விடலாமல்லவா? உன் பேராசிரியர் உரைப்பது சரியாக இருந்தால் நானும் என் கருத்தை மாற்றிக் கொள்கிறேன். மடல் நீண்டு விட்டதென்று கருதுகின்றேன். தமிழைப் பற்றிப் பேசினால் காலம், பசி அனைத்தையும் மறந்துவிடுவது என் இயல்பாகி விடுகிறது. அதில் அப்படி ஒரு இன்பம் தோன்றிவிடுவதுதான் காரணம்.

அன்புள்ள

**முடியரசன்.**

❖ ❖ ❖

# அன்புள்ள பாண்டியனுக்கு...

**1**

# அறஞ்செய விரும்பு

**அன்புள்ள பாண்டியனுக்கு,**

நலம். உன் கடிதம் கிடைத்தது. உனக்கு என் வாழ்த்து. அம்மாவும் தன் வாழ்த்துகளைத் தெரிவிக்கச் சொன்னார். உடல் நலத்தையும் நன்கு காத்துக்கொள்ளச் சொன்னார். நீ இவ்வளவு காலம் வீட்டிலேயே தங்கியிருந்தமையால், உனக்குச் சொல்ல வேண்டியவற்றை உன் அன்னையே சொல்லி வந்தார். இடை யிடையே நானுங் கவனித்துக் கொண்டேன். இப்பொழுது வெளியூரில் தங்கிப் படிப்பதால், உன்னை அடிக்கடி கண்காணிக்க இயலாது. அதனால் கடிதங்களின் வாயிலாக அறிவுரைகளை எழுதுவேன். நலம் கேட்பதும் கூறுவதுமாக மட்டும் கடிதம் அமைதல் கூடாது. உன் கடிதமும் அறிவு வளர்ச்சியைக் குறிப்பதாகவே இருக்க வேண்டும். நான் எழுதும் ஒவ்வொரு கடிதத்தையும், நேரிலிருந்து கூறுவதாகவே கருதி ஒழுக வேண்டும்.

நம் நாடு, உயர்ந்த பண்புகளை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து வரும் நாடு. அப்பண்பாடுகள், இன்று நேற்றுத் தோன்றி யவையல்ல. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொன்று தொட்டுத் தொடர்ந்து வருவன; உலக மக்கள் அனைவராலும் பாராட்டிப் போற்றப்பட்டு வருவன; இன்று நாகரிகம் மிக்க நாடுகள் என்று சொல்லப்படும் நாடுகள், பண்பாடு இன்னதென அறியாக் காலத்தி லேயே, இங்குத் தோன்றி வளர்ந்து வந்த பெருமையை உடையன. அத்தகைய பண்பாடுகள், இன்று நாளுக்கு நாள் அருகி வரும் நிலையைக் காணுகின்றேன். அவை மீண்டும் தழைத்து வளர வேண்டும் என்ற ஆர்வத்தால், பண்பாடுகளை வளர்க்கத்தக்க கடிதங் களையே இனி எழுத விரும்புகின்றேன். முதலில் அறத்தைப் பற்றி எழுதுகின்றேன்

உலகத்தில், மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள்கள் மூன்று. அவை **அறம், பொருள், இன்பம்** என்பன வாம். இம்மூன்றனுள் பொருளும் இன்பமும் அறத்தின் அடிப்படை யிலே தோன்றி வளர்வன. இக்கருத்தினைச்

**"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்**
**அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல"**

என்று புறநானூறு புகல்கிறது. அறத்தால் வரும் இன்பமும் பொருளுமே சிறந்தவை. பிற வகையால் வரும் இன்பமும் பொருளும் இழிந்தனவே. உயர்ந்த இன்பத்தையும் சிறந்த பொருளையும் அடைய நீ விரும்பினால், முதலில் அறத்தையே விரும்ப வேண்டும்.

அறம் ஒன்றுதான், மக்களுக்குப் புகழையுங் கொடுக்க வல்லது. ஆதலின், அவ்வறத்தைவிட உயர்ந்த ஆக்கம், உலகத்தில் ஒன்றுண் டென்று உரைக்க இயலாது. மேலும் மேலும் உயர்த்துவதாகிய அறத்தினை மறந்தால், அதை விடக் கேடு வேறொன்றுமே இல்லை. அதனால், உன்னால் இயன்ற அளவு அறத்தினைச் செய்ய விரும்பு; இடைவிடாது செய்ய விரும்பு; செல்லும் வழியெல்லாம் செய்ய விரும்பு.

அறஞ் செய்தல், பொருளுடையவர்க்கே இயலுவதாகும் என்று நீ கருத வேண்டாம். நீ அவ்வாறு கருதுவதில் ஓரளவு உண்மையும் உளது. எனினும் தமிழர் கண்ட அறம், எல்லாராலும் எளிதிற் பின்பற்றத் தக்கதாகும். அதனைச் செய்ய விரும்பு என்று தான் உனக்கு எழுதுகின்றேன். நல்லன எண்ணுதல், நல்லன சொல்லுதல், நல்லன செய்தல் இவையே அறம். அஃதாவது மனம், சொல், செயல் மூன்றுந் தூய்மை உணடையனவாக இருத்தல் வேண்டும் என்பதே தமிழ் அறம்.

நல்லன சொல்லும் பொழுதும் நல்லன செய்யும் பொழுதும் மனம் எவ்வகைய மாசும் இன்றித் தூய்மையாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவை சிறக்கும். மனத்துள் மாசுடையவராய் எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் அஃது, ஆரவாரத்திற்காக - ஆடம்பரத்திற்காகச் சொல்வதாகவும் செய்வதாகவுமே அமையும். மனத்துக்கண் மாசிலனாக இருப்பதொன்றே அறமெனப்படும் என வள்ளுவம் வழி வகுத்திருப்பதை, நன்கு மனத்திற் பதிய வைத்துக் கொள்.

மாசுகள் எனப்படுபவை யாவை? மனத்தை எவ்வாறு தூய்மை யாக வைத்துக் கொள்ளுவது என்று நீ எண்ணலாம். அவற்றையுந் தெளிவாக எழுதுகிறேன். பிறர் நலங்கண்டு பொறாமைப்படுதல், அளவு கடந்து பேராசைப்படுதல், இவை காரணமாகப் பிறரிடஞ் சினங்கொள்ளுதல், இச்சினங் காரணமாகக் கடுஞ்சொற் பேசுதல் என்பனவே மாசுகள் எனப்படும். இவற்றை வேரொடு கல்லி எறிந்துவிட வேண்டும். எறிந்துவிடின் மனந்தூய்மையாகும். அப்பொழுது அறம் தானே வந்தெய்தும்.

அறஞ் செய்வதற்கு இளமைப் பருவமென்றும் முதுமைப் பருவமென்றும் வரையறையில்லை. எப்பருவத்திலுஞ் செய்யலாம். இப்பொழுது இளமைப் பருவந்தானே, முதுமைப் பருவத்திற் செய்து கொள்ளலாமே என்ற எண்ணம் கனவிலுந் தோன்றுதல் கூடாது. ஒன்றே செய்தல் வேண்டும்; அவ்வொன்றும் நன்றே செய்தல் வேண்டும். அதுவும் அன்றே செய்தல் வேண்டும். ஏனெனில் மனித வாழ்வு நிலையாத தன்மையுடையது. நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்ற பெருமையை உடையதிவ் வுலகம். ஆதலின், வாழும் நாளிலேயே நன்றே நினைத்து, நினைத்த அன்றே அதனைச் செய்ய விரும்பு. அவ்வறத்தைப் போல உனக்கு உற்றதுணை அழியாத்துணை மற்றொன்றில்லை.

யாக்கையும், செல்வமும் நிலையில்லாதன என்பது, உயர்ந் தோர் கண்ட முடிபு. நிலையாத ஒன்றால் நிலைத்ததைச் செய்து விடுவது தான் அறிவுடைமையாகும். செல்வம் ஓரிடத்திலேயே நிலைபெற்று விளங்கும் இயல்புடையதன்று.; உருண்டோடுந் தன்மையை உடையது. ஆதலின், செல்வம் நம்மிடம் உருண்டு வரும்பொழுது, அதனை நல்வழியிற் செலுத்த வேண்டும். இயங்க விடாமல் தேக்கி வைத்து நாமே அனைத்தையும் நுகர்வோம் என எண்ணுதல் முறையன்று. செல்வத்தின் பயனே ஈதல்தான். அப்பயனை எய்தாமல், நாமே துய்ப்போம் என்ற அவா தம் மனத்தே தோன்று மானால், அறம், பொருள், இன்பம் என்ற அனைத்தும் நம்மிட மிருந்து தப்பிச் சென்றுவிடும். எல்லா நலனும் அழிந்து, பின்னர் வருந்த நேரிடும்.

செல்வம் அழியும்; யாக்கை அழியும்; ஆனால், செய்த அறம் என்றுமே அழியாது. இம்மெய்யறிவு வாய்க்கப் பெற்ற காரணத் தாற்றான், உலகத்துச் சான்றோர், நிலையான அறத்தைச் செய்து

போந்தனர். தமிழ்நாட்டிலும் அயல் நாட்டிலும் வாழ்ந்து மறைந்த வள்ளல் பலரைப் பற்றி, நான் முன்னரே உனக்கு விளக்கிக் கூறியிருக் கிறேன். அவ்வள்ளல்கள் மறைந் தாலும் அவர்கள் ஆற்றிய அறம் மறையவில்லை. அவர்தம் புகழ் மறையவில்லை. மன்னாவுலகத்து மன்னிய அறம் புரிந்து, தம் புகழ் நிறுவித் தாம் மாய்ந்தனர்.

செல்வம் நிலையாதது; அதனாற் செல்வத்தை ஈட்ட வேண்டா என இயம்பவில்லை. யாக்கை நிலையாதது; அதனால் யாக்கை யைப் பேணிக் காக்க வேண்டா எனப் பேசவில்லை. இந் நிலை யாமையை உணர்ந்தால், தனக்கே வேண்டுமென்னுந் தன்னலப் பற்றுக் குறையும்; குறைந்தாற் பொதுநலம் போற்றும் எண்ணம் விரியும்; விரிந்தால் அறஞ்செய்ய ஆசை தோன்றும்; தோன்றவே நிலையாய-தலையாய செயல்களைச் செய்து, என்றும் நின்று நிலவும் புகழைப் பெற்று, மக்கட் பண்புடையராய் வாழ்ந்து, மானிடப் பிறவியின் பயனை எய்தும் பேற்றினை அடையலாம் என்ற ஆர்வத் தால் எழுதுகிறேன்.

நாடோறும் அறஞ் செய்வது நல்லதுதான், ஆயினும், எல்லா ராலும் எப்பொழுதும் அதனை ஆற்றுவது, இயலாது; சிலரால் இயலும், இயலாதவர் சில நாளேனும் அறஞ் செய்தல் வேண்டும். சில நாட் செய்யும் அவ்வறமும் சிறந்த வகையாற் செய்தல் வேண்டும். ஏதோ செய்வோம் என்று கடனுக்காற்றுதல் கூடாது; ஈதே செய்வோம் என்று கடமைக்காற்றுதலாக இருக்க வேண்டும்.

இப்பருவத்திலே, இவ்வளவுஞ் செய்துவிட முடியுமோ என்று மலைத்துவிடாதே. அதனாற்றான், அறஞ்செய் என்று எழுத வில்லை; அறஞ் செய்ய விரும்பு - என்றெழுதினேன். மனத்தால் நினைப்பதுவும் செய்வதற்கு நிகராகும் என்பது வள்ளுவத்தின் குறிக்கோள். ஆதலின், முதலில் மனத்தால் விரும்பு. விருப்பம் வளர வளரப் பருவமும் வளரும். வளர்ந்த பின்னர் அது, செயலுருவம் பெறும். ஆகவே, அறஞ் செய்ய வேண்டுமென்ற ஆசையை வளர்த்துக்கொள்.

**"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும்வா யெல்லாஞ் செயல்".**

இங்ஙனம்,

**அறிவுடை நம்பி.**

❖ ❖ ❖

**2**

# அன்பாய் இரு

**அன்புள்ள பாண்டியனுக்கு,**

நலம். உன் கடிதம் கிடைத்தது. அங்கிருக்கும் சூழ்நிலை களைப் பற்றியெழுதியிருந்தாய். அவை ஏற்ற முறையில் அமைந் திருப்பது மகிழ்ச்சிக்குரியது. நன்கு அமையாவிடினும் நம் முயற்சி யால் மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும். அன்பால் எதையும் செய்ய முடியும்.

தம்பி, உனக்கு அடிக்கடி இத்தகைய கடிதங்கள் எழுதி, உன் மனத்தைப் பண்படுத்த எண்ணுகின்றேனே, அதற்குக் காரணம் என்ன? உன்பாற் கொண்ட அன்புதான். நீ வீட்டிலிருக்கும்பொழுது, சில வேளைகளில் உன்னைக் கடிந்துரைத்திருக்கின்றேன் அல்லவா? அதற்கும் அன்புதான் காரணம். நீ செய்த தவறுகளைச் சில சமயங்களில் உன் தாய், என்னிடங் கூறாமல் மறைத்து வைத்தாரே, அதற்குங் காரணம் அன்புதான். நம் இல்லத்திற்கு விருந்தினர் வரும்பொழுது, நம் இல்லாமையைக் காட்டிக் கொள்ளாமல், வந்தவர் மகிழும் வண்ணம் விருந்தோம்பும் பண்பிலே உன் அன்னை எவ்வளவு தலைசிறந்து விளங்குகின்றார்! அஃதும் அன்பில் விளைந்த பண்புதான் தம்பி. இவ்வாறு ஒவ்வொரு வீட்டிலும் குடும்பத்திலும் அன்பு இழையோடியிருப்பதைக் காணலாம்.

அன்பென்பது தாய், தந்தை, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, உற்றார், நட்டார் என்ற தொடர்புடையவரிடத்தே தோன்றும் மன நெகிழ்ச்சியோகும். அருள் என்பது, தொடர் புடையாரிடத்தும், தொடர்பில்லாரிடத்தும், உயர்திணை, அஃறிணை யாகிய எல்லாவுயிர்களிடத்திலும் காட்டப்படும் அன்பாகும். இத்தகைய அருளென்னும் பேராற்றலுக்கு அடிவே ராக இருப்பதும் அன்புதான். அருளென்னுங் குழந்தையை ஈன்றெடுத்த தாய் அன்புதான். குஞ்சுகளுக்கு இரை தேடித் தரும் கோழியைக்

கண்டிருப்பாய். பச்சிளங் குருவிகளுக்கு இரை யூட்டும் பறவை யினங்களைப் பார்த்திருப் பாய். அம்மாவென் றோலமிட்டு, அங்கு மிங்கும் துள்ளி வரும் கன்றுகளைக் கண்ட வுடன், பால்சுரந்தூட்டும் பசுக்களைப் பார்த்திருப்பாய். இவற்றின்பால் நீ காண்பதென்ன? அன்பென்னும் பண்பல்லவா?

அஃறிணையாயினும், உயர்திணையாயினும் அன்பிற்ககப் படாதவுயிரில்லை. அஃறிணையுயிர்களிடத்திலும் அன்பு துளிர் விட்டுக் காணப்படுவதாயின், உயர்திணையாம் மாந்தரிடம் அவ்வன்பு செழித்து வளர வேண்டாவோ? உலகில் பிறந்த ஒவ்வொரு வரிடமும் அன்பு அரும்பி, மலர்ந்து, மணம் பரப்ப வேண்டு மல்லவா? அன்பைத் துணையாகக் கொண்டு வாழ்பவன்தான் மனிதன் என்று சொல்லப்படுவான்; உயிருள்ள மனிதனென உரைக்கப் படுவான். அன்பினைத் துறந்து திரிபவன், மனிதனென மதிக்கப்பட மாட்டான்; உயிரற்ற உடலாக - எலும்புந் தோலும் போர்த்த உருவமாக எண்ணப் படுவான். ஆதலின் ஒருவர், மற்றவர்பால் அன்புடையராகி ஒழுகுதல் வேண்டும்.

இவ்வன்பு கண்ணுக்குப் புலனாகும் பொருளன்று. கட்புலனா காப் பொருள்களுள் ஒன்றாகும். அவ்வாறாயின், அன்பின் இருப்பை எவ்வாறு புரிந்து கொள்வது? என நீ வினவலாம். அவரவர் செய்யுஞ் செயல்களே அன்பின் இருப்பை வெளிப்படுத்திக் காட்டிவிடும். எவருமே தம்முள்ளத்துள் அன்பை அடைத்துப் பூட்டி வைத்துவிட முடியாது. தம்மால் விரும்பப்பட்டவர் துன்புறுவதைக் காணும் பொழுது, அன்புடையார் கண்களில், தானே நீர் அரும்பித் ததும்பு வதைக் காண்கிறோம். உள்ளத்துள் மறைந்து கிடந்த அன்பை, விழி சிந்தும் நீரே பலரும் அறியும் வண்ணம் வெளிப்படுத்தி விடுகிறது. நம் பக்கத்து வீட்டிலிருந்த உடன் பிறந்தார் இருவரும், பாகப் பிரிவினை காரணமாகப் பகைமை கொண்டு, தனித்தனியே பிரிந்தனர். அவ்விருவரும் இனி ஒன்றுபடப் போவதில்லை என ஊரார் கூறுமளவுக்கு வேறாகி நின்றனர். ஆயினும் ஒருநாள், இளையோன் கடனுக்கு ஆளாகிச் சிறைப்பட்டான் என்ற செய்தியைக் கேட்டுக் கண் கலங்கித் துடிதுடித்து நம் இல்லத்திற்கு மூத்தவர் ஓடி வந்ததைப் பார்த்தாயல்லவா? அதனால் அன்புடையார் நெஞ்சத்துட் பகைமை பூத்திருந்தாலும், அதற்கும் அடியில் புதைந்து கிடக்கும் அன்பு, விழிகளின் வழியே வெளிப்பட்டுவிடும் என்ற உண்மையை நீ உணர்ந்துகொள்ள வேண்டும்.

அன்பிற்கு ஒரு தனிச் சிறப்புண்டு. அன்பு, பொது நலத்தைப் பேணி வளர்க்கும்; அன்பின்மை, தன்னலத்தையே போற்றிக் காத்து வளர்க்கும். அன்புடையார், பிறர்க்குப் பயன்படுவர்; அன்பிலார் தமக்கே பயன்படுவர். மற்றவர்க்குப் பயன்பட விழைவோர், உடல், பொருள், உயிர் மூன்றாலும் பிறர்க்கே உரியராவர். தமக்கே பயன்பட வாழ்வோர் எல்லாம் தமக்கே உரியராவர். சிபிச் சக்கரவர்த்தியின் கதை உனக்குத் தெரியுமல்லவா? அவர் ஒரு புறாவுக்காகத் தன் சதையை அரிந்து தந்தார் என்பதைப் படித்திருக் கிறாய். ததீசி முனிவர் என்பவர், இந்திரனுக்குத் தம் முதுகெலும்பைக் கொடுத்தார் என்று திருவிளையாடற்புராணங் கூறுகிறது. இவ்விரு நிகழ்ச்சிகளும் அன்புடையார், எவ்வகைத் தியாகமுஞ் செய்யத் தயங்கார் என்ற உண்மையைக் காட்டுகின்றன.

நட்பு, உலகத்தில் மிகச் சிறந்த ஒரு பண்பாகும். அப்பண் பினை அன்பொன்றே தரவல்லது. யாவரிடத்தும் நீ அன்பு செலுத்தக் கற்றுக் கொண்டால் பகைவனும் பகைமை பாராட்டாமல், நண்பனாக மாறி விடுவான். அயலவராக இருப்பவரும் உன்பால் நண்பு கொள்ளவே விரும்பி வருவர். ஆதலின் உனக்குத் தீங்கு செய்தாரிடத்தும் அன்பு காட்டு. பகைமைக்கே இடமில்லாமற் போய்விடும். பகையை வெல்வதற்கு, அன்பைப் போன்ற சிறந்த கருவி வேறொன்றில்லை.

குடும்ப வாழ்க்கைக்கு, அன்பு எவ்வாறு இன்றியமையாது வேண்டப்படுகிறதோ, அதைப் போலவே சமுதாய வாழ்க்கைக்கும் அன்பு கட்டாயம் வேண்டப்படுவதாகும். மாந்தர், ஒருவருக் கொருவர் அன்பு செலுத்திக் கூடி வாழக் கற்றுக் கொண்டாலன்றிச் சமுதாயம் என்ற பெயர் பொருந்தாது. விலங்குகளுக்கும் மாந்தருக்கும் உள்ள வேறுபாடு இதுதான். விலங்குகள் கூடி வாழக் கற்றுக் கொள்ளத் தெரியாதவை; அவ்வாறு வாழ்வதற்குரிய அன்பை அறியாதவை. ஆயினும், அவற்றும் சில இனங்கள் கூடி வாழ்வதையுங் காண்கிறோம். கூட்டு வாழ்க்கைக்கு அன்பே சிறந்த துணையாகும்.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையுஞ் சிறந்து விளங்க வேண்டு மானால், அன்பு அவர்கள் வாழ்க்கையைப் பற்றிப் பிணைந்திருக்க வேண்டும். அன்பில்லாத வாழ்க்கை என்றுமே சிறக்காது. வலிய பாறை நிலத்திலே மரம் தளிர்த்து வளர முடியுமா? மென்மையான நிலத்திலே தான் அது தளிர்த்துச் செழித்து வளரமுடியும். அதைப்

போலவே வாழ்க்கையும், அன்பு என்ற மென்மையிலேதான் வளர்ந்து சிறக்கும். அன்பற்ற, வறண்ட வன்னிலத்தே அது வளராது; சிறக்காது, காய்ந்து, உலர்ந்து வாடிவிடும்.

ஒருவனுக்கு நடக்கக் கால்கள் வேண்டும்; காணக் கண்கள் வேண்டும்; கேட்கச் செவிகள் வேண்டும்; பேச வாய் வேண்டும். இவ்வுறுப்புகள் எல்லாம் செவ்வனே அமையப் பெற்றாலும், அகத்துறுப்பாகிய அன்பும் பெற்றிருந்தாற்றான், அவற்றாற் பயனுண்டு. அகத்துறுப்பு, புறத்துறுப்பு என்னும் இரண்டனுள், அகத்துறுப் பாகிய அன்பு இல்லையானால் புறத்துறுப்புகள் எத்துணைச் சிறப்புற்றிருந்தாலும் அவற்றால் யாது பயன்? ஏனையவுறுப்புகள் ஒன்றிரண்டு குறைவு படினும் குற்றமில்லை; அன்பு பெற்றவனாக விளங்கினால் அவன், முழுமை பெற்றவனாகவே கருதப்படுவான். அன்பில்லான் குறையா வுறுப்பினனாயினும், குறைவுடையானாகவே உலகின ரால் எண்ணப்படுவான். ஆதலின், நீ முழுமை பெற்ற வனாக விளங்க, உன் வாழ்வு சிறந்து செழித்து வளர, சமுதாயத்திற் கூடி வாழ, தன்னல மற்றுப் பொதுநலம் பேண அன்புடையவனாக வாழ வேண்டும்.

**“அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்**
**கென்புதோல் போர்த்த உடம்பு”,**

இங்ஙனம்,
**அறிவுடை நம்பி.**

❖ ❖ ❖

**3**

# இணக்கம் அறிந்து இணங்கு

**அன்புள்ள பாண்டியனுக்கு,**

நலம். உன் கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி. உனக்கு என் வாழ்த்து.

முன் எழுதிய கடிதத்தில் அன்பு, நட்பை உண்டாக்குவதற்குச் சிறந்த துணையாகும் என எழுதியிருந்தேன். நீயும் அதன் வண்ணம் ஒழுகிப் புதிய நண்பர்களைப் பெற்றுள்ளதாக எழுதியிருக்கின்றாய். அது மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. அதனால் நட்பைப் பற்றி இக்கடிதத்தில் எழுத விரும்புகிறேன்.

மனிதன் தனக்கென்று தேடிக்கொள்ள வேண்டிய பொருள்கள் பலவுள்ளன. அவற்றுள், தலையாயது நட்பு ஒன்றேயாகும். அதைப் போலச் சிறந்ததாகக் கருதுவதற்கு ஒன்றுமே இல்லை என்னலாம். நட்பு, ஒருவனுடைய வாழ்விலே அரியதொரு காவலாக அமைந்து விடுகிறது. அதைவிடச் சிறந்த காவலாக அமையும் பொருள் வேறில்லை. 'உயிர் காப்பான் தோழன்' என்னும் பழமொழியை இங்கு உனக்கு நினைவுறுத்தக் கருதுகின்றேன். இத்தகு நட்பின் சிறப்புகள் யாவை? உண்மை நட்பின் தன்மை யாது? எத்தகைய நட்பு வேண்டற்பாலது? எத்தகைய நட்பு விலக்கற்பாலது? என்பன பற்றி எழுதினால், நீ இணக்கம் அறிந்திணங்க ஏதுவாக இருக்கும்.

ஒரு நல்ல நூலைக் கற்கும்பொழுது இன்பம் விளைகிறது. மறுமுறை அதனைக் கற்கும்பொழுது மேலும் இன்பம் விளைகிறது. மீண்டும் பயில்கின்றோம்; புதிய இன்பம் உண்டாகிறது. பயிலுந் தோறும் பயிலுந்தோறும் நூல், புதுப்புது இன்பத்தைத் தந்து கொண்டேயிருக்கிறது. அதைப் போலவே நற்பண்பு களைக் கொண்டே நல்லோருடைய நட்பு, பழகப் பழக இன்பஞ் செய்து கொண்ட இருக்கும். ஒருவனுக்கு ஆடை குலைந்த பொழுது,

அவனுடைய கை தன்னியல்பிலே சென்றுதவி, அவ்விளிவரலை நீக்கிக் காக்கின்றது. அதுபோலவே ஒருவன் துன்புற்றகாலை, அவன் வேண்டா முன்னரே தன்னியல்பால் விரைந்து சென்றுதவி செய்து, அத்துன்பத்தை நீக்கிக் காத்தல் செய்கிறது நட்பு. மேலும் தன் மனைவி, மக்கள், உறவினர் என்னும் இவரிடத்துச் சொல்ல முடியாத செயல்களை, மனநிலையை, தன் மனத்துள் உறுத்திக் கொண்டேயிருக்கும் சில எண்ணங்களை வெளிப்படுத்திக் காட்டி, வேண்டிய வழி வகைகளைத் தெரிந்து கொள்வதற்கு உற்ற துணை யாக இருப்பது நட்பு. ஒருவன் அறிந்தோ அறியாமலோ தவறு செய்த வழி, அவனை இடித்துரைத்து, நல்வழியில் நடக்குமாறு செய்யவல்ல வழிகாட்டி நட்பு. இவ்வாறு பல சிறப்புகளை யுடையது நட்பு.

காணும்பொழுது முகம் மலர்ந்து, நகைத்துப் பேசுவது மட்டும் உண்மை நட்பாகாது. அகமும் மலர்ந்து, முகமும் மலர்ந்து, அன்பு காட்டுவதே உண்மையான நட்பாகும். பயன்கருதிப பழகுவது பொய்ந் நட்பு. பயன் கருதாது, துன்பங் கண்டபொழுது துடைக்க முந்துவதே உண்மை நட்பு. பிறைமதி நாளும் நாளும் வளர்வது போல வளர்ந்து கொண்டேயிருப்பது மெய்ந் நட்பு. நிறைமதி நாடோறும் தேய்வது போலக் குறைந்து வரும் நட்புப் பொய்ந் நட்பு. கரும்பை நுனியிலிருந்து தின்று கொண்டே வந்தால், சுவை ஏறிக்கொண்டே செல்லும்; அடியிலிருந்து தின்றால், சுவை இறங்கிக் கொண்டே வரும். அதுபோல உண்மை நட்பு ஏறிக் கொண்டே செல்லும். போலி நட்பு, இறங்கிக் கொண்டே வரும்.

உண்மை நட்பிற்கு, ஒரே தேயத்தவராக இருக்க வேண்டு மென்பதில்லை; பல முறை கண்டும், பேசியும் பழகவேண்டு மென்பதில்லை. ஒன்றுபட்ட வுணர்ச்சியே உண்மை நட்பினைத் தர வல்லது. புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்தல் என்னும் மூன்றும் நட்பிற்குக் காரணங்களாக இருப்பினும், ஒன்றுபட்ட உணர்ச்சியே மிகச் சிறந்ததாக மேலோர் கருதுவர். 'நெடுந் தொலைவில் உள்ளவர் களையும் உணர்ச்சியானது நெருங்கச் செய்து விடுகிறது' என்று, **மாக்சிம் கார்க்கி** என்னும் உருசிய நாட்டு எழுத்தாளன் கூறியுள்ளதை இங்கே எழுதுவது நல்லதென்று கருதுகிறேன்.

உயர்ந்த நட்பை ஆக்குவது உணர்ச்சிதான் என்பதற்கு, நம் நாட்டு வரலாறே போதுமானது. **கோப்பெருஞ்சோழன்** சோழ நாட்டு மன்னன், **பிசிராந்தையார்** பாண்டியநாட்டுப் புலவர்.

இருவர்க்கும் இடையே இருந்த இடைவெளி மிகப் பெரியது; ஒருவரை யொருவர் கண்டு பழகாதவர்கள். ஒருவன் மன்னன்; மற்றவர் புலவர். செல்வத்தால் ஏற்பட்ட இடைவெளியும் மிகமிகப் பெரிது. ஆயினும் உயிரையும் கொடுக்க வல்ல ஒப்பற்ற நண்பராக விளங்கினர். அந்நட்புக்கு, ஒத்த வுணர்ச்சியே காரணமாக இருந்தது.

ஒருவரிடம் நட்புக் கொள்ளுமுன் அவருடைய இயல்புகளை நன்கு ஆராய்ந்து, அதன் பின்னரே கொள்ளுவதுந் தள்ளுவதுஞ் செய்தல் வேண்டும். முதலில் நன்கு ஆராய்ந்து பாராது நட்புக் கொள்ளுவது போலக் கேடு பயப்பது வேறொன்றில்லை. நட்புச் செய்த பின், அதனை விட்டு விடுவதென்பது எளிதன்று; ஆதலின் முன்பே ஆய்ந்து கொள்க நற்குடிப் பிறப்பும், பழிக்கஞ்சும் பண்பும், மாசற்ற மனமும் உடையவர்பால் நட்பாடல் வேண்டும். இவர்தம் நட்பை எத்தகைய விலை கொடுத்தாயினுங் கொள்ளுதல் வேண்டும். தோற்றத்தையும் வெளி வேடத்தையும் கொண்டு நம்பி விடுதல் கூடாது. உள்ளத்தைக் கொண்டே ஓர்ந்துணர்தல் வேண்டும். யானை, தோற்றத்தாற் பெரிது; நாய், உருவிற் சிறிது. எனினும் யானையனையவர் நட்பு விலக்கற்பாலது. நாயனையவர் நட்பே வேண்டற்பாலது. யானை, பழகிய பாகனையே கொன்று விடுகிறது. நாய், தன்னை வளர்த்தவன் அடித்தாலும் துரத்தினாலும் அவனை விட்டகலாது. சுற்றிச் சுற்றி வருகிறது. ஆதலின் நன்றியுள்ளங் கொண்டவரிடத்தே தான் நட்பாடல் வேண்டும்.

நன்றியுணர்வும், நற்பண்பும் இல்லாரிடம் நட்புச் செய்தல் கூடாது. அத்தகையவர் தொடர்பை ஒன்று கொடுத்தாயினும் விட்டு விடுதல் வேண்டும். இன்பத்தில் துணையாவார் போலக் கூடி வாழ்ந்து, துன்பத்தில், விட்டு நீங்கும் இயல்புடையாரை நண்பராகக் கொள்ளுவதை விடத் தனிமையே சிறந்தது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்தம் தொடர்பு, கனவின் கண்ணும் இன்னாத தாகும். சொல்லொன்றும் செயலொன்றுங் கொண்டார் நட்பு, உன்னைச் சிறிதும் அணுகாமல் காத்துக் கொள்ள வேண்டும். சிலர், உன்னைக் கண்ட பொழுது, பணிந்து, வணங்கிய சொற்களைப் பகருவர். தோற்றத்தில் பணிவும், சொல்லில் வணக்கமும் இருப்ப தால் நம்பி விடுதல் கூடாது. பகருவோன் எத்தகைய பண்பினன் என ஆய்ந்து பார்த்தல் வேண்டும். வில்லும் வளையத்தான் செய்கிறது. ஆனால், அவ்வளைவு அம்பைப் பாய்ச்சுவதற்காகத் தான் என்பதை

உணர்ந்து கொள்ள வேண்டும். தொழுதுவரும் கையத்தே பழுது தரும் படைக்கலமும் மறைந்திருக்கும்; அழுது வருங் கண்ணீருள் அழிவு தரும் வஞ்சகமும் கலந்திருக்கும். ஆதலின் வெளித் தோற்றத் தைக் கொண்டே ஒரு முடிபுக்கு வருதல் கூடாது.

நல்லவரை ஆராய்ந்தறிந்து, அவருடன் தொடர்பு கொண்ட பிறகு, எப்பொழுதேனும் அவர், வெறுக்கத்தக்க செயல்களைச் செய்துவிடின், அவரை வெறுத்தொதுக்குதல் கூடாது. அன்பின்மை யாற் செய்தனர் என்று எண்ணுதல் தவறு; அறியாது செய்தனர் அல்லது மிக்க வுரிமையாற் செய்தனர் என்று கருதிப் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். ஒருவர் பொறை, இருவர் நட்புக்கு ஏதுவாகும். நெல்லுக்கும் உமியுண்டு; உமியிருப்பதால் நெல்லை வெறுத்து விடுவதில்லை. கண்ணில், கை விரல் பட்டு விடுவதால் அவ்விரலை வெட்டி விடுவதும் இல்லை. அவ்வாறு கருதிப் பழகுதல் வேண்டும். அளவுக்கு மீறிய குறைகள் காணப்படின் அவரைத் தூற்றித் திரியாமல், தூர விலகிவிடவேண்டும். ஆதலின் நீ நட்பின் அருமை பெருமைகளை அறிந்து, உண்மை நட்பின் இயல்பை உணர்ந்து, போலி நட்பின் இயல்பைப் புரிந்து, வேண்டும் நட்பை விரும்பி, வேண்டா நட்பை விலக்கி, நல்வாழ்வு வாழ் வாயாக.

**"செயற்கரிய யாவுள நட்பின்! அதுபோல்**
**வினைக்கரிய யாவுள காப்பு."**

இங்ஙனம்
**அறிவுடை நம்பி.**

❖ ❖ ❖

**4**

# உண்மை விளம்பு

***அன்புள்ள பாண்டியனுக்கு,***

*நலம். உன் கடிதம் பெற்றேன். மகிழ்ச்சி. நீ நண்பர்களிடம் அன்பாகப் பழகுவதாகவும், அவர்கள் உன்னிடம் அன்பாகப் பழகுவதாகவும் எழுதியிருக்கிறாய். நல்ல நண்பர்களென்றுங் குறித்திருந்தாய். அவ்வன்பு உண்மையானதாக இருக்க வேண்டும். போலியன்பாக இருத்தல் கூடாது. பொதுவாக எதிலுமே போலி கூடாது. உண்மையின் ஒளியே வேண்டும். உள்ளத்தில் ஒளியுண் டாயின் வாக்கினிலும் செயலிலும் ஒளியுண்டாகும்.*

*உண்மை, மனிதனை மேலும் மேலும் உயர்த்துகிறது; பொய்ம்மை, அவனைப் படுகுழியில் வீழ்த்தி விடுகிறது. இதனைப் பல வரலாறுகளும் கதைகளும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. இலக்கியச் சான்றுகள் ஒருபுறமிருக்க, நம் நாட்டுத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளை நோக்கினால் இது நன்கு புலனாகும். நமக்கு விடுதலை தேடித் தந்த காந்தியடிகள் நம் நாட்டு மக்களாற் போற்றப்படுவதோடன்றி, உலகத்து மக்கள் அனைவராலும் பாராட்டப் படுகின்றார். நாடு, மொழி, சமயம், கட்சி என்ற வேற்றுமைகளையும் கடந்து பாராட்டப்படுகின்றார். அவர்தம் நெஞ்சங்களில் நிலைத்த இடத்தையும் பெற்று விளங்குகின்றார். காரணம் என்ன? அவர், உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகியதாற்றான் அந்நிலையினை எய்தினார்.*

*காந்தியடிகளின் சொல்லில் உண்மை சுடர்விட்டது; செயலில் உண்மை செறிந்து விளங்கியது; இவற்றினும் மேலாக உள்ளத்திலும் உண்மை ஒளிவிட்டுக் கொண்டிருந்தது. உள்ளத்தாற் பொய்யாது ஒழுகிய காரணத்தால் அவர், உலகத்தார் உள்ளத்திலெல்லாம் உறையும் தகுதி பெற்றார். 'உண்மையே கடவுள்' என்ற கோட் பாட்டிற் சிறிதேனும் பிறழாது வாழ்ந்து வந்தார். உள்ளத்தில்*

ஒளியுண்டாயின் வாக்கினிலும் ஒளியுண்டாகும் அல்லவா? ஒளியும் அதனால் வலிவும் பெற்ற வாக்கினால் உலகத்தையே தன்வய மாக்கும் பேராற்றலைப் பெற்று விளங்கினார். உண்மையைத் துணையாகக் கொண்டமையால், பேரரசை எதிர்த்துப் பேசும் திண்மையையும், போராடி விடுதலை பெறத் தக்க ஆண்மை யையும் உடையவராகித் திகழ முடிந்தது. உண்மை என்னுங் கருவிக்குமுன், அஞ்சத்தக்க படைக்கலங்கள் தூள்தூளாகின. உண்மைக்கு அத்தகைய ஆற்றலுண்டு.

அஞ்சா நெஞ்சமும் ஆண்மையுந் தரத் தக்க உண்மையை வீரமும் வெற்றியுந் தரவல்ல உண்மையை நீயுங் கொண்டிலங்க வேண்டும். உண்மைக்கு வாய்மை, மெய்ம்மை என வேறு பெயர் களும் உண்டு. இம்மூன்று சொற்களும் பொதுவாக ஒரே பொருளைத் தருவனவேனும், அவற்றிற்குச் சிறப்புப் பொருளும் உண்டு. உள்ளத்தாற் பொய்யாதொழுகுவது உண்மை; வாயாற் பொய்யா தொழுகுவது வாய்மை; மெய்யால் (செயலால்) பொய்யா தொழுகுவது மெய்ம்மை. மனம், சொல், செயல் மூன்றாலும் பொய்யாதொழுக வேண்டுமென்பது கருத்து. இச்சொற்கள் உணர்த்துந் தமிழ்ப் பண்பாட்டை நினையுந் தொறும் நெஞ்சம் மகிழ்கிறது. இம் மூவகையாலும் நீ தூயவனாக வாழவேண்டுமென்ற ஆர்வத்தால் இப்பொருளை விளக்கி எழுதினேன்.

வாய்மை, அல்லது உண்மை என்றால் என்ன? என்பதை முதலிற் புரிந்துகொள்ள வேண்டும். கண்டதைக் கண்டவாறே சொல்லுதல், நிகழ்ந்ததை நிகழ்ந்தபடியே சொல்லுதல் வாய்மை என்று கருதிக் கொண்டிருப்பாய். அஃது ஓரளவுக்கு உண்மை யாயினும், நம் தமிழ் மறையாகிய வள்ளுவம் வாய்மைக்குத் தனியிலக்கணம் வகுத்துப் புது விளக்கந் தருகிறது. 'மற்ற வுயிர்க்குச் சிறிதுந் தீங்கு பயவாத சொற்களைச் சொல்லுதலே வாய்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படும்' என்பது வள்ளுவர் வகுத்த வழி. அது கண்டதற்கு மாறாக இருந்தாலும் நிகழ்ந்ததற்கு வேறாக இருந்தாலும், சிறிது கூடத் தீமை பயவாத சொல்லாக இருக்குமானால் அஃதொன்றே வாய்மை எனப்படும். கண்டதாக இருந்தும், நிகழ்ந்ததாக இருந்தும், ஒரு சிறு தீமையேனும் தருமானால் அது பொய்ம்மைதான் என்பது பெறப்படுகிறது.

கண்டதற்கும் நிகழ்ந்ததற்கும் மாறாக உரைப்பது பொய்ம்மை யன்றோ? என வினவலாம். அது பொய்ம்மை அன்று; வாய்ம்மையின் பாற் பட்டதாகவே கொள்ளத் தக்கதாகும். ஆனால், அச்சொல் நன்மை பயப்பதாக - புரை தீர்ந்த நன்மை பயப்பதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அது வாய்மையின்பாற்படும்; நன்மை பயவாதாயின் பொய்ம்மை தான். நமக்கு நன்மை பயப்பதற் காகப் பொய்ம்மை கூறின், அது வாய்மையின் பாலதன்று. பிறர்க்கு நன்மை பயப்பதாகவே இருக்கவேண்டும். ஒருவன் பெருங் கேட்டி லோ சாக்காட்டிலோ சிக்கிக் கொள்ளும் சூழ்நிலையில் இருக்கிறான் என்று வைத்துக்கொள். அதனினின்று நீக்கி, இன்புறும் நிலையைத் தருமானால், அப்பொய்ம்மையும் வாய்மையிடத்ததுதான். இவனைக் காப்பதற்காக உரைப்பது, மற்றையோர்க்குத் தீங்கு பயப்பதாக இருந்துவிடக்கூடாது. அதனாற்றான் புரைதீர்ந்த நன்மை எனப் பட்டது. சுருங்கக் கூறின், நிகழ்ந்தது கூறுங்கால் தீங்கு பயக்குமாயின் பொய்ம்மை; தீங்கு பயவாவிடின் மெய்ம்மை. நிகழாதது கூறுங்கால் நன்மை பயக்குமாயின் மெய்ம்மை; நன்மை பயவாவிடின் பொய்ம்மை என்க.

பிறர் அறிந்திலர் என்று, நெஞ்சறிந்த ஒன்றை எப்பொழுதுமே பொய்த்தல் கூடாது. பொய்த்தால் அஃது, என்றும் உள்ளிருந்து சுட்டுக்கொண்டேயிருக்கும்; உறுத்தியுறுத்தித் துன்பத்தை உண் டாக்கிக் கொண்டேயிருக்கும். மனச்சான்றை மறைத்து விட முடியாது. நெஞ்சையொளித்தொரு வஞ்சகம் இல்லை யல்லவா? தானஞ் செய்வாரும் தவஞ் செய்வாரும் மிகச் சிறந்தவர் என்பர். அவரினும் தலையாய சிறப்புக் குரியவர் வாய்மையாளர். அவர் மொழியும் வாய்மை, மனத்தொடு பொருந்திவர வேண்டும். அப்பொழுதுதான் அதற்குச் சிறப்பு; பொருந்தாவிடின் அவ்வாய்மை யால் எவ்வகைப் பயனும் இல்லையாகிவிடும்.

முதற்கடிதத்தில் அறஞ்செய்யவிரும்பென எழுதியிருந்தேன். ஏனைய அறங்களைச் செய்யாவிடினுங் குற்றமில்லை; பொய்யாமை என்னும் அறத்தைச் செவ்வனே கடைப்பிடித் தொழுகினாலே போதும். பொய்யாமையில் வழுவாது நின்றொழுகினால் ஏனைய அறங்கள் தாமே வந்தெய்தும். இப்பிறவியில் உயர்ந்த புகழெய்த விரும்பும் ஒருவன் பொய்யாமை என்னும் ஓரறத்தைத் துணையாகக் கொள்ள வேண்டும். புகழெய்த இதனினுஞ் சிறந்த துணை வேறொன் றில்லை.

உடலின் புறத்தே படிந்துள்ள மாசு நீங்கவும், உடல் தூய்மை பெறவும் நாடோறும் நீராடுகின்றோம். புறத்தைத் தூய்மை செய்ய நீர் காரணமாகிறது. அதுபோல, அகத்தைத் தூய்மை செய்ய, அகத்திற்படிந்துள்ள மாசுகள் நீங்க வாய்மையே காரணமாகிறது. வாய்மை, மனமாசுகளைத் துடைத்துவிடுவதால் மெய்யுணர்வு துலங்குகிறது. மெய் யுணர்வைப் புலப்படச் செய்வதாற்றான், அவ் வாய்மையைப் பொய்யா விளக்கென்று வள்ளுவர் கூறுகின்றார். ஏனைய விளக்குகளெல்லாம் புறத்திருளைப் போக்குவன. வாய்மை என்னும் விளக்கு, மனத்திருளை நீக்குவது.

மனத்திருளை நீக்கி, மெய்யுணர்வைப் புலப்படுத்த வல்ல பொய்யா விளக்காகிய வாய்மையைச் சிறப்பித்துக் கூறவந்த திருவள்ளுவர், "மெய்ந் நூல்களாக யாம் கண்ட நூல்களுள், வாய்மையைவிடச் சிறந்தனவாகக் கூறப்பட்ட பிற அறங்கள் இல்லை" எனத் துணிந்து, அறுதியிட்டுக் கூறுகின்றார். இத்தலை சிறந்த அறத்தைக் கைக்கொண்ட நம் சான்றோர், **'பழியெனில் உலகுடன் பெறினுங்'** கொள்ளாதவராகி வாழ்ந்தனர். அவர் வழிவந்த நாமும், இவ்வையகம் முழுவதும் பெறுவதாயினும் பொய்ம்மொழி கூறாது வாழ வேண்டும். உண்மை கூறுவதால் எத்தகைய துன்பம் வரினும் மனத்துணிவுடன் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்; அப்பொழுது நிலைத்த வெற்றியை நாம் அடைய முடியும். பொய்யன் என்றிருந்தால், உலகம் ஒருபொழுதும் நம்பாது, சமுதாயத்தில் நன் மதிப்புங் கிட்டாது. பழியும் இழிவும் பற்றிக் கொள்ளும். மீளாத் துயரில் வீழ்ந்து, பாழாம் நிலையை அடைய நேரிடும். ஆதலின், கனவினும் பொய்ம்மையைக் கருதாதே. உண்மை விரும்பு. அதையே விளம்பு.

**'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு".**

இங்ஙனம்
**அறிவுடைநம்பி.**

❖ ❖ ❖

# 5

# ஒப்புரவொழுகு

**அன்புள்ள பாண்டியனுக்கு,**

நலம். உன் கடிதம் கிடைத்தது. வாய்மையாளன் என்ற காரணத்தால் உன்னை உன் ஆசிரியர்களும் மாணவ நண்பர் களும் மிகுதியும் விரும்புகின்றனர் என்றெழுதியிருக்கிறாய். மிக்க மகிழ்ச்சி! உன்னைப் படிக்க வைப்பதும், உனக்கு அடிக்கடி இத்தகைய நல்லுரைகள் எழுதுவதும் எதற்காக? உன் நல்வாழ்வுக்காகத்தான்; படித்துப் பட்டம் பெற்று, நல்ல நிலையில் இருந்து, கவலையின்றி, இன்புற்று வாழ வேண்டும் என்பதற்காகத்தான். வளமாக வாழ வேண்டும், நல்ல மனிதன் என்ற புகழோடு வாழ வேண்டும் என்னும் ஆசைதான் அவ்வாறெழுதத் தூண்டுகிறது. ஆனால், அந்த வாழ்வு, உனக்காக - உன் குடும்பத்திற்காக என்ற அளவுடன் நின்று விடுதல் கூடாது. அதனைச் சிறந்த வாழ்வென்று நான் கருதமாட்டேன். பிறருக்காகவும் பயன்படும் வாழ்வுதான் சிறந்தது; உயர்ந்தது. ஒவ்வொருவருக்கும் இவ்வெண்ணம் சிறிதேனும் வேண்டும். இவ்வாறு வாழும் வாழ்விற் பெறுமின்பந் தனித்த சிறப்புடையது. நீயும் அவ்வுள்ளத்தைப் பெற வேண்டும் என்ற கருத்தில் சில கருத்துகளை இக்கடிதத்தில் எழுது கின்றேன்.

பழங்கால மனிதன் காடுகளிலும், மரக்கிளைகளிலும், மலைக் குகைகளிலும் தனித்து வாழ்ந்தான். அப்பொழுது தனக்கென்று வாழுந் தன்மையுடையவனாக வாழ்ந்தான். பிறகு காலஞ் செல்லச் செல்ல, அறிவு வளர வளரக் கூடி வாழக் கற்றுக் கொண்டான். கூடி வாழக் கற்றுக் கொண்ட மனிதன், தனக்கென்று வாழாது, பிறர்க்கும் உரியவனாக வாழத் தலைப்பட்டான். தனியே வாழ்ந்த அவன், காலப்போக்கில் சமுதாய வாழ்வை உருவாக்கிக் கொண்டான். அச்சமுதாய வாழ்வில் ஒருவருக்கொருவர் உதவி செய்து, கலந்து, நெருங்கிப் பழகலாயினர். அன்று முதல் ஒவ்வொரு மனிதனும்

மற்றவனுடைய உதவியின்றி வாழ முடியாத சூழ்நிலையைப் பெற்றான். ஆதலால் ஒவ்வொருவனும் பிறருக்குத் தன்னால் இயன்ற உதவி செய்து வாழ வேண்டும் என்ற உளப்பாங்குடைய வனாகத் திகழ்ந்தான். இவ்வாறு ஒருவர்க்கொருவர் உதவும் பண்பைத்தான் **ஒப்புரவு** என்று கூறினர்.

ஒப்புரவு என்னுஞ் சொல்லின் பொருளைக் கூர்ந்து நோக்குங் கால், அச்சொல்லின் அருமை பெருமைகள் நன்கு புலனாகும். நம் முன்னோர், எவ்வளவு ஆழ்ந்து சிந்தித்து, அச்சொல்லைப் படைத் துள்ளனர் என்பதையும் அறியலாம். தன்னைப் போலப் பிறரையும் ஒப்பாக - ஒன்றாகக் கருதி வாழ வேண்டும் என்ற உயர்ந்த தத்துவத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது அச்சொல். வாழ்வு, செல்வம், இன்பம் முதலிய நலங்களைத் தான் எவ்வாறு நுகர எண்ணுகின்றானோ அவ்வாறே பிறரும் அவற்றை நுகர வேண்டும் என்று, ஒப்ப நோக்கி வாழ்வது தான் ஒப்புரவு. பிறரையும் ஒப்பாகக் கருதும் தன்மைத்தாகிய ஒப்புரவென்னுஞ் சொல்லுக்கு வேளாண்மை என்ற பிறிதொரு பெயரும் உண்டு. உழவுத் தொழி லையும் வேளாண்மை என்று சொல்லுகிறோம். அத்தொழில் செய் வோனை வேளாளன் என அழைக்கிறோம். உழவுத் தொழில் அவனுக்காக மட்டுஞ் செய்யப்படுவதன்று; ஊருக்காக - உலகுக் காகச் செய்யப்படுவது. ஏர் நடக்காவிடின் பார் நடக்காது. ஆதலின், உலகுக்குதவியாக விளங்குந் தொழிலை வேளாண்மை எனவும், ஊருக்கெல்லாம் உதவியாக இருப்பவனை வேளாளன் எனவும் அழைக்கின்றோம். ஒப்புரவு, வேளாண்மை என்னும் பண்டைத் தமிழ்ச் சொற்கள் உணர்த்தும் நாகரிகத்தை - பண்பாட்டை நினைந்து, நினைந்து வியந்து வியந்து, பாராட்டத் தோன்றுகிறது. இப்பண்புதான் இன்று உலகெங்குஞ் சமதர்மம் என்று பேசப் படுகிறது.

இயல்பாக வாய்த்திருந்த இப்பொதுநலப் பண்புதான், அறிவு மேம்பாடுற்றுள்ளதாகக் கூறப்படும் இக்காலத்தில், அருகிக் கொண்டே வந்து, தன்னலமே கருதுந் தனிப் பண்பாக மாறிவிட்டது. ஆதி மனிதனாக மாறிவிட்டான் மனிதன். ஆதலின், அவனுக்கு அடிக்கடி இப்பண்பை நினைவூட்ட வேண்டியுளது; வற்புறுத்திச் சொல்ல வேண்டி வருகிறது. இயற்கைப் பண்பைச் செயற்கையாக்க வேண்டிய சூழ்நிலை உண்டாகிவிட்டது. ஒவ்வொருவனும்

பிறருக்கு உதவியாக வாழவேண்டுவது கடமை, இயல்பு, மனிதத் தன்மை என்ற உணர்வையே மறந்துவிட்டான்.

ஒப்புரவு, கைம்மாறு கருதிச் செய்யப்படுவதன்று,தன் கடமை களுள் ஒன்றென்றுணர்ந்து, விரும்பிச் செய்யத் தக்கது. மனிதனுக்கு வேண்டிய கடமைகளுள் இதுவும் ஒன்றாகும் என்பதைத் தெளி வுறுத்தவே அதனைக் ‘கடப்பாடு’ என வள்ளுவர் குறித்தனர். மேகம் மழை பொழிகிறது; மழையின் நீரால் உலகுக்குதவி, அதனைக் காத்தல் செய்கிறது. அது, கைம்மாறு கருதியா மழை பொழிகிறது? குளிர்ந்ததும் தன்னியல்பில் பொழிந்து செல்கிறது. அதைப் போலவே மனிதனும் கைம்மாறு கருதி ஒப்புரவாற்றுதல் கூடாது. மனங் குளிர்ந்து - **அன்பால்** உருகி, இயல்பாக உதவியொழுக வேண்டும். **பறம்புமலையாண்ட பாரி,** வாரி வாரி வழங்கி, உலகைக் காத்தான்; கைம்மாறு கருதியா அதனைச் செய்தான்? முல்லைக் கொடிக்குத் தேரை விட்டுச் சென்றானே, கைம்மாறு கருதியா அவ்வாறு செய்தான்? அப்பண்பு, அவனுக்கு இயல் பாகவே அமைந்து கிடந்தது. இயல்பாகக் கடமையாற்றுந் தன்மையினால், உலகு புரக்குந் தொழிலிற் பாரியையும் மாரியையும் சேர்த்துக் கூறினர் புலவர்.

மனிதன் அரும்பாடுபட்டுப் பொருளைத் திரட்டுகிறான். அல்லும் பகலும் உழைக்கிறான்; அலைகடல் கடந்து பறக்கிறான். இவ்வாறு செல்வத்தைத் தொகுப்பது, தனக்காக வோ வறிதே வைத்திருப்பதற்காகவோ அன்று. உலகுக்காகவும், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதற்காகவும் தான் முயன்று தேடிய பொருள் பயன்பட வேண்டும். சிலர், தாம் ஈட்டிய ஒண் பொருளைக் கல்வி நிலையங்களுக்கும் மருத்துவமனைகளுக்கும் வழங்கு வதைக் காணுகின்றோம். அந்நிலையங்களும் மனைகளும் உலகுக்குத் தானே பயன்படு கின்றன. இவ்வாறு உலகுக்குதவுவது தான் ஒப்புரவெனப்படும். செல்வத்தால் மட்டுமின்றி, உடலுழைப்பாலும் வாய் மொழியாலும் ஒப்புரவு செய்து வாழலாம்.

வள்ளுவர் உலகப் பேரறிஞர்; ஒப்பற்ற வழிகாட்டி; குண மென்னுங் குன்றேறி நின்றவர்; வெகுளியை வேண்டா வென்று வெறுப்பவர்; அக்குணக் குன்றுக்குக் கூட, ஒப்புரவறிந்து வாழாதவனை நினைந்து விடின் சீற்றம் வந்து விடுகிறது. ஒப்புர வறிந்து வாழாதவன், செத்தவருள் ஒருவனாகக் கருதப் படுவான் எனச்

சினந்து கூறிவிடுகிறார். அதனையறிந்து வாழ்பவனே உயிருடன் வாழ்பவனாவான் என மொழிகின்றார். உயிருள்ளவன் செயல் ஒப்புரவறிதல். அஃதின்றேல் அவனை உயிருள்ளவன் என்று எவ்வாறு கூறமுடியும்?

ஊருணி, பயன்மரம், மருந்துமரம் ஆகிய இம்மூன்றும் ஒப்புரவாளனுக்குவமையாக வள்ளுவராற் கூறப்படுவது, கருத்திற் கொள்ளத்தக்கதாகும். மழை பொழிகிறது; ஊருணியில் நீர் நிறைகிறது; அது பாழாகாது, நெடுங்காலம் நின்று, எல்லார்க்கும் தப்பாது பயன்படுகிறது. அதுபோல, அவன் பாடுபடுகிறான்; செல்வங் குவிகிறது; அச்செல்வம் பாழாகாமல், நெடிது நின்று, அனை வருக்குந் தவறாது பயன்பட வாழ்கிறான் என்பது கருத்து. பயன் மரம் ஊரின் நடுவே பழுத்து நின்று, எல்லார்க்கும எளிதிற் பயன் கொடுக்கிறது. ஒப்புரவாளனும் மாந்தரிடையே செல்வங் கொழித்து நின்று, அனைவர்க்கும் எளிதில் உதவும் பண்புடையவனாக இருந்து வாழ்கிறான். மருந்து மரம், எளிதிற் கொள்ளுமிடத்தே நின்று, மறைவிடத்தில் நில்லாது வெளிப்பட நின்று, காலத்தால் வேறு படாது நின்று பயன்தருகிறது; வெட்டினாலும் முறித்தாலும் தன்குறை நோக்காது, வேர், பட்டை, இலை, பூ முதலிய எல்லா உறுப்புகளாலும் பயன்தருகிறது. அதுபோல ஒப்புரவாளனும் பிறர் எளிதில் உதவி பெறும் வகையில் நின்று, காட்சிக் கெளியனாகி, வறுமையினும் வேறுபடாது என்றும் பயன்பட வாழ்கிறான்; பிறர், இடர்தரினும் இழிமொழி கூறினும் அக்குறை நோக்காது, உடல், பொருள், உயிர் ஆகிய அனைத்தாலும் பயன்பட வாழ்கிறான்.

தாம் செய்யத்தக்க கடமைகளை யறிந்த நல்லறிவாளர். செல்வஞ் சுருங்கி, வறுமையுற்ற காலத்தும் ஒப்புரவு செய்வதிலே தளரமாட்டார். செல்வம் ஒழியினும், உழைப்பாலும், பிறவற்றாலும் பிறர்க்கு உதவியாக இருப்பர். புலவர்க்கெல்லாம் உதவியாக நின்ற குமணன், நாடிழந்து, செல்வமிழந்து, காட்டில் வாழும்போதும் தன்னை நாடிவந்த புலவருக்குத் தன் தலையைக் கொடுக்க முன் வந்ததை ஈண்டு நினைவு கொள்க.

ஒப்புரவாளன் ஒருபோதுங் கெடுவதில்லை. கேடுவரு மெனினும் தன்னை விற்றாவது அக்கேட்டினை ஏற்றுக் கொள்ள வேண்டு மென்பது வள்ளுவத்தின் வாய்மொழி. ஒப்புரவினால் வருங் கேடு,

கேடாக மதிக்கப்படுவதில்லை; உயர்ந்த புகழுக் குரியதாகவே கருதப்படும். ஆதலின், ஒப்புரவறிதல் கடமை யென்றுணர்ந்து, கைம்மாறு கருதாது, வேளாண்மை செய்து, வறுமைக் காலத்தும் வழுவாது நின்று உலகுக்குதவியாக வாழ்வாயாக.

**“தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு”.**

இங்ஙனம்
***அறிவுடை நம்பி.***

❖ ❖ ❖

**6**

# ஒழுக்கம் கைக்கொள்

***அன்புள்ள பாண்டியனுக்கு,***

*நலம். உன் கடிதம் கிடைத்தது. பிற துறையில் எவ்வளவு தான் மேம்பாடுற்றிருப்பினும், அவற்றையெல்லாம் உயர்த்திக் காட்டும் ஒழுக்கத்தைப் பற்றி இக்கடிதத்தில் எழுதுகிறேன்.*

*ஒருவன் பல நூல்களைக் கற்றிருப்பினும், பல பட்டங் களைப் பெற்றிருப்பினும் உயர்ந்தோர் ஒழுகிய நெறிகளைக் கல்லாதவனாக இருப்பின் அவன் அறிவில்லாத வனாகவே கருதப்படுவான். கல்வியின் பயன் அறிவாகும்; அறிவின் பயன் ஒழுக்கமாகும். அவ்வொழுக்கம் இல்லையாயின் அறிவில்லை; அறிவில்லை யாயின் கல்வியில்லை. ஆதலின் அவன், அறிவிலி யாகவே கருதப் படுவான். ஒழுக்க நெறிகளைக் கற்றலாவது, அவற்றை இடை விடாது பழக்கத்திற் கொணர்தலாகும். அறநூல்கள் கூறும் நெறி களிலும் சான்றோர் ஒழுகிய நெறி களிலும் இக்காலத்திற்குப் பொருந்தாதனவற்றை நீக்கிப் புதிய நெறிகளிற் பொருந்துவன கொண்டு நடத்தலே ஒழுக்கம் எனப்படும்.*

*ஒழுக்கமுடையவன் எல்லாச் சிறப்புகளையும் அடைகிறான். அஃதில்லான் தாழ்நிலையை எய்துகிறான்.ஆதலால் சிறப்புகளைத் தரவல்ல ஒழுக்கத்தை, உயிரினும் மேலாக மதித்துப் போற்ற வேண்டும். எல்லாப் பொருள்களையும் விட உயிர் சிறந்ததுதான். ஆயினும் உயிர் ஒருவனுக்குச் சிறப்புத் தருவதில்லை. அஃறிணைப் பொருள்களிடத்தும் உயிர் இருக்கத்தான் செய்கிறது.*

*இரு திணைக்கும் பொதுவாகவுள்ளது உயிர். அதனால் ஒரு திணைக்கும் தனிச் சிறப்பு விளைவதில்லை. ஆனால், ஒழுக்கம் தனிச் சிறப்பைத் தருகிறது. அவ்வொழுக்கமே அவனை உயர்திணை யாக்குகிறது. அதனால் சிறப்புத் தராத உயிரை விடச் சிறப்பைத் தரும் ஒழுக்கமே உயர்ந்ததாகிறது. ஆதலின் ஒழுக்கத்தினை உயிரினுஞ்*

சிறந்ததாகக் கருதி, எவ்வகையாலுஞ் சிதையாமற் பேணி, முயன்று காக்க வேண்டும்.

மனிதர்க்குள் உயர்வு, தாழ்வு பேசுகிறோமல்லவா? எதனை அடிப்படையாக வைத்துப் பாகுபாடு செய்கின்றோம்? பிறப்பை யோ, செல்வத்தையோ அடிப்படையாகக் கொண்டு பாகுபாடு செய்திருக்கின்றோம். ஆனால், வள்ளுவம் ஒழுக்கத்தைக் கொண்டே உயர்வு தாழ்வு என்னும் பாகுபாட்டை விதிக்கின்றது. ஒழுக்க முடையவன் எவனோ அவன் உயர்குடிக் குரியவன். ஒழுக்கந் தவறியவன் எவனோ அவன் தாழ்ந்த குடிக்குரியவன். தன்னை உயர்த்து நிறுத்துவானும் தன்னைத் தாழ்த்திங் கீழாக்குவானும் அவனேயாகின்றான். பிறப்பு, மனிதன் உயர்வுக்குந் தாழ்வுக்குங் காரணமன்று.

ஒருவன் கற்ற கல்வியை மறந்துவிடுவானாயின் அஃது அவன் குலத்தைக் கெடுத்துவிடாது. ஒழுக்கத்தை மறந்து விட்டால், அது குலத்தையே கெடுத்துவிடும். நம் வாழ்நாளி லேயே பலரைக் கண்டிருக்கிறோம். செல்வத்தாலும், பிறப்பாலும் உயர்ந்தவராகக் கருதப்பட்டவர்கள், ஒழுக்கக் கேட்டால் தாழ்நிலையடைந்து, மதிப்பிழந்து, செல்லாக் காசுகளாக ஒதுக்கப்பட்டதைக் கண்டிருக் கிறோம். அதனால் கற்ற கல்வியை மறந்தாலும் மறக்கலாம்; பெற்ற ஒழுக்கத்தை மறத்தல் கூடாது; அதனைப் பேணிக் காக்க வேண்டும். ஒழுக்கக் கேடர்கள் உயர்வு பெறாததோடு, தாழ்வையும் அடைந்து விடுவர். இதனையஞ்சியே, சான்றோர் ஒழுக்கத்திற் குறையாமல் நிற்கின்றனர்.

ஒழுக்கக் கேட்டால் பலவகைத் தீமைகளும் சார்ந்து விடுகின்றன. அடாப் பழிகளையும் அடைய நேரிடுகிறது. ஒழுக்கங் குன்றிய வர்க்கு நண்பர்கள் உண்டாதல் அரிது; மாறாகப் பகைமையே வளர்ந்தோங்கும். அப்பகைமை காரணமாகத் தகாத பழியை அவர்மேற் சுமத்தலுங் கூடும். அதனை ஆய்ந்து பாராமல் உலகமும் நம்பிவிடும். ஒழுக்கமின்மை காரணமாக எய்தாப் பழியும் எய்த வேண்டி வரும். இங்கே ஒரு குறட்பாவைக் கூற விரும்புகின்றேன்.

**“நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்”**

நல்லொழுக்கமானது, அறத்திற்குக் காரணமாகி நின்று, இன்பத்தைத் தரும்; தீயொழுக்கம் மறத்திற்குக் காரணமாகித்

துன்பந்தரும் என்பது இக்குறளின் கருத்தாகும். நல்லொழுக்கத்தை அறத்திற்கு வித்து என மொழிந்தவர், தீயொழுக்கத்தை மறத்திற்கு வித்தென்று கூறாது, 'இடும்பை தரும்' என்று மட்டுங் கூறிச் சென்றதைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். நிலத்தில் ஊன்றிய வித்து, உடனே கனி பயந்து விடுவதில்லை. அது முளைவிட்டுச் செடியாகி, மரமாகிப் பூத்துக் காய்த்துப் பின்னரே கனி தருகிறது. அதுபோலவே நல்லொழுக்கமும் உடனே இன்பம் பயவாது. காலஞ் செல்லச் செல்லப் பயன் தரும். அதனாற்றான் அதனை 'வித்து' என்று விளம்பினர். தீயொழுக்கம் அவ்வாறன்று. கால நீட்டிப்பு வேண்டுவ தில்லை; உடனே பயன்தந்துவிடும். இதனையுணர்த்தவே தீயொழுக் கத்தை வித்தென்று உருவகஞ் செய்யாது, 'இடும்பை தரும்' என்ற அளவிற் கூறினர். இக்கருத்தை மனத்திற் கொண்டு, உடனே துன்பம் பயக்கும் தீயொழுக்கத்தை விடுத்து, நல்லொழுக்கத் தையே நாடவேண்டும்.

ஒழுக்கம் என்றால் என்னவென்று முதலிற் புரிந்து கொள்ள வேண்டும். அறநூல்கள் விதித்தனவற்றைச் செய்தலும், விலக்கின வற்றை விடுத்தலும் ஒழுக்கமாகும். செய்ய வேண்டுவனவற்றைக் கூறுதல் விதித்தல். செய்யத் தகாதன வற்றைக் கூறுதல் விலக்கல். பிறர்க்குத் தீங்கு தரும் பொய் முதலிய தீச்சொற்களை மறந்தேனும் சொல்லுதல் கூடாது; பிறர் பெற்ற ஆக்கங் கண்டு பொறாமை கொள்ளுதல் தகாது; பிறர்க்குரிய பொருளைக் கவரக் கருதுதல் பெருங்குற்றமாகும்; புறங் கூறுதலும் பயனில சொல்லுதலும் வெறுக்கத்தக்கன. இவை போல்வன விலக்கலின்பாற்படும். ஆதலின் இத் தீயனவற்றை நீக்கியொழுக வேண்டும்.

அன்புடையவனாக இரு, உண்மை பேசு, இகழ்வாரைப் பொறுத்துக் கொள், இனியன கூறு, ஈதல் இன்பம் பயக்கும் என இவ்வாறு சொல்லுதல் விதித்தலின்பாற்படும். ஆதலின் இன்னோ ரன்ன நன்மைகளைக் கடைப்பிடித்தொழுக வேண்டும். பின்பற்றி நடக்க வேண்டிய ஒழுக்கங்கள் எவை எவையென்று முழுமையுங் கூறிவிட இயலாது. ஓரளவே எடுத்தெழுதவியலும். நீயே சிந்தித்துச் சிந்தித்துக் காலத்துக்கேற்பக் கொள்ளுவன கொண்டொழுக வேண்டும்.; தள்ளுவன தள்ளி நடக்க வேண்டும். எனினும் ஓரிரு நல்லொழுக்கங்களைப் பற்றி எழுதுகிறேன்.

வைகறைப் பொழுதில், துயிலெழக் கற்றுக்கொள்ள வேண்டும். அஃது உடலுக்கு மிகவும் நல்லது; உள்ளத்துக்கும் புத்துணர்ச்சி

தரும்; முகம் மலர்ச்சியாக விளங்கும்; சுறுசுறுப்பைக் கொடுக்கும். எழும்பொழுது தாய் தந்தையரைத் தொழுதெழ வேண்டும்; அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமல்லவா? தாயிற் சிறந்த கோவிலும், தந்தை சொல்மிக்க மந்திரமும் உலகில் உண்டோ? அதனால் அத்தெய்வத்தைத் தொழுதெழ வேண்டும். எழுந்தவுடன் அன்று தாம் செய்ய வேண்டிய அறங்கள், செயல்கள் முதலியன வற்றைச் சிந்தித்து, வரையறை செய்துகொள்ள வேண்டும். இவ்வா றொழுகின் வாழ்வில் சிறந்த வெற்றி பெறவியலும். இத்தகைய நல்லொழுக்கங்களைத் தேர்ந்தெடுத்து நடக்கக் கற்றுக்கொள்.

ஒழுக்க நெறிகளினின்றும் வழுவாது, நாடோறும் அந்நெறி களில் ஒழுகி வரும் ஒருவன், நற்குடி மகனாக விளங்குவான்; நெடுங்காலம் நல்வாழ்வு வாழ்வான்; நோயின்றி வாழ்வான்; செல்வம், வனப்பு, நிலவுரிமை, புகழ், கல்வி முதலிய பேறுகள் அனைத்தும் பெற்று விளங்குவான். ஆதலின் நல்வாழ்வு வாழ, ஒழுக்க நெறிகளில் நட; ஒரு சிறிதும் வழுவாது நட.

**“ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்”.**

இங்ஙனம்
***அறிவுடைநம்பி.***

❖ ❖ ❖

# 7

# ஓதுவதொழியேல்

***அன்புள்ள பாண்டியனுக்கு,***

*நலம். உன் கடிதம் கிடைத்தது. கல்வியின் சிறப்பை யெல்லாம் உனக்குப் பல முறையும் நேரில் சொல்லியிருக்கிறேன். ஆயினும் கல்வி பயில்வதற்குக் கால எல்லை எது என்பதைப் பற்றி உனக்குக் கூறியதில்லை என்று கருதுகிறேன். அதனால் கற்க வேண்டிய கால எல்லை பற்றியும் அதனோடு பிற கருத்துகளையும் இப்பொழுது எழுதுகிறேன். இதனைப் பற்றி எழுத வேண்டுமென்ற எண்ணம் உன் கடிதத்தைப் படித்த பிறகுதான் தோன்றியது. 'சில ஆண்டுகளில் படிப்பு முடிந்து விடும். அதன் பிறகு ஏதேனும் ஒரு வேலையில் அமர்ந்து நம் குடும்பத்திற்கு உதவியாக இருப்பேன்' என எழுதி யுள்ளாய். குடும்பப் பொறுப்புணர்ச்சி இப்பருவத்திலேயே உன்னிடங் காணப்படுவது மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால், 'படிப்பு முடிந்து விடும்' என்று நீ எழுதியிருப்பதுதான் சரியில்லை. அதனால் அதைப் பற்றி உனக்கெழுதுகிறேன்.*

*உலகில், மனிதன் அடையத்தக்க பேறுகள் பல. அப்பேறுகள் அனைத்தும், செல்வம் என்று சான்றோரால் அழைக்கப்படுவதும் உண்டு. அவற்றுட் கல்வியும் ஒன்றாகும். எல்லாச் செல்வங்களும் வேண்டப்படுவனவேனும் அவற்றுட் கல்விச் செல்வம் மிகச் சிறந்த செல்வம் என்று கருதப்படுகிறது. கல்வியைப் பற்றிக் கூறவந்த வள்ளுவர் 'கேடில் விழுச்செல்வம்' என்று குறிப்பிடுகிறார். மணி, பொன் முதலிய ஏனைய பொருட் செல்வங்கள் செல்வமல்ல என்றுங் கூறுகிறார். கல்வி, கேடில்லாத செல்வம், சீரிய செல்வம் எனக் கூறியதன் காரணத்தை நீ நன்கு புரிந்துகொள்ளுதல் வேண்டும். மணி, பொன் முதலான செல்வங்கள் தாயத்தாரால் பங்கிட்டுக் கொள்ளப்படும்; கள்வராற் கவரப்படும்; அரசு சீறின் அரசால் பறித்துக் கொள்ளப்படும். வெள்ளத்தால் அழிக்கப்படும்;*

வெந்தணலால் எரிக்கப்படும். கல்விச் செல்வம், பங்கிட்டுக் கொள்ளவோ, அழிக்கவோ எரிக்கவோ முடியாதது. பொருட் செல்வங் கொடுக்கக் கொடுக்கக் குறையுந்தன்மையது; கல்விச் செல்வங் கொடுக்கக் கொடுக்க வளருந்தன்மையது. பொருட் செல்வம் பிறரிடம் மாறிச்செல்லும் இயல்பினது; கல்விச் செல்வம் மாறாது நிற்கும் இயல்பினது. அதனால் அக்கல்விச் செல்வம், கேடில் செல்வம் என்றும் விழுச்செல்வம் என்றுஞ் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

அழிவில்லாத அச் செல்வத்தை - சீரிய அச்செல்வத்தை அரிதின் முயன்று தேடிப் பெறவேண்டியது உன் கடமை யல்லவா? உற்றுழியுதவியும், உறுபொருள் கொடுத்தும் வழிபாட்டு நிலையை வெறுக்காது நின்றும் கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டும். வீட்டிலும் நாட்டிலும் நன்மதிப்பைத் தேடித் தருவது கல்வி; சமுதாயத்தில் நெளியும் உயர்வு தாழ்வுகளை யகற்றிச் சமனிலையை யுருவாக்கித் தருவது கல்வி; அரசியலிலும் நல்ல செல்வாக்கைப் பெற்றுத் தருவது கல்வி. சுருங்கக் கூறின், மனிதனை மேம்பாட்டையச் செய்யும் மாண்புடையது கல்வியெனலாம். கற்றவன் ஒருவனே கண்ணுடையவன்; கல்லாதவன் குருடனேயாவான்.

புறத்தே விளங்கும் பொருள்களைக் காண, உடலுக்கு இரண்டு கண்கள் வேண்டும். அதுபோலவே கண்ணுக்குப் புலப்படாத பொருள்களைக் கண்டறிய உயிருக்கும் இரண்டு கண்கள் வேண்டும். எண்ணும் எழுத்தும் ஆகிய இரண்டுமே உயிருக்கு வேண்டிய இரு கண்கள். இவை ஞானக்கண் அல்லது அறிவுக்கண் எனப்படும். வருங்கால நிகழ்ச்சிகளையெல்லாம் மனத்தால் நோக்கியுணர, இவை கருவியாக அமைந்திருப்பதால் இவற்றைக் கண் என்று கூறலாமல்லவா? அதனால் மனக்கண் பெற்றவன்தான் கண் பெற்ற வனாவான்; அதனைப் பெறாதவன், முகத்தில் இரண்டு கண்களைப் பெற்றிருப்பினும் பயனில்லை என்க.

கல்வியின் இன்றியமையாமையை நன்குணர்ந்து, கற்க முயலுங் கால் ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். கற்றுக் கொள்ள வேண்டியவை கணக்கில்லாதனவாகவுள்ளன. அவற்றைக் கற்க முனையும் மனிதனுக்கு வாழ்நாள் மிகச் சிலவாக அமைந்துள்ளன. அக்குறைந்த நாளிலேனும் கற்றுக்கொள்ளலாம் என எண்ணினால், இடையிடையே வந்து துன்புறுத்தும் பிணிகளோ மிகப் பலவாம்.

சிற்றறிவுடைய மனிதன், சிறிய வாழ்நாளில் - பல்வகைப் பிணி களிடையே - கரையில்லா நூற்கடலை எவ்வாறு கடந்து கடைத் தேறுவது? இயலாதல்லவா? அதனால் கற்கத் தகுந்த நூல்களை - உறுதிப் பொருள்களை உணர்த்தும் நூல்களை அறிவையும் பண்பை யும் வளர்க்கும் நூல்களைத் தேர்ந்தெடுத்துப் பயிலவேண்டும். 'கண்டது கற்கப் பண்டிதனாவான்' என யாரோ சொன்ன கூற்றை நம்பிக் காலத்தைப் பாழ்படுத்தி விடுதல் கூடாது. இன்று, நூல் என்ற பெயரளவில் நம் நாட்டில் வண்ண வண்ண ஏடுகள் பல்கி வருகின்றன. அவற்றை விழைதல் தகாது. கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்றால் கண்ணாற் காணும் பொருள்களிலிருந்து, சில உண்மை களைக் கற்றுக் கொள்பவன் பண்டிதன் ஆவான் என்பது பொருள். கலை நுட்பங்கள் அயல்நாடுகளில் விண்முட்ட வளர்ந்து வருகின்றன. அவ் வளர்ச்சிகளையெல்லாங் கண்ட பின்னும் நாமும் அவர் களைப் போல ஆகவேண்டும் என்ற ஆர்வமாவது வளரவேண்டாவா? உயர்கலைகள் தோன்ற வேண்டும் என்ற எண்ணமும், அத்தகு நூல்களையே பயிலவேண்டும் என்னும் ஆர்வமும் முதலில் வளர வேண்டும்.

பயிலத்தக்க நூல்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றை ஐயந்திரி பறக் கற்கவேண்டும். இதுவோ அதுவோ என்ற ஐயப்பாடும், ஒன்றை மற்றொன்றாகக் கருதும் திரிபுணர்வும் இருப்பின் எவ்வளவு நூல்களைக் கற்பினும் பயனேயில்லை. கல்வியில் அகலமும் வேண்டும்; ஆழமும் வேண்டும். அஃதாவது மிகுந்த பயிற்சியும் கூர்த்த அறிவும் வேண்டுமென்பது. கற்கத்தக்க நூல்களைக் கற்றோம்; கசடறக் கற்றோம் என்ற அளவில் இருந்தால் மட்டும் போதாது. என்ன கற்றோம்? எப்படி வாழ வேண்டும் என்று கற்றோம்? உயர்வுக்குரிய வழிகளென எவற்றைக் கற்றோம்? என்று சிந்தித்து, அந்நெறிகளில் வழுவாது நின்றொழுகவேண்டும். அவ்வாறொழுகக் கற்றவனே கல்வியாளன் என்று கருதப்படுவான். கல்வியின் பயன் ஒழுக்க மாகும். அவ்வொழுக்கம் இல்லையாயின் கல்வியால் அடையும் பயன்தான் யாது?

கல்வி கற்கும் பொழுது ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் உள்ள தொடர்பு, எவ்வாறிருக்க வேண்டுமென்பதையும் எழுதுவது நலம்பயக்கும் என்று கருதுகின்றேன். இக் காலத்தே ஆசிரியர்கள் பால் மாணவர்கள் நடந்துகொள்ளும் முறை, எனக்குப் பெரிதும்

மனவேதனை தருவதாகவே இருக்கிறது. எழுத்தறிவித்தவனை இறைவன் என்று சான்றோர் கூறுவர்; தந்தைக்குச் சமமானவன் எனவுங் கூறுவர். இறைவனெனப் போற்றாவிடினும் தந்தை நிலையிலாவது வைத்து மதிக்க வேண்டுமல்லவா? தந்தையையுங் கூட இப்பொழுதுள்ள பிள்ளைகள் மதிப்பதில்லையே? என்னதான் உரிமையுணர்வு பெற்றிருப்பினும் எவ்வளவு தான் முன்னேற்றம் அடைந்திருப் பினும் பெற்றோரைப் புறக்கணிக்கும் பிள்ளைகளால் நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாக விளங்க வியலாது. அதனால் பெற்றோரை, பெரியோரை, அறிவுக் கண்ணைத் திறந்துவிட்ட ஆசிரியரை மதித்து நடக்கவேண்டும். ஆசிரியருக்குப் பணிந்து, அவர் சொல்லை மதித்து நடக்கும் மாணவன், வீட்டுக்கும் நாட்டுக்கும் நலம் பயப்பவனாக விளங்குவான். அவருக்குப் பணிவதால், அவர் சொல்லுக்குக் கட்டுப்படுவதால் உரிமைக்கும் தன்மானத்திற்கும் இழுக்கு நேர்ந்து விடப் போவதில்லை. சித்திரப் பாவையென இருந்து, செவி வாயாக, நெஞ்சுகளனாகப் பாடங் கேட்கும் மனநிலை. ஆசிரியரை மதித்து நடக்கும் மாணவனுக்கே எளிதில் வாய்க்கும். ஆசிரியர்க்குப் படியாதவன், படியாதவனாகத் தான் இருப்பான்.

இதுவரை கல்வியின் சிறப்பை எழுதினேன்; எத்தகைய நூல்களைக் கற்க வேண்டுமென்றெழுதினேன்; கற்க வேண்டிய முறைபற்றி எழுதினேன். இக்கல்வியை எவ்வளவு காலம் பயில்வது? கால வரையறையுண்டா என்பதையும் எழுதி முடிக்கின்றேன். உயர்நிலைப் பள்ளியிலோ, கல்லூரியிலோ படித்து முடித்து விட்டால், கல்வி முடிந்து விட்டதென்று பலருங் கருதுகின்றனர். ஏன், நீயும் அவ்வாறுதான் கருதுகிறாய். அது தவறு. கல்விக்குக் கரையேது? கால வரையறைதான் ஏது? கற்க வேண்டியவை ஏராளம் ஏராளம். பள்ளியிலும் கல்லூரியிலும் பயிலுங்கால் நீ இன்பத்தைக் காண்பதரிது. தேர்வுதான் உன் கண்முன் காட்சி யளித்துக் கொண்டே நிற்கும். வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ள, உள்ளத்தை வளப்படுத்திக் கொள்ள, ஒப்பற்ற இன்பம் நுகர விரும்பினால் கல்விக் கூடத்தைவிட்டு வெளியேறிய பிறகும் படிக்க வேண்டும். எப்பொழுதும் படிக்க வேண்டும்; சாந்து ணையும் படிக்க வேணடும்; ஓதாமல் ஒருநாளும் இருத்தல் கூடாது. திரு.வி.க., மறைமலையடிகள், உ.வே.சாமிநாதைய்யர் போன்ற பெருமக்கள் எப்பொழுது புத்தகத்தைக் கீழே வைத்தார்கள்?

*இறுதிவரை புத்தகமுங் கையுமாகவே விளங்கினார்கள். அதனால் உயர்ந்தார்கள். நம்மையும் உயரச் செய்தார்கள். இத்தகைய சான்றோர்களை வழிகாட்டிகளாகக் கொண்டு நீயும் உயர்வாயாக.*

**"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோ டேனை யவர்"**

*இங்ஙனம்*
***அறிவுடை நம்பி.***

❖ ❖ ❖

# 8

# கேள்வி முயல்

*அன்புள்ள பாண்டியனுக்கு,*

நலம். உனக்கு என் நல்வாழ்த்துகள். உன் கடிதம் கிடைத்தது. 'கல்வியின் சிறப்பையும் அதன் பயனையும் நன்குணர்ந்து கொண்டமையால் காலமெல்லாம் படிப்பதாக உறுதி எடுத்துக் கொண்டுள்ளேன்' என எழுதியிருக்கிறாய். அவ்வரிகள் எனக்கு மட்டிலா மகிழ்ச்சியைத் தந்தன. உன் அன்னையிடம் படித்துக் காட்டினேன். உன்னையீன்ற பொழுது கண்ட மகிழ்வினும் பெருமகிழ்வு கொண்டனர். 'என் மகன் சொல் தவறாதவன்; சொன்னபடி நடந்து காட்டுவான்' என்று பெருமைப் பட்டுக் கொண்டார். உன் தம்பி, தங்கைக்கும் படித்துக் காட்டி இன்புற்றார். பெற்றோர்க்குப் பிள்ளைகள் செய்யும் உதவி இவ்வளவுதானப்பா. நீ கற்றுத் தேர்ந்து, ஊரார் மெச்ச வாழ்ந்தால் அதைவிட எங்களுக்கு வேறின்பம் எது?

காலமெல்லாங் கற்பதாக உறுதியெடுத்துக் கொண்டுள்ளாய். மகிழ்ச்சிதான். ஆனால், கற்பதனாலே மட்டும் முழுப்புலமை அடைய இயலாது. எவ்வளவு தான் கற்றாலும் கற்றறிந்த நல்லோருடைய வாய் மொழிகளையும் கேட்டுப் பழக வேண்டும். இரவு பகலாக அரும்பாடு பட்டுக் கற்றறிந்தாலும் நாம் அறியாத ஒன்றை, சிறந்த ஒன்றை மற்றொருவர் அறிந்து வைத்திருப்பார். அதனால் பிறர் சொல்லக் கேட்கும்பொழுது, நாம் அறியாததையும் அறியும் வாய்ப்பு நேரும். நாம் அறிந்ததைவிடச் சிறந்தது - உயர்ந்தது வேறொன்றில்லை என்றெண்ணினால் நமக்கும் கிணற்றுத் தவளைக்கும் வேறுபாடே இல்லை. இக்கிணற்று நீரைவிடச் சிறந்த நீர் எங்குமே இல்லை என்றுதான் அத்தவளையுங் கருதிக் கொள்கிறது. அவ்வாறு நாமும் இருந்து விடுதல் கூடாது.

யாழிசை கேட்கும்பொழுது எத்தகைய இன்பம் பயக்கின்றதோ, குழலிசை எப்படித் தனிச்சுவை கொடுக்கின்றதோ அப்படியே

கேள்விச் செல்வமும் ஒப்பற்ற இன்பந் தருகிறது; அவற்றினும் மேம்பட்ட பேரின்பத்தை - பெருநலத்தைத் தருகிறது. அக்கேள்விச் சுவையை நுகர்ந்து பயன்கொண்டோர் நன்கறிவர் அவ்வின்பத்தின் பெருமையை. கேள்வியைச் செல்வம் என்று குறித்தேன். ஆம்; அதுவும் ஒரு செல்வந்தான். கல்வி எவ்வாறு ‘கேடில் விழுச்செல்வம்’ எனப் படுகிறதோ அதைப் போலவே இதுவுஞ் செல்வத்துட் செல்வமாகவே கருதப்படும். இன்னுங் கூறப்புகின், செல்வத்து ளெல்லாந் தலையாய செல்வமாகவே கொள்ளப்படும்.

இக்கேள்விச் செல்வத்தால் உண்டாகும் நன்மை அளவிடற் கரியது. நீ பலவுங் கற்கிறாய்; கற்றமையால் அறிவு பெறுகிறாய். உண்மைதான். கற்றுணர்ந்த சான்றோரின் வாய்மொழிகளைக் கேட்குங் காலத்து, நீ முன்பு கல்வியாற் பெற்ற அவ்வறிவு, வலிவும் பொலிவும் பெறுகிறது. கல்வி கற்க வாய்ப்பில்லாதவர்கள், அவ்வாய் மொழிகளைக் கேட்பார் களானால் அவர்க்கு நல்லறிவு உண்டாகிறது. கற்றவர் பெற்ற அறிவுக்கு உரத்தைக் கொடுக்கிறது; கல்லாதார்க்கு அறிவைக் கொடுக்கிறது. அதனால் கேள்விச் செல்வம், அறிவு பெற்றவர்க்கும் பயன்படுகிறது; அதனைப் பெறாருக்கும் பயன்படு கிறது. பன்மொழிப் புலவரொருவர் ‘அருளாளர்’ என்ற தலைப்பில் இராமலிங்க அடிகளைப் பற்றிச் சொற் பொழிவாற்றியதாகவும், அப்பொழிவைக் கேட்டின் புற்றதாகவும் முன்பொரு கடிதத்தில் எழுதியிருந்தாயல்லவா? அதனை நினைவுபடுத்திக் கொண்டால் கேள்விச் செல்வத்தின் அருமைப்பாட்டை நன் குணர்வாய். நீ எவ்வளவு நாள் பயின்றாலும் இராமலிங்கரைப் பற்றியும், அருட் பாவைப் பற்றியும் அவ்வளவு தெரிந்து கொள்ள முடியுமா? தெரிந்து கொண்டாலும் புரிந்து கொள்ள முடியுமா? ஓரிரு மணி நேரத்தில் எவ்வளவு செய்திகளைப் புரிந்து கொண்டாய்! கேள்விக்கு அவ்வளவு ஆற்றலுண்டு.

இத்தகைய ஆற்றல் கொண்ட கேள்வியைச் செல்வம் என்று சொல்வதுடன் அமையாது, சுவையென்றுங் கூறுவர். இன்பம் பயக்குங் காரணம் பற்றி, அதனை அவ்வாறு கூறுவர். சுவையை, இரண்டென்று பாகுபாடு செய்யலாம். ஒன்று வாய்ச்சுவை; மற்றொன்று செவிச்சுவை. இனிப்பு, புளிப்பு முதலிய அறுசுவை களே வாய்ச்சுவை எனப்படும். கேள்வி, செவிச்சுவையெனப்படும். செவிச்சுவையறிந்தவர்களே மேலானவர். ஆயினும் வாய்ச்சுவை

யறிந்த மாந்தரே மிகப் பலராகக் காணப்படுகின்றனர். செவிச்சுவை யுணர்ந்தோர் சிலராகக் காட்சியளிக்கின்றனர். வாய்ச்சுவை எல்லாராலும் எளிதாக அறியப்படுவது; செவிச்சுவை சிலராலேயே அரிதாக உணரப்பெறுவது. சான்றோர், செவிச்சுவையுணர்ந் தாரையே விரும்புவர்; வாய்ச்சுவை மட்டும் அறிந்தாரை வெறுப்பர். செவிச்சுவையை யுணராது, வாய்ச்சுவை யொன்றே அறிந்த மாக்கள் வாழ்ந்தாலென்ன? மாண்டாலென்ன? என வள்ளுவப் பெருந் தகையே வைதாரென்றால், அதனின் மேலாக ஒன்றுங் கூற வேண்டுவதில்லை.

தக்க சூழ்நிலையில்லாத காரணத்தாலோ, தன்னால் இயலாத காரணத்தாலோ ஒருவன் கல்வியைக் கற்காமல் இருந்தாலும் இருக்கலாம். ஆனால், கேள்விச் செல்வத்தை மட்டும் இழந்து விடுதல் கூடாது. கற்காவிடினுங் குற்றமில்லை; கேள்வியால் அவன் தெளிவு பெறலாம். செவியுணவாகிய கேள்வயறிவினை யுடையார், எவ்வகைத் துன்பத்திற்கும் ஆளாகமாட்டார். துன்பம் வரினும் அத் துன்பத்தினின்றும் நீங்கிவிடுவர். நீங்குதற்குரிய வழி வகைகளை யறிந்து, அத்துன்பத்திற் சிக்காது, தப்பித்துக் கொள்வர். வறுமை யினால் துன்பம் வரலாம்; அறியாமையால் துன்பம் வரலாம். அத்துன்பத் தால் மனந் தளர்ச்சியடையும். கேள்வியறி வினை யுடையவர். அத் தளர்ச்சிக்கு இடங்கொடார். அத்தளர்ச்சியில் வழுக்கி விழாமலிருக்க, ஊன்றுகோல் போலத் துணை செய்யும் அக்கேள்வியறிவு. வழுக்கு நிலத்தில் நடப்பவனுக்கு, ஊன்றுகோல் எப்படியுதவுமோ அப்படியே, வாழ்க்கை நிலத்தில் நடப்பவனுக்குக் கேள்வியறிவு துணை செய்யும்.

கேள்விச் செல்வம் நல்லது, சிறந்தது, நலம் பல பயப்பது என்றெல்லாம் எழுதினேன். அதனால் எப்படிப்பட்டவர் சொன்னாலுங் கேட்கலாம். எதை வேண்டுமானாலுங் கேட்கலாம் என்றெண்ணி விடாதே. அப்படிக் கேட்பதினுங் கேளாமலே இருப்பது மேல். நமக்குச் சொல்பவர்கள் படித்திருக்கலாம்; பட்டம் பல பெற்றிருக் கலாம்; பரிசுகளும் பாராட்டுகளும் அடைந்திருக்கலாம். அவை மட்டும் போதா. ஒழுக்கமும் உடையவராக இருக்க வேண்டும். ஒழுக்க முடையார் வாய்மொழிகளே நமக்கு உறுதுணையாவன. அஃதிலார் மொழிகளைக் கேட்பதால் எவ்வகைப் பயனும் இல்லை. எதை வேண்டுமானாலுங் கேட்கலாம் என்பதுந் தவறு, நல்லன

வற்றையே கேட்க வேண்டும். நல்லனவற்றைச் சிறிதளவு கேட்டாலும் அந்த அளவுக்கு நிறைந்த நன்மையுண்டு. இக்காலத்தில் எவரும் பேசுகின்றனர்; எதையும் பேசுகின்றனர். அவற்றைக் கேளாதே; அங்கெல்லாம் செல்வதே தீது. ஒழுக்கமுடையார் வாய்ச் சொற்களை, நல்ல சொற்களைக் கேட்க முயல்வாயாக.

கேட்டுக் கேட்டுப் பழகாத செவிகள் செவிட்டுச் செவிகளேயாகும். பணிதல் எல்லார்க்கும் நன்று, இன் சொல்லினதே அறம் என்று நான் உன்னிடம் பலமுறை உரைத்திருக்கின்றேன். அப் பணிந்த மொழியும், இனிய சொல்லும் நீ பெற வேண்டுமானால், நுண்மாண் நுழைபுல மிக்க ஒழுக்க முடையார் வாய்ச் சொற்களைக் கேட்க வேண்டும். கேள்வி என்றவுடன் உனக்குத் தேர்வுத்தாள் நினைவுக்கு வரும். அது கேள்வியன்று; வினா எனப்படும். வினா, வாயின் தொழில்; கேள்வி செவியின் தொழில். செவியின் தொழி லாகிய கேள்விச் செல்வத்தைப் பெற்று, அதன் சுவையுணர்ந்து, இன்பந் துய்த்து வாழ்வாயாக. வாழ முயல்வாயாக.

**'செவிக்குண வில்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்"**

இங்ஙனம்
**அறிவுடை நம்பி.**

❖ ❖ ❖

**9**

# சோம்பித் திரியேல்

**அன்புள்ள பாண்டியனுக்கு,**

நலம். உன் கடிதம் கிடைத்தது. நீதி நூல்களைக் கற்று வருவ தாக எழுதியிருக்கிறாய். மிக்க மகிழ்ச்சி. காலத்தை வீணாக்காமல், பொன்போலக் காத்துவரின் எதிர்காலம் ஒளியுள்ளதாக விளங்கும். இளமைப் பருவம் அருமையான பருவம்; எதையுந் துணிந்து, வீறுடன் செய்யும் பருவம். அப்பருவத்தைப் பயன்படுத்தும் முறையில் பயன்படுத்தினால் மேன்மை எய்துவது உறுதி. காலத்தை - பருவத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளாமல், சோம்பிக் கிடந்தால் வாழ்வில் எதையுமே செய்து, மகிழ்வு கொள்ள முடியாது. "சோம்பலே மரணம்" என்று பெரியோர் கூறியுள்ளனர். இதனால், முயற்சிதான் உயிர்வாழ்க்கையாகும் என்ற கருத்தைப் பெறு கிறோம். சோம்பலின்றி முயன்று பணி புரிபவனே மரணத்தை வென்றவனாக, உயிர்வாழ்பவனாகக் கருதப் படுவான். அதனால் கணப்பொழுதுகூடச் சோம்பலுக்கு இடங்கொடாதே.

சோம்பல் பலவகைத் தீமைகளைப் பயந்துவிடும். வாழ்வில் அனைத்து நலங்களையும் கெடுத்துவிடும். சோம் பலாக இருப்ப வனுடைய மனம், தீயனவற்றையே எண்ணி யெண்ணி வட்ட மிடும்; தீச் செயல்களைச் செய்யவே அதுநாடும்; நல்லனவற்றை எண்ணவோ செய்யவோ விடாது; பிறர்க்குத் துணைசெய்து வாழவும் இடந்தராது. "வேலை யின்றிச் சோம்பிக் கிடக்குங் கைகளுக்கு ஏதாவது குறும்பு கிடைத்துக் கொண்டேயிருக்கும்" - என்றொரு பழமொழி யுண்டு. சோம்பலை விடுத்து, ஏதேனும் முயற்சியில் ஈடுபட்டால், மனம் அம்முயற்சியிலேயே சென்று கொண்டிருக்கும்; வேறு தீய எண்ணங்களிற் செல்லாது. அதனால் எப்பொழுதும் ஏதேனும் செய்துகொண்டேயிருக்க வேண்டும்; முயன்று கொண்டேயிருக்க வேண்டும்; மனத்தில் எழுச்சி ஒளி

விட்டுக் கொண்டே யிருக்க வேண்டும். ஒருவனுடைய உயர்வு, அவனுடைய முயற்சியை-ஊக்கத்தைப் பொறுத்தே அமையும். நமது ஊரிலே உள்ள தாமரைக் குளத்தில் நீர் எந்த அளவில் இருக்கிறதோ அந்த அளவில் தாமரையுங் காணப்படுகிறது. நீர் மிகுந்திருந்தால் உயர்ந்து காணப்படுகிறது; குறைந்திருந்தால் தாழ்ந்து காணப்படுகிறது. அதுபோலவே முயற்சி மிக்கிருந்தால் வாழ்வு உயர்ந்து தோன்றும்; குறைந்திருந்தால் தாழ்ந்து தோன்றும்.

முயற்சியுடையார் என்றுமே இகழ்ச்சியடையார். 'முயற்சி திருவினையாக்கும்' என்பது முதுமொழி. சிலர் விதி விதியென்று கூறிக்கொண்டு, எவ்வகை முயற்சியும் செய்யாது சோம்பிக் கிடப்பர். இவரால் எதையுமே சாதிக்க முடியாது. எவ்வளவுக் கெவ்வளவு முயல்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நன்மை வந்தே தீரும். 'தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன், மெய்வருத்தக் கூலி தரும்'. மனத்தளர்ச்சியின்றி, இடைவிடாது ஒருவன் முயலு வானாகில், செல்வம் அவனுடைய வீட்டைத் தேடிக்கொண்டு வரும். உயர்ந்திருந்த நாடுகள் சோம்பலால் தாழ்வுற்றதையும், வீழ்ந்து கிடந்த நாடுகள் முயற்சியால் மேம்பாடுற்று விளங்கு வதையும் உலக வரலாறு நமக்குத் தெளிவாக உணர்த்திக் கொண்டே யிருக்கிறது. முயற்சியால் எத்தகைய அருஞ் செயல்களையுஞ் செய்து முடிக்கலாம். 'முடியாது என்பது சோம்பேறிகளின் சொல்' என, உலகவீரன் நெப்போலியன் உரைத்ததையும் இங்கே நினை வூட்ட விரும்புகிறேன். சோம்பலிற் சுகங் காணும் ஒருவன், தன் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் துயர் காண நேரும்; எதிர்காலம் காரிருளாற் சூழப்பட்டு, இருண்டு காணப்படும்.

ஒருவனுடைய வாழ்வு, எவ்வளவுதான் உயர்ந் திருப்பினும், ஊரறிய - உலகறியச் சிறந்திருப்பினும், நந்தா விளக்குப்போல் ஒளிவிட்டுக் கொண்டிருப்பினும், சோம்ப லென்னும் இருள் புகுந்து விடுமானால் ஒளி குறையும்; விளக்கும் அணைந்து விடும். குடியைக் கெடுக்கும் ஆற்றல் அச்சோம்பலுக்குண்டு. குடியுயர வேண்டுமென விழைவோன் சோம்பலை அடியோடு நீக்கிவிட வேண்டும்; நீக்க வில்லையானால் அவன் குடிமடிந்தொழிவது திண்ணம்.

சோம்பல், குடியைக் கெடுப்பதோடு நின்று விடாது; பல குற்றங்களையும் பெருக்கிவிடும். எவ்வளவு செல்வம் பெற்றிருந் தாலும், உண்பதும் உறங்குவதுமாகக் காலத்தைப் போக்கிக்

கொண்டிருக்கும் ஒருவன், மிக விரைவில் இருப்பதையிழக்க நேரிடும். 'வினையே ஆடவர்க்கு உயிர்' என்னும் கோட்பாட்டை மனத்திற் கொண்டு முயலும் ஒருவன் பெற்றுள்ள செல்வங் குறை யாது; மேலும் வளர்ந்து கொண்டே வரும். சோம்பித் திரிவதையே தொழிலாகக் கொண்டால் செல்வம் மாளும்; வறுமை சூழும்; உடலுங் கெடும். உடல் கெடுவதின்றி, உள்ளமுங் கெட்டொழியும்; கெட்டொழிந்த வுள்ளத்தில் தீக்குணங்களே உருவாகும். மீண்டும் எளிதிற் செல்வத்தைப் பெறவும் இன்பத்தை நுகரவும் கெடு வழிகளிற் செல்லவும் அம் மனம் நாடும். அவற்றைப் பெறாவழி மனங்கலங்கி மயங்கும். முயற்சியுடையவனாக இருப்பின் இழப்புக்கு மனங் கலங்கான். முயன்றால் அவற்றைப் பெற்று விடலாம் என்ற மனத்துணிவால் நிலைகலங்க மாட்டான்.

ஒரு செயலைச் செய்து வெற்றி காண விழையும் ஒருவன் இடைவிடாது முயலவேண்டும்; சிறிது சோம்பினாலும் தளர்ந் தாலும் வெற்றி காண்பதரிது. சோம்பலுடையவனை எப்பொழுதும் உறக்கம் சுற்றிக் கொண்டேயிருக்கும். உறக்கத்தை உற்ற துணையாகப் பெற்றுள்ள அவனை, மறதி மறவாது பின்தொடரும். மறதியாற் பீடிக்கப்பட்டவன் நினைத்ததைச் செய்யமாட்டாமல் காலங் கடத்திக் கொண்டே வருவான். இறுதியில் தோல்வியைச் சந்தித்தே தீருவான். ஒன்றைச் செய்து முடிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருந்த போதிலும் அதனைச் செய்யாமலே கெட்டொழிவான். அம்மட்டில் அமையுமோ? இன்னும் பல தீமைகளுக்கும் காரண மாகும் அச்சோம்பல்.

சோம்பலுடையவன், நண்பர்களாலும் இகழ்ந்து சொல்லப் படுவான்; எள்ளி நகையாடப் படுவான். முயற்சி யெதுவுமே யின்றிச் சோம்பலையே விரும்பியலைபவனைத் திருத்த வேண்டுமென்ற ஆர்வத்தால், நண்பர் அடிக்கடி இடித்துரைப்பர். அப்பொழுதாவது அவன் முயற்சியை மேற்கொள்ளுவான், சோம்பலை விட்டொழிப் பான் என எண்ணி, அவ்வாறுரைப்பர். அவ்வாறு பலமுறையிடித் துரைத்தும் அவன் திருந்தாவிடின் இகழ்ந்துரைக்கத்தானே செய்வர்? பாவம்! நண்பர்களின் இகழ்ச்சியுரைக்கும் ஆளாகி விடுகிறான். மேலும் சோம்பலாளன் ஒன்றுஞ் செய்ய மாட்டாமையாற் பகை வர்க்குங் கூட அடிமையாகிவிடும் சூழ்நிலைக்கு இரையாகிவிடுவான்.

தனி மனிதனுக்கே சோம்பல், இவ்வளவு துன்பந் தருகிற தென்றால், பொதுவாழ்வில் ஈடுபட்டவனுக்கு, புதிய சமுதாயத்தை

உருவாக்க நினைப்பவனுக்கு, சமுதாயத்தைத் தன் வழியில் இட்டுச் செல்பவனுக்கு எவ்வளவு கேடுகள் தரும் என்பதை எண்ணிப்பார். நாட்டையே பாழ்படுத்தி விடுமல்லவா? அதனால் அவனுக்குத் 'தூங்காமை' (சோம்பலின்மை) வேண்டுமென்று வள்ளுவர் கூறு கின்றார். சோம்பலுக்கு மடி என்றொரு பெயருமுண்டு. மடி, தன்னையுடையவனை மடியச் செய்துவிடும் என்பதை அறிவுறுத்து வது போல் இருக்கிறது அச்சொல். அதனால் ஒன்றைச் செய்யும் பொழுது, இது நம்மால் முடியுமா? என்று தளரக்கூடாது; தளர்ந்து சோம்புதல் கூடாது. சோம்பலின்றி முயல வேண்டும். முயன்றால் அது பெருமை தந்தே தீரும். அதனால் சோம்பலை விட்டொழி. தொடர்ந்து முயற்சி செய்.

**"படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்**
**மாண்பயன் எய்தல் அரிது".**

இங்ஙனம்
**அறிவுடை நம்பி.**

❖ ❖ ❖

**10**

# தாய்மொழி பேண்

***அன்புள்ள பாண்டியனுக்கு,***

*நலம். உன் கடிதம் கிடைத்தது. அங்கு நடைபெற்ற மாநாட்டைப் பற்றி எழுதியிருந்தாய். மாநாட்டில், பேரறிஞர் பலர் பேசியதைக் கேட்டுப் பயன்பெற்றதாகவும் குறிப்பிட்டிருந்தாய். மிக்க மகிழ்ச்சி. கேள்விச் செல்வத்தின் சிறப்புகளை உணர்ந்து நடக்கின்றாய் என்று கருதுகிறேன். பலருடைய வாய்மொழிகளையும் கேட்கும் பொழுது நாம் மனத்தில் ஒன்றை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். அஃதாவது நாமும் அவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பது தான். ஒருவர் கூறுவதை அப்படியே நம்பிவிடுதல் கூடாது. அவர் சொல்கிறார், இவர் சொல்கிறார் என்று, சொல்லுவோரை முன் வைத்துப் பொருளின் தன்மையை முடிவுகட்டுதல் கூடாது. எப்பொரு ளாயினும், எவர் வாய்க்கேட்பினும், அப்பொருளின் மெய்ப் பொருளை ஆராய்ந்து கண்டுகொள்வதுதான் அறிவுடைமையாகும். மேலும் நமது சிந்தனை வளர்வதற்கும் அஃது ஒரு வழியாகும்.*

*அம்மாநாட்டில் உரையாற்றிய பெருமக்கள், ஆங்கில மொழியின் சிறப்பையும், அஃது, உலகுக்குச் செய்த நன்மை களையும், நமக்கு அதன் இன்றியமையாத் தேவையையும் கூறி, அதனால் கல்லூரி களில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்தியதாகவும் எழுதியிருக் கிறாய். மேலும், அது பற்றி என் கருத்தையும் எழுதுமாறு குறிப்பிட்டிருக்கிறாய். அங்குப் பேசியவர்கள் அனைவரும் பேரறிவாளர்கள். கல்வியைப் பற்றிக் கருத்துரைக்கும் தகுதி வாய்ந்தவர்கள். அவர்கள் கூறியவை அனைத்தும் உண்மையே. தமிழ்மக்கள் எம்மொழியையும் வெறுப்பவரல்லர்; வேண்டி விரும்பியேற்றுக் கற்றுத் தெளிந்து மகிழும் இயல்பினர் என்ற உண்மையை அவர்தம் பேச்சு உறுதிப்படுத்துகிறது. ஆயினும், ஆங்கிலம் இனியும் பயிற்றுமொழியாக இருக்கவேண்டியது தானா?*

அது நமக்கு எந்த அளவுக்குத் தேவை? என்ற வினாக்கள் வரும் பொழுது தான் கருத்து வேறுபட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது.

நாம் இப்பொழுது அடிமை நாட்டிலே வாழவில்லை. உரிமை பெற்ற நாட்டிலே வாழ்கிறோம். அவ்வாறாயின் மொழிக்கும் விடுதலை வேண்டும். நம்மை நாமே ஆண்டு கொண்டிருக்கி றோம்; இன்னொருவர் நம்மை ஆளவில்லை. அதுபோலவே நம் மொழியையும் மற்றொரு மொழி ஆள்வது கூடாது. மொழிக்கும் உரிமை - விடுதலை கிடைத்து விட்டதென்றால் தமிழ்மொழி எங்குஞ் செல்வதற்கு உரிமை பெற்றிருக்க வேண்டும்; எந்தத் துறையிலும் ஆட்சி பெற்றிருக்க வேண்டும். இன்னுங் குறிப்பிட்ட இடத்திற்றான் கட்டுப்பட்டுக் கிடக்க வேண்டுமென்ற நிலை யொழிந்து விடுதலை பெற்றுத் திகழ வேண்டும். இசைத் துறையிலே தமிழ் ஒடுக்கப்பட்டுக் கிடக்கின்றது. கோவில்களுக்குள்ளே செல்ல நம் தமிழ் மொழிக்கு உரிமையில்லை. இந்நிலையில் கல்விக்கூடங் களிலும் தலைகாட்டுதல் கூடாதென்றால் அடிமைத் தளை இன்னும் அகலவில்லையென்று தானே கருத்து? அல்லது அடிமை மனம் நம்மை இன்னும் பற்றிக் கொண்டிருக்கிறது என்றுதான் கருத வேண்டும்.

தமிழ்நாட்டிலே தமிழ்மொழிக்கு உரிமையில்லை யென்றால், ‘தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்’ என்ற பாரதியின் ஆணையை எவ்வாறு நிறைவேற்றுவது? தமிழை நம் நாட்டுக் கல்வியரங்கிலே கூட ஏற்றமுடியாத நாம் உலக அரங்கிலே எவ்வாறு ஏற்றப் போகிறோம்? உரிமை பெற்ற எந்த நாட்டிலேனும் அவர்தம் தாய்மொழியை விடுத்து, அயல் மொழியின் துணையாற் கல்வி பயில்வதைக் கேட்டிருக்கின் றோமா? அவ்வாறு பயிலும் நாடுதான் உரிமை பெற்ற நாடென்று சொல்லப்படுமா? இவ்விழிநிலை காணப்பெறின், உலகம் கைகொட்டியன்றோ சிரிக்கும்? அச்சிரிப்புக்கு நாம் ஆளாவதோ? நாமே நம் தாய் மொழியைத் தாழ்த்த எண்ணுவது முறையோ? அதன் தகுதியை உயர்த்த நாமல்லவோ நினைய வேண்டும், முனைய வேண்டும்? அது தமிழ்நாட்டிலே தன்னாட்சி பெற்றுத் திகழவேண்டுமென்ற ஆர்வம் நமக்கல்லவோ வேண்டும்?

'தமிழ், இலக்கிய வளஞ்செறிந்த மொழிதான்; ஆனால், அறிவியற் கலைகளை அது பெறவில்லையே! ஆங்கிலமல்லவா அக்கலைகளனைத்தையும் பெற்றுள்ளது; அதனால் அக்கலை களைக் கற்று நாமும் முன்னேற, ஆங்கிலந்தான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று அப்பெருமக்கள் பேசியதாக எழுதி யிருக்கிறாய். ஆம்; உண்மைதான்; அறிவியற் கலைகளை ஆங்கிலம் பெற்றுள்ளது உண்மைதான். அதற்காக எந்தக் காலத்திலும் இரவல் பெற்றே வாழ வேண்டுமா? அவ்வாறு வாழ வேண்டுமென்று நியதியா? நம் தாய்மொழியும் அம்மொழியைப் போல் எப்பொழுது தான் அந்தக் கலைகளைப் பெற்று விளங்குவது? அதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டாவா? முயலவேண்டுமென்ற ஆர்வமாவது தோன்ற வேண்டாவா? அக்கலைகளையெல்லாந் தாய்மொழியில் ஆக்கிக் கொள்ள வேண்டுமென்ற முயற்சியிலல்லவா நாம் இறங்கி யிருக்க வேண்டும்? அவ்வாறு செய்யக் கருதாது, ஆங்கிலத்திற்றான் கற்கவேண்டும் ஆங்கிலத்திற்றான் கற்பிக்க வேண்டுமென்று அடம்பிடித்தால் நாம் விடுதலை பெற்று விட்டதாகச் சொல்லிக் கொள்வதிற் பொருளேயில்லை.

இன்று, விண்வெளியிலே வட்டமிட்டு வருமளவிற்கு விஞ்ஞான வளம்பெற்ற நாடுகளைக் காண்கின்றோம்; திங்கள் மண்டிலத்திலே சென்று தங்கி வருமளவிற்கு விஞ்ஞான வளம் பெற்றுள்ள நாடுகளையுங் காண்கின்றோம். அந்நாடு களெல்லாம் ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டுள்ளனவா? உருசியநாடு, ஆங்கிலத்தைப் பயிற்றுமொழி யாகக் கொண்டா இந்த நிலையை யடைந்துள்ளது? கடந்த உலகப் பெரும்போரிலே அணுக்குண்டுக்கிரையாகி, மீண்டும் புத்துயிர் பெற்று, தொழில் வளஞ்சிறந்து, உலக அரங்கிலே தலைநிமிர்ந்து நடக்கிற சப்பான் நாடு, அதன் தாய்மொழியைத் தானே பயிற்று மொழியாகக் கொண்டிருக்கிறது! பிரெஞ்சு நாட்டினரும், செருமானிய நாட்டினரும் தத்தமது தாய்மொழியை உயிராகப் பேணுவதைக் காண்கின்றோம். தாய்மொழியைப் பேணும் இந்த நாடுகளெல்லாம் முன்னேறியிருக்கும் பொழுது, அவற்றைப் போல நாமும் தாய்மொழியைப் பேணி, அக்கலைகளைத் தமிழில் ஆக்கிக் கொண்டு, கற்றால் - கற்பித்தால் நாம் மட்டுந் தாழ்ந்தா விடுவோம்? தாய்மொழியைப் பேண வேண்டுமென்ற பற்றுள்ளம் வேண்டும் தம்பி. தாய்மொழியை மறந்து, அயல்மொழிக்கே அடிமையாகி,

அதற்காகப் பரிந்துபேசும் ஒருவன், தமிழனென்று தன்னைக் கூறிக்கொள்ளத் தகுதியற்ற வனாகின்றான்.

இவ்வாறு நான் கூறுவதால் ஆங்கிலத்தையோ பிற அயல் மொழிகளையோ வெறுக்கின்றேன் என்று கருதி விடாதே. உலகத் தொடர்புக்கு அம்மொழி எவ்வளவு தேவையென்பதை அழுத்த மாக நம்புபவன் நான். அதற்காக, உள்வீட்டுக்குள் அதனையமர்த்தி விட்டு, உன்னைப் பெற்றவளைத் துரத்திவிட ஒருபோதும் நான் உடன்பட மாட்டேன். ஒப்பனை செய்துகொள்ள விரும்பும் ஒருவன் ஆடையின் துணையையும் நாடுகின்றான்; அணிகலன்களையும் நாடுகின்றான். அதுபோலவே முன்னேற்றம் பெற விரும்பும் நாடும், தாய்மொழியின் துணையையும் நாடுகிறது; அயல்மொழியின் உதவியையும் நாடுகிறது. தாய்மொழி ஆடை போன்றது; அயல் மொழி அணிகலன் போன்றது. அணிகலனின்றி மனிதன் வெளி வரலாம்; ஆடையின்றி அவன் வெளிவர இயலாது. வெளிவந்தால் பித்தன் என்றுதான் உலகம் பேசும். தாய்மொழியை மறந்த நாட்டின் நிலையும் அப்படித்தான்.

ஆங்கிலம் போன்ற அயல்மொழிகளைக் கற்பது நல்லதுதான். ஆனால், மொழியென்ற அளவிற் கற்க வேண்டுமே தவிர, கலை களையும் பாடங்களையும் அம்மொழியிற்றான் கற்பிக்க வேண்டு மென்பது கருத்துடைய செயலாகாது. ‘என் வீட்டைச் சுற்றி நாற் புறங்களிலும் சுவர் எழுப்பப்படு வதையோ, சாளரங்கள் அடைக்கப் படுவதையோ நான் விரும்பவில்லை. என் அகத்தைச் சுற்றி அனைத்து நாடுகளின் கலைப்பண்பும், தங்குதடையின்றி மணம் வீச வேண்டு மென்றே விரும்புகின்றேன். ஆனால், அவற்றில் எதுவும் என் காலை வாரிவிடுவதை ஒத்துக் கொள்ள மாட்டேன்’. இது காந்தியடி களின் வாய்மொழி தம்பி. இந்த மனப்பாங்கைக் குறுகிய மனப்பான்மை யென்றோ, வெறுப்புணர்ச்சி யென்றோ, நாட்டுக்கு நலந்தராது என்றோ கூறுவராயின், அவர்தம் அறிவை என்னென்று கூறுவது! தாய்மொழிப் பற்றில்லாத, நெஞ்சமும் நினைப்பும் அயல் மொழிக்கே ஆட்பட்ட ஒருவர் எத்தகைய பெரியவராயினும், மொழியைப் பற்றி அவர் கூறுங் கருத்துகளை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். நீயும் அவற்றை ஒதுக்கிவிடுவது தான் நல்லது; நாட்டுக்கும் நல்லது.

மொழிப்பற்று முன்னேற்றத்தின் முதற்படி, முதற்படியில் கால் வைக்கக் கூச்சப்படும் ஒரு நாடு. முன்னேறிச் செல்ல விரும்புவது பேதைமையாகும். காந்தியடிகள் தாய்மொழியைப் பற்றி மேலும்

கூறியிருப்பதை, இங்கே உனக்கு நினைவு படுத்துகிறேன். 'தாய் மொழியை ஒருவன் மதியாமல் இகழ்வது, தன்னுடைய தாயை இகழ்வது போன்ற அவ்வளவு கண்டிக்கத் தக்க செயலாகும். தாய்மொழியை இகழ்பவன் தேசபக்தன் என அழைக்கப்படுவதற்குத் தகுதியுடையவன் அல்லன். நம்மொழிகள், ஆழ்ந்த கருத்துகளையும் சிந்தனைகளையும் வெளியிடுவதற்குப் போதுமான அளவு வளம் பெற்றிருக்க வில்லை என்றால், அது மொழிகளின் குறையன்று; வளம் பெறச் செய்வது, அம்மொழி களைப் பேசுகின்றவர்களுடைய பொறுப்பாகும். ஆங்கிலத்தின் வாயிலாகத்தான் உயர்ந்த சிந்தனை களை வெளியிட முடியும் என்று கருதிக் கொண்டு நம்முடைய மொழியை வளப்படுத்தத் தவறிவிட்டால், நாம் என்றென்றும் அடிமைகளாகவே இருப்போம்' எனக் காந்தியடிகள் கூறிய பொன்மொழிகளைப் புறக்கணித்து விட்டுப் புலம்புவது நமக்கு முறையன்று.

டாக்டர் வின்சுலோ என்ற அறிஞர், 'தமிழ், கிரேக்க மொழியை விட மென்மையும் திட்பமும் வாய்ந்தது; இலத்தீன் மொழியை விட வன்மைபெற்றது; ஆற்றலாலும் வளத்தாலும் ஆங்கிலத்தையும் செர்மன் மொழியையும் ஒத்திருக்கின்றது' என்று கூறியுள்ளார். அயலவராலுஞ் சிறந்ததெனப் போற்றப்படும் தமிழ் மொழியின் தகுதியை நாமே குறைக்க முயல்வது வெறுக்கத் தக்கது. ஆதலின் தாய் மொழியைப் பேணி, அயல்மொழிகளை அளவறிந்து பயன்படுத்தி வாழ்வதுதான் ஒவ்வொருவருடைய கடமையாகும். முன்னேறக் கருதும் நாட்டின் பொறுப்பும் ஆகும்.

**"தாய்மொழியைப் பேணித் தாழ்ந்த நாடும் இல்லை**
**தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை"**

இங்ஙனம்
**அறிவுடை நம்பி.**

❖ ❖ ❖

# 11
# தாயகம் காத்துநில்

*அன்புள்ள பாண்டியனுக்கு,*

நலம். உன் கடிதம் கிடைத்தது. தாய்மொழியை எவ்வாறு பேணி வளர்க்க வேண்டும். ஏன் பேணி வளர்க்க வேண்டும் என்பனவற்றை நன்கு புரிந்து கொண்டதாக எழுதியிருக்கிறாய். மிக்க மகிழ்ச்சி. மொழிப் பற்றில்லாத மனிதன் முழு மனிதன் எனக் கருதப்படமாட்டான். எல்லா வகையாலும் மொழிக்கு உரிமை பெற நினைப்பதும், அதற்காவன செய்வதுமே மொழிப்பற்றாகும். செயல்முறைகளை விடுத்து, வறிதே ஆரவார ஒலிகளை எழுப்புவது மட்டும் மொழிப்பற்றென்று சொல்லிவிடமுடியாது. முதலில் அடிமைப் புத்தியை விட்டொழிக்க வேண்டும். உரிமையுணர்வு மேலோங்க வேண்டும். ஈடும் எடுப்பு மிக்க இலக்கிய வளமிக்க நம் மொழி, அறிவியற் கலைவளமும் பெற்றுச் சிறப்புற முயலவேண்டும். மொழிப்பற்றைப் பற்றி முதற் கடிதத்தில் எழுத நேர்ந்தது. அதைத் தொடர்ந்து நாட்டுப் பற்றையும் விளக்கி இக்கடிதத்தில் எழுத எண்ணுகிறேன்.

**‘பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்**
**நற்றவ வானினும் நனி சிறந்தனவே’**

என்று பாரதியார் பாடியிருக்கிறார். வானுலக இன்பஞ் சிறந்தது. அவ்வின்பத்தைத் தவஞ் செய்து பெற வேண்டும். அத்தவத்தாற் பெற்ற வானுலக இன்பத்தை விடச் சிறந்தவள் தன்னை யீன்றெடுத்த தாய். அத்தாய்க்கு நிகராக மற்றொன்றுண்டா? உண்டு; அதுதான், தான் பிறந்த நாடு. அதனாற்றான் தான் பிறந்த நாடு, தாய் நாடு எனவும் தாயகம் எனவும் மொழியப்படுகிறது. அதனால் ஒருவன், தன் தாயை எவ்வாறு மதித்துப் போற்றி வணங்கிக் காக்கின்றானோ அதைப் போலவே, தன் தாயகத்தை யும் மதிக்க வேண்டும்; போற்ற வேண்டும்; வணங்க வேண்டும்; தாயகத்தை வணங்குவதற்கும்,

மதித்துப் போற்றுவதற்கும் காரணமென்ன? என்ற வினாவிற்குக் கவியரசர் பாரதியார் தரும் விடையை உனக்குத் தருகிறேன். அப்பாடலை நன்கு நெஞ்சில் நிறுத்திப் போற்ற வேண்டும் என்ற எண்ணத்தால் தருகிறேன்.

**"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி**
**இருந்ததும் இந்நாடே - அதன்**
**முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து**
**முடிந்ததும் இந்நாடே - அவர்**
**சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து**
**சிறந்ததும் இந்நாடே - இதை**
**வந்தனைகூறி மனத்தில் இருத்தியென்**
**வாயுற வாழ்த்தேனோ?"**

இப்பாடலில் இறுதியடியை நன்கு நோக்குதல் வேண்டும். செயல், நினைவு , சொல் இம்மூன்றாலும் வாழ்த்து வதாகக் கூறுகிறார். வெறும் வாயளவில் நாட்டை வாழ்த்துவதிற் பயனில்லை. மனத்தால், செயலால் வாழ்த்த வேண்டும் என்னுங் கருத்தை நமக்குக் குறிப்பால் உணர்த்துகிறார்.

அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் நாட்டுப் பற்றை யூட்டும் முறை வேறு; உரிமை பெற்ற பின்னர் உண்டாக்க வேண்டிய நாட்டுப் பற்று வேறு. அடிமைக் காலத்தே, மக்கள் நெஞ்சங்களில் இந்த நாடு நமக்குச் சொந்தமானது என்ற உணர்ச்சியை ஊட்ட வேண்டும். அவ்வுணர்ச்சியை ஒன்று திரட்ட வேண்டும்; விடுதலை யுணர்வை, போராட்ட எழுச்சியை உண்டாக்க வேண்டும். இதற்கு வெறும் முழக்கங்கள் மட்டுமே போதும். அந்த அளவில் நாட்டுப் பற்று அமையும். ஆனால், உரிமை பெற்ற பிறகு முழக்கங்கள் மட்டும் நாட்டுப் பற்றாகிவிடா. அமைதியாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். அதுதான் நாட்டுப் பற்றாகக் கருதப்படும். உரிமை பெற்ற பின்னரும் செயலாற்ற முற்படாது, முழக்கங்களையே நம்பிக் கொண்டிருந்தால் நாட்டுக்கு நன்மை காண முடியாது.

தாய்மொழிக்கு ஆக்கந்தேட வேண்டும்; சமுதாயத்தைப் பாழ்படுத்தும் ஏற்றத்தாழ்வுகளை அகற்ற வழிகளைக் காண வேண்டும்; பொருளாதாரத் துறையில் சுரண்டலற்ற சமதர்ம நெறியைப் புகுத்த வேண்டும். சிறுதொழில்கள், பெருந்தொழில்கள்

வளர்ச்சி பெறத் திட்டங்கள் தீட்டிச் செயற்பட வேண்டும்; இல்லாமையுங் கல்லாமையும் ஒழிந்து, பசிப்பிணி தொலைந்து, தன்னிறைவு பெற்றுச் செழிப்பும் களிப்பும் நிறைந்த புதியதோர் உலகைப் படைக்க முனைதல் வேண்டும். இம்முயற்சிகளில் ஈடுபடுவதும், ஈடுபடுவோர்க்கு ஒத்துழைப்பு நல்குவதும் நாட்டுப் பற்றாகும். இவற்றிற்குக் குந்தகம் ஏற்படுத்தினால் அது 'தேசத் துரோகம்' ஆகும். அண்டை நாடுகளின் தாக்குதல்கள் ஏற்படுங் காலத்து மக்கள் பிளவுபட்டு நிற்றல் கூடாது; ஒன்றுபட்டு நிற்க வேண்டும். தங்களுக்குள் பகையுணர்ச்சி, கட்சிப் பூசல் தலைகாட்ட விடுதல் தகாது. ஒற்றுமையுணர்ச்சியும், பொது எதிரியை ஒழிக்க வேண்டு மென்ற ஒரே கொள்கையும் மேலோங்கி நிற்க வேண்டும். இவ்வாறு நிற்பவர்தாம் தாயகத்தைக் காப்பவராக, நாட்டுப் பற்றுடையவராக விளங்க முடியும்.

நாடுபிடிக்கும் ஆசையால் சூழ்ந்து வரும் பகை முடித்தல் ஒன்றுதான், தாயகத்தைக் காக்கும் தொழிலாகக் கருதப்படும் என எண்ணி விடாதே. நாடு கெடுக்கும் நயவஞ்சகப் போக்கினையும் தன்னலமொன்றே கருதும் சுயநலப் பாங்கினை யும், காட்டிக் கொடுக்கும் கேட்டுக் குணத்தையும் அறவே ஒழித்துக் கட்டுவதும் தாயகம் காக்குந் தொழில்தான். இதுவே சிறந்த காப்பும் ஆகும்.

இது மக்களாட்சிக் காலம்; எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்னுங் கோட்பாடு மலர்ந்துள்ள காலம்.அவ்வாறாயின் நாட்டைக் காக்கும் பொறுப்பு, ஒவ்வொரு குடிமகனுக்கும் உரியதாகிறது. அப்பொறுப்புணர்ச்சி வாய்க்கப் பெறுவதெவ்வாறு? அவனவன் தன்னைத்தானே திருத்திக் கொள்ள வேண்டும். அரசுக்கோ, அரசின் ஆணைக்கோ அஞ்சித் தன்னைத் திருத்திக் கொள்ள முயல்பவன், குடியரசு நாட்டில் வாழத் தகுதியற்ற வனாவான். அஞ்சும் வகை யாலும் திருந்த முனையாமல், அரசை ஏமாற்றி வாழ்பவர்களும் உண்டு; சட்டத்தின் துணையால் நீதிமன்றங்களில் வழக்காடித் தப்பித்துக் கொள்பவர்களும் உண்டு. இவர்களால் தாயகம் கெடுமே தவிர, உயர்வு பெறவே முடியாது. தம்மைத் தாமே திருத்திக் கொண்டு வாழ்வோ ராலேதான் குடியரசு மேன்மையுறும்.

இவ்வாறு திருந்தி வாழும் மக்களைக் கொண்ட நாடுதான் நல்ல நாடென்று போற்றப்படும். நிலவளம், நீர்வளம் முதலிய வளங்கள் மிகுந்து, மனவளங் குறைந்திருந்தால் அது, நல்ல நாடென்ற

பாராட்டைப் பெறாது. மன வளந்தான் ஒரு நாட்டின் முன்னேற்றத்தைக் காட்ட வல்லது. இவ்வுண்மையை நன்குணர்ந்த நம் முன்னோர்,

**"எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே"**

என்று மொழிந்துள்ளனர். அதனால், தான் பிறந்த நாட்டுக்குத் தன்னால் ஒரு சிறு தீங்கும் நேர்ந்து விடாமல் விழிப்பாக இருக்க வேண்டும் எனக் கருத வேண்டும்; உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ தன்னாட்டிற்குத் தன்னாற் பழிச்சொல் உண்டாகிவிடக் கூடாதே என்ற அச்சவுணர்ச்சி நீங்காதிருக்க வேண்டும். இவ்வண்ணம் ஒவ்வொருவரும் கருதி நடக்க வேண்டும். இதுதான் நாட்டுப்பற்று. இதுவே தாயகத்தைக் காக்கும் பண்பாகும்.

நாட்டை யாராண்டாலென்ன என்ற மனப்போக்கில் வாழ்தல் கூடாது. நாமே ஆள்கின்றோம்; நமக்காக ஆள்கின்றோம்; நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் துணை கொண்டு ஆள்கின்றோம் என்ற உணர்வு மேலோங்கி நிற்க வேண்டும். அவ்வுணர்ச்சியுடன் நாம், அலுவலாளர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். அலுவலாளர், ஆள்வோருடன் ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறே ஆள்வோர், அலுவலாள ருடனும், அலுவலாளர் நம்முடனும் ஒத்துழைக்க வேண்டும். இம்மூவரும் ஒருவர்க்கொருவர் அன்புளத்தோடு ஒத்துழைக்க வேண்டுமென்பதைக் கடமையுணர்வாகக் கொள்ள வேண்டும். அக்கடமை யுணர்வு நாட்டு நலத்திற்காகவே என்ற உறுதி பூணவேண்டும். இவ்வுறுதி, கடமை, ஒத்துழைப்பு என்பன துளியும் இல்லாமல் இருப்போர் ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக வாழ்கின்றனர் என்ற அளவிற்றான் மதிக்கப்படுவர். நம் வீட்டில் நாய், பூனை, பசு முதலியவற்றை வளர்க்கின்றோமே அவற்றிற்கெல்லாம் நாட்டைப் பற்றிய எண்ணங் கடுகளவேனுந் தோன்றுவ துண்டோ? அவற்றைப் போலவே நாமும் சிந்தனையற்றிருந்து விட்டால், நமக்கு நாடெதற்கு? விடுதலை எதற்கு? குடியரசுதான் எதற்கு? இவையனைத்தும் வேண்டுமெனில் நாட்டுக்கும் நமக்குமுள்ள தொடர்பை எண்ணிப் பார்க்க வேண்டு மல்லவா? அவ்வாறு நினைந்து பார்க்கும் நாடுகளில் மட்டுந்தான் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற இருபிரிவினரும் போட்டியிட்டுக் கொண்டு, நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை செய்வதைக் காண முடிகிறது. அத்தொடர்பை எண்ணிப் பாராத நாட்டில் தன்னலம் மேலோங்கி நிற்குமே தவிர, நாட்டு நலம் காணப்படமாட்டாது.

இனி, நாட்டுக்குப் பொதுவானவர்களாக நாட்டின் சொத்தாகக் கருதப்படும் ஆசிரியர்கள், மருத்துவர்கள், காவல் துறையினர், எழுத்தாளர் போன்ற பெருமக்கள்; தத்தம் நெஞ்சங்களிலே கை வைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த ஆண்டு நாம் அடைந்த தந்நலம் எவ்வளவு? புரிந்த பொதுநலம் எவ்வளவு? இரண்டிலும் பொதுநலம் விஞ்சியிருக் கின்றதா? இல்லையானால் வரும் ஆண்டில் பொதுநலம் விஞ்சச் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்துக் கொள்ள வேண்டும். இவர்கள், நாட்டுக்காக ஒப்படைக்கப் பட்டவர்கள். அதனால் இவர் தம் பணியில் பொது நலமே விஞ்சியிருக்க வேண்டும். இப்பெருமக்கள் நலனில் அரசு, தானே அக்கறை காட்ட வேண்டும். இப்படித்தான் தாயகத்தைக் காக்க வேண்டும், அப்பொழுதுதான் காக்கமுடியும்.

இவ்வாறு ஒவ்வொரு குடிமகனும் எண்ணி ஒழுகினால், துள்ளி வரும் பகையைத் தூவென்றுமிழ்ந்து, தள்ளிவிடும் மன நிலையைப் பெற்றவராய்த் தாயகத்தைக் காத்து நிற்கும் தறுகண்மை உற்றவராய் நாம் வாழ்ந்து, நானிலம் போற்ற வளர்ந்து நிற்போம்.

வாழ்க தாயகம்! வெல்க தாயகம்!

**"தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடும் மிலேச்சரை**
**மாய்த்திட விரும்பான் வாழ்வுமோர் வாழ்வுகொல்?"**

- பாரதியார்.

இங்ஙனம்

**அறிவுடை நம்பி.**

❖ ❖ ❖

## 12

# நன்றி மறவேல்

**அன்புள்ள பாண்டியனுக்கு,**

நலம். உன் கடிதம் கிடைக்கப் பெற்றேன். 'நாட்டுப் பற்றென்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டேன்; அரசியலில் ஈடுபட்டவர்க்குத்தான் அப்பற்று வேண்டுவது என இதுவரை எண்ணியிருந்தேன்; உங்கள் கடிதத்தைப் படித்த பிறகே உண்மையை உணர்ந்து கொண்டேன். மேலும் நாட்டுப் பற்றுடையார், எவ்வெவ்வாறு செயற்பட வேண்டும் என்பதையும் புரிந்து கொண்டேன்' என்றெழுதியிருக்கிறாய். நாட்டுப் பற்றைப் பற்றி மக்களிடையே நன்கு விளக்கிக் கூறாமையாற்றான், விடுதலை பெற்றுப் பல ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் இந்நிலையில் இருக்கின்றோம்.

அரசியலில் ஈடுபட்டவர்க்கு மட்டுந்தான் நாட்டைப் பற்றிய அக்கறை இருக்கவேண்டும் என்ற தவறான எண்ணம், நம்மிடையே இருந்து வருவதால் பெருந்தீங்குகள் நேர்ந்து விடுகின்றன. நாம் வேறு, நாடு வேறு என்று எண்ணி விடுதல் கூடாது. 'நாடென்பது வெறும் பூகோளப்படம் அன்று; அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பு' என்று அறிஞர் கூறியிருப்பது இங்கு நினைவிற் கொள்ளத் தக்கது.

பள்ளியிற் பயிலும் மாணவர்க்கும் நாட்டுப் பற்று வேண்டும். அவர்தம் நிலைக்கேற்பச் செயல்முறைகளில் ஒழுகுவதுதான் நாட்டுப்பற்றாகும். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு வரைகின்றேன். முதலில் மாணவர் தாம் பயிலும் பள்ளியில் பற்றுடையவராக விளங்கவேண்டும். பள்ளிச் சுவர்களைக் கண்டபடி எழுதிப் பாழ்படுத்துதல் கூடாது; வகுப்பறைகளிலுள்ள தடுப்புப் பலகைகளையும் தட்டிகளையும் தகர்ப்பதும் சிதைப்பதுங் கூடாது; இருப்புப் பலகைகளின் உறுப்புகளை உடைத்துத் துண்டு துண்டாக ஒழித்துக் கட்டுவதுங் கூடாது, தெருவழியில் நிற்கும் விளக்குக் கம்பங்

களையும், ஒளிவிளக்குகளையும் குறிப்பார்த்தெறிந்து விளையாடும் வீர விளையாட்டும் வேண்டப்படுவதன்று. இத்தகைய பொதுச் சொத்துக்களை நாட்டுடைமைகளைப் பாழ்படுத்தும் செயல்களை அறவே விட்டொழிக்கவேண்டும். இவற்றையெல்லாம் ஊறுபடுத்துவ தால் யாருக்கோ நட்ட மென்று எண்ணுதல் தவறு. நமக்குத்தான் இழப்பு; நாட்டுக்குத்தான் இழப்பு. நாட்டுடைமை ஒவ்வொன்றிலும் நம் பங்கும் சேர்ந்திருக்கிறது. அதனால் அவை நமக்கும் உரிமையா கின்றன. நம்முரிமைப் பொருள்களை நாமே பாழ்படுத்தலாமா? இவ்வாறு நினைந்து நல்வழியில் ஒழுகுவது தான் மாணவர்க்குரிய நாட்டுப்பற்றாகும். இவ்வாறே நீ நடந்து வருவாயென்று நம்பு கின்றேன். இது நிற்க.

நீ நோய்வாய்ப்பட்டதாகவும், அப்பொழுது அந்நகர்த் திருக்குறட் கழகத் தலைவர் உனக்குப் பேருதவி புரிந்ததாகவும், மருந்து, பழம் முதலியன வாங்கியுதவியதாகவும், அவற்றிற்குப் பணம் தந்தபொழுது அவர் வாங்கிக் கொள்ள மறுத்து விட்ட தாகவும் எழுதியிருந்தாய். அவர், திருக்குறட் கழகத்துக்குத் தலைவராக இருப்பதற்குத் தகுதியுடையவர் என்பதை மெய்ப்பித்து விட்டார். அவர் அன்புள்ளம் வாழ்க. அப் பெருமகனாரின் இத்தகைய அன்பைப் பெறும் வகையில் நீயும் நடந்து கொண்டிருக்கிறாய் என்பதறிந்து அளப்பிலா மகிழ்ச்சியுற்றேன். அவர் செய்த நன்றியை என்றும் மறத்தல் கூடாது. நீ அவருக்கு நன்றி சொல்லியிருப்பாய். அஃது எனக்கு நன்கு தெரியும். ஒருவர் செய்த உதவிக்கு நன்றி சொல்வதோடு நமது கடமை முடிந்து விடாது; அதனை மறவாது என்றும் மனத்தில் நிலைநிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். அதுதான் நமது பண்பாடு. அதனாற்றான் செய்ந்நன்றி சொல்லுதல் என்று கூறாது, செய்ந்நன்றியறிதல் என நம் முன்னோர் தெளிவாகக் கூறியுள்ளனர். அறிதல் என்றால் மறவாது என்றும் நினைந்திருப்ப தாகும். நம் பண்பாட்டிற்கேற்ப நீயும் அவர் செய்த நன்றியை மறவாது, என்றும் நினைவு கூர்தல் வேண்டும்.

அவர் செய்தவுதவி, காலத்தாற் செய்த உதவியாகும். அது சிறியதாயினும் உலகத்தைவிடப் பெரியதாகக் கருதப்பட வேண்டும். எங்களை விட்டுப் பிரிந்து தனித்திருக்கும் உனக்கு, நோய் வந்த காலத்துப் பல்வகையாலும் உதவியிருக்கின்றார்; உதவுவது நம்

கடமை என்ற எண்ணத்துடன் செய்துள்ளார். அவர் உதவி கிட்டா திருப்பின் நீ எவ்வளவு துன்புற்றிருப்பாய்! துணையின்றித் தன்னந் தனியாய் நோய்வாய்ப்பட்டுத் துன்புற்ற அச் சூழ்நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்பொழுது தான் அவ்வுதவியின் பெருமை நன்கு புலனாகும்.

அவர், உன்னிடம் எதையாவது எதிர்பார்த்தா அவ்வுதவியைச் செய்தார்? இது செய்தால் இன்னது கிடைக்கும் என்று பயன் கருதியா செய்தார்? அன்று. அன்புள்ளம் கொண்ட ஒரே காரணத் தால், தன்னுயிர்போல் மன்னுயிரை மதிக்கும் நல்லுணர்வு பெற்றிருக்குங் காரணத்தால், பிறர் துன்புறுவதைக் காணப் பொறுக்காத இளகிய நெஞ்சம் வாய்த்திருக்குங் காரணத்தால் உனக்குத் துணையாக நின்றுதவியுள்ளார். இவ்வாறு பயன் கருதாது செய்யப்படும் உதவியின் நன்மை கடலினும் பெரிது தம்பி.

பயன் கருதி அவர் உதவி செய்யவில்லை. சரி; இதற்கு முன்பாவது நீ அவருக்கு ஏதேனும் உதவி செய்ததுண்டா? அதுவும் இல்லை. இனிமேலும் செய்யத்தான் முடியுமா? கைம்மாறாகக் கொடுக்க நினைத்தால் விண்ணுலகையும் மண்ணுலகையுங் கொடுத் தாலும் அவை அவ்வுதவிக்குச் சமமாகுமா? அவ்வுதவிக்குக் கைம்மாறே இல்லை. எவ்வகைக் காரணமுமின்றிச் செய்த வுதவிக்கு என்னதான் கைம்மாறு செய்யவியலும்? காலத்திற் செய்தவுதவி, கைம்மாறு கருதாது செய்த உதவி, காரணமின்றிச் செய்தவுதவி ஆகிய இவற்றின் நன்மை அளவிட முடியுமா? இவை உலகைவிட, கடலை விட, வானை விடப் பெரியனவாம்.

ஒருவர் செய்தவுதவி தினையளவைப் போலச் சிறிதாக இருக்கலாம். ஆயினும் அவ்வுதவியின் அளவை வைத்து மதிப்பிடுதல் கூடாது. அதன் பயன் அளவைக் கொண்டே மதிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு மதிப்பிடும் பொழுது அச்சிறியவுதவி பனையளவின தாகத் தோன்றும். அவ்வுதவியின் பயனை அறிந்தவர் இவ்வாறு தான் கருதுவர். இவ்வாறு கருதும் சான்றோர், தமது துன்பக் காலத்துத் துணையாக நின்ற வருடைய நட்பை விட்டு விட மாட்டார்; தம் துன்பத்தை நீக்கி யுதவி செய்தவர்களுடைய நட்பை ஏழு பிறப்பினும் நினைந்து கொண்டிருப்பர்.

ஒருவன் செய்த தீமையை மறந்துவிடுவதுதான் நல்லது; நன்மையை மறப்பது அறமன்று. ஒருவன் செய்த தீமையை எவ்வாறு மறக்கமுடியும் என நீ கருதுவாய். அதற்கும் வழியுண்டு. ஒருவன் எத்தகைய கொடுமையைச் செய் திருப்பினும் கொலையையொத்த கொடுமையைச் செய்திருப் பினும், அதனையும் எளிதில் மறந்துவிட வழியுண்டு. ஒருவன் செய்த கொடுமைகள் மனக்கண் முன் தோன்றும் பொழுது, அவன் நமக்கு முன்பு செய்த ஒரு நன்மையை நினைந்தாற் போதும்; அக்கொடுமைகளெல்லாம் மறைந்து விடும். தினைத் துணை நன்றியும் பனைத்துணையாகக் கருதப்படும் பொழுது, அக்கொடுமைகள் சிறியனவாகித் தாமே யழிந்துவிடு மல்லவா? இதனாற்றான் ஒருவர் செய்த நன்றியை நினைந்து கொண்டேயிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

ஒருவன் எத்தகைய குற்றங்களைச் செய்யினும், அக்குற்றங் களிலிருந்து நீங்கிக் கொள்ளும் கழுவாய்களுண்டு; ஆனால், செய்ந்நன்றியை மறந்த ஒருவன், அக்குற்றத்திலிருந்து தப்புவதற்குக் கழுவாயே யில்லை. நன்றி மறந்த குற்றம், கொலைக் குற்றத்திற்குச் சமமானது. ஆதலின் அதற்கு உய்வேயில்லை.

எத்தகைய சூழ்நிலையிலும் செய்ந்நன்றி மறந்துவிடுதல் தகாத செயலாகும். சூழ்நிலைகளுக்கும் தன்னலத்திற்கும் இடங்கொடாது, செய்ந்நன்றியறியும் வல்லானை இவ்வுலகம் என்றும் ஏத்திப் புகழும். இதற்குக் கன்னன் ஒருவனே சிறந்த சான்றாக அமைவான். குந்தி தன்னைப் பெற்றெடுத்த அன்னையென்பதையும், பாண்டவர் தன் உடன்பிறந்தோர் என்பதையும் அவள் வாயிலாகக் கன்னன் அறி கிறான்; பாண்டவருடன் வந்து சேர்ந்து கொள்ளுமாறு கன்னனிடம் குந்தி மன்றாடுகிறாள்; வந்தால் ஆட்சிப்பொறுப்பு அவனிடம் ஒப்புவிக்கப்படும் என்றுங் கூறுகிறாள். ஆனால், கன்னன் அதற்கு ஆசைப்படவில்லை; உடன் பிறந்தவரையும் எண்ணிப் பார்க்க வில்லை. ஆற்றில் மிதந்து வந்த தன்னை - தேர்ப் பாகனால் வளர்க்கப்பட்ட தன்னை நண்பனாக ஏற்றுக் கொண்டு, ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பையுங் கொடுத்துள்ள துரியோதனனை, விட்டுப் பிரிய உடன்படவில்லை; இவ்வளவு காலம் தனக்குச் சோறிட்டு, உயரிய நிலைக்கு ஆளாக்கிய துரியோதனனை போர் தொடங்கி விட்ட இவ்வேளையில் தனியே விட்டுவிட்டுப் பாண்டவருடன் சேர்ந்து கொள்ள ஒப்பவில்லை. ‘செஞ்சோற்றுக் கடன் கழிப்பது தான்

எனக்குத் தருமமுங் கருமமும் ஆகும்' என விடையிறுத்தான். கன்னன் தனக்கு ஒப்புயர்வற்ற சூழ்நிலை வருவதை அறிந்துங் கூட நன்றி மறந்து ஓடிவிடவில்லை. தாயை மறந்தான்; தம்பியரை மறந்தான்; தனக்கு வரப்போகும் பெரும்பேற்றை மறந்தான். ஆனால், நன்றியை மட்டும் மறக்கவில்லை. கைம்மாறு கருதாமல் துரியோதனன் செய்த நன்றிக்காகப் போர்க்களத்திலே தன்னு யிரையுங் கொடுத்தான் கன்னன். அவன் நன்றியை மறக்க வில்லை. அதனால் உலகமும் அவனை மறக்கவில்லை.

நன்றி மறவாமை வேண்டும் என்பதற்காக இவன் கதையை எழுதினேன். நல்லது செய்தவரை உயிருள்ளவரை நினைதல் வேண்டும். 'உப்பிட்டவரை உயிர்உள்ளவரை நினை' என்பது நமது பழமொழியல்லவா? நல்லது செய்தவர்க்கு அல்லது செய்யும் பேதையரும் இருக்கத்தான் செய்கின்றனர். நுனிக்கிளையில் அமர்ந்து கொண்டு, அடிமரத்தை வெட்டும் அறிவிலிகட்கும் இவர்கட்கும் வேறுபாடேயில்லை.

**"நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல**
**தன்றே மறப்பது நன்று"**

இங்ஙனம்
***அறிவுடை நம்பி***

❖ ❖ ❖

**13**

# நா நலம் நாடு

*அன்புள்ள பாண்டியனுக்கு,*

*நலம். உன் கடிதம் கிடைத்தது. மாணவர் மன்றத்தாரால் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதற்பரிசில் பெற்றதாக எழுதியிருந்தாய். மிக்க மகிழ்ச்சியடைந்தேன். என் மகிழ்ச்சியை விட, உன் தாயின் மகிழ்ச்சிதான் பெரிதாக இருந்தது. பிறர் தன் மகனைச் சான்றோன் என்று புகழ்ந்து சொல்லுதலைக் கேட்ட தாய், அவனைப் பெற்றெடுத்த பொழுது மகிழ்வதை விடப் பெரிதும் மகிழ்ச்சி கொள்ளுவாள் என்பது பொய்யாகுமா? உன் தாய் மட்டும் அப்பொதுவிதிக்கு விலக்காகி நிற்க முடியுமா? நீ பெற்ற பரிசிலுக் காக அவள் மகிழ்ந்து விடவில்லை. பலருங் கலந்து கொண்ட போட்டியில் நீ முதல்வனாக வந்ததையும், பரிசில் கொடுக்கும் பொழுது தலைவர் உன்னைப் பாராட்டிப் பேசியதையும் உன் தாய், கற்பனை செய்து பார்த்து, நினைந்து நினைந்து மகிழ்கின்றார். அக்காட்சியைக் கண்டு, நான் மனத்துக்குள்ளேயே மகிழ்ந்து கொள்ளுகிறேன்.*

*இவ்வாறு மகிழ்வதுடன் வேறு வகையாலும் நான் களிப்படை கிறேன். உலகில் பெற்றோர்க்குச் சில கடமைகளுண்டு; பிள்ளை கட்கும் சில கடமைகளுண்டு. தம் மகனைச் சான்றோனாக்குதலும், அவனை அவையத்து முந்தியிருக்கச் செய்தலும் பெற்றோர்க்குரிய கடமையாகும். அவ்வாறு சான்றோனாக்கிய பெற்றோர்க்கு, மகன் ஆற்றவேண்டிய நன்றிக் கடனும் உண்டு. 'இவனை மகனாகப் பெற இவன் பெற்றோர் என்ன தவம் செய்தனரோ'! என உலகோர் வியந்துரைக்கும் வண்ணம் அவன் நடந்துகொள்ள வேண்டும். அதுதான் பெற்றோர்க்கு அவன் செய்ய வேண்டிய கடமை யாகும்; உதவியும் ஆகும். அந்த வகையில் நீ நடந்துகொண்டு வருகிறாய்; கல்வியிலும் சொல்வன்மையிலும் சிறந்து விளங்கி, ஊர் மெச்சுமாறு*

நடந்து, மகன் பெற்றோர்க்கு ஆற்ற வேண்டிய கடமையைச் செய்து வருகிறாய் என்பதையறிந்து களிப்படைகிறேன்.

இவ்வாறு, எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்த உனக்குச் சொல்வன்மையைப் பற்றிச் சில கருத்துகளை எழுதலா மென்று கருதுகின்றேன். அக்கருத்துகள் உன் பேச்சுக்கலை வளர்வ தற்குத் துணை செய்யும் என்ற ஆர்வத்தால் எழுதுகின்றேன். சொல் வன்மையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, நாவலர் பெரு மானாகிய திருவள்ளுவர், 'நா நலம்' என்று சுட்டுகின்றார். உலகிலுள்ள பிற நலம் எல்லாவற்றையும் விட இந் நாநலம் மிக்க சிறப்புடைய தென்றுங் கூறுகின்றார். இஃது உலகத்தையே தன்வயப்படுத்திக் கொள்ளும் பேராற்றல் வாய்ந்தது. அதனால் பிற நலங்களை விடச் சிறந்ததென்று இதனைக் கூறுவது பொருத்தமேயாகும்.

சிலர், நிறைந்த நூல்களைக் கற்கின்றனர்; பட்டங்கள் பலவும் பெறுகின்றனர்; கல்விச் சிறப்புடையராக விளங்கு கின்றனர். ஆயினும் அவர், தாம் கற்றறிந்த நூல்களையோ, தம் கருத்து களையோ விரித்துரைக்க இயலாதவராகித் தடுமாறு வதைக் காண்கிறோம். சில செடிகளும் கொடிகளும் கொத்துக் கொத்தாகப் பூத்து மலர்ந்து காட்சியளிக்கும்; கண்ணுக்கு விருந்து நல்குமாறு வண்ணங்கள் மிகுந்திருக்கும். ஆயினும் அம்மலர்களில் சிறிதேனும் மணத்தைக் காண்டல் அரிதாக இருக்கும். மணம் வீசாத இம்மலர் களுக்கும், கற்றதை விரித் துரைக்க மாட்டாத கல்வியாளர்க்கும் என்ன வேறுபாடு? ஒன்றுமேயில்லை. வண்ணங்களுடன் அழகுற மலர்ந்திருப் பினும் மணமில்லாக் காரணத்தால் அவற்றை மக்கள் விரும்பார்; விரும்பிச் சூடார். அதைப் போலவே பட்டங்களும் கல்வியும் எவ்வளவு பெற்றிருப்பினும் சொல்வன்மையில்லாரை உலகம் நன்கு மதிக்காது; மதித்துப் போற்றவுஞ் செய்யாது. கல்வியுடன் சொல்வன்மையும் வாய்க்கப் பெறின், அது பொன்மலர் மணம் வீசுவது போன்றதாகும்; பொதுவாகவே மணம் வீசும் மலரை மக்கள் விரும்புவர்; அம்மலரும் பொன் மலராக இருந்துவிடின் கேட்கவும் வேண்டுமோ? அதுபோல நன்கு கற்று, நாவன்மையும் பெற்று விளங்கும் ஒருவரை உலகம் உச்சிமேல் வைத்துப் போற்றும்.

இத்தகு சிறப்பு வாய்ந்த சொல்வன்மைக்கு ஆக்கவும் அழிக்கவும் வல்ல பேராற்றல் உண்டு. அதனால் பேசும் பொழுது சொல்லின்கட்

சோர்வு நேராவண்ணம் காத்துக்கொள்ள வேண்டும். சோர்வு என்றால், சொல்ல வேண்டியவற்றைச் சொல்லாது மறந்து விடுதலாம். அம்மறதியால் பேரழிவு நேர்ந்து விடுதலுங் கூடும். அரசியல் நடத்துவோர்க்கென இவ்வாறு கூறப்பட்டிருப்பினும், தனி மனிதனுக்கும் இது பொருந்தி வருவதேயாகும். சொல்ல வேண்டிய ஒன்றை மறதியாற் சொல்லாது விடும் ஒருவன் சிற்சில வேளைகளிற் பெருங் கேட்டுக்கு ஆளாகி விடுவதும் உண்டு. அதனால் அச்சோர்வு வாராது தடுத்துக் காத்துக் கொள்ள வேண்டும்.

பேச்சு, எவ்வாறிருக்க வேண்டும்? எத்தகையதாய் இருக்க வேண்டும்? என நமக்கு நாமே வினவிக்கொண்டு, ஆராய்ந்து பேச வேண்டும். அவ்வாறு பேசும் பேச்சு, நட்பாயுள்ளவர்களை அவர் வேறுபட்டுச் செல்லா வண்ணம் மீண்டும் பிணிக்கத் தக்கதாய் விளங்கவேண்டும்; பகையாயுள்ளவர்கள் பகை யொழிந்து நட்புக் கொள்ளத் தக்கதாய் இருக்க வேண்டும்; பல நூல்களைக் கேட்டறிந்த வர்களையும் ஈர்க்கத் தக்கதாய் அமைய வேண்டும்; நூல் கேளா தாரும் விழையத் தக்கதாய் அமைய வேண்டும்; தன் பேச்சை முன்பு கேட்டவர்களையும் இதற்கு முன் கேளாதவரையும் தன் வயப் படுத்தத்தக்கதாய் இருக்க வேண்டும்.

பேசும்பொழுது, அவையத்திலே உள்ளவருடைய குடிப் பிறப்பு, கல்வி, ஒழுக்கம், பருவம் முதலிய தகுதிகளையும் பேசுபவர் தம் தகுதிகளையும் இணைத்துப் பார்த்து, அவற்றிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை யறிந்து, அவற்றிற்கேற்பப் பேசுதல் வேண்டும். அஃதாவது அவையறிந்து பேச வேண்டும்; அவைக்கேற்பப் பேச வேண்டும்; அவையிலுள்ளவர்கட்கு ஏற்ற வகையில் பேச வேண்டும். இக்கோட்பாட்டைச் சிலர் தவறாகப் புரிந்து கொண்டு அவை யோர் கொண்டுள்ள கருத்திற்கேற்பத் தங்கருத்தை விட்டொழித்து, உண்மைக்கு மாறாகப் பேசி விடுகின்றனர். அது தவறு. எங்கும், எப்பொழுதும், எந்தச் சூழ்நிலையிலும் தம் கருத்தைக் கைவிடுத்துப் பிறர் கருத்தின் பின்னே செல்லுதலைச் சான்றோர் விரும்பார். அவையறிந்து பேசுதலாவது, அவையோர் இளைஞரா முதியரா என்றும், கற்றோரா மற்றோரா என்றும் ஆய்ந்து குறிப்பறிந்து அவரவர் நெஞ்சம் ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்துகளை அவரவர் புரிந்து கொள்ளத்தக்க நடையில் பேசவேண்டும் என்பதேயாகும். கற்றுத் தேர்ந்த அறிவு முதிர்ச்சி பெற்ற பேரவையில் எளிய

கருத்துகளை எளிய நடையில் பேசுவது முறையோ? இளைஞர் முன்னிலையில் அரிய கருத்துகளைக் கூற நேரினும், அவற்றை எளிமையாக்கி நகைச்சுவையுடன் கலந்து அவருள்ளங் கொள்ளும் வகையில் பேச வேண்டும். ஆராய்ச்சிக் கருத்துகளை அவர் முன்னிலையில் பேசுவது முறையன்று. இதுதான் அவையறிந்து பேசுவதாகும்.

இவ்வண்ணம் தன் திறனும் அவையின் திறனும் அறிந்து ஒன்றைச் சொல்லுங்கால் அதனினும் மேம்பட்ட அதனை வெல்லத் தக்க வேறோர் சொல் இல்லாத வகையில் ஆய்ந்து சொல்ல வேண்டும். அஃதாவது உயர்ந்த கருத்துகளை, அனைவரும் ஒப்புக் கொள்ளும் வகையாற் கூற வேண்டும்; அவற்றினுஞ் சிறந்ததாகப் பிறிதொன்றை மற்றையோர் எடுத்துக் கூறா வகையால் அனைத் தினுஞ் சிறந்ததைத் தான் எடுத்துக் கூற வேண்டும் என்பதாம். அவைக்கு அஞ்சாமலும், கற்றார் பலராகக் கூடியிருப்பினும் ஒன்றையும் மறவாமலும், பிறர் ஏற்கும் வகையாற் சொல்லுதலில் வல்லவனாகிய ஒருவனை எவராலும் வெல்ல முடியாது. இத்தகை யான் சொல்லை வெல்லுஞ் சொல் ஒன்றும் இல்லையாகிவிடும். இவன் சொல்லே வெற்றி கொண்டு நிற்கும் என்பதாம்.

சொல்வன்மை, உலகத்தையே தன்வயப்படுத்திக் கொள்ளும் பேராற்றல் கொண்டதென்று தொடக்கத்தில் எழுதினேன். சொல் வன்மையைக் கையாளும் முறையிற்றான் அவ்வாற்றல் அமைந்து கிடக்கிறது. உலகில் யார் யாரோ பேசுகின்றார்கள்; அவருடைய சொல்லுக்கெல்லாம் இந்த ஆற்றல் இருக்கின்றதா? இல்லை; ஒரு சிலர் சொல்லுக்கே அவ்வாற்றல் அமைந்திருக்கிறது. அவர், தாம் சொல்ல வேண்டியவற்றை முன் கூட்டியே சிந்திக்கின்றனர். சிந்தித்து இன்னின்னவற்றைக் கூறவேண்டும் என்று முடிவு செய் கின்றனர். முடிவு செய்து, அவற்றுள் முதலிற் கூறுவேண்டி யவை எவை, அடுத்துக் கூறவேண்டியவை எவை, இறுதியிற் கூற வேண்டி யவை எவை என்று எண்ணிப் பார்த்து, அவற்றை நிரல்படக் கோத்து வைத்து, அம்முறைப்படி சொல்லுகின்றனர். முறைப்படுத்திச் சொல்லும் பொழுதும் கேட்டார்க்கு இன்பம் பயக்கும் வண்ணம் இனிதாகச் சொல்லுகின்றனர். இவ்வாறு நிரல்படக் கோத்து, இனிதாகச் சொல்லும் அறிஞர் பெரு மக்களுடைய சொற்களை, கருத்துகளை உலகம் விரைந் தேற்றுக் கொள்ளுகிறது. அவர் சொல்லின் வழி உலகம் நடக்கவுஞ் செய்கிறது.

இம்முறைகளையெல்லாம் அறிந்து, இடைவிடாது முயலுவை யாயின் சிறந்த நாநலம் படைத்தவனாக நீ எதிர்காலத்தில் விளங்க முடியும். ஆர்வமும் உழைப்பும் இருப்பின் இத்துறையில் முன்னேற்றங் காணலாம். இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குபவர் கிரேக்க நாட்டு அறிஞர் தெமாத்தனீசு (Demosthenes) என்பராவர். இவர் திக்கித் திக்கிப் பேசும் இயல்பினர்; மெல்லிய குரலில் பேசுவதுதான் இவருக்கு வழக்கம்; இவர் பேசுதற்கு மேடையில் ஏறினால் அவையோர் நகைப்பர். ஆயினும் இத்துறையில் எவ்வா றேனும் வெற்றி பெற்றே தீர்வது என்னும் உறுதிப்பாட்டுடன் பெருமுயற்சியை மேற்கொண்டார். வாயில் கூழாங் கற்களை அடக்கிக்கொண்டு, கடலுக்கு முன் நின்று, கடலொலியையும் மீறி உரத்த குரலில் பேசிப் பேசிப் பழகினார். திக்குவதும் அறவே நீங்கியது. குரலும் ஓங்கியுயர்ந்தது. இறுதியில், உலகத்திற் சிறந்த பேச்சாளர் என்ற நிலையைப் பெற்றார். ஏன் இவர் வரலாற்றை எழுதினேன் என்றால், தளரா உழைப்பிருந்தால் எத்துறையிலும் வெற்றி பெற்றுயரலாம் என்பதை எடுத்துக் காட்டத்தான். இத்தகைய பெருமக்கள் வாழ்க்கை வரலாறுகளையெல்லாம் படிக்கும் பொழுது, ஒவ்வொரு செயலையும் படிப்பினையாகக் கொள்ள வேண்டும். எவ்வெவற்றைக் கொள்ளலாம், எவ்வெவ்வாறு மேற் கொள்ளலாம் என்றெண்ணிப் பார்த்து முன்னேற முயலுதல் வேண்டும்.

இவ்வாறு நீயும் முயன்று நாநலம் மிக்குமிக்கு அதனை நானிலம் போற்றவும், அந் நாநலம் நாட்டின் உயர்வுக்கும் மொழியின் வளர்ச்சிக்கும் பயன்படவும், நம் பண்பாட்டைக் காக்கவும் பெருந்துணையாகுமாறு நின்று வாழ்க என வாழ்த்துகிறேன்.

> **“கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்**
> **வேட்ப மொழிவதாஞ் சொல்”.**

இங்ஙனம்

**அறிவுடை நம்பி.**

❖ ❖ ❖

**14**

# பணிவுடன் பழகு

*அன்புள்ள பாண்டியனுக்கு,*

நலம். உன் கடிதம் கிடைக்கப் பெற்றேன். தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளைப் படித்ததாக எழுதியிருந்தாய். அஃது அவராலேயே எழுதப்பட்ட நூலாகும். அவரைப் போன்ற பெருமக்களுடைய வரலாற்றைப் படித்துப் பயன்பெறுவது வேண்டப்படும் ஒன்றாகும். தகுதி யில்லாத, ஒரு வகையிலும் பயன்படாத, நாட்டுக்கு நன்மை தராத வாழ்க்கை வரலாறுகளை, வாழ்க்கை வரலாறு என்னும் பெயரால் வெளிவரும் காகிதக் குப்பைகளை இளைஞர் பலர் படித்துத் தம்மைத் தாமே பாழ்படுத்திக் கொள்கின்றனர். அந்த வரலாற்றுக் குரியோர் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, உறங்கப் போகும் நேரம், அவர்க்குத் திருமணஞ் செய்து கொள்ள விருப்பம் உண்டா இல்லையா, உண்டென்றால் யாரைத் திருமணம் செய்து கொள்ளப் போகின்றனர் என்ற இத்தகைய வரலாற்றுக் குறிப்புகளைப் படிப்ப தால் யாது பயன்? புழுத்துப் போன அவ்வாழ்க்கைக் குறிப்புகளில் பொய்ம்மைக் குறிப்புகளே மலிந்து கிடக்கும். இவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும்.

திரு.வி.க.வரலாறு, நாட்டு வரலாற்றோடு பின்னிப் பிணைந் திருப்பது; நாமுங் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டியது. அவர் வரலாற்றிலிருந்து நீ கற்றுத் தெளிந்து பின்பற்ற வேண்டிய பண் பொன்றினை உனக்கெழுத விரும்புகின்றேன். அவர் ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்; தாய்மொழிப் புலமையும், பிறமொழிப் புலமையும் நிறையப் பெற்றவர்; நாநலம் மிக்க நாவலர்; கற்றாரும் மிக்காரும் ஒருங்கே போற்றும் புகழ்ச்செல்வம் படைத்தவர். நாட்டுப் பெருந்தலைவருள் ஒருவர்; தந்நேரிலாத் தகைமையாளர். இத்துணைப் பெருஞ் சிறப்புகளுக்குரிய வராயினும்

அவரிடத்தே சிறிதேனும் செருக்குணர்வைக் காண முடியாது. பணிவின் திருவுருவமாகவே விளங்குவார். சுருங்கக் கூறின் குண மென்னுங் குன்றேறி நின்றவர் அவர். தம்மினுஞ் சிறியாரிடத்தும் பணிவு காட்டும் பண்பினர். 'என்றும் பணியுமாம் பெருமை' என்னும் மறைமொழிக்கு இலக்கியமாய் விளங்கியவர். இப்பணி வினால் உயர் நிலையே எய்தினார்.

இத்தகைய பணிவினை நீயுங் கைக்கொண்டொழுக வேண்டும். கல்வியும் புகழும் ஒரு புறம் வளர வளர, நம்மையறியாமலேயே மறுபுறம் செருக்குணர்வும் வளர்ந்துகொண்டே வரும். இஃது இயல்பு. நாம் விழிப்பாக இருந்து அவ்வுணர்வை வளரவிடாமல் தடுத்துக்கொள்ள வேண்டும். முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். அதனைக் கிள்ளி யெறிந்தாற்றான் பணிவென்னும் நல்லுணர்வு தளிர்த்துச் செழித்து வளரும். கல்வியாற் செருக்குணர்வு தோன்றலாம்; குடிப்பிறப்பாற் செருக்குணர்வு தோன்றலாம்; கொடையால் தோன்றலாம்; வீரத்தால் தோன்றலாம்; செல்வப் பெருக்கால் தோன்றலாம்; ஏனைய புகழ் முதலியவற்றாலும் தோன்றலாம். இவற்றுள் எந்த வகையாற் சிறப்புற்றிருப்பினும் அதனோடு சேர்ந்து வளரும் அந்தச் செருக்கை அடியோடு ஒழித்துக் கட்ட வேண்டும்; பணிவுடன் பழகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

கற்றோராயினும், குடிப்பிறந்தோராயினும், செல்வ ராயினும், வீரராயினும், பிறராயினும் பணிந்து நடக்கக் கற்றுக் கொள்ளுவது, பொதுவாக எல்லார்க்குமே நன்மை பயக்குஞ் செயலாகும். இவருள்ளும் செல்வச் சிறப்புடைய ஒருவர், பணிவுடைமையைக் கற்றுக் கொள்ளுவாரானால், அவர்க்கு மேலுமொரு செல்வம் வந்த சேர்ந்தது போலாகும்.

அடக்கமுடையவன் எப்பொழுதும் உயர்நிலை அடைவான்; அடங்காது அலைபவன் தாழ்நிலையில் வீழ்ந்து, மீளமுடியாது, துயருறுவான். இவ்வாறு மேனிலை எய்துபவரையும், தாழ்நிலையில் உறுபவரையும் நாட்டிலே கண்டு வருகிறோம். அதனால் அடக்கத்தை, உயர்ந்த செல்வம்போற் கருதிக் காத்து வர வேண்டும். அடங்கி வாழ்வதுதான் அறிவுடைமை என்று கருதி, முறைப்படி நடந்துவரும் ஒருவன் எல்லாராலும் மதிக்கப்படும் பெரும்பேற்றினை அடை வான். தன்னிலையினின்று வேறு படாது,அடங்கி வாழக் கற்றுக் கொண்டவனுடைய உயர்ச்சி, மலையின் உயர்ச்சியை விடப் பெரிதாகும்.

இத்தகைய பணிவுடைமையை, அஃதாவது அடக்க முடைமையை மூன்று வகையாகப் பாகுபாடுசெய்யலாம். ஒன்று மெய்யடக்கம், இரண்டு நாவடக்கம். மூன்று மனவடக்கம். இம்மூன்று அடக்கங்களும் ஒருவனுக்கு இன்றியமையாது வேண்டப்படுவன வாகும். வாழ்விற் சிறந்து விளங்க, இவை துணை செய்யும்.

ஆமையைப் பார்த்திருக்கிறாயல்லவா? அது, தனக்கொரு தீங்கு வருவதை அறியின் உடனே தன் ஐந்துறுப்புகளையும் உள்ளடக்கிக் கொள்ளுகிறது. அதனால் எவ்விடரும் புகா வண்ணம் தன்னைக் காத்துக் கொள்ள முடிகிறது. அதுபோல மனிதனும் தன் ஐந்து பொறிகளையும் அடக்கி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். அடக்கிவாழ வேண்டுமென்றால் அடியோடு ஐம்பொறிகளையும் அடக்கிப் புலன் நுகர்ச்சியே இல்லாமல் வாழ வேண்டுமென்று கூறுவதாகக் கொள்ளுதல் தவறு. அஃது உலகியலுக்கு ஒத்துவராத செயலாகும். ஆமை எப்பொழுதுமா தன் ஐந்துறுப்புகளையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது? வேண்டுங்காலத்து வெளியில் நீட்டிக் கொள்ளவும், துன்பம் நேருங்கால் அடக்கிக் கொள்ளவும் வல்லதாயிருக்கிறது. அதுபோல, மனிதனும் வேண்டுமளவு ஐம்பொறிகளையும் ஐம்புலன்கள் மேற்செலவிடவும், குற்றம் நிகழுமெனத் தெரிந்தால் அப்பொறிகளை அடக்கிக் கொள்ளவும் வல்லமை பெற்றிருக்க வேண்டுமென்பதுதான் கருத்து. இவ்வைந்து பொறிகளையும் தீ நெறிகளிற் செலவிடாது. நன்னெறிகளிற் செலுத்தி, அதுவும் அளவோடு செலுத்தி வாழ்வதைத் தான் மெய்யடக்கம் என்று சொல்லுகிறோம்.

இனி நாவடக்கத்தைப் பற்றி எழுதுகின்றேன். உலகத்தில் நம் வாழ்க்கையில் நம்மாற் காக்கப்பட வேண்டிய பொருள்கள் பலவுள. அவ்வாறு காக்கப்பட வேண்டிய பலவற்றைக் காவாது விடினுங் குற்றமில்லை. ஆனால், நாவினை மட்டும் காத்துக் கொள்ள வேண்டும். நாவினைக் காவாதுவிடின், நாம் சொல்லுஞ் சொல்லின் கண் தோன்றுங் குற்றத்திற்காட்பட்டு நாமே துன்புற நேரிடும்.

நாவை எவ்வாறு காத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் எழுதுகிறேன். மற்றவர்க்குத் தீங்கு பயக்கும் பொய், கடுஞ்சொல் முதலியனவற்றைக் கூறாது நாவைக் காத்துக் கொள்ள வேண்டும். நம் சொல் பிறர்க்குத் தீங்கு பயக்குமானால், வேறு பிற அறங்களாற் பெற்ற நன்மைகளும் தீமைகளாகவே முடியும். பெருந்தலைவர் களாக நம்மால் மதிக்கத் தக்கவர்கள் கூடச் சிற்சில வேளைகளில்

நாவைக் காத்துக் கொள்ளாமல், உணர்ச்சி வயப்பட்டுப் பேசி விட்டுப் பின்னர் அவர்கள் படும்பாட்டையும் நாம் பார்த்திருக் கிறோம். அதனால் நாவைக் காத்துக் கொள்ளுவதிற் கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும்.

தீயினாற் சுட்டபுண் ஆறிவிடும். ஒருவேளை, உடலில் புண்ணாகவே தோன்றினும் உள்ளத்தின்கண் ஆறிவிடும். ஆனால், நாவினாற் சுட்ட புண், வடுவாகவே நின்று, மனத்தின் கண் ஆறவே ஆறாது. ஆகவேதான் நாவடக்கம் இன்றியமை யாது வேண்டப் படுவதாகிறது.

அடுத்து மனவடக்கம் என்றால் என்ன என்பதையும் எழுது கிறேன். அளவுக்குமேல் ஆசைகொண்டு மனத்தை அலையவிடா மலும், வெகுளி சிறிதுகூடத் தோன்றாமலும், கல்வி யறிவால் நிறைந்து, அடங்கி வாழ்வதுதான் மனவடக்கம் எனப்படும். இம் மனவடக்கம் உடையவனிடத்து, அறம் தானே வந்து சேரும். ஆதலின் மனம், நா, மெய் இம்மூன்றானும் அடங்கி முற்றி வளர்ந்த பயிர்போலப் பணிந்து வாழப் பழகிக் கொள். பணிந்து நடந்தால் உயர்வு பெறுவது உறுதி.

**“எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வந் தகைத்து”**

இங்ஙனம்
**அறிவுடை நம்பி.**

❖ ❖ ❖

**15**

# மானம் போற்று

*அன்புள்ள பாண்டியனுக்கு,*

*நலம். உன் கடிதம் கிடைத்தது. சில ஐயப்பாடுகளை எழுதி யிருந்தாய். அவற்றிற்கு விளக்கந் தரும் வகையில் இக்கடிதத்தை எழுதுகிறேன். பணிவுடைமை என்பதைத்தான் அடக்கமுடைமை என்று எழுதினேன். பணிவுடைமை என்று பணிவாகப் பேசு வதையும், பணிந்து நடப்பதையுந்தான் பொதுவாகச் சொல்லு வார்கள். அவற்றைக் குறித்தெழுதும் போது, புலனடக்கத்தையும் மனவடக்கத்தையுஞ் சேர்த்தே எழுதினேன். இவ்வடக்கங்கள் பணிவுடைமையை மிகுதிப் படுத்தவும், வருங்கால வாழ்க்கை முறைகளைச் செம்மைப் படுத்தவும் துணையாக இருக்கும் என்ற நம்பிக்கையால் எழுதினேன்.*

*முன்னர் எழுதிய கடிதத்தில், செல்வராயிருப்பார்க்குப் பணிவுடைமை வேண்டும் என்றும், அது மேலும் ஒரு செல்வம் வந்து சேர்ந்ததைப் போன்றதென்றும் எழுதியிருந்தேன். நிறைந்த செல்வம் பெற்றிருக்கும் காலத்துப் பணிவுடைமை கொண்டிருந்தால் அது போற்றப்படும்; பாராட்டப்படும். பணிவுடைமை நல்ல பண்பாகும் என்பதற்காக, நாம் வறுமையுற்றிருக்குங் காலத்திலும் பணிந்து விடுதல் கூடாது. அப்பொழுது பணியாமைதான் வேண்டும். செல்வஞ் சுருங்கிய காலத்துப் பணிந்து நடந்தால் உலகம் நம்மை இகழ்ந்து பேசும். வயிற்றுப் பிழைப்புக்காக இவ்வாறு அடங்கி ஒடுங்கி நடக்கின்றான் என்று ஏளனஞ் செய்யுமே தவிர, உயரிய பண்பாளன் என ஒருபோதும் உரைக்காது. வறிய காலத்துப் பணிந்து நடப்பது நம் மானத்திற்கு ஊறு விளைவிப்பதாகவே முடியும். அதனால் மானத்தை மதிப்போர், வளமிழந்து வாழுங் காலத்துப் பணியாது நின்று, உயர்வொன்றையே ஓம்பி நிற்பர். ஆதலின் மானத்தைப் பற்றி இக் கடிதத்தில் எழுத முற்படுகிறேன்.*

உயிருஞ் சிறந்தது; மானமுஞ் சிறந்தது. இரண்டுமே ஒவ்வொரு வராலும் ஓம்பப்பட வேண்டியவையாகும். ஆயினும் இரண்டுக்கும் ஒரு குறை ஏற்படுகிற சூழல் ஏற்பட்டுவிடுகிறது. அவ்விரண்டுக்கும் மோதல் உண்டாகும் ஒரு நிலை தோன்றி விடுகிறது. அஃதாவது இரண்டிலொன்றை விட்டுவிட வேண்டிய நிலை. ஒன்றை விட்டால் மற்றொன்று நிலைக்கும் நிலை வந்துவிடுகிறது. அப்பொழுது எதை விடுவது? எதை வைத்துக் கொள்வது? உயிரை விடுத்து மானத்தைப் போற்றுவதா? மானத்தை விடுத்து உயிரைக் காத்து வாழ்வதா? இஃது இக்கட்டான சமயம் மட்டுமன்று; இக்கட்டான வினாவும் ஆகும். இரண்டுமே சிறந்தவைதாம். எப்படி இவ்வினாவிற்கு விடைபகர்வது?

தடுமாற்றத்தை உண்டாக்கும் இவ் வினாவிற்கு விடையும் உண்டு. விடை இரண்டு வகைப்படும். உயிரை விடுத்து மானத்தைக் காப்பது ஒன்று; மானத்தை விட்டு உயிரைக் காப்பது மற்றொன்று. தமிழ் நூல்கள் கூறும் விடை ஒன்று. வடமொழிநூல்கள் கூறும் விடை மற்றொன்று. உயிரை விட்டு மானத்தைக் காக்க வேண்டு மென்பது தமிழ் நூல் தரும் விடை. "இறப்ப வருவழி, இளிவந்தன செய்தாயினும் உய்க" என்பது வடநூல் தரும் மறுமொழி எனப் பரிமேலழகர் குறிப்பிடுகின்றார். ஆதலின் மானம் ஒன்றே மேம் பட்டதெனக் கொண்டொழுகுவதுதான் தமிழ்மாந்தரின் தலையாய கொள்கையாகும்.

மானம் என்றால் என்ன என்பதை இங்கே விளக்குவது நல்லதென்று கருதுகிறேன். எக்காலத்தும் எத்தகைய சூழ்நிலை யிலும் தந்நிலையினின்று தாழாமையும், தாழ்வு வரின் உயிர் வாழாமையும், தங்குடிப் பிறப்புக்குத் தாழ்வுவருஞ் செயல்களைச் செய்யாமையும் மானம் என்று மறைமொழி பறை சாற்றுகிறது.

புகழையும் மானத்தையும் நிலைநிறுத்த வேண்டும் என்ற கொள்கையுடைய சான்றோர், தாம் பிறந்த குடிக்குத் தாழ்வுதரும் இழிவான செயல்களைச் செய்யவேமாட்டார்; அச்செயல்கள், இன்றியமையாத சிறப்பினையுடையனவாக இருப்பினும் அவற்றைச் செய்ய ஒருப்படார்.

**"பழியெனின், உலகுடன் பெறினுங் கொள்ளலர்"**

என்பது புறநானூறு புகட்டும் அறிவுரையாகும்.

**"வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்**
**மான மழுங்க வரின்"**

என்பது நாலடியார் நவிலும் நல்லுரையாகும்.

தம் உயர்ந்த நிலையை விட்டு, அதனின்றுந் தாழ்ந்த மக்களைச் சமுதாயம் அறவே வெறுத்தொதுக்கிவிடும். தலையினின்றும் வீழ்ந்த முடியை எவ்வாறு வெறுத்துத் தள்ளுவோமோ அவ்வாறே அம் மக்களையும் புறக்கணித்து விடுவோம். தலையில் இருக்கும்வரை அம் முடியை எவ்வெவ்வாறு பேணிக் காத்து வருகிறோம். அதைப் போலவே தந்நிலையில் நிற்பாரைப் பேணிக் காக்கின்றோம். நிலையினின்றும் இழிந்துவிடின், அவரைத் தலையின் இழிந்த முடியாகவே கருதி விடுகின்றோம். ஆதலின், தந் நிலையிற் றாழாமலும், தங்குடிக்குத் தாழ்வு வாராமலும் எவரொருவர் விளங்குகின் றாரோ அவரே நன்கு மதிக்கப்பெறும் தன்மையைப் பெறுவார் என்பதை நீ நன்கு புரிந்து கொண்டிருப்பாய் என்று கருது கின்றேன். ஒருவர் கல்வி, செல்வம், குடிப்பிறப்பு முதலிய வற்றால் மலையைப் போன்ற உயர்ச்சி பெற்றிருப்பினும் அவர் குன்றி மணியளவு இழிசெயலைச் செய்தாராயினும் மிகத் தாழ்ந்த நிலை யினையே அடைவார்.

தன்னையிகழ்ந்து பேசும் பகைவருக்குப் பின்னே சென்று, மானத்தை விட்டுக் கைகட்டிக் கெஞ்சி நின்று பிழைப் பவனையுங் காண்கின்றோம். இவனை ஒருபோதும் மக்கள் புகழ்ந்துரைக்க மாட்டார்; மாறாக இகழ்ந்தே பேசுவர். அப்பகைவன் பின்னே சென்று நின்று, அவன் வீசும் பொருளைப் பெற்று, அதனால் ஒருவன் உயிர் வாழ்வதை விட, அவ்வாறு செய்யாது இறந்தான் என்று சொல்லப்படுதலே அவனுக்கு நல்லது. பீடு, பெருமை, மானம் இவற்றையழித்துத் தன்னுடம் பினைக் காத்து வாழும் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா?

**"இழித்தக்க செய்தொருவன் ஆர வுணலின்**
**பழித்தக்க செய்யான் பசித்தல் தவறோ?"**

என்று நாலடியார் நம்மை நோக்கி வினவுகிறது. நம்மில் விடை சொல்லத் தக்கவர் யாவர்? மானத்தை மதித்து நடக்கும் பெற்றியரே விடை பகரும் தகுதி வாய்ந்தவர்; மற்றையோர்க்கு விடை சொல்ல வாயேது?

விலங்கினுக் கமைந்த மானவுணர்ச்சியேனும் மனிதனுக்கு இருக்க வேண்டாவோ? ஆறறிவு படைத்தவன், பகுத்தறிவு மிகுந்தவன் என்றெல்லாம் தன்னைக் கூறிக் கொள்ளும் அவன், தன்னிற் குறைந்த அறிவுடைய விலங்கினைக் கண்டும் அதனைக் கற்றுக் கொள்ளாமல் இருப்பது விந்தையினும் விந்தையல்லவா? கவரிமா என்ற விலங்கு, தன் மயிர்த் திரளில் ஒரு மயிர் நீங்கினும் உயிர் வாழமாட்டா தென்று கூறுவர். அத்தகைய தன்மான வுணர்ச்சி பெற்றிருக்கிறது அது. அதுபோலவே மானத்தை மதிக்கும் மாண்புடைய சான்றோர், மானங் கெடத்தக்க சூழ்நிலை வருமானால் உயிரை விட்டொழிப் பரேயன்றி, மானத்தை விட்டுவிடச் சம்மதியார். உயிர் என்றேனும் ஒருநாள் நீங்குந் தன்மை வாய்ந்தது. மானம் எக்காலத்தும் நிலைத்து நிற்க வல்லது. அதனால் நிலையில்லாத உயிரை விட்டு, நிலையான மானத்தைக் காப்பர். அவர்களுக்கு மானம் அவ்வளவு பெரியது; உயிர் அவ்வளவு சிறியது. தமக்கோர் இழிவு வந்தவிடத்து, அதனைப் பொறுத்துக் கொண்டுயிர் வாழ மாட்டாது, அவ்வுயிரை விட்டு, மானத்தைக் காத்து நிற்கும் மாந்தருடைய புகழ் வடிவை, இவ்வுலக மானது எக்காலத்துந் தொழுது போற்றும்.

**"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்"**

இங்ஙனம்
**அறிவுடைநம்பி.**

❖ ❖ ❖

# குறிப்புகள்

குறிப்புகள்